உ

கணபதிதுணை

சேக்கிழார்நாயனார்

அருளிச்செய்த

# திருத்தொண்டர்

# பெரியபுராணம்.

இஃது வசனச்சுருக்கமாக

திருமயிலை

## வி. சுந்தரமுதலியாரால்

தமது - சென்னை

விக்டோரியாஜுபிலிபிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

௧௮௯௩ ௵.

இதன்விலை அணா ௪௦.

உ

சிவமயம்.

விநாயகர் - துதி

சீர்பூத்த கோகனக மலரயனமா லாதியவைந்
தேவாய் மிக்க, ஏர்பூத்த சிருட்டிமுதற் றொழி
லதற்குக் காரணமா யிலங்கா நின்ற, பேர்பூத்த ம
றைமுடியி னொளிர்குடிலை தனிலுதித்த பெருமா
னருள, கார்பூத்த மதக்களிற்று முகக்கடவு ளடிக்
கமலங் கருத்துள் வைப்பாம்.

# முகவுரை.

உலகின்கண் சிறந்து, வைதிக சைவ பத்தி நெறியை விளக்குந் திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தை வசனச்சுருக் கமாக, முன் யான் நடாத்திய "சென்னை இந் துஜன பூஷணி" என்னுந் தமிழ்ப்பத்திரிகையி ல் வாரந்தோறும் பிரசுரித்துவந்தது யாவரும் அறிந்த விஷயம். அதனைப் பலருக்கும் உதவி யாக வெளியிடும்படி, எனது நண்பர்-சென் னைக்கவர்ன்மெண்ட் தமிழ் ட்ரான்ஸ்லேட்டர்

முன்ஷியாகிய ம-ள-ள-ஸ்ரீ தண்டலம்-**பாலசுந்தரமுதலியார்** அவர்கள் விரும்பிய வண்ணம், சிறுவர், சிறுமியர் முதலிய யாவரும் எளிதில் வாசித்துணரும்பொருட்டு, திருத்தொண்டத்தொகையும், தனியடியார், தொகையடியார் ஆகிய எழுபத்திரண்டு நாயன்மார் சரித்திரங்களும், **ஸ்ரீமந்-மாணிக்கவாசகசுவாமிகள்** சரித்திரமும் சேர்த்து மூன்று திருவுருவப்படங்களுடன் சிறு பாக்கெட் புத்தகமாக அச்சிட்டு முடித்தனன்.

விஜய௵ ஆடி௴ திருமயிலை

**வி-சுந்தரமுதலியார்.**

கணபதி துணை.

விருத்தம்

பூவுலகும் பொன்னுலகும் புகழ்ந்தவத்திற் பெரியருளம் புனித மான, தேவுலவென னமர்ந்தருளுஞ் சிவக்களிற்றை யைந்துகரத் தெய்வந் தன்னை, மூவுலகுந் துதியாறு முகத்தமுதை யெங்குருவை முக்கட் கோவை, நாவுலகு நயப்பெய்த வழுத்தியெம தாறுவினையி னலைவக லேப்பாம்.

# திருத்தொண்டர்

# புராண அட்டவணை.


| நாயன்மார் பெயர் | பக்கங்கள். |
|---|---|
| நம்பியாண்டார்நம்பி. | க |
| சேக்கிழார்நாயனார். | ௭ |
| திருத்தொண்டர்பெருமை. | கக |
| குருபூசை. | ௨௫ |
| குருபூசைத்திருநக்ஷத்திரம். | ௨௪ |
| புராணவரலாறு. | ௩க |
| திருவாரூர்ச்சிறப்பு. | ௩௬ |
| சுந்தரமூர்த்திநாயனார். | ௩௭ |
| தில்லைவாழந்தணர். | ௪௫ |
| திருநீலகண்டநாயனார். | ௫௫ |

| நாயன்மார் பெயர் | பக்கங்கள் |
|---|---|
| இயற்பகைநாயனார். | ௬௦ |
| இளையான்குடிமாறநாயனார். | ௭௧ |
| மெய்ப்பொருணாயனார். | ௭௬ |
| விறன்மிண்டநாயனார். | ௮௦ |
| அமர்நீதிநாயனார். | ௮௧ |
| எறிபத்தநாயனார். | ௮௭ |
| ஏனாதிநாதநாயனார். | ௮௯ |
| கண்ணப்பநாயனார். | ௯௧ |
| குங்கிலியக்கலயநாயனார். | ௯௫ |
| மானக்கஞ்சாறநாயனார். | ௯௭ |
| அரிவாட்டாயநாயனார். | ௯௯ |
| ஆனாயநாயனார். | ௧௦௨ |
| மூர்த்திநாயனார். | ௧௦௫ |
| முருகநாயனார். | ௧௦௯ |
| உருத்திரபசுபதிநாயனார். | ௧௧௦ |
| திருநாளைப்போவாரநாயனார். | ௧௧௧ |
| திருக்குறிப்புத்தொண்டநாயனார். | ௧௧௪ |
| சண்டேசுரநாயனார். | ௧௧௭ |
| திருநாவுக்கரசுநாயனார். | ௧௨௫ |
| குலச்சிறைநாயனார். | ௧௩௮ |
| பெருமிழலைக்குறும்பநாயனார். | ௧௪௫ |
| காரைக்காலம்மையார். | ௧௪௬ |
| அப்பூதியடிகணாயனார். | ௧௫௨ |
| திருநீலநக்கநாயனார். | ௧௫௭ |
| நமிநந்தியடிகணாயனார். | ௧௬௧ |
| திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். | ௧௬௫ |

| நாயனார் பெயர் | பக்கம் எண் |
|---|---|
| ஏயர்கோன்கலிக்காமநாயனார். | ௧௯௧ |
| திருமூலநாயனார். | ௧௯௬ |
| தண்டியடிகணாயனார். | ௧௯௯ |
| மூர்க்கநாயனார். | ௨0௧ |
| சோமாசிமாறநாயனார். | ௨0௩ |
| சாக்கியநாயனார். | ௨0௪ |
| சிறப்புலிநாயனார். | ௨0௬ |
| சிறுத்தொண்டநாயனார். | ,, |
| சேரமான்பெருமாணாயனார். | ௨௧௩ |
| கணநாதநாயனார். | ௨௧௮ |
| கூற்றுவநாயனார். | ௨௧௯ |
| பொய்யடிமையில்லாதபுலவர். | ௨௨௧ |
| புகழ்ச்சோழநாயனார். | ௨௨௨ |
| நரசிங்கமுனையரையநாயனார். | ௨௨௪ |
| அதிபத்தநாயனார். | ௨௨௬ |
| கலிக்கம்பநாயனார். | ௨௨௮ |
| கலியநாயனார். | ௨௨௯ |
| சத்திநாயனார். | ௨௩௧ |
| ஐயடிகள்காடவர்கோனாயனார். | ,, |
| கணம்புல்லநாயனார். | ௨௩௩ |
| காரிநாயனார். | ௨௩ |
| நெடுமாறநாயனார். | ௨௩௫ |
| வாயிலார்நாயனார். | ,, |
| முனையடுவார்நாயனார். | ௨௩௬ |
| கழற்சிங்கநாயனார். | ௨௩௭ |
| இடங்கழிநாயனார். | ௨௪௮ |

| நாயன்மார்பெயர் | புத்தக எண். |
|---|---|
| செருத்துணைநாயனார். | ௨௩௦ |
| புகழ்த்துணைநாயனார். | ,, |
| கோட்புலிநாயனார். | ௨௪௧ |
| பத்தராய்ப்பணிவார். | ௨௪௩ |
| பரமனையேபாடுவார். | ௨௪௫ |
| சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார். | ௨௪௬ |
| திருவாரூர்ப்பிறந்தார். | ௨௪௮ |
| முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார். | ,, |
| முழுநீறுபூசியமுனிவர். | ௨௪௯ |
| அப்பாலுமடிச்சார்ந்தார். | ௨௫௦ |
| பூசலார்நாயனார். | ௨௫௧ |
| மங்கையர்க்கரசியார். | ௨௫௨ |
| நேசநாயனார். | ௨௫௩ |
| கோச்செங்கட்சோழநாயனார். | ௨௫௪ |
| திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார். | ௨௫௬ |
| சடையநாயனார். | ௨௫௮ |
| இசைஞானியார். | ,, |
| மாணிக்கவாசகசுவாமிகள். | ௨௬௦ |


திருச்சிற்றம்பலம்.

---

## ஸ்ரீநடராஜர் அபிஷேகநாட்கள்.

வெண்பா.

சித்திரையி லோணமுதற் சீரானி யுத்திரமாம்
சத்ததனு வாதிரையுஞ் சார்வாகும்—பத்திவளர்
மாசியரி கன்னி மருவுசதுர்த் தசியென
ஈசரபி ஷேகதின மாம்.

---

கணபதிதுணை.

# நம்பியாண்டார்நம்பிசரித்திரம்.

சோழமண்டலத்திலே, திருவாரூரின்கண் சிவபத்தியிற் சிறந்த அபயகுலசேகர சோழ மஹாராஜாவானவர் அரசுசெலுத்திவருங்காலத்தில், அவ்வரசர் பெருமான் அவைக்களத்துக்கு எழுந்தருளிவருஞ் சிவனடியார்கள் சைவசமயாசாரியர் மூவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திருப்பதிகங்களுள் ஒவ்வொன்றைக்கேட்டு, நெஞ்சநெக்குருக ஆனந்த பரவசராய், அத்தேவாரத்திருமுறையை எங்குந்தேடிக் கிடையாமையால் மனத்துயருற்றிருந்தனர். இப்படி யிருக்குநாளில்,

திருநாரையூரென்னுந் திருத்தலத்தில்வீற்றிருக்கும் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசை செய்யும் ஆதிசைவவேதிய ரொருவருக்குச் சைவசமயம் தழைத்தோங்கும் பொருட்டு, ஒரு சற்புத்திரர் அவதரித்தருளினார். அவர் உபநயனஞ்செய்யப்பெற்று வேதாதிகலைகளை ஓதுநாளில், தந்தையார் ஓரூருக்குப்போய் விட, அவருடைய கட்டளைப்படியே பொல்லாப்பிள்ளையாருக்குத் திருமஞ்சன முதலியன யாவுஞ் செய்து, நைவேத்தியத்தைத்

திருமுன் வைத்தும், அவர் திருவமுது செய்யாமைகண்டு, மனக்கவலைகொண்டு தமது தலையைக் கல்லின்மேல் மோதப்புகுந்தார். உடனே பொல்லாப்பிள்ளையார் வந்து தடுத்து, நிவேதனத்தைத் திருவமுதுசெய்தருளினார். அப்போது, நம்பியாண்டார்நம்பி மனங்களிகூர்ந்து, "எம்பெருமானே, இனி அடியேன் பள்ளிக்கேகில் ஆசிரியர் தண்டிப்பராகையால், தேவரீரே! வேதாதிகலைகளை ஓதுவித்தல் வேண்டுமென்று பிரார்த்திக்க, பொல்லாப்பிள்ளையார் திருவுளமிரங்கி, அவ்வாறே யோதுவித்தருளலும், நம்பியாண்டார்நம்பி பலகலைகளும் பயின்று, அப்பிள்ளையார் மேல் திருவிரட்டைமணிமாலை பாடியருளினார்.

இச்செயல்களை யெல்லாம் அபயகுலசேகர சோழமஹாராஜா கேள்வியுற்று, பழவர்க்கங்கள், தேன், அவல், எள்ளுருண்டை முதலியன எடுப்பித்துக்கொண்டு, நால்வகைச்சேனையோடு திருநாரையூரையடைந்து, நம்பியாண்டார் நம்பியுடைய திருவடிகளைவணங்கி, அவற்றைப் பிள்ளையாருக்கு நிவேதிக்கும்படி குறையிரக்க, நம்பியாண்டார்நம்பி பிள்ளையார் திருவடிகளைவணங்கி, அப்பண்டங்களையெல்லாம் சுத்திசெய்து படைக்க, அவர் தமது துதிக்கையை நீட்டி அவற்றையெல்லாம் திருவமுதுசெய்தருளினார்.

அதுகண்டசோழமஹாராஜா மனமகிழ்ந்து, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, சுவாமி! சமயாசாரியர் மூவர்கள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திருமுறையும், திருத்தொண்டர் சரித்திரமும், உலகில் விளங்கல் வேண்டுமென்று, விண்ணப்பஞ் செய்ய, நம்பியாண்டார்நம்பி பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, எம்பெருமானே! தேவாரத்திருமுறைகள் இருப்பிடத்தையும், திருத்தொண்டர்கள் சரித்திரத்தையும், அடியேனுக்கருளிச்செய்தல் வேண்டுமென்று பிரார்த்திக்க, பொல்லாப்பிள்ளையார், அன்பனே! சிதம்பரத்தில் கனகசபைக்குப் புறக்கடைப்பக்கத்தில், சைவசமயாசாரியர் மூவர்களுடைய கையடையாளத்தைக் கொண்ட அறையினுள்ளே தேவாரத்திருமுறைகள் இருக்கின்றன என்றருளிச்செய்து, பின்னர், திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் திருவாய்மலர்ந்தருளினர் நம்பியாண்டார்நம்பி சோழமஹாராஜாவையடைந்து அவைகளைத்தெரிவிக்க, அரசன் நம்பியாண்டார்நம்பியோடு சிதம்பரமடைந்து, சபாநாயகரைத்தரிசித்துவணங்கி, தில்லைவாழந்தணர்களைநோக்கி, பொல்லாப்பிள்ளையார் அருளிச்செய்தமையைக்கூற, அவர்கள் மஹாராஜாவே! அம்மூவர்கள் எழுந்தருளிவந்தால் அறை திறக்கும் என்றனர் சோழமஹாராஜா நடராஜ

மூர்த்திக்கு விசேஷபூஜை செய்வித்து, சமய குரவர் மூவரைத் திருவீதி உலாவருவித்துக் கனகசபையைப் பிரதக்ஷிணஞ்செய்து, திருமுறைகள் இருக்கும அறையின்எதிர் கொடுவந்து நிறுத்திக்கொண்டு, தில்லைவாழந்தணர்களைநோக்கி, சமயகுரவர்கள் மூவரும எழுந்தருளிவந்து விட்டனர். இனி அறைதிறக்கலாமே என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழமஹாராஜாவின் புத்தியைவியந்து, அறை திறக்க இசைந்தனர்.

சோழமஹாராஜா திருக்கதவைத்திறந்து, திருமுறைகளைப் புற்றுமூடி யிருப்பக்கண்டு, மனநொந்து, அவற்றை வெளியேகொணர்வித்து, செல்லுந்ழையும்படி எண்ணெய்சொரிந்து, திருவேடுகள் எல்லாவற்றையும எடுத்துப்பார்க்க, அளவிறந்த திருவேடுகள் பழுதுற்றிருப்பக்கண்டு, கண்ணீர்விட்டு மனந்தளர்ந்து நிற்கையில், சிவபெருமான் திருவருளால பலருங்கேட்ப, தேவாரத் திருப்பதிகங்களில இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை மாத்திரம வைத்துவிட்டு ஏனையவற்றை வன்மீகமூடச்செய்தோம் என்றோரசரீரிவாக்கு ஆகாயத்தில் உண்டாயிற்று. சோழமஹாராஜா மனக்கவலை தீர்ந்து, எமபெருமான் திருவருளை வியந்து, ஆடிப்பாடி, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, சுவாமி! தேவாரமுதலிய அருட்பா

க்களெல்லாவற்றையும திருமுறைகளாக வகுத்தருளும என்று, விண்ணபபஞ்செய்தனா.

நமபியாண்டார்நமபி அதற்கிசைந்து, திருஞானசமபநதமூாத்திநாயனூா திருவாய்மலாநதருளிய தேவாரததிருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும, திருநாவுக்கரசுநாயனூா அருளிச்செய்த தேவாரத திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும, சுந்தரமூர்த்திாயனூா அருளிச்செய்த திருப்பதிகஙகளை ஒரு திருமுறையாகவும வகுத்தருளினூர். இவ்வாறு தேவாரத்தை, ஏழுதிருமுறைகளாக வகுத்தபின்னர், மாணிக்கவாசககவாமிகள் அருளிச்செயத திருவாசகம, திருக்கோவையார் என்னு மிரண்டையும, எட்டாக்திருமுறையாகவும, திருமாளிகைததேவா முதலிய ஒன்பதின்மா அருளிச்செய்த திருவிசைபபா, திருபபல்லாணடு முதலிய திருபபதிகங்களை, ஒன்பதாநதிருமுறையாகவும, திருமூலா அருளிச்செய்த திருமந்திரத்தைப் பததாநதிருமுறையாகவும, திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரமுதலிய திவ்வியப் பிரபநதஙகளைப பதினோராநதிருமுறையாகவும வகுத்தருளினூர்.

இவ்வாறு திருமுறைகளை வகுத்தருளிய பின்னர், நம்பியாண்டாாநமபி தமக்குப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளியபடியே

திருத்தொண்டத்தொகையை முதனூலாகக் கொண்டு, திருத்தொண்டர்களுடைய அடிமைத்திறத்தையும், அவர்களடைந்தபேற்றையும், கலித்துறைத்திருவந்தாதியாக அருளிச்செய்தார்.

அதன்பின், நம்பியாண்டார் நம்பியும், சோழமஹாராஜாவும், தில்லைவாழந்தணர்கள் முதலானவருடன் திருவெருக்கத்தம்புலியூரையடைந்து, அங்கு சிவபெருமான் அசரீரிவாக்கால் கட்டளையிட்டருளிய வண்ணம் திருநீலகண்டப்பெரும்பாணனார் மரபிற்பிறந்த பெண்ணொருத்தியை அழைத்துக்கொண்டு, சிதம்பரத்தையடைந்து, கனகசபைக்குமுன் சென்று, தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்தார்கள். அதன்பின்னர், சபாநாயகரைவணங்கி விடைபெற்றுக்கொண்டு, நம்பியாண்டார்நம்பியும், சோழமஹாராஜாவும் தத்தம் பதிகளையடைந்தனர்.

நம்பியாண்டார்நம்பி சிவாநுபூதிப் பெருஞ்செல்வராய்ச் சிலகாலம் எழுந்தருளியிருந்து சிவபதமடைந்தனர். அப்பகுலசேகர சோழ மஹாராஜாவானவர் பதினொருதிருமுறைகளையும் செப்பேடுசெய்து, திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்து, திருமுறைகண்டசோழன் என்னும் திருப்பெயர்பெற்று, சைவத்திருநெறி தழைத்தோங்கும்படி

நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து, சிவ பதமடைந்தனர்.

சைவசமயாசாரியர்கள் மூவர் அருளிச்செய்ததேவாரத் திருப்பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழாம் இவை யொன்று சேர்ந்த திருமுறை அடங்கன்முறை எனப்படும். கலவி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த சிவாலய முனிவர், அதனை நாடோறும் பாராயணஞ் செய்ய ஆசைகொண்டு, அது கூடாமையால், வருத்தமுற்று, சிதம்பரத்தையடைந்து, சபர் நாதரைவணங்கித் தமது கருத்து முற்றும் படி நெடுங்காலம் தவஞ்செய்தனர் அப்போது, சபாநாதர் திருவருளால், "சிவாலயமுனிவனே; நீ பொதியமலையின்கணுள்ள அகத்திய முனிவரிடத்தில் சென்றால் உனகருத்து நிறைவேறும்" என்றோர் அசரீரிவாக்குண்டாயிற்று அதுகேட்ட முனிவர் பொதியமலையை அடைந்து அகத்தியரைச் சிந்தித்து மூன்று வருடம் அருந்தவம் புரிந்தனர் அகத்தியர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறைமுழுதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத்திரட்டி, "இவற்றை நாடோறும் பாராயணஞ்செய்பவர்கள் அடங்கன்முறை முற்றும் ஓதினவர்களாவார்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். சிவாலயமுனிவர் அவ்

வாறே அவற்றை நெடுங்காலம பாராயணஞ் செய்து சிவானுக்கிரகம் பெற்றனர்.

திருச்சிற்றம்பலம்.

---

## சேக்கிழார்நாயனார்சரித்திரம்.

தொண்டைமண்டலத்திலே குன்றத்தூரில், வேளாள குலத்தில் சேக்கிழார் மரபில, சிவபெருமான் திருவருளால அருண்மொழித்தேவா, பாலறுவாயா என்னுஞ் சற்புத்திரிருவா சோதரராய்த் திருவவதாரஞ்செய்தனா. அவர்களில் மூத்தவராகிய அருண்மொழித்தேவருக்கு, தாம உதித்தமரபை விளக்கினமையால் சேக்கிழாா எனனுந திருநாமம் உண்டாயிற்று. அவருடைய கலவி, அறிவு, ஒழுக்கங்களையறிந்த அநபாயசோழமஹாராஜாவானவர், அவரைத்தமக்கு முதன்மந்திரியாராக்கி, உத்தமச்சோழபபலலவன் என்னும் பெயரைக்கொடுத்தாா. அவா சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரமென்னுஞ் சிவஸ்தலத்தில, தமககு அன்புமிகுதலால், தம்பதியாகிய குன்றத்தூரில, திருநாகேச்சுரமென்னுமோா சிவாலயம கட்டுவித்துப் பிரதிட்டைசெய்து, அதில நித்திய நைமித்திகங்களைவழுவாது நடத்துவித்துக்கொணடு, சோழமஹாராஜாவினிடத்

தில் மந்திரித்தொழிலை ஒழுங்குபெறச் செய்துவந்தனர்.

இங்ஙனம் நிகழுநாளில், சைவசமயிகளிற் சிலர், மோக்ஷசாதன மெய்நூல்களாகிய சைவசமயநூல்களைக்கல்லாது சமணநூலாகிய சீவகசிந்தாமணியை மெய்யெனக்கருதிக் கற்றுத்தங்கள் வாணாளைவறிதே கழித்துவந்தனர். சோழமஹாராஜனும் அதில் சத்தியபுத்திவைத்து மேன்மைபாராட்டிக் கேட்பாராயினர். அதுகண்ட சேக்கிழார் நாயனார் இராஜனைநோக்கி, மஹாராஜனே, நீர்சைவசமயியாயிருந்தும், இம்மைமறுமை வீடென்னுமூன்றையும் பயக்கத்தக்க சிவசரிதத்தைக் கேளாமல், புறச்சமயிகளாகிய சமணர்களுடைய பொய்க்கதையாகிய இந்தச் சீவகசிந்தாமணியை மெய்யெனக்கருதிக்கேட்டு, உமது வாணாளை அவலமாக்குவது நன்றன்று என்று கூற, அரசன்கேட்டு, அதன்வரலாறியாது, தெளிவுறக்கூறுமென்று சோழமஹாராஜா வினவலும், சேக்கிழாரநாயனார்பூர்வம் திருவாரூரிலவனமீசுநாதர் உலக முய்யும்பொருட்டு,"தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று சைவசமயாசாரியர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனருக்கு அடியெடுத்துக்கொடுக்க; அவர் பதினொரு திருப்பாசுரங்களாலே திருத்தொண்டத்தொகை என்று பெயர

தந்து, ஒருதிருப்பதிகம் பாடியருளினார் அந்திருத்தொண்டத் தொகைக்குத் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையார் பொருளுரைக்க, அந்தப்பிள்ளையாரிடத்தில் சகலகலைகளையும் ஓதியுணர்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார்நம்பியானவர் அந்னை வகுத்துக் கட்டளைக் கலித்துறையினால் ஒரு அந்தாதி செய்தருளினார் அத்திருவந்தாதியைத் திருமுறைகண்ட ராஜராஜ அபயகுலசேகர சோழமஹாராஜா சிவாலயமுனிவர் முதலிய பெரியோர்களெல்லாரும் எடுத்து இனிது பாராட்டினார்கள் என்றார். அதுகேட்டு சோழராஜன், அத்திருவந்தாதியை ஓதிப்பொருள் கூறுமென்றுகேட்க, சேக்கிழார்நாயனார் அதனை ஓதிப்பொருள்விரித்துரைக்க, அரசன் அதைக்கேட்டு வியந்து, மனமுருகி இச்சரித்திரத்தைப் பெருங்காப்பியமாக விரித்துப்பாடியருளும் என்றான். அருண்மொழித்தேவர் அவ்வரசர்பெருமானிடத்தில் எண்ணிறந்த திரவியங்களையும் விடையையும்பெற்று, சிதம்பரத்தலத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசித்து நின்று,“எம்பெருமானே! அடியேன் தேவரீருடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தைப் பெருங்காப்பியமாக விரித்துப்பாடத்தேவரீர் அடியெடுத்துக் கொடுத்தருளல் வேண்டும்”என்று பிரார்த்தித்துவண

ங்க, உடனே சபாநாயகரது திருவருளால், “உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்” என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. தில்லைவாழந்தணர் முதலிய யாவரும் அது கேட்டு அதிசயித்து எம்பெருமான் திருவருளை வியந்தார்கள்.

சேக்கிழார்நாயனார் சைவகுரவர் மூவரையும்நமஸ்கரித்து,விபூதிருத்திராக்ஷங்களணிந்து, ஆயிரக்கானமண்டபத்திற்சென்று அங்கிருந்துகொண்டு,சபாநாயகர் எடுத்துத்தந்த திருவாக்கைமுதலாகக்கொண்டு,புராணம்பாடி முடித்து,அதற்குத்திருத்தொண்டர் புராணமெனப்பெயர்தந்து, மைக்காப்புச் சாத்திக் கவளிகையில் வைத்தருளினார். சோழராஜன் அப்போதப்போது தூதர்களால் புராணசங்கதி தெரிந்துகொண்டேயிருந்து,முற்றுப்பெற்றமையைக்கேள்வியுற்றவுடன், மனமகிழ்ந்துசுபதினத்தில், நால்வகைச்சேனைகளும் புடைசூழ்ந்துவர, யானைமேற்கொண்டு சென்று, சிதம்பரத்தையடைந்து,அருண்மொழித்தேவரைக்கண்டு, நமஸ்கரித்து, பின்னர், அவரோடும் தில்லைவாழ்ந்தணர்முதலானவர்களோடும் சென்று கனகசபையை அடைந்து, நடராஜப்பெருமானைத் தரிசித்து வணங்கிஸ்தோத்திரஞ்செய்தனர். அப்போது,சோழனே, நாம “உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்” என்று அடியெடுத்துத்தர, சேக்கிழான் நம தொண்டர்களுடைய அடி

மைத்திறத்தை விரித்துப புராணம்பாடி முடித்தான். நீ அதைக்கேள்" என்று அங்குள்ள சமஸ்தரும் கேட்கும்வண்ணம ஓரசரீரிவாக்கும், திருச்சிலம பொலியும் கனகசபையில யாவருங்கேட்க உணடாயின

சோழமஹாராஜாவானவா அதைக்கேட்டு மனமகிழ்ந்து, திருததொணடா புராணத்தைக் கேட்கவருமபொருட்டு, எங்குமுள்ள சிவனடியார்கட்கு திருபங்கள்போககி, ஆலயத்தையும் திருவீதிகளையும அலங்கரிபபிதத னா. தில்லைவாழநதணாகளில ஒருவா, சிததிரைமாசம திருவாதிரை நக்ஷததிரத்தில, சபாநாதா சந்நிதானத்தில மெழுகி, அறுகாற்பீடமிட்டு, அதன்மேற் பசும்பட்டு விரித்து, அதற்குமேல வெண்பட்டு மடித்திட்டு, மலர்தூவி, தூபங்கொடுத்து, ஆசனங்கற்பித்து, அதன்மேல திருத்தொணடா புராணததைவைத்து, அருச்சித்து வணங்கித்துதித்தனர்.

பின்னா, சோழராஜா முதலிய அடியார்கள் யாவருமசேக்கிழாா நாயனுரை வணங்கி, இத்திருத்தொணடர் புராணத்தைத் தேவரீரே வாசித்துப் பொருளருளிச்செய்யீா என்று விண்ணப்பஞ்செய்ய,அவா அவ்வாறே விரித்துப் பொருள்கூற யாவரும் இருந்துகேட்டு மகிழ்நதனா. சோழமஹாராஜாவானவர், அன்று முதல நாடோறும சபாநாயகருக்கு மஹாபூ

சைநடத்தி, தில்லைவாழந்தணர்களுக்கும், ம டபதிகளுக்கும், மற்றும் புராணங்கேட்கவந்த எண்ணிறந்த அடியவர்கட்கும் போசனமுத லியவைகளெல்லாம் குறைவறநடத்தினர். யா வரும் பேரன்புடன்கேட்க, அருண்மொழித் தேவர் நாடோறும் புராணம் வாசித்துப் பொருள்கூறி அடுத்தவருடம் சித்திரைமாசம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பூர்த்திசெய்தரு ளினர்.

திருத்தொண்டர்புராணம் பூர்த்தியானவு டன் தில்லைவாழந்தணர் அதனை விதிப்படி அருச்சித்துவணங்கினர். அநபாயசோழமஹா ராஜாவானவர், அப்புராணத்தைப் பசும்பட்டி ஞற் சுற்றி பொற்கலத்தில்வைத்து, அதனை யானையின் மத்தகத்தின்மேலிருத்தி, சேக்கி ழார் நாயனரை அவ்யானையின்மேலேற்றித் தாமும் பின்னேயேறி இரண்டுகைகளினாலும் வெண்சாமரம் வீசிவர, அந்தணர்கள் வேத கோஷஞ்செய்ய, மங்கலவாத்தியங்கள் கடல் போலொலிக்க, சிவனடியார்கள் ஹரஹர எ ன்று துதித்துவர, சேக்கிழார்நாயனர் திரு வீதிவலஞ்செய்து, அரசரோடும் யானையினி ன்றுமிறங்கி, கனகசபையிற்சென்று, திருத் தொண்டர் புராணத்தைத் திருமுன்னே வைத்தனர் சோழமஹாராஜா அவருக்குத் "தொண்டர்சீர்பரவுவார்" என்னும் திருநாம

ங்கொடுத்து, ஞானமுடிசூட்டி, அவரை மண டபத்திலே எழுந்தருளச்செய்து, அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

பின்பு, பூர்வம நமபியாண்டாாநமபியால் வகுக்கப்பட்ட பதினொருதிருமுறைகளுடன் திருத்தொண்டா புராணம ஒனறு சோத்து, அதனைப பனனிரணடாந திருமுறையென வகுதது, செபபேடுசெய்து சநநிதியில ஏற்று வித்தாா. அதன் பிறகு, சேக்கிழாரநாயனாரு டைய தமபியாராகிய பாலறுவாயர் இப போதெங்குளாா எனறு வினவ, அஙகிருந்தார் சிலா வணங்கிநின்று, "அவர் குன்றத்தூரில ஒரு திருக்குளமமைத்தபின், திருநாகேசுரரு க்குத் திருபபணிசெய்துகொணடு அவ்விடத் திருக்கின்றனா" என்றாாகள். அதுகேடட அர சாபெருமான் அவரையழைபபித்து, அவரு க்குத தொண்டைமான் என்னும பெயாதந து, அவரைத் தமக்கு முதன் மந்திரியாராக்கி னாா. சேக்கிழாா நாயனாா சிதமபரத்திற்றனே சிலகாலம எழுந்தருளியிருநது சபாநாதரு டைய குஞ்சிதபாத நிழலே அடைநதாா.

திருச்சிற்றம்பலம்.

உ

சுந்தரமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

# திருத்தொண்டத்தொகை.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்-
றிருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே, னில்லை
யே யென்னாத வியற்பகைக்கு மடியே-னிளையான்
றன் குடியாற னடியார்க்கு மடியேன், வெல்லுமா
மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்-விரிபொழில்
சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே, னல்லி
மென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே-னாரூர னாரூரி
லம்மானுக் காளே. (க)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே-னே
னாதி நாதன்ற னடியார்க்கு மடியேன், கலைமலிந்த
சீர்நம்பி கண்ணப்பற் கடியேன - கடவூரிற் கலயன்
ற னடியார்க்கு மடியேன, மலைமலிந்த தோள்வள்
ளன் மானக்கஞ் சாற-னெஞ்சாத வாட்டாய னடி
யார்க்கு மடியே, னலைமலிந்த புனன்மங்கை யான
யற் கடியே-னாரூர னாரூரி லம்மானுக் காளே. (உ)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்,
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன, செம்
மையே திருநாளைப் போவாற்கு மடியேன், றிருக்கு
றிப்புத் தொண்டர்தம மடியார்க்கு மடியேன், மெ

ய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க, வெகுண்டெ
ழுந்த தாதையை மழுவினா லெறிந்த, வம்மையா
னடிச்சண்டிப் பெருமானுக் கடியே, னாரூர னாரூரி
லம்மானுக் காளே. (௩)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட-
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன், பெ
ருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்-பெரு
மிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியே, னொரு
நம்பி யப்பூதி யடியார்க்கு மடியே-னொலிபுனல்சூழ்
சாத்தமங்கை நீலநக்கற் கடியே, னருநம்பி நமிநந்தி
யடியார்க்கு மடியே - னாரூர னாரூரி லம்மானுக்
காளே. (௪)

வம்பறா வரிவண்டு மணநாற மலரு - மதுமலர்நற்
கொன்றையா னடியலாற் பேணு, வெம்பிரான் சம்
பந்த னடியார்க்கு மடியே-னேயர்கோன் கலிக்காம
னடியார்க்கு மடியே, னம்பிரான் றிருமூல னடியா
ர்க்கு மடியே - னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு
மடியே, னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே -
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௫)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழ
லே - மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்,
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்-
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியே
ன், கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடி
யேன் - கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே,
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே-
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௬)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்-
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்,
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்-வி
ரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன், கைத
டிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன் - கழற்சத்
தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே, னையடி
கள் காடவர்கோ னடியார்க்கு மடியே-னாரூர னாரூரி
லம்மானுக் காளே. (எ)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிரு
ந்த-கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே, னிறை
க்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற - நின்ற
சீர் நெடுமாற னடியார்க்கு மடியேன், றுறைக்கொ
ண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் - தொன்
மயிலை வாயிலா னடியார்க்கு மடியே, னறைக்கொ
ண்ட வேனம்பி முனையடுவாற் கடியே-னாரூர னாரூ
ரி லம்மானுக் காளே. (அ)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்-
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்,
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை - ம
ன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்,
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி-பொன்
னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்,
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே - னா
ரூர னாரூரி லம்மானுக் காளே. (கூ)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்-
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன், சித்தத்

தைச் சிவன்பாலே வைத்தாற்கு மடியேன் - திரு வாரூர்ப் பிறந்தாரக ளெல்லார்க்கு மடியேன், முப் போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன் - முழு நீறு பூசிய முனிவர்க்கு மடியே, னப்பாலு மடிச்சார்ந் த வடியார்க்கு மடியே - னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௧0)

மனனியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல் - வரிவ ளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன், றெனன வனு யுலகாண்ட செங்கணாற் கடியேன - திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே, னென்னவனா மர னடியே யடைந்திட்ட சடைய-னிசைஞானி காத லன் றிருநாவ லூர்க்கோ, னனனவனு மாரூர னடி மைகேட் டுவப்பா - ராரூரி லம்மானுக் கன்பரா வா ரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## சமயாசாரியர் நால்வர்வயசு.

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

---

உ

# திருத்தொண்டர்பெருமை.

சகலலோகமும் பரவபபெற்று அபாரமஹிமை வாய்ந்து புக்தி ஞான வயிராக்கியங்களில தலைமைபூணடவாகளாய் மனோவாக்குக் காயங்களால குருலிங்க சங்கமபததிசெய்து, பேரானநதப்பெருவீடெய்திய திருத்தொணடாகளுடையதிவ்விய சரித்திரங்களைச் சுருக்கமாகயாவரும எளிதில உணரும்படி எழுதபபட்டது.

"மக்களாக்கையிற் பிறத்த லேயரிது மற்றதிலுந்
துக்ககூன்குரு டூமையைத் துறத்தலுமரிது
நற்குலத்திடை வருதலுமரிது ஞானத்தான்
முக்கணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே."

என்னும் பதிபசுபாச விளக்கச் செய்யுளுக்கிணங்கத் திருவள்ளுவரும "செயற்கரிய செய்வாாபெரியா" என்று கூறியபடி அநநாயனமார்களிற்சிலர், சிவபெருமான் ஸ்ரீபாதங்களில் வைத்த அன்பின்மிகுதியால, மனத்தானும நினைத்தற்கரியனவாயதிருததொணடுகளை, நமமனோர் உய்யுமாறுசெய்தனா. கணணைப பிடுங்கியப்புவதற்கிசைவாரு முலகிலுளரோ? அங்ஙனஞ் செய்வதாகச் சொலலுதற்கோா வெழாதபோது, மெய்யன்பின் வயிராக்கியத்தால், துணிநதுசெய்தநமதுகண்ணப்பநாய

ஞருடைய உறுதிப்பாட்டைப் புகழ்ந்து கூறு
தற்குயாவரான் முடியும். தொண்டுபுரியத்தொ
டங்கிய அன்றுநாளிலேயே முத்தியடைந்தவர்,
இவரல்லவா? அடியார் திருவேடம் பூண்டு
வந்தபரமேஸ்வரனுக்கமுதுபடைத்தற்காக, த
னதொரே யருமபெறற்குமாரனை அரிதற்குட
ன்படலென்ன சாமானியகாரியமா? தாம் பெ
ற்ற மகவைவேறொருவரவ்வாறு அரிய செய
லபுரியவே மனமிசைந்தளிக்க உலகத்திலசம
மதியாராக, வருந்தித் தவங்கிடந்து பயந்த தா
ங்களே மகிழ்ச்சியோடெங்ஙனந்துணிந்துசெ
யல கூடும்? எவ்வாற்றாலேனும் சிவனடியார
அமுதுசெய்யத்திருவுளமிசைந்தால அஃதே
போதுமான பெரும்பேறென்று எங்கும் யாவ
ருஞ்செய்யாத அரியசெயல்செய்து முத்திக்க
ரைஅடைந்தசிறுத்தொண்டநாயனார், திருச்
செங்காட்டு நங்கையாரிவர்களுடையபுகழ்ப்பர
வாப் புவனமுமுளதோ? மிக்கவளம்பொருந்தி
ய தமது யௌவனகாலத்தில், பரத்தையர் க
மனவிஷயத்தால், "எம்மைத்தீண்டிற்றிருநீல
கண்டம்" என்று மனைவியார் கூறிய ஆணை
யைமேற்கொண்டு, ஏனையமாதரையுங்கருதா
து வயோதிகபருவமளவும் நிலைவழாது நடந்
து, இளமையைவாளாதுறக்கவல்லவர், திரு
நீலகண்டநாயனாரலலா லொருவர்வேறுமுண்
டோ? பெருந்தேவர்களாகிய பிரமவிட்டுணுக்

களாலுஞ்சாத்தியமா? இன்னும் ஏனைய நாய ன்மார்களுடைய பிரபாவங்களை யெடுத்துச் சொல்லப்புகின், விஸ்தாரமாக விரியுமாகலின் அவற்றுள் மிக்க அரியனவாயசிலமாத்திர மீ ணடெழுதி நிறுத்தப்பட்டது.

"கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபின், என்னப்பனென்னொப்பி லென்னையுமாட்கொண டருளி, வண்ணப்பணித்தென்னை வாவென்றவான் கருணைச, சுண்ணப்பொனனீற்றற்கேசென றூதாய் கோத்தும்பீ."

"வாளான்மகவரிந்தூட்ட வல்லேனல்லன் மா துசொன்ன, சூளாலிளமைதுறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து, நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லே னலலனுனிணிச்சென, றாளாவ தெப்படியோதிரு க்காளத்தியப்பருக்கே."

என்று, நமது பெரியோர்களும் துதித்துள்ள னா அவ்வக்காலங்களில், மேற்கூறிய அடி யார்களைச்சிவபெருமானசோதிக்கத்திருவுளங் கொண்டெழுந்தருளியது, அவர்கள்பெருமை யை ஞாலத்துள்ளார்க்கு வெளிப்படுத்தி, அ துவழியாக உய்விக்கக் கருதியே யல்லாமல், த மக்கு அவர்கள்உறுதிப்பாடு தெரியாமையாலு ம, அவர்களை வருத்தியாட்கொள்ள வேண்டு மெனனு மெண்ணத்தாலுமன்று.

கண்ணிடந்தப்பல, மகவையரிதல, தலையை க்கல்லின்மோதல, வாளால கழுத்தையரிதல,

மூக்கையறுத்தல, ஆகிய இததகைய பத்திவழி பபட்டசெயலகளைச் சீவகாருண்ய மில்லாத கொடுந்தொழிலகளென்று கூறத்துணிதல பெரும்பேதமையாம. ஏனெனில, ஸ்வப்பிரயோசனத்தைக் கருதியாவது, உலகத்தில புகழை வேணடியாவது, அங்ஙனம செய்யின, பாவமும், அறியாமையுமாம். ஆனுலவை, உடல பொருளாவி மூன்றற்குமுடையானுகிய, பரமேஸ்வரப்பிரீதியாய் இயற்றப்பட்டனவாதலின், அப்பெற்றியனவன்றும. ஈஸ்வரப்பிரீதியாகச் செய்தபாவமும புணணியமாகவும, அவ்வாறல்லாதபுணணியமும பாவமாகவுமமுடியும. இதற்கு, நமது சேய்ஞலூர்ப்பிள்ளையாராகிய, சண்டேசுர நாயனுரே போதுமான சான்றும.

"அரனடிக்கன்பிலாதார் புண்ணியம்பாவமாகும்
பரனடிக்கனபாசெய்த பாவமுமறமதாகும்
நராதமிற்பாலன்செய்த பாதகம்நன்மையாய்த்தே."

"தீதில்லைமாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியுமவேதியன்றாதைதனைத்தாளிரண்டுஞ்
சேதிக்கவீசன திருவருளாற்றேவர்தொழப்
பாதகமேசோறு பற்றியவாதோணேக்கம."

என்று, நமதுமுன்னோர்களுமொழிந்திருக்கின்றனர். மேலும, நமது சைவசமயாசாரிய சிகாமணிகளாயெழுந்தருளியிருந்த நால்வர் முதலாயினோர் சிவாநுபூதிச்செலவாகளாயும,

திவ்வியஞான மூர்த்திகளாயு மிருந்தும், சரியைகிரியாநுசாரிகளைபபோல், ஆஙகாங்கு திருத்தலங்கடோறுஞ்சென்று, மெய்வாக்குத்தொண்டுகள் செய்ததெலலாம்,மண்ணுலகத்தோா அங்ஙனமநுசரித் துஜ்ஜீவிககவேணடுமென்னும கருணைரசப் பெருககாலே அன்றி, வேறலல. இஙஙனமிருக்க, இக்காலததிறபலா, அதனையுணராதுஎலலாமுணாநதவாகள் போலும, அறியவேண்டியதொன்றுமிலாாபோலும, நமது சமயசாஸ்திரககேள்வி சற்றுமிலலாராய், வாயிலவந்தபடிக்கெலலாமவ்வது, பெருமபாதகத்துக் காளாகாமல நமமைபபவசாகரக் கரையேற்றி உய்விக்குமாறு கருணைத்திருவுருக்கொணடவதரித்தருளிய, திருததொணடா திருவடிகட் கன்புபூணடு வாழ்வாராக.

திருச்சிற்றம்பலம்.

---

## குருபூசை.

நமது சைவசமயம தழைத்தோங்கத் திருவவதாரஞ்செய்தருளிய திருஞானசமபந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர்த்திநாயனா முதலிய அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும், மாணிக்கவாசகசுவாமிகளுக்கும், சேக்கிழார்நாயனருக்கும், மெய்க

ண்டதேவர், அருணந்திசிவாசாரியர், மறைஞானசம்பந்தசிவாசாரியர், உமாபதிசிவாசாரியருக்கும், பட்டினத்துப்பிள்ளையாருக்கும், திருவள்ளுவநாயனாருக்கும், அவரவர் முத்திபெற்ற திருநக்ஷத்திரத்தில், சைவசமயிகள் யாவரும் இயன்றமட்டும் திருமடங்களிலாவது, தங்கள் வீடுகளிலாவது மகேசுரர்களை அந்தந்த நாயனாராகப் பாவித்து குருபூசைசெய்து, திருவமுது செய்வித்தல் வேண்டும். மேலும், அந்தந்த நாயனமார்களுக்கு திருக்கோயில்களிலே அத்தினத்தில் அபிஷேகம், விசேஷபூசை, மகோற்சவ முதலிய சிறப்புக்களையும் செய்வித்தல் வேண்டும்.

---

## மகேசுரபூசையில் ஓதத்தக்க பெரியபுராணச்செய்யுள்.

*அல்லார்கண் டத்தண் டர்பிரானருளாற்பெற்றபடிக்காசு, பல்லாரியன் றவளம்பெருகப்பரமனடியாரானார்கள், எல்லாமெய்தியுண் கவெனவிரண் டுபொழுதும்பறைநிகழ்த்திச், சொல்லாற்சாற்றிச்சோறிட்டாரதுயர்கூர்வறுமைதொலைத்திட்டார்.* (க)

*தனிவெள்விடைமேனெடுவிசும்பிற்றலைவர்பூதகணநாதர், முனிவரமரர்விஞ்சையர்கண் முதலாயுள்ளோர்போற்றிசைப்ப, இனியகறியுந்திருவமுதும*

மைத்தார்காணவெழுந்தருளிப, பணிவெண்டிங்கண் முடிதுளங்கப்பரந்தகருணைநோக்களித்தார். (உ)

ஆணவன்பர்தாமென்றுமரஞானபாக்கமுதுசெய, மேனமைவிளஙகுபோனகமும விருமபுகறிநெயதயி ராதிம்பால, தேனினினியகனிகட்டி திருநதவமுது செய்விததே, ஏனைநிதியமவேணடுவனவெல்லாமின் பமுறவளிததாா. (ங)

திருச்சிற்றமபலம.

---

## மாகேசுரபூசையாசீர்வாதம்.

---

அகண்டபரிபூரண சச்சிதானநத பரசிவாலய, கணேசாலய, குகாலய, குருவாலய மெங்கும வேதசிவாகமபபடி நிததியநைமிததிகங்களெலலாம சிறப்பாக நடநதுவரும பொருட்டு அனுககிரகமபணணுக. ஹர ஹர.

அடியேனுக்கு நற்புத்தி உணடாகுமபொருட்டு அனுக்கிரகமபணணுக. ஹர ஹர ஹர ஹர.

மாகேசுரர்களெல்லாரும், சிரமந தீரும்படி திருவமுதுசெய்தருளுக. ஹர ஹர ஹர ஹர.

திருசசிற்றம்பலம்.

---

# குருபூசைத்திருநக்ஷத்திரம்.

## சித்திரைமீ

| | |
|---|---|
| பரணி | சிறுத்தொண்டநாயனார். |
| உரோகிணி | மங்கையர்க்கரசியார். |
| திருவாதிரை | விறன்மிண்டநாயனார். |
| அத்தம் | உமாபதிசிவாசாரியார். |
| சித்திரை | இசைஞானியார். [ர. |
| சுவாதி | திருக்குறிப்புத்தொண்டநாயனா |
| சதயம் | திருநாவுக்கரசுநாயனார். |

## வைகாசிமீ

| | |
|---|---|
| பரணி | கழற்சிங்கநாயனார். |
| பூசம் | நமிநந்தியடிகணாயனார். |
| ,, | சேக்கிழார்நாயனார். |
| ஆயிலியம் | சோமாசிமாறநாயனார். |
| மூலம் | திருஞானசம்பந்தமூர்த்திநாயனா |
| ,, | முருகநாயனார். [ர. |
| ,, | திருநீலநக்கநாயனார். [ணர. |
| ,, | திருநீலகண்டயாழ்ப்பாணநாய |

## ஆனிமீ

| | |
|---|---|
| மகம் | மாணிக்கவாசகசுவாமிகள். |
| பூரம் | அமர்நீதிநாயனார். |
| இரேவதி | கலிக்காமநாயனார். |

## ஆடிமீ

| | |
|---|---|
| கார்த்திகை | மூர்த்திநாயனார். |
| ,, | புகழ்ச்சோழநாயனார். |
| திருவாதிரை | கூற்றுவநாயனார். |
| சித்திரை | பெருமிழலைக்குறும்பநாயனார். |
| சுவாதி | சுந்தரமூர்த்திநாயனார். |
| ,, | சேரமான்பெருமாணாயனார். |
| கேட்டை | கலியநாயனார். |
| ,, | கோட்புலிநாயனார். |
| * உத்திராடம் | பட்டினத்துப்பிள்ளையார். |

## ஆவணிமீ

| | |
|---|---|
| பூசம் | செருத்துணைநாயனார் |
| ஆயிலியம் | புகழ்த்துணைநாயனார். |
| ,, | அதிபத்தநாயனார். |
| மகம் | இளையான்குடிமாறநாயனார். |
| உத்திரம் | மறைஞானசம்பந்தசிவாசாரியர் |
| அநுடம் | குலச்சிறைநாயனார். |
| மூலம் | குங்குலியக்கலயநாயனார். |

## புரட்டாசிமீ

| | |
|---|---|
| அச்சுவினி | உருத்திரபசுபதிநாயனார். |
| உரோகிணி | திருநாளைப்போவாரநாயனார். |
| பூரம் | அருணந்திசிவாசாரியர். |
| சதயம் | நரசிங்கமுனையரையநாயனார். |
| உத்திராடம் | ஏனாதிநாயனார். |

### ஐப்பசிமீ

| | |
|---|---|
| அச்சுவினி | திருமூலநாயனார். |
| பரணி | நெடுமாறநாயனார். |
| கார்த்திகை | இடங்கழிநாயனார். |
| பூசம் | சத்திநாயனார். |
| சுவாதி | மெய்கண்டதேவர். |
| அநுடம் | பூசலாரநாயனார். |
| மூலம் | ஐயடிகள்காடவர்கோனாயனார் |

### கார்த்திகைமீ

| | |
|---|---|
| கார்த்திகை | கணம்புல்லநாயனார். |
| உத்திரம் | மெய்ப்பொருணாயனார். |
| அத்தம் | ஆனாயநாயனார். |
| மூலம் | மூர்க்கநாயனார். |
| பூராடம் | சிறப்புலிநாயனார். |

### மார்கழிமீ

| | |
|---|---|
| திருவாதிரை | சடையநாயனார். |
| உத்திரம் | இயற்பகைநாயனார். |
| சுவாதி | மானக்கஞ்சாறநாயனார். |
| பூராடம் | சாக்கியநாயனார். |
| இரேவதி | வாயிலாரநாயனார். |

### தைமீ

| | |
|---|---|
| மிருகசிரிடம் | கண்ணப்பநாயனார். |
| திருவாதிரை | அரிவாட்டாயநாயனார் |

| | |
|---|---|
| உத்திரம | சண்டேசுரநாயனார். |
| விசாகம | திருநீலகண்டநாயனார். |
| சதயம | அப்பூதியடிகணாயனார். |
| இரேவதி | கலிக்கம்பநாயனார். |

---

மாசி௴

| | |
|---|---|
| *உத்திரம | திருவள்ளுவநாயனார். |
| அத்தம | எறிபத்தநாயனார். |
| பூராடம | காரிநாயனார். |
| சதயம | கோச்செங்கட்சோழநாயனார். |

---

பங்குனி௴

| | |
|---|---|
| உரோகிணி | நேசநாயனார். |
| திருவாதிரை | கணநாதநாயனார், |
| பூசம் | முனையடுவாரநாயனார். |
| சுவாதி | காரைக்காலம்மையார். |
| சதயம | தண்டியடிகணாயனார். |

---

## சைவசமயாசாரியர் நால்வர், சேக்கிழார்நாயனார்.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூரர்நல் லாணிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

---

## சைவசந்தாநாசாரியர் நால்வர்.

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடனி,
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுக
கனனிச, சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச்
சோதிதனில, வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி
மேவினரே.

---

## *பட்டினத்துப்பிள்ளையார்.

ஆடியுத்திராட மவிர்பூம் புகார்த் திருவெண்
காடரொற்றித் தியாகர் கவினபதியில - நீடிமணை
விற்கோலி யனுடை டிளைஞர்கோ லஞ்சரித்துச்
சிற்கோல மான தினம்.

---

## *திருவள்ளுவநாயனார்.

மாசியுத்தி ரத்தினத்தில் வள்ளுவனா மாநிலம்விட்
டாசிலபர முத்தியடைந் தாரால்-காசினியில்
கொல்லா விரதங் குறிக்கொண்டா ரெல்லாரும
நல்லாரவஞ் செய்மினந்த நாள்.

திருச்சிற்றம்பலம.

---

* இக்குறிப்புள்ள இரண்டு திருநக்ஷத்திரங்களி
லும, அம்மகான்கள்பொருட்டு, குருபூசைசெய்ய
வேண்டுவ தாவசியமாதலால், இப்பதிப்பில் சேர்க்
கப்பட்டன.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

என்று வழங்குகின்ற

# திருத்தொண்டர்புராணம்.

## கடவுள்வணக்கம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

## புராணவரலாறு.

அகிலலோகேஸ்வரனாகிய சிவபெருமான், உலகமாதாவாகிய உமாதேவியாரோடும் வீற்றிருந்தருளும் திருக்கைலாசமலையின் அடிவாரத்தில், வியாக்கிரபாதமுனிவருடைய திருக்குமாரரும், சிதம்பரத்திற் சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலையுண்டவரும், கிருஷ்ணரைத் திருவடி தீக்ஷைசெய்து தடுத்தாட்கொண்டருளிய சைவாசாரியரு

யாகிய உபமன்னியு மகாமுனிவர், எண்ணிற
நத முனிவர் குழாஞ்சூழ எழுநதருளியிருக்
கையில, அவ்விடததில அவரெதிரே, ஓர்பே
ரொளி ஆயிரஞ்சூரியருடைய பிரகாசமபோ
லத் தோனறிறறு. அதுகணட முனிவாகள்
யாவரும, இது எனனை யாச்சரியம என்று
வினவவும, உடனே உபமன்னியு மகாமுனி
வா சுநதரமூாத்தி நாயனூா கைலைகெழுந
தருளுகினறூா என்றுணாநது, விரைநதெழு
நது, இருகரஙகளையுஞ் சிரமேற்கூப்பிககொ
ணடு, ஆனநதவருவி திருமேனியெங்குமபெ
ருக, அத்திசையை நோககி நடநதாா அப்
போது முனிவாகள், சுவாமீ, சிவபெருமானை
யனறிப் பிறரொருவரையும் வணஙகாத நீா,
இஙகே வணஙகிய காரணமயாது எனறு வி
னூவ, உபமனனியுமகாமுனிவர், தபோதனா
களே, ஆதிகாலததில, சிவபெருமான் தமது
திருவுருவததைக கண்ணூடியிற்பாாத்து அ
ழைததருளலும, கோடிசூரியாகள் ஒருஙகுதி
ரணடாலொதததிருமேனிக்காநதியோடு மொ
ருவா தோனறினூா. அவா பெயா சுநதரா,
அவா,சமஸ்ததேவாகளும,அஞ்சியோடுமபடி
வநத ஆலகாலவிஷததைச் சிவபெருமான தி
ருவமுது செய்தருளும பொருட்டுத் தமது
உள்ளங்கையில அடக்கிக் கொணடுபோய்க்
கொடுத்தாா. அதனூல, அவா திருநாமம ஆலா

லசுந்தரரென்றாயிற்று. அவர் சிவபெருமானு க்குப் புஷ்பமாலை தொடுத்துச் சாத்தலும், விபூதி பாத்திரம் தாங்குதலுமாகிய திருத்தொண்டுபூண்டவர். அவர் சிவபெருமான் ஆஞ்ஞையால் கயிலையை நீங்கி, தக்ஷிணபூமியில் திருவவதாரஞ்செய்து, உலகமுய்யத் தமிழ் வேதமாகியதிருத்தேவாரமருளிச்செய்து,இப்போதுதேவர்கள்சூழவெள்ளையானைமேற்கொண்டு, திருக்கைலாசத்துக் கெழுந்தருளிவருகின்றார். அவர் எம்மாலும், மற்றியாவராலும் வணங்கப்படும் பெருந்தகைமையுடையாரென்று கூறியருளினார்.

முனிவர்கள் யாவரும் கேட்டு, மனமகிழ்ந்து, உபமன்னியு மகாமுனிவரை வணங்கி, சுவாமீ, அப்பெருந்தகையாரது திவ்விய சரித்திரத்தை அடியேங்கட்கு ஓதியருளும் என்று பிரார்த்திக்க, உபமன்னியுமகாமுனிவர், இருடிகளே! சுந்தரமூர்த்தி நாயனாருடைய சரித்திரத்தையும், அவர் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகையிற் கூறப்பட்ட அடியார்களுடைய சரித்திரத்தையும், உங்களுக்குக் கூறுவோம், கேண்மின் என்று,சொல்லத் தொடங்கினார்

திருச்சிற்றம்பலம்.

உ

# திருவாரூர்ச்சிறப்பு.

சோழமண்டலத்திலே திருவாரூரின்கணிருந்து அரசுபுரிந்துவந்த மநுநீதிகண்ட சோழரென்பவர், மன்னுயிரைத் தன்னுயிர்போலெண்ணிச் செங்கோனடாத்தி வருநாளில, அவருக்கு ஒரு புத்திரன் அவதரித்தான். அவ்வரசிளங்குமரன் பலகலைகளும்பயின்று வாழுநாளில், ஒருநாள், இராஜகுமாரர்கள் புடைசூழ்ந்துவரத் தேரேறி வீதியிற் செல்லுகையில், ஒருபசுக்கன்று துள்ளிக்கொண்டுபோய் அத்தேர்க்காலினடியிலகப்பட்டிறந்தது. அது கண்ட தாய்ப்பசு கதறிச்சோர்ந்து, நடுங்கி விழுந்தமைகண்ட சோழபுத்திரன், மனத்துயரங்கொண்டு, அறிவழிந்து தேரினின்று மிழிந்து, அலறுகின்ற தாய்ப்பசுவைப்பார்த்து உயிர்பதைத்து,என்னால், என்தந்தையாருக்கு இப்பெரும்பழி வந்து நேர்ந்ததே, இதற்கென் செய்வேன், இப்பாவத்துக்குப் பிராயச்சித்தமுளதாயின்,என்தந்தையார் அறியுமுன்னமே இதற்கோர் பரிகாரஞ் செய்துகொள்ளல் வேண்டுமென்று சிந்தித்து அந்தணரிடத்தே சென்றான்.

கன்றிழந்தபசுவோ, அத்துயரைச் சகிக்கலாற்றாது, பெருமூச்செறிந்து கண்ணீர்வாரச் சென்று, இராஜமாளிகை வாயிலிற்கட்டிய ஆ

ராய்ச்சிமணியைத் தன் கொம்பினல அடித்தது. அது கேட்ட மநுநீதிகண்டசோழர், சிங்காசனத்தினின்று மிறங்கி விரைந்துசென்று, வருந்திநிற்கும் பசுவைநோக்கி, மந்திரிகளால நிகழ்ந்த செய்தியை அறிந்து, பெருந்துயரங் கொணடேங்கி, என் செங்கோன்முறைமை நன்று நன்று,இதுயாதுசெய்தாற்றீரும என்று கூறி, கன்றிழந்த பசுவின்முகத்தைப் பார்த்துச் சோர்ந்துநின்றனர். அமைச்சர்கள் அஃது கண்டு, அச்சோழர்பெருமான் பாதங்களை வணங்கி நின்று, மஹாராஜாவே; உம்முடைய குமாரனைக்கொணடு கோவதைக்குத் தரும நூலகளில விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச்செய்விபபதேதருமம்என்றார்கள். அதற்கு மநுநீதிகண்டசோழர், நீங்கள் கூறும பிராயச்சித்தம் கன்றையிழந்தலறும் இப்பசுவின்நோய்க்கு மருந்தாமா? நான் ஏகபுத்திரனை இழக்கின்றேன் என்று கருதி, நீங்கள்சொலலிய இவ்வார்த்தைக் கிணங்கினல் நடுவுநிலைமைதவறாதா? ஆதலால், இப்பசுத் தன் கன்றையிழந்து துயருறுதலபோல, நானும் என் புத்திரனையிழந்து வருந்துதலே நீதி என்று கூறி, தம்முடைய புதல்வனை அங்கு வரவழைத்து, ஒருமந்திரியைப்பார்த்து, நீ இப்பிள்ளையை வீதியிலே தேர்க்காலின்கீழே கிடத்தித் தேரை நடத்தக்கடவாய் என்று கட்ட

ளையிட, அம்மந்திரி அவ்வாறு செய்யாது தன்னுயிரை விடுத்தான்.

அது கண்ட மநுநீதிகண்டசோழர், தமபுத்திரனைத் தாமேகொண்டு வீதியிற்சென்று, தம முடைய குலத்துக்கு ஏகபுத்திரன் என்பதையுஞ் சிந்தியாது, அவனைக்கீழேகிடத்தி அவன் மார்பில உருளையழுந்தும்படி தேரைநடத்தினார். இவ்வரிய செய்கையைக்கண்டு, தேவர்கள் பூமழைபொழிந்தனர். சர்வலோகேஸ்வரராகிய தியாகேசர் இடபாரூடராய், சிவகணங்கள் சூழ எழுந்தருளிவந்துமுன்னின்றார். மநுநீதிகண்டசோழரும எமபெருமானைத்தரிசித்து வணங்கிப பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கினார் அபபோதே பசுக்கன்றும, இராஜகுமாரனும,மந்திரியும், உயிர்பெற்றெழுந்தனர். அது கண்டசோழர் பரவசராய் நின்றனர். அவர், தமதுபாதத்தில வந்துவணங்கிய புத்திரனைத்தழுவிமனமகிழ்ந்தார். பசு தன் கன்றைக்கண்டு பாலைப்பொழிந்து துயர்நீங்கிற்று. தியாகப்பெருமான் மநுநீதிகண்ட சோழருக்குத் திருவருள்சுரந்து மறைந்தருளினார். இத்தகைய பெருமைவாய்ந்த திருவாரூரில் வன்மீகநாதருடைய திருக்கோயிலில, தேவாசிரியனெனப் பெயர்பெற்ற ஆயிரக்கால் மணடபமொன்றுண்டு. அதில, திருத்தொண்டர்களுடைய திருக்கூட்டம் எபபொழுதும நிறைந்திருக்கும்.

அம்மெய்யடியார்களுடைய பெருமையை நாம் எங்ஙனம் அறிந்து துதிப்போம்.

இப்பால், ஆலாலசுந்தரர் தென்னாட்டில் திருவவதாரஞ் செய்து, இத்திருத்தொண்டர் திருக்கூட்டத்தைத் தரிசித்து திருத்தொண்டத்தொகை செய்தருளிய சரித்திரத்தைக் கூறுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திநாயனார்புராணம்.

திருக்கயிலாயமலையிலே, சிவபெருமானுக்குப் பூமாலைதொடுத்துச் சாத்துவதும், விபூதிப்பெட்டகக்கோயில் வைத்துக்கொண்டிருந்து சுவாமிக்கு வேண்டியபோது ஏந்திச்செல்கின்றது மாகியதொண்டுசெய்துகொண்டு, ஆலாலசுந்தரரென்கிற திருப்பெயருடனிருக்கும் நாளிலொருநாள், அக்கயிலாயபதிக்குத் திருமாலைதொடுத்துச் சாத்துவதற்கு நந்தனவனத்திற்போய் மலர்கள் எடுத்துக்கொண்டிருக்கும்போது, அநிந்திதை கமலினி என்னுந் தோழிகள் வந்து, பார்வதிதேவியார் சூடுதற்கு, திவ்யகந்தமலர்கள் கொய்துகொண்டிருக்கக்கண்டு இச்சைகொண்டு, மீண்டும் அவ்வாறே மனஞ்செல்ல வொண்ணாதவகைதடுத்

துச் சுவாமிசந்நிதியில்வந்து சேர்ந்தார். அம் மாதர்களுந் தேவியாரிடத்திற்போய்ச் சேர்ந் தார்கள். கயிலாயபதி இதனையறிந்து, ஆலால சுந்தரரைநோக்கி,உன்மனம உமையவள் தோ ழிகளிடத்திற் சென்றமையால, நீ அவர்களு டன் பூலோகத்திலபிறந்து இன்பம அனுப வித்துப பின்புவந்து சேர்க்கடவையென்று கட்டளையிட, ஆலாலசுந்தரர் மனங்கலங்கி அடியேன்பிழைபொறுத்து மானிடமாய் மய ங்குமபோது தடுத்தாட்கொள்ளல வேணடு மென்று விண்ணப்பஞ்செய்ய, கயிலாயபதி யானவர் அதற்குக்கிருபைகூர்ந்தருளினர்.

அந்தக்காரணத்தினால் தென்னாட்டைச் சேர்ந்த திருமுனைபபாடிநாட்டிலே, திருநாவ லூரில வாழ்கின்ற சடையனாரென்னும ஆதி சைவப் பிராமணருக்குததிருமைந்தராய, இ சைஞானியார் திருவயற்றினிடமாகத்திருவவ தாரஞ்செய்து,நமபியாரூரரென்னுந் திருநாம மும்பெற்றுச் சீராட்டுடன்வளர்ந்து வீதியில் சிறுதேருருட்டி விளையாடிக்கொணடிருக்கும் போது, அந்தநாட்டின் அரசராகியநரசிங்கமு னையரையர்கண்டு, சடையனார் சமமதத்தின் மேல், தமக்குப புத்திரத்தன்மையராகப்பெற் றுத் தமமுடைய அரண்மனையிலவைததுக் கொணடு, பிராமணகுலாசாரத்துக்கு வழுவில லாமல் ராஜபுத்திரர்களுக்குள்ள சிறப்புடன்

வளர்க்க வளர்ந்து, உபநயனச்சடங்குஞ் செய்விக்க வேதாகம சாஸ்திர புராணங்கற்றுணர்ந்து கல்யாணப்பருவஞ் சேர்ந்தமையால, சடையனார் தமமுடைய புத்திரனுக்குத் திருக்கல்யாணஞ் செய்விக்கவேணடுமென்கிற விருப்பஙகொணடு, தங்கள் மரபுக்கொதத மரபாராகியபுத்தூரச் சடங்கவியென்னும் ஆதிசைவப்பிராமணா குமாரத்தியைக் குறித்துப்பேசும்படி சில பெரியோாகளையனுப்பினா.

சடங்கவி சிவாசாரியரென்பவர், அவர்கள் தமது மாளிகைக்குவரக்கண்டு, உபசாரஞ்செய்து, அவாகள்சொலலிய கல்யாணசங்கதிக்கு இசைநதவராயினா. அந்தப்பெரியோர்கள் மனமகிழ்ச்சியுடன்சென்று சடையனுருக்குச் சொலல, அவர்கள் சநதோஷங்கொண்டு, திருக்கலயாணமகோற்சவத்தைக்குறித்த முகூர்த்தநாளோலே, தங்கள் பநதுக்கள் முதலானவர்களுக்கெலலாம ஆடமபரத்துடன் அனுப்பிக்கலயாணப்பநதல அலங்காரஞ்செய்வித்தனர். நமபியாரூரா திருமணக்கோலமபூண்டு மஙகலவேதகீத நாதங்கள் கோஷிக்கபபுத்தூருக்குச்சென்று திருக்கலயாணமகோற்சவச்சடங்கிலிருக்கையில, பரமசிவன் முன்னங்கயிலாயகிரியில் அருளிச்செய்தபடியே தடுத்தாட்கொள்ளும்பொருட்டு, ஒரு கிழப்பிராமணன் வடிவங்கொணடு, அந்தக்கல்யாணப்பநதலில

வந்து, சபையாருக்கெதிரில நம்பியாரூரரை நோக்கி, உன்னிடத்தில எனக்கொரு வழக்கி ருக்கின்றது, அந்தவழக்கைத்தீர்க்காது நீவிவா கஞ்செய்துகொள்ளக்கூடாதென்றூர. அவ்வா றேநடக்கிறேன் அந்தவழக்கென்னவென்றூர.

அப்போது, அக்கிழப்பிராமணா சபையா ரைநோக்கி, இந்த ஆரூரன் என்னடிமை இது தான் வழக்காவதென்றூர. அந்த வாாத்தை யைக்கேட்ட பிராமணாகளில் சிலர் நகைத்தா ர்கள், சிலா கோபங்கொண்டார்கள், சிலா இந் தப்பிராமணன் என்ன நினைத்துவந்தானென் றூர்கள். இவாகள் இவ்வாறுசொலல, நம்பியா ரூரா இந்தப்பிராமணன வார்த்தை நன்றுயிரு க்கிறதென்று நகைத்தாா. அவ்வண்ணம நகை த்தவா முகத்தைச் சுவாமிநோக்கி, உன்னு டைய பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோ லை இதோ இருக்கின்றது. அப்படியிருக்க, நீ நகைத்ததென்னவென்றூர.

நம்பியாரூர், பிராமணனுகவந்திருக்கிற சு வாமியைநோக்கி, பிராமணாகள் மறுபிராமணா ர்களுக்கு அடிமையாகுதல இந்த உலகத்திலி ல்லை. நீர பித்தனேவென்றூர. பித்தனுனலு மாகிறேன், பேயனுனலுமாகிறேன், அதற்கு நாணென்றும் நாணேன், நீவிணேதமாகிய வார் த்தைகள் பேசவேணடுவதில்லை, நமக்கு அடி-

மைசெய்யவேண்டுமென்றார். அவ்வாறு சொல்லவே நம்பியாரூரர், கோபங்கொண்டவராய் ஒபிராமணரே! ஏதோ ஒரு ஓலை இருப்பதாகச சொன்னீரே அதைக்காட்டுமெனறு சொனனவளவில, சுவாமியானவர் நம்பியாரூரரை நோககி, நீ ஓலை காணத்தக்கவனோ அல்ல, சபையோராபாரத்துச்சொலல நீ அநதபபடியெனக்கு அடிமை செய்யத்தக்கவனென்றார். சுவாமி அவ்வாறுசொலலவே, நமபியாரூரருக்குக் கோபமூணடு, அநத அடிமையோலையை ப பறிக்கச்சென்றபோது, சுவாமி, பயநதவர் போல பநதலில ஓடினா நமபியாரூரா பின் தொடாந தோடிபபிடித்து ஓலையைப்பறித்துக் கிழித்துவிட்டவளவில, பிராமணராகிய சுவாமி, அன்பரைபபிடித்துக்கொணடு முறையிட்டனா. அங்கிருநதவர்கள் விலக்கிவிட்டு, உலகிலிதுவரையில நடவாதவழககுத்தொடுத்து முறையிடுகின்ற பிராமணரே! நீரெங்கிருப்பவாசொலலுமென்றார்கள். இப்போதிங்கிருக்கிற என்னுடைய ஊா தூரமலல, இநத வெணணெய்நலலூரே அது இருக்கட்டும, இவன் என்கையிலிருநத ஓலையைப பலாத்காரமாகப பிடுங்கிக்கிழித்து எனக்கடிமையெனபதை நிசப்படுத்திவிட்டானென்றனர்.

அபபோது, நமபியாரூரர், இந்தப்பிராமணா பழைய மன்றாடியாயிருக்கிராறென்று

சொல்லி, நல்லது நீர் திருவெண்ணெய் நல்லூரிலிருப்பவரானால் உம்முடைய தப்புவழக்கினை அங்கே சொல்லிக்கொள்ளப் புறப்படுமென்ன, அப்படியாகில், அங்கேதானே சொல்லி நீயடிமையென்பதைச் சாதிக்கிறேனென்று முன்னே தண்டேன்றிக்கொண்டு சென்று, திருவெண்ணெய் நல்லூரையடைந்து, அங்குக்கூடியிருக்கும் பிராமணர்களெதிரில் நின்று, ஓபிராமணர்களே' இந்த நம்பியாரூரன் எனக்கடிமையென்று நான்காட்டிய ஓலையைப்பறித்துக் கிழித்துவிட்டு இங்கே வந்தானென்று சொல்லினர்.

அவர்கள், நம்பியாரூரரை நோக்கி, உம்முடைய கருத்தைச் சொல்லுமென்றார்கள். அவர், அவர்களைநோக்கி, நான் ஆதிசைவப்பிராமணனென்பதை நீங்களெல்லாருமறிவீர்களே, அவ்வாறிருக்க, இப்போதிந்தப்பிராமணர் என்னை, அடிமையென்று சாதித்தால், நான் சொல்வதென்னுளது, இம்மாயமானகாரியம் எனக்கொன்றுந் தெரியாதென்றனர்.

அவ்வார்த்தையைக்கேட்ட சபையோர், சுவாமியைநோக்கி, இவருமக்கடிமையென்று சொல்வீராகில், உம்மிடத்தில் அடிமைச்சீட்டு, அடிமையாண்டது, அதைப்பார்த்தவர்கள் ஆகிய இம்மூன்றிலொன்று காட்டுமென்ன, இவ

ன் முனனாகிழிததது நகலோலை, அசலோலை காட்ட வைததிருக்கினறேன, இவன முன போல மேலவிழநது கிழிககவொடடாமல செய்யமாடடீரகளாகில, இதோ காட்டுகின றேனெனறுசொலலிபபோய்க கொணடுவநது காட்ட, அஙகிருக்கிற கருணீகனைவாஙகிவாசி க்கச்சொலல, அவன் அதைவிரிதது "திருநா வலூரிலிருக்கும ஆதிசைவபபிராமணனாகிய ஆரூரனென்னும பெயருள்ளநான், திருவெண் ணெய் நல்லூரப்பிததனுககு எழுதிககொடுதத முறியோலையாவது, இததேதிமுதல நானும பரமபரையா யினி வருகினற எனசநததியாரு ம் கொத்தடிமைசெய்யுமபடி மனவாககொத தெழுதிககொடுததேன் இதற்கிதுவே யென கையெழுத்து" எனறுவாசிக்க, பிராமணாகள் கேட்டு, அதில எழுதியிருக்கும் சாக்ஷிகள் பெ யரும, நமபியாரூரா பாட்டனா கையெழுத்து மொத்திருபபக்கண்டு, நமபியாரூரரைபபாரத து நீர் தோறறுவிட்டீா, ஆகலின, இநதபபிரா மணருக்கு அடிமை செய்யவேணடியது மு றைமையே யென்றாகள்.

அவ்வாாத்தையைக்கேடடநம்பியாரூரா, இதுவிதிமுறையாயின், நான்சமமதியேனென று சொலலக்கூடுமோவென்று எற்றுக்கொண் டனா. அதற்குமேல, சபையார் சுவாமியை நோக்கி ஐயரே! உமக்கிவ்வூரில மாளிகை

யெங்கேன்ன, காட்டுகின்றேனென வாருங்களென்று யாவரும பினபற்றிவரச்சென்று, அருட்டுறையெனனும ஆலயத்துட்சென்று மறைந்துவிட; அது கண்ட யாவருந்திகைத்து நின்றாகள். நமபியாரூரா தொடாநதழைக்க, சுவாமியானவா, பாாவதிதேவி சமேதராய் இடபவாகனத்தின்மே லெழுந்தருளி "நீமுன்னமே நமக்குத் தொண்டன், கைலைநந்தனவனத்தில வந்தமாதாகள்பா லிச்சைகொணடதினால, நம்முடைய கட்டளையின்படி இவ்வுலகத்தில தோன்றினை, இவ்வுலகபாசபந்தத்தில கட்டுணுவணணம் நாமுன்னளித்த வாக்கின்படி வந்து தடுத்தாடகொணடோம" என்ற ஓசையை நமபியாரூரா கேட்டவளவில், ஆனந்தமேலிட்டுப புளகமடைந்து தொழுது, இரண்டுகரங்களையும உச்சிமேற் குவித்து வைத்துக்கொணடு துதிசெய்தனா. சிவபெருமான் மீட்டும நமபியாரூரரை நோக்கி, அனபனே! நீ நமமை வன்மைபேசி வனறொணடனென்னும் பெயாபெற்றனை, நமக்குபபாட்டே அருச்சனையாதலால், நமமைபபாடக் கடவையெனறருளிச்செய்ய, நமபியாரூரா பணிந்து, காத்தனே! அடியேனுக்குத் தேவரீா பெருமைகள் யாதொன்றுநதெரியாதே, என்னென்று பாடுவேனென்ன, நீ முன்பு நமமைப் பித்தனென்றனை, ஆகையாலனதையே

பெயராகவமைத்துப் பாடக்கடவை யென்றருளிச்செய்ய, அப்பெயரையே முதலடியாக வைத்துக்கொண்டு "பித்தாபிறைசூடி" என னுந் திருப்பதிகமோதித்துதிசெய்தனா.

சிவபெருமான திருவுள்ளமகிழ்ந்து, இனி இவ்வாறே தலமெங்குஞ்சென்று நமமைப்பாடக்கடவையென்று கட்டளையிட்டருளினா அவ்வாறு சிவபெருமான கட்டளையிட்டருள பபெற்றுக்கொண்டு, தமது அவதாரக்ஷேத்திரமாகிய திருநாவலூருக்கெழுந்தருளி, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து சந்நிதானத்தின எதிரில்வந்து பணிந்து திருப்பதிகமோதித்துதித்து, விடைபெற்றுக்கொண்டு புறபபட்டுத் திருத்துறையூரிற் சேர்ந்து, சிவபெருமானைத் தரிசித்துபபோற்றி, தவநெறியருளப பெற்றுக்கொண்டு, சிதமபரத்துக்குப்போய்த் தரிசிக்கவேண்டுமெனகிற அன்புண்டாக எழுந்தருளுபவர், திருவதிகை வீரட்டானத்துக்குச் சமீபத்திலெழுந்தருளி, அது திருநாவுக்கரசுநாயனார உழவாரப்பணிசெய்த தலமாதலால, மிதிபபதற்கஞ்சி, அதற்குள்போகாமல புறத்திலிருக்கும சித்தவடமடத்தி லெழுந்தருளி வீரட்டானேசுவரரைத் தியானித்துசயனித்துக்கொண்டிருந்தனா.

அப்போது, வீரட்டானேசுவரா ஒரு விருத்த பிராமணனபோலவந்து, வன்றொண்ட

ருடையதலைமேல் தமது திருவடியை நீட்டி நித்திரை செய்வார்போலிருக்க, சுந்தரமூர்த்திநாயனார் கண்டு, என்சிரமேல காலைநீட்டிக்கொண்டிருக்கும் நீயாரையாவென்ன, சுவாமி, எனவயோதிகத்தால இடமறியாமல செய்தேனென்ன, சுந்தரமூர்த்திநாயனார் ஒத்துக்கொண்டு, வேறோர்புறம சிரமவைத்துக்கொண்டனர். மீட்டும் சுவாமிகள் அவ்வாறேசெய்ய, நாயனார், பலகாலும், என்சிரமேல கால வைத்தீரே, நீயாவாதானென்ன,என்னை யறியாயோவென்று மறைந்துவிட்டனர். பின்னர், சுவாமியென் றறிந்துகொண்டு "தம்மானையறியாதசாதியாருளரோ" என்னுந் திருப்பதிக மோதித்துதிசெய்து, அங்கிருந்துபுறப்பட்டுத் திருத்தினைநகா முதலியதலங்களை தரிசித்துக் கொண்டு,சிதம்பரத்துக் கெழுந்தருளித்திருப் பதிக மோதிப்பணிந்தபோது, நீ திருவாரூருக் குவாவென்று அசரீரி வாக்குண்டாக, ஆனந்தமடைந்து விடைபெற்றுக்கொண்டு, சீகாழிக் குப்போய், அது திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவவதார க்ஷேத்திரமாகையால உள்ளேமிதித்தற்கஞ்சி, வலமாக எழுந்தருளினர். அவ்விடத்தில,சிவபெருமான் தரிசனந்தந்தருளத் திருப்பதிகமோதித்துதித்து, அங்கிருந்து மற்றதலங்களையுந் தரிசித்துக்கொண்டு, திருவாரூருக்கெழுந்தருளிப புற்றிடங்கொண்டா

ரைத்தரிசித்துப் பதிகமோதித்துதிகது, அங்கு நாள்தோறுங் காலங்களில சுவாமியைத்தரிசித்துக்கொணடிருந்தனா.

இவரிங்கிவ்வாறிருக்க, இதற்குமுன்னரே, பாாவதிதேவியாா தோழிகளாகிய அநிந்திதை, கமலினி என்பாாகளிருவரில, கமலினி திருவாரூரிலுள்ள உருத்திர கணிகைமாரிலொருவரிடததில் திருவவதாரஞ்செய்து, பரவையா ரெனனுநதிருநாமமபெற்று வளாநது, புற்றிடங்கொண்டாரை நாடோறுஞ்செனறு தரிசிபபவா ஒருநாள்சென்றபோது, அங்குதரிசனத்துக்கெழுநதருளிய சுநதரமூாததிநாயனாரைக்கண்டு இச்சைகொணடு,விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமெனறு கருதி இருவருமசுவாமியைப் பிராாத்திக்க, சுவாமி கிருபைகூாந்து, அத்தலத்தாருககுந திருததொண்டாகளுக்குஞ் சொாப்பனத்தெழுநதருளி, இவ்விருவருக்குமமணஞ்செய்விக்கும்படி கட்டளையிட, அவர்கள் சிவபெருமான் ஆஞ்ஞையின்படி, விதிவழாமல சுநதரமூர்த்தி நாயனாருக்கும் பரவையாருக்கும விவாகஞ்செய்வித்தனர்.

அங்கிருந்து, நாடோறும் புற்றிடங்கொண்டாரைத் தரிசிப்பவர் ஒருநாள், தரிசனத்துக்கெழுந்தருளுகையில், தேவாசிரியமண்டபத்தில் கூடியிருக்குந திருத்தொணடர்களோ

கி, இவர்களுக்கு நானடியவனாகும்படி தியாகராசப்பெருமான் எனறைக்கருள்வரோவென்னு மெண்ணத்துடன் உடசென்றனர். அவ்வெண்ணத்தைத் திருவுளங்கொண்ட சுவாமி எதிரில் தரிசனந்தந்து, திருத்தொண்டர்கள் பெருமையினைத்தமது அருமைத்திருவாக்கினாலே "தில்லைவாழந்தணர்" என்று முதலடியெடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டர்களைப்பாடென்று கட்டளையிட, அவ்வாறே அடியேன், அடியேன் என்று திருத்தொண்டத்தொகை யோதிப்பணிய, தேவாசிரியன் மண்டபத்திருந்த தொண்டர்களும், அவர்களுள் அடியரைவணங்காமற்சென்றனரென்று வன்றொண்டர்மீது சினங்கொண்டிருந்த விறன்மிண்டநாயனாரும் மகிழ்ச்சியடைந்தனர்.

பின்பு, சுந்தரமூர்த்திநாயனார் திரிகாலங்களிலும் புற்றிடங்கொண்டாரைப்பணிந்து, திருப்பதிகம் ஓதிச்சாத்தி, சிலநாள்செல்ல, அங்கிருந்து புறப்பட்டு, திருக்கோளிலியெனனுந் தலத்துக்கெழுந்தருளி, ஆலயத்திற் சென்று சிவபெருமானைத் தரிசித்து, குண்டையூர்க்கிழார்கொடுத்தநெற்களெல்லாந் திருவாரூரில் வந்துசேரும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று திருப்பதிகம் ஓதி விண்ணப்பஞ்செய்ய, அவ்வண்ணமே சிவபெருமானுடைய கட்டளைபினால், பூதங்கள் கொண்டுவந்துசேர்க்கத்

தாம் பரவையார் திருமாளிகையில் வந்திருந்தனர். சிலநாட்சென்றபின்பு, கோட்புலிநாயனார் வேண்டுதலினால், திருநாட்டியத்தான்குடிக்கெழுந்தருளிப்போனபோது, அந்நாயனார் மகிழ்ச்சியடைந்து பலவாறு உபசாரஞ்செய்து, தமதுபுத்திரிகளாகிய சிங்கடி, வனப்பகையென்பவர்களை அழைத்துக்கொண்டுவந்துகாட்டி, இவர்களைத் தேவரீருக் கடிமைசெய்யும்படி யங்கீகரித்தருளல்வேண்டுமென்ன, சுந்தரமூர்த்திநாயனார், அப்பெண்களைத் தமக்குப் புத்திரிகளாகப்பாவனைசெய்து, திருப்பதிகக்கடைக்காப்பிலுஞ் சிங்கடியப்பனென் றெடுத்தோதி, அங்கிருந்து போந்து, திருவலி வலத்திற் சிவபெருமானைத் துதிசெய்து, திருவாரூர்வந்துசேர்ந்து சிலநாளிருக்கையில், பங்குனியுத்திரத் திருவிழா சமீபிக்க, அதுகுறித்துப் பொருள்வேண்டித் திருப்புகலூருக் கெழுந்தருளி சிவபெருமானைப் பணிந்துதிருப்பதிகமோதிச் செங்கலலைப்பொனாக்கிச் சுவாமிகொடுத்தருளப்பெற்றுக்கொண்டனர்.

அங்குநின் றெழுந்தருளித் திருப்பனையூருக்குப்புறத்தே போனா அப்பொது, சிவபெருமான் திருக்கூத்தோடுங் காட்சிதந்தருளச் சுந்தரமூர்த்திநாயனாகண்டு பணிந்து பதிகமோதிவிடைபெற்றுக்கொண்டு திருவாரூரசேர்ந்து, பரவையார் திருமாளிகையில் சிலநாள்

இருந்து, மீண்டுமெழுந்தருளி, திருநனிபள்ளி, திருவீழிமிழலை, திருவாஞ்சியம், அரிசிற்கரைப்புத்தூர், நறையூர்ச்சித்தீச்சரம், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலயநல்லூர், குடமூக்கு, திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருவாலம்பொழில், திருமழபாடி, திருவானைக்கா, திருப்பாச்சிலாச்சிராமம், திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை முதலிய தலங்களிலெல்லாஞ்சென்று பணிந்துதிருப்பதிகமோதி, அதற்குமேல், கொங்குநாட்டின்கணிருக்கும் திருப்பாண்டிக்கொடுமுடி, திருப்பேரூர், திருவெஞ்சமாக்கூடலிவற்றை வணங்கிச்சோழமண்டலத்துக்குத் திரும்பி, திருக்கற்குடி, திருவாறைமேற்றளி, திருவின்னம்பர், திருப்புறம்பயம்,திருக்கூடலையாற்றூர்,இவைகளைத் தரிசித்து, விருத்தாசலத்துக் கெழுந்தருளி பொன்வேண்டித்திருப்பதிகமோதினர்.

சுவாமி,பன்னீராயிரம்பொன் கொடுத்தருளத் திருவுளங்கொண்டபோது,சுந்தரமூர்த்திநாயனார், "சுவாமி, தேவரீர் இப்பொன்னையெல்லாம் இந்தமணிமுத்தாநதியிலிட்டு, திருவாரூர்க்குளத்தில் வரக்கிருபைசெய்தல்வேண்டுமென்ன" சுவாமி, அவ்வண்ணமேசெய்தருள

ச்சுந்தரமூர்த்திநாயனார் அவ்விடம்நீங்கி, கடம்பூரைவணங்கிச்சிதம்பரத்துக்குப்போயநடரா ஜமூர்த்தியைத்தரிசித்துப பதிகமோதித்துதித்து விடைபெற்றுக்கொண்டு, திருக்கருப்பறியலூர, திருக்கோக்குடி, திருமணணிப்படிக்கரை, திருவாளொளிபுற்றூர, திருக்கானட்டு முள்ளூர, திருவெதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, எனனுமஇத்தலங்களைத தரிசித்து, மறுபடியுமதிருவாரூருக் கெழுந்தருளிப புற்றிடங்கொணடாரைத் தரிசித்து பரவையாருடன்கமலாலயதீர்த்தத்தையடைநது,உள்ளிழிந்து தடவிப்பார்க்கையில, பொன்னகப்படாதிருக்க, இது சிவபெருமான் திருவிளையாட்டென்று கருதித்திருப்பதிகமோதித் துதிசெய்து, பொன்னெல்லா மெடுத்துக்கொணடுவந்துசேர்ந்து,புற்றிடங்கொண்டாரைத்தரிசித்துச் சிலநாளங்கமாநதிருந்து, மற்றதலங்களுநதரிசிக்கவேண்டுமெனகிற விருப்புடன்புறபபட்டு, அங்குள்ளதிருநள்ளாறு, திருக்கடவூர்வீரட்டம், திருக்கடவூரமயானம்,திருவலமபுரம, திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, திருச்செமபொன்பள்ளி, திருநின்றியூர, திருநீடூர,திருப்புன்கூர, திருக்கோலக்கா என்னும் தலங்களெல்லாவற்றையுந தரிசித்துப் பதிகமோதித்துதித்து, திருக்குருகாவூர் சமீபத்திலெழுந்தருளும்போது, வன்றொண்டர் பசித்

துவருகின்றனரென்றுசுவாமி திருவுளமிரங்கி, மார்க்கத்தில சோலையுடன் ஒருமலர்த்தடாக முந்தண்ணீர்ப்பந்தலு முண்டாக்கி, அவ்விடத்தில கட்டமுதும வைத்துககொண்டு,ஒருபிராமணர் போலிருந்து,அங்கடைந்ததமமுடைய தொண்டரைநோக்கி, நீமிகவும்பசித்திருக்கின்றீ ராதலால,நமமிடத்திலுள்ள கட்டமுதைச் சாப்பிடலாமென்று சொல்லிக்கொடுக்கவாங்கிப் பரிசனத்தாருடன புசித்துத் தண்ணீரருந்திச் சற்றுநேரஞ் சயனித்துக்கொண்டிருந்தனர்.இவரிவ்வாறிருக்க, சுவாமியார், அங்கிருந்தசோலைமுதலானவைகளுடன மறைந்துவிட்டனர். பின்னர், சுந்தரமூர்த்தி நாயனர் துயினீத்தெழுந்து முன்னுள்ளவைகாணுமற்போகவே, இதுசிவனசெயலென்று அறபுதமடைந்து, திருக்குருகாவூருக்குட் சென்று, சுவாமியைததொழுது பதிகஞ்சாத்தி விடைபெற்றுக்கொணடெழுந்தருளி, மத்தியிலுள்ள திருக்கழிப்பாலை, சிதமபரம, திருத்திணைநகர் இவைகளை வணங்கி, திருநாவலூரை அடைந்துசுவாமிதரிசனமசெய்து கொண்டு,தொண்டைமண்டலத்தில இருக்கிறஸ்தலங்களை தரிசிக்கவிரும்பி பிரஸ்தானமாகி, திருக்கழுக்குன்றிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, திருக்கச்சூருக்குவர, அங்குப பரிசனத்தா ரொருவருமவந்து சேராமையால்,தமமு

டைய தொண்டர் பசியுடனிருக்கக்கண்டு, சுவாமி, ஒருவேதியர் போலவந்து, நீர்பசித்து இருப்பதால், இங்குள்ள பிராமணர்கள்வீட்டி ல அன்னமும் கறியுமவாங்கிக்கொண்டுவருகி றேனென்று சொலலிப்போயாசித்துக்கொண் டுவந்தளிக்க,நாயனார்,தமமோடுவந்த தொண் டர்களுடனே புசித்துப்பசியாறினர் அப்போ து, சுவாமியார் மறைந்துவிட, சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானுடைய திருவடிகளுக் கு வருந்தங்கொடுத்தேதோமென்று மனம வரு ந்தித்துதிசெய்து, பின்பு, காஞ்சிபுரத்துக்கெ ழுந்தருளி, திருவேகாமபரமுதலிய தலங்க ளைத் தரிசித்துப்பதிகமோதி, அங்கிருந்தெழுந் தருளி, மத்தியிலிருக்குந் தலங்களையெலலாந் தரிசித்துக்கொண்டு, திருக்காளத்திக்கெழுந்த ருளித்தரிசித்து வணங்கிப்பதிகமோதித் திரு வொற்றியூருக் கெழுந்தருளி, படம்பக்கநாத ரைத்தரிசித்துப் பதிகமோதி அவ்விடத்தமா ந்திருந்தனர்.

அங்கு, ஆலயத்தில் தொண்டுசெய்துகொ ண்டிருக்குஞ் சங்கிலியாரைக்கண்டு, இச்சை பூண்டு, பரவையாரிடம் போவதில்லையென்று சுவாமிமுன்னிலையில மகிழமரத்தினகீழ்ப் பர வசஞ்செய்துகொடுத்து, விவாகம்புரிந்துகொ ண்டுசிலநாளங்கிருந்து, அதற்குமேல் திருவா ரூர் வீதிவிடங்கப்பெருமானைத் தரிசியாமல

நெடுநாள்நீங்கிய ஆராமையால்புறப்பட்டு,திரு
வொற்றியூரெல்லையைக் கடந்தமாத்திரத்தில,
சிவபெருமான் திருவிளை யாட்டினால், இரண
டுவிழிகட்கும அபாவமுண்டாக, மிகவருத்த
ங்கொண்டு, அங்கிருந்து திருமுல்லைவாயிலுக்
குபபோய் சுவாமியைவணங்கி,திருவெணபா
க்கத்தை அடைந்து ஊன்றுகோலபெற்று தி
ருப்பதிகமபாடி,பழையனூருக்குபபோய்த் தி
ருவாலங்காட்டடிகளைபபாடி, திருவூரலிற் செ
ன்று சுவாமியைவணங்கி, காஞ்சீபுரத்துககெ
ழுநதருளிப் பதிகமோதி இடக்கணபெற்று,
அஙகிருநதெழுநதருளி, தொணடைமணடல
த்தைககடநது, மத்தியிலுள்ள திருவாமாத்தூ
ர், திருவறத்துறையைவணங்கித திருப்பதிகம்
பாடிககொணடு,சோழமணடலத்தை அடைந்
து,திருவாவடுதுறையில சுவாமியைவணங்கிப்
பதிகமபாடி, திருத்துருத்திக்குபபோய், அத்த
லத்தீர்த்தத்திலே ஸ்நானமபண்ணி திருமே
னிநோய்நீங்கிபபதிகமபாடி சுவாமியை வணங்
கித்திருவாரூருக்கெழுநதருளி, பரவையுண்ம
ண்டலி என்னுந திருக்கோயிலை வணங்கிக்கொ
ண்டு,திருமூலட்டானத்தில சுவாமியைத்தரிசி
த்துதிருபபதிகமோதி,வலக்கண்ணும அருளப்
பெற்றுக்கொண்டு, பின்பு, பரவையார்பிணக்
கை நீக்குமபொருட்டு,வீதிவிடங்கப்பெருமா
னை இரவிலஇரணடுதரநதூதுசெலுத்தி, ஊட

ல்நீங்கினபின்பு,அவர் மாளிகைக்கெழுந்தருளி மிக்கமகிழ்வடைநது, வன்மீகநாதரைக்காலங் கடோறுஞ்சென்று தொழுது திருப்பதிகமோ திச்சாத்தித்துதித்துக்கொண்டிருநதனர்.

இவ்வாறிருக்க,இச்செய்தியெல்லாம் திருப்பெருமங்கலத்திலிருந்த ஏயர்கோன்கலிக்காமநாயனார் கேள்வியுற்று, தன்காதலி யிடத்திற்செல்லுமாசையால்,சகலலோகநாயகனாகிய சிவபெருமானைத்தூதாகத்திருவடிவருந்தச் செலுத்தியசெய்கைமிகவும் நன்று! நன்று! இக்கொடியகாரியஞ்செய்ய உள்ளம் நடுங்காதவனை நான்காண்பேனாயின், ஏதாவிளையுமோவென்று மிகவுஞ் சீற்றங்கொண்டிருந்தனா.

இதைச் சுந்தரமூர்த்திநாயனா அறிந்து, தாமசெய்தது குற்றமேயென்றுடன்பட்டு, சுவாமியினிடத்தில விண்ணப்பஞ் செய்துகொள்ள, சிவபெருமான், இருவரையும் நட்புப்படுத்தக்கருதி, கலிக்காமநாயனா வயிற்றில் சூலைநோய்விடுத்துவருத்தி, அவரிடத்திலெழுந்தருளி, அன்பனே! நமது வன்றொண்டனலன்றி இச்சூலைநோய் தீராதென்ன, அவனவநது தீர்ப்பதைப்பார்க்கிலும இவ்வாறிருப்பதேநலமென்றுவருந்தாநிற்ப, சுவாமி, சுந்தரமூர்த்திநாயனாரிடமபோய், நீயுடனேசென்று கலிக்காமன் சூலைநோயைத் தீாக்கக்கடவையெ

ன்றருள, அபபணிசிரமேற்கொணடு புறப்பட்டுபபோகையில, இவா வருகையை கேள்விபுற்ற கலிக்காமநாயனூர் மிகத்துயரெய்தி வனறொண்டர் வருவதற்குமுன் உடைவாளினுல வயிற்றைக்கிழித்துககொணடிறக்க, சுநதரமூாத்திநாயனூா போய்க்கணடு,இது எனனுலவிளைந்ததாகலின, நானுமாய்வேனென்றுகலிக்காமநாயனூா கையிற்பற்றிய உடைவாளை வாங்கும்போது, சிவபெருமான் திருவருளால், கலிக்காமநாயனூா உயிாபெற்று மிகுநதநணபினராய்,ஒருவரையொருவா தழுவிககொண்டு மிகுநதமகிழ்ச்சியடைநது, திருபபுன்கூருக்கெழுநதருளி சுவாமியைத்தரிசிதது, பதிகமோதித் துதித்து, சிலநாளங்கிருநது, பினபு, அவருடன திருவாரூருக்கெழுநதருளி வீதிவிடங்கப பெருமானைத்தரிசித்து, கலிக்காமநாயனூா தமமுடைய க்ஷேத்திரததுககெழுநதருளத்தாம் திருவாரூரிலிருநதனா

பின்பு, சுநதரமூாத்திநாயனூா, திருநாகைக்காரோணத்துக்குப்பொய், திருப்பதிகமபாடிபொன்னும, நவரத்தினஙகளும, ஆபரணங்களும, வஸ்திரங்களும, குதிரைகளும, உடைவாள்முதலியவைபும பெற்று பிறஸ்தலங்களை வணங்கிக்கொணடு, திருவாரூரிற்சோநது எழுநதருளி இருக்குநாளில, சேரமான் பெருமானுயனூா தமமிடததுவா, அவருடன் சிலநாள்

பரவையார்வீட்டிலிருந்து, பின்பு, சேரமானுடன்சென்று, சோழநாட்டுள்ள கீழ்வேளூர், திருநாகைக்காரோணம், வேதாரணியம், அகத்தியான்பள்ளி, குழகர்கோடி என்னும் தலங்களைத்தரிசித்துப் பதிகம்பாடிக்கொண்டு, பாண்டியநாட்டிற்போய், அங்குள்ள திருப்புத்தூரைவணங்கி, மதுரைக்குப்போய் சோமசுந்தரக்கடவுளை வணங்கித் திருப்பதிகம்பாடிச் சில நாள் அங்கே இருந்து, திருப்பூவணம், திருவாப்பனூர், திருவேடகம், திருப்பரங்குன்றம், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலியஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, இராமேச்சரத்துக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடிக்கொண்டு, அங்கிருந்தே ஈழமண்டலத்து திருக்கேதீச்சரத்தை வணங்கிப் பதிகம்பாடிக்கொண்டு, அதனை நீங்கித் திருச்சுழியலுக்குப்போய்த் தரிசனஞ் செய்து பதிகம்பாடி, அப்பால், திருக்கானப்பேருக்குப்போய், சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, திருப்புனவாயிலை அடைந்து பதிகம்பாடி, பாண்டிநாட்டைக் கடந்து, சோழமண்டலத்தை அடைந்து, திருப்பாதாளீச்சரத்தை வணங்கிப் பதிகம்பாடி, சேரமான் பெருமாணாயனாரோடும் சுந்தரமூர்த்திநாயனார் பரவையார்வீட்டுக்குப்போய் எழுந்தருளியிருந்தார்.

பலநாட்சென்றபின், நாயனாரைச்சேரமான் வணங்கிததமமுடைய ஊருக்கு எழுந்தருளும்படி பிரார்த்திக்க, சுந்தரமூர்த்திநாயனா அதற்கு இசைநது, திருவாரூரைநீங்கி, திருக்கணடியூரை அடைநது, சுவாமியைத்தரிசித்துக்கொண்டு செலலுமபோது, திருவையாற்றுக்குச்செல்ல வொண்ணாத தடையாகக்காவேரிநதி பெருகிவரக்கண்டு, சுந்தரமூர்த்திநாயனார் திருபபதிகமோத, வந்தவெள்ளம அப்படியே அணைபோட்டதுபோல் நிற்க, மததியமணல்வழியே பரிசனங்களுடன் நடந்து போய்ப்பஞ்சநதீஸ்வரரைத் தரிசித்துத்திருப்பதிகமோதிச் சாத்தி, அங்கிருநதெழுநதருளி, கொங்குநாட்டிலுள்ள தலங்களைத் தரிசித்து, மலைநாட்டுக்குச்செலல, சேரமான் பெருமாணாயனா நகரமாகிய கொடுங்கோளூரிலிருப்பவாகள் எதிாவந்துவணங்க,அவாகளுடன் திருவஞ்சைக்களமென்னும தலத்திற்சென்றுபணிநது பதிகமோதித்துதித்துச் சேரமானுடன் அவர் மாளிகையில் சோநதிருந்து, அங்கிருந்து திருவாரூருக்குப் புறப்படும்போது, சேரமான்பெருமாணாயனார், தம்முடைய பொக்கிசத்திலுள்ள நிதிகளை யெல்லாம் பொதிகட்டி, ஆள்கள்வசத்தில அனுப்பத்திருமுருகன் பூண்டியென்னும தலத்தை யணைய வருமபோது, அப்பொருளையெல்லாம் சிவ

பெருமான், தமதுபூதகணங்களை வேடர்கள் போல ஏவ, அவர்கள் வழிமறித்துப்பயப்படுத்தி நிதிகளையெல்லாங் கவர்ந்துகொள்ளப் பறிகொடுத்து சுவாமிசந்நிதியிற்போய்ச்சேர்ந்தனர்.

அச்சேதியைச் சுந்தரமூர்த்தி நாயனூர் கேள்விப்பட்டு, சுவாமிசந்நிதியிற் சென்று வணங்கித்திருப்பதிகம்பாட, சிவபெருமான் கட்டளையினுல, அப்பொருளெல்லாம் கோபுரவாயிலில் வந்திருப்பக்கண்டு, எடுப்பித்துக் கொண்டு, திருவாரூரிற்சேர்ந்திருந்தனர்.

இவ்வாறு சிலநாளங்கிருந்து, பின்னர், சேரமானைக்காணவேண்டுமெனகிற விருப்பத்தால், கொங்குநாட்டை அடைந்து,திருப்புக்கொளியூரிற் சொல்லும்போது, ஒரு வீட்டிலமங்கல வோசையும், மற்றொருவீட்டில் அழுகையோசையுமா யிருப்பக்கண்டு, அங்கிருந்த பிராமணர்களால் நிகழ்ந்தசெய்தியை அறிந்து, அப்பிள்ளையிறந்த ஏரிக்கருகிலெழுந்தருளித் திருப்பதிகமோதினபோது, முதலைவந்து முன்விழுங்கின பிள்ளையைக் கரையிலகக்கினவுடன், அங்கிருந்துசென்று சுவாமிதரிசனஞ்செய்துவந்து, அப்பிள்ளைக்கும் அடுத்தவீட்டுப் பிள்ளையைப்போலவே, உபநயனச்சடங்கு நிறைவேற்றி, அதன்பின்னர், மலைநா

டை அடைந்து, மகோதையென்னும நகரத்துக்குப்போயங்குச சிலநாள் இருக்கையில, ஒருநாள், முனபோலச்சுவாமியைத் தரிசிக்கும பொருட்டுத் திருவஞ்சைக்களமென்னுஞசிவாலயத்துக்குச்சென்றனர். அச்சமையமசேரமான்பெருமாணாயனார் திருமஞ்சனசாலையிலிருந்தனர்.

அப்போது, சிவபெருமான பிரமவிஷ்ணுக்கள் முதலியதேவர்களைநோக்கி, நீங்கள் வெள்ளை யானையுடன்போய் நமது அன்பனாகிய வன்றொணடனை இங்கழைத்துக்கொண்டுவாருங்க ளென்று கட்டளையிட்டருள, அவர்களவ்வாறே சென்று, சுவாமிதரிசனஞ்செய்து திருமதிற்புறத்தில எழுந்தருளுகிற சுந்தரமூர்த்திநாயனரைக்கண்டுதொழுது, ஸ்ரீகயிலாயபதியின கட்டளையைச்சொலலி மகிழ்ந்து, நாயனர், சுவாமியைநினைந்து வணங்கி, வெள்ளையானையின்மே லாரோகணித்துக்கொண்டு எழுந்தருளுபவர், தமமுடைய நண்பராகிய சேரமானைநினைத்துக்கொணடு செல்ல, சேரமான் பெருமாணயனர் அதனையறிந்து, உடனே குதிரைமேலேறிக்கொண்டு, அதிகவிரைவாகத்திருவஞ்சைக் களத்துக்குவந்து

சுந்தரமூர்த்திநாயனா எழுந்தருளிச் செலவ தைக்கண்டு, அந்தக்குதிரையின்காதில் பஞ்சாக்ஷரமோதினவுடன், அது அந்தரமார்க்கத்திற்செல்லச்சென்று, சுந்தரமூர்த்திநாயனாரை பபிரதக்ஷணஞ்செய்து, வெள்ளானைக்கு முன்னாகபபோயினர்.

இவருடைய பரிசனமாகிய மந்திரிமுதலாயினோர் திடபக்திவலிமையால், உடைவாளினால்குத்தி உயிரை மாய்த்துக்கொண்டு வீரயாக்கையைப்பெற்று, சேரமானுடன் கலந்து கொணடாாகள். சுந்தரமூர்த்திநாயனார் "தானெனை முன்படைத்தான்" என்னுந்திருபபதிகம் ஓதிக்கயிலாயத்துக் கெழுந்தருளிச் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதித்து,முன்னிருந்தபடி ஆலாலசுந்தரராகித் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தனா.அத்திருபபதிகம் வருணதேவனால் திருவஞ்சைக்களத்துக்குவந்து எங்கும் விளக்கமுற்றது.

சேரமான்பெருமாணயனார், திருக்கயிலாயத்திற்சென்றபோது, தடைபட்டுப் பின்தாம் அருளிச்செய்த ஞானவுலாவைச்சிவபெருமான் முன் அரங்கேற்றத்திருவுளமகிழ்ந்து, சிவபெருமா னருள்பெற்று, சிவகணநாதராகி

சுவாமியைச்சேவிப்பாராயினார். அவர், அருளிச்செய்த திருக்கயிலாயஞானவுலாவை, அன்று கேட்டிருந்த மாசாத்தரானவர், அதனைத்தமிழ்நாடெங்கும் விளங்கும்படிச் செய்தனர்.

முன்னேபூமியில் அவதரித்த, பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அநிந்திதையாருமாகி, பார்வதிதேவியாருக்குத் தாங்கள் முன்செய்த திருத்தொண்டைச் செய்துவந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது
தில்லைவாழந்தணர்சருக்கம்.

## தில்லைவாழந்தணர்புராணம்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றியபொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப் [றி.
போதியாநிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்

உலகமெல்லாந் திருவுருவமாகக் கொண்டு விளங்கும், விராட்புருடனுக்கு, இதயஸ்தானமாகவும், பிருதிவியாதி பஞ்சபூத க்ஷேத்திரங்களில ஆகாசஸ்தலமாகவும், இலங்காநின்ற தில்லையினகண்ணே, ஆதிமத்தியாந்த சமானுதிக ரஹிதனுகிய சிவபெருமான், ஆன்மகோடிகளுக்கநுக்கிரகஞ்செய்யும் பொருட்டு, தில்லைவனத்தின்கண்ணே திருமூலத்தானமாகிய சிவலிங்கவடிவமாய் எழுந்தருளி யிருக்கின்றனர். அந்தத்திருமூலத்தானத்துக்குத் தெனபாகத்திலே திருவருள்வடிவாகிய கனகசபை யிருக்கின்றது. அந்தக்கனகசபையின் கண்ணே, பரமகருணு மூர்த்தியாகிய சிவபெருமான், தமது அருட்சத்தியாகிய சிவகாமியம்மையார்காண, அனவரதமும் ஆனந்தத்தாண்டவஞ்செய்தருளுவர்.

திருமூலத்தான லிங்கத்துக்கும், சபாநாத ருக்கும, வேதசிவாகமவிதிபபடி பூசைமுதலி யவை செய்பவா திலலைவாழநதணா என று சொலலபபடுவோாகள். அவாகள் மூவாயிரமு னிவர்கள். சிவபுண்ணியங்களெலலாம் ஒருங் குதிரண்டு வடிவுகொண்டாற் போன்று, குற் றமற்றவமிசத்திலுதித்து, பாவமென்பது சிறி தும எய்தப்பெறுதவர்கள். இல்லறத்திலுள்ள வர்கள். இருக்கு, யசுர், சாமம, அதர்வணம் என்னுஞ் சதுர்வேதங்களையும, சிக்ஷை, வியா கரணம, சநதோவிசிதி, நிருத்தம், சோதிடம, கற்பம் என்னும் ஆறுவேதாங்கங்களையும் ஐய நதிரிபற ஓதியுணாந்தவர்கள். ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம என்னும மூ ன்றக்கினிகளையும் விதிப்படி வளாக்கின்றவ ர்கள். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வே ட்பித்தல், ஈதல், ஏற்றல, என்னும அறு தொழிலினுலும் கலியை நீக்கினவாகள், விபூ தி உருத்திராக்ஷம் என்னும சிவசின்னங்களை விதிப்படி மெய்யன்போடு தரிக்கின்றவர்கள். சிவபெருமானுடைய ஸ்ரீபாதத்தின் கண்ணே இடையறாது பதிந்தவுள்ளன்பே தங்களுக்கு ப் பெருமபாக்கியமெனக் கொள்கின்றவர்கள்.

அவர்கள் சமயம், விசேஷம், நிருவாணம் ஆசாரியாபிஷேகம் என்னும சதுாவித தீக்ஷா

விசிட்டராயுள்ளவர்கள். காமிகமுதல், வாதுளமீறாகச் சொல்லப்பட்ட சிவாகமங்கள் இருபத்தெட்டையும் ஓதியுணர்ந்தவர்கள் அவ்வாகமங்களால் வீட்டுநெறிகள் இவையென வுணர்த்தப்படுஞ்சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குபாதங்களையும், வழுவாவண்ணம் அநுட்டிக்கின்றவர்கள்.

அவர்கள், சபாநாயகர், "இவ்விருடிகளில் நாமொருவர்" என்று அருளிச்செயப்பெற்ற பெரும்பேறுடையவர்கள். இம்மட்டோ? திருவாரூரத்தியாகேசர், சுந்தரமூர்த்திநாயனருக்குத் திருத்தொண்டத் தொகைபாடும்படி அருளிச்செய்தபோது, "தில்லைவாழந்தணர் தமடியார்க்குமடியேன்" என்று அவர்களைத் தமது அருமைத் திருவாக்கினாலே எடுத்துச் சொல்லியருளினாரென்றால், அவர்களுடைய அளவிறந்த மகிமையைச் சொல்லவல்லவர் யாவர்.

திருச்சிற்றம்பலம்.

## திருநீலகண்டநாயனார்புராணம்.

சிதம்பரத்திலே, குயவர் குலத்தில் அவதரித்த திருநீலகண்டநாயனாரென்பவர் இல்லறதருமத்தில் சிறிதுந்தவறாதுநடந்து சிவபக்தி அடியார் பக்திகளிலே மிகச்சிறந்தவராய் வா

ழ்ந்துவந்தார். அவர் தமமுடைய குலத்துக்கேற்ப, மட்பாத்திரங்கள்செய்து விற்றுச் சீவனஞ்செய்தும, திருவோடுகளைச் சிவனடியார்களுக்குக் கொடுத்தும் வந்தார் ஒருநாள் அவர் அவ்வூரிலே ஓர் வேசியிடத்துச் சென்று வீட்டுக்குத்திரும்ப, கற்பிற்சிறந்த அவர்மனைவியார் அதையறிந்து, எம்மை நீர் தீண்டுவீராகில் "திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார். அதைக்கேட்ட தொண்டர், சிவபெருமானுடைய திருநீலகண்டத்திலே தாம் வைத்த பக்தி குன்றுவண்ணம, மனைவியாரைத் தொடாமல நீங்கி, என்னை யென்னுமல் "எம்மை" என்று பன்மையாகச் சொன்னதனால், இவரைமாத்திரமன்று, மற்றப்பெண்களையும் நான் மனத்தால் நினைத்தலுஞ் செய்யேன் என்று உறுதிகொண்டார்.

இவ்வாறு அவர்களிருவரும் தங்கள்வீட்டினின்றும் புறப்படாதொழிந்து, அவ்வீட்டிலதானேயிருந்து, இல்லறத்திற்குரிய பிறகாரியங்களெல்லாஞ் செய்துகொண்டு, புணர்ச்சியின்மையைப் பிறரறியாமல, இளமைப்பருவங்கடந்து வயோதிகப் பருவமடைந்தும், தாங்கொண்ட ஆணையைக் கடவாமலும், சிவபக்தி குறையாமலும் வாழ்ந்துவந்தார்கள்.

இப்படியிருக்கும் காலத்திலே, கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் அவ்வடியார் மகி

மையை உலகத்தவர்கள் அறிந்துய்யும்பொரு
ட்டு, ஒருசிவயோகி வடிவங்கொண்டு, அவ்வ
டியாாவீட்டுக்குச்சென்று, அவரிடம ஓர்திரு
வோட்டைத்தந்து,—இவ்வோடு தனக்குவே
ருெப்பில்லாதது;தன்னிடததில சேர்ந்தபொ
ருள்க ளெல்லாவற்றையும சுத்தி செய்வது;
பொன்மணிகளைப் பாாக்கிலும் இது காப்பா
ற்றப்படத்தக்கது—என்று அதிக மேன்மை
படச்சொலலி, இந்தத்திருவோடடை நீயுன்
னிடம் வைத்திருந்து நாமகேட்குமபோது த
ருவாய் என்று சிவயோகியாா் நலக வணங்கிப்
பெற்றுக்கொண்டு, வீட்டின் ஒருபக்கத்தில்
சேமித்துவைத்துவிட்டு, திரும்பிவந்து, போ
ம்படியாகத் திருவுளங்கொணட சிவயோகியா
ருக்குப்பின் சிறிது தூரஞ்சென்று அவரிடத்
தில விடைபெற்றுக்கொணடு, வீட்டுக்குத்தி
ருமபினுா்.

செடுநாள்சென்றபிறகு, ஒருநாள் சிவபெரு
மான் தாம்கொடுத்த திருவோட்டைவைத்த
இடத்தில இல்லாதொழியும்படி செய்து, அ
வ்வடியாருடைய உண்மையைப் பிறர்க்குப்
புலப்படுத்தும் பொருட்டு, முன்போலச்சிவ
யோகிவடிவந்தாங்கி, அவர்வீட்டுக்கெழுந்தரு
ளித் தாம்முன்னேதந்த திருவோட்டைக்கே
ட்க, அடியவர், உள்ளேபோய்ப் பார்த்துக்கா
ணுமையாலே திகைத்து, அங்குநின்றவர்களி

டத்திலேகேட்டும், பிறவிடங்களிலே தேடியு ங் காணுதவராகிபயந்து, அடியவா சிவயோ கியாருக்கு முன்வந்து, "சுவாமீ! தேவரீர் த ந்த வோட்டைவைத்த இடத்திலும் பிறவிட ங்களிலும் தேடிக்காணேன். மிக்க பழமை யதாகிய அந்தத்திருவோட்டைபபார்க்கிலும, நல்ல புதியவோடுதருகிறேன். அதையேற்று க்கொணடு அடியேன்செய்த பிழையைப்பொ றுத்தல்வேண்டுமென்று பிராாத்திக்க, சிவ யோகியார் கோபித்துபபார்த்து, "நான்வைத் தமண்ணோட்டையன்றிப் பொன்னோட்டை த்தந்தாயாயினும நான் ஏற்றுக்கொள்ளேன். நீபிழந்தது உண்மையாயிருக்குமாகில, உன்பு த்திரனைக் கைப்பற்றிக்கொண்டு, குளத்திலே மூழ்கி, சத்தியம பண்ணித்தரலவேணடு" மென்ன, அடியவர் - எனக்குப் புத்திரனில லையே! என் செய்வே-னென்ன, சிவயோகி யார், "உன் மனைவிகரத்தையேனும்பற்றி மு ழுகிச்சத்தியம்பண்ணித்தா" என்றார், அடிய வர் "எங்களுக்குள் நிகழ்ந்த ஓர்சபதத்தால ஒருங்கு மூழ்குதல்கூடாது" என்றுசொல்ல, சிவயோகியார் சினந்து, "நான்தந்தஓட்டை யுந்தராமலும், அதைக்கவராதது உண்மை யெனின் மனைவியைப்பற்றி முழுகிச் சத்திய ஞ்செய்து தராமலும் நீ கடினசித்தங்கொண் டு பேசுகிறாய். தில்லைவாழந்தணர்கள் கூடி

யிருக்கும் பெரிய சபையிலே இவ்விஷயத்தை க்குறித்துப் பேசப்போகின்றேன்." என்று விரைந்து செல்ல, தொண்டரும் பின்சென் றார்.

சிவயோகியார், நிகழ்ந்த சங்கதிகளைத் தில்லைவாழ்ந்தணரிட முரைக்க, அவர்கள், திருநீலகண்டநாயனாரையும் விசாரித்து, "நீர் இவர் தந்த ஓட்டை இழந்தீராகில், உம்முடைய மனைவியைப்பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியஞ் செய்துக்கொடுத்தலே நீதி" என்றார்கள். அடியவர் அதைக்கேட்டு, தாம் மனைவியாரைத் தீண்டாதிருத்தலைக்குறித்துப் பேசமாட்டாதவராகி, தகுந்தபடி குளத்தில் மூழ்கிச் சத்தியஞ் செய்து தருகிறேன் என்று வீட்டுக்குப் போய், மனைவியாரை அழைத்துக் கொண்டுவந்து, திருப்புலீச்சரத்துக்கு முன்னிருக்கின்ற திருக்குளத்திலே போய், ஒரு மூங்கிற்றண்டை ஒருபுறத்தில் மனைவியார் பிடிக்க, மற்றப்புறத்தில தாம பிடித்துக்கொண்டு இறங்க, அதைக்கண்ட சிவயோகியார், "உன்மனைவியைப் பிடித்துக்கொண்டு மூழ்கு" என்று சொல்ல, திருநீலகண்டநாயனார், அவ்வண்ணஞ் செய்யக்கூடாமையை உலகத்தார் அறியும்படி, தமக்குள் நடந்தன வெல்லாஞ் சொல்லி மூழ்கினார். மூழ்கிக்கரையிலேறிய திருநீலகண்ட நாயனாரும் மனைவி

யாரும் மூப்பு நீங்கி யௌவன பருவமடைந்து பிரகாசித்தார்கள்.

உடனே, தேவர்களும் முனிவர்களும் புஷ்பமாரி பொழிய, அவ்வதிசயத்தைக்கண்ட சகலரும் அங்குநின்ற சிவயோகியைக்காணாதவர்களாய் மயங்கிநின்றார்கள். சிவபெருமான் பார்வதி சமேதராய் இடபவாகனத்திலெழுந்தருளி, ஆகாயத்தில் காக்ஷிதர, திருநீலகண்டநாயனாரும் மனைவியாரும பூமியில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து துதித்து நின்றார்கள். சிவபிரான் அவர்களை நோக்கி, "இந்திரிய நிக்கிரகஞ்செய்து மேன்மையெய்திய அன்பர்களே! என்றும் இவ்விளமை நீங்காமல நம்மிடத்திலிருங்கள்!" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். திடபக்தியுடைய திருநீலகண்டநாயனாரும், அவர் மனைவியாரும் சிவலோகமெய்தி பேரின்பமனுபவித்து வாழ்ந்திருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

## இயற்பகைநாயனார்புராணம்.

சோழநாட்டிலே, காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்கின்ற வைசியர் குலத்தில் திருவவதாரஞ்செய்து, இயற்பகைநாயனார் என்னும்

திருநாமம் பெற்றுப் பரமசிவனிடத்தில் மிகு
ந்த அன்புள்ளவராய்ச் சிவனடியாரகள் விரு
ம்பிய பொருள்களையெல்லாம் கொடுத்துப் ப
க்தி செய்துகொண்டு வருங்காலத்தில், சிவ
பெருமான், அவரன்பினுறுதிப்பாட்டினை யா
வருமறிந்துய்வது காரணமாக, அவரிடத்துக்
கு விபூதிதிருமேனியில் பிரகாசிக்க தூர்த்தவ
வேடமுள்ள ஒருபிராமண வடிவங்கொண்டு
வந்து நாயனாரை நோக்கி, உம்மிடத்திலுள்ள
ஒரு பொருளை விரும்பி யிங்குவந்தேன். நீர்
தருதற்கிசைவீராயில், அப்பொருளின்னதெ
ன்று சொல்வேன் என்ன, இயற்பகைநாயனார்
எப்படிப்பட்ட பொருளாயினும், என்னிடத்
திருக்குமாயின், அஃது நமது கடவுளாகிய
பரமசிவனுடைய அடியார்களுக்கேயுரிய பொ
ருளாகையால், தேவரீர திருவுள்ளமு் விரும்பி
யதை இன்னதென்று திருவாய் மலர்ந்தருளு
மென்று சொல்ல; ஐயர், உம்முடைய மனைவி
யை இச்சித்து வந்தேன் என்றார். அப்பொ
ழுது இயற்பகைநாயனார் முன்னிலு மிக்கமகி
ழ்ச்சியோடு உள்ளே சென்று கற்பிலேசிறந்த
தம்முடைய மனைவியாரை அழைத்துக்கொ
ண்டுவந்து, ஐயரிடத்தில் விட்டு வணங்கி இன்
னுமடியேன் செய்யவேண்டிய பணியாது எ
ன்றுவினவ, ஐயர், "இந்தப்பெண்ணை நான்
தனியே கொண்டுபோகையால், உங்கள்மீது

பற்றுள்ள பந்துக்களையும், ஊரார்களையும் கடக்கும் வரைக்கும், அவர்களால் எனக்கோரிடையூறும் உணடாகாதிருக்கும்படி நீர் துணையாகவரவேண்டுமே" என்றார். இயற்பகை நாயனா உடனே ஆயுதசாலையிலே போய், போர்க்கோலங்கொண்டு, ஐயரிடம் வந்து அவரை வணங்கி அவரையும மனைவியாரையும் முன்னே போமபடிசெய்து தாம்பின்னேசென்றா.

அவ்வாறு செல்லும்பொழுது, இயற்பகைநாயனுருடைய சுற்றத்தவாகளும ஐயருக்கிருபக்கததிலும்நெருங்கி யாரவாரித்துக்கொண்டு போகவொட்டாமல் தடைசெய்ய, அது கண்டு நாயனர், கோபங்கொண்டு, பலவகையாகச் சொல்லியுங்கேளாமையினலே, எதிர்த்தவர்களை·யெல்லாங்கொன்று, மேல் எதிர்ப்பவரொருவரு மின்மையைக்கண்டு,ஐயரைநோக்கி, சுவாமீ! தேவரீர் அஞ்சாவண்ணம் இந்தக்காட்டைக்கடக்கும் வரைக்கும் உம்மோடு வருகின்றேன் என்றுசொல்லி அவரோடு திருச்சாய்க்காடு என்னும் சிவஸ்தலத்துக்குச்சமீபத்திலேபோனபொழுது, ஐயர், இயற்பகை நாயனுரை நோக்கி, இனிநீர் திரும்பிப் போகலாம் என்று சொல்ல, நாயனர், அவருடையதிருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு திரும்பினர்.

அப்பொழுது, ஐயா இயற்பகையே! இங்கேவா என்று சொல்லி ஓலமிட்டார். நாயனார் அந்த ஓசையைக்கேட்டு அடியேன் இதோ வந்துவிட்டேன். இன்னும் இடையூறுசெய்பவர்கள் உண்டாயின் அதஞ்செய்துவிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டுவர ஐயா மறைந்தருளினார் வந்தநாயனார் அவ்வய்யரைக்காணமல மனைவியைமாத்திரங் கண்டார். பின்னர், ஆகாயத்தில்சிவபெருமான் பார்வதிசமேதராய் இடபவாகனத்திலெழுந்தருளிக் காக்ஷிதரக்கண்டு, ஆராமையினாலே உடனே விழுந்து எழுந்து ஸ்தோத்திரமபண்ணினார். சிவபெருமான அவரைநோக்கி நமமேலும நமமுடையடியார்கள் மேலும் நிஷ்களங்கமாகிய அன்புவைத்த இயற்கையே! நீ உன் மனைவியோடும நமமுடனேவா என்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாயினார். இயற்பகைநாயனாரும மனைவியாரும் சிவலோகத்தை யடைந்து பேரின்பமனுபவித்து வாழ்ந்திருந்தார்கள். யுத்தத்தில் இறந்த அவர்கள்பந்துக்களும வானுலகத்தை அடைந்து இன்பமனுபவித்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

# இளையான்குடிமாறநாயனார்புராணம்.

இளையான்குடியென்னும் ஊரிலே வேளா ளாகுலத்தில், திருவவதாரஞ்செய்து, சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்புள்ளவராய்ச் சிவனடியார்களுக்குத் திருவமுதுபடைக்குந் திருத்தொண்டுவழுவாமல் நடத்திக்கொண்டு வாழுநாளில், செல்வமாறின காலத்திலும் இந்தத்தொண்டுமாறாமல் செய்யத்தக்க உறுதிப்பாடுள்ளவரென்னும் நிலைமையினை உலகத்தார் அறிந்துய்யும்படி விளக்கிக்காட்டத் திருவுள்ளங்கொண்டு, சிவபெருமான் தம்முடைய அடியார்க்கிருந்த செல்வமெல்லாம் நாளுக்குநாட்குறையும்படிக்குச் செய்துவந்தமையால், இளையான்குடிமாறநாயனார் வறுமையடைந்தும் முன்னிலைமையில் வழுவாமல் கடன்வாங்கியுஞ் செய்துவருகையில், மழைக்காலத்தில் நன்றாய் வருஷித்துக்கொண்டிருக்கும் ஒரு நாளிரவில், நெடுநேரம் எதிர்பார்த்திருந்தும் ஒருவருடைய உதவியுமில்லாமல் பகல்முழுதும் போஜனஞ்செய்யாமையால் பசியதிகப்பட்டு, வீட்டுக்கதவைப் பூட்டியபின்பு, திருக்கைலாயபதியானவர் சைவவேடங்கொண்டு அம்மழையில்நாயனார்மாளிகைக்குவந்து கதவைத்தட்டினார். நாயனார் கதவைத்திறந்து உள்ளேவரவழைத்து வேறே வஸ்திரங்கொடுத்து, பிறகு அமுதுபடைக்கவேண்டுமென்றுதமது

மனைவியைவினவினர். அதற்குமனைவியார "நம்முடையவீட்டிலே யாதொன்றுமில்லையே, அயலாரகொடுப்பவர்களுமில்லை; நாழிகையு மதிகமாய்விட்டது; அடியேனலாவதென்னி ருக்கின்றது? ஆயினும், இன்றுபகல் விதைத் தநென்முளையை வாரிக்கொணடுவந்தால் இய ன்றமட்டும் அமுது சமைக்கிறே" னென்று சொலல, இளையான்குடிமாறநாயனா மிகவு மனமகிழ்ந்து அதற்குடன்பட்டு பெருமழை பொழிகின்ற மகா அந்தகாரமாகிய அாத்தரா த்திரியிலே, ஒருபெரிய இறைகூடையைத் த லையிலே கவிழ்த்துக்கொண்டு காலினலேதட விக் குறிவழியே தமமுடையவயலிற்சென்று, அதிலே அதிகமழையினல் நீாமேலே மிதக்கி னற நென்முளைகளைக் கையினலே கோலிவா ரி இறைகூடை நிறைய இட்டு தலையிலேவை த்துச் சுமந்துகொண்டு சீக்கிரம்வீட்டுக்குத்தி ருமபிவந்தார். அவாவரவை எதிாபார்த்திரு நத மனைவியாாகையில கொடுக்க, அப்புண ணியவதி அதைச்சமைக்க விறகில்லாமையா ல வீட்டுமேற்கூரையினல் அடுப்பெரித்துப் பக்குவப்படுத்தி அரிசியாக்கி, அமுதுசமைத் து, குழிப்பயிரைத் தமது சாமாத்தியத்தின ல் வெவ்வேறு கறியமுதுகள்செய்து முடித்து கணவனரைநோக்கி, அமுதுசித்தமாயிருக்கி றதென்றுசொல்ல, அவாசித்திரைகொள்பவா

போலிருக்கின்ற சுவாமியை அணுகி, சுவாமீ! அமுதுசெய்ய எழுந்தருளும் என்றுசொல்லி யழைக்க, அவர் ஒருசோதிவடிவமாய் எழுந்துதோன்றினூர். அதைக்கண்ட இளையான்குடிமாறநாயனூரும் மனைவியாரும திகைத்து நின்றூர்கள். பின்பு சிவபெருமான் பார்வதிதேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றி இளையான்குடிமாறநாயனூரை நோக்கி, "அன்பனே! நமமுடைய அடியார்களை அமுதுசெய்வித்த நீ உன்மனைவியோடும நமமுடைய பதத்தையடைந்து பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிரு" என்று திருவாய்மலர்ந்தருளி உடனே மறைந்தருளினூர்.

திருச்சிற்றம்பலம்.

---

# மெய்ப்பொருணுயனூர்புராணம்.

சேதிநாட்டிலே, திருக்கோவலூரில் மலையமானுட்டாருக்கு அரசரும, வேதாகமங்களின் உண்மையறிந்தவரும, சிவனடியார்களுடைய திருவேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தைசெய்பவருமாகிய மெய்ப்பொருணுயனூரென்பவர் ஒருவரிருந்தார். அவர்தம்முடைய இராச்சியத்தில் தருமநெறிதவறுமல செங்கோல் செலுத்திவருங்காலத்தில்,

முத்திநாதன் என்னும ஓரரசனானவன் அவ ரைவெல்லுதற்குவிருமபி, பலமுறையுத்தஞ் செய்து தோலவியடைந்து பங்கப்பட்டதனு ல, அவரிடத்துள்ள அடியாாபக்தியை யறிந் து, கபடத்தினுல் அவரைவெல்லக்கருதி, சரீ ரமுழுதும விபூதிதரித்து, சடைகளைச சோ த்துக்கட்டி, ஆயுததததை வைத்திருக்கும ஓர் கவளியைப புத்தகக்கவளிபோலத் தோன்று ம்படி கையிலெடுத்துக்கொண்டு, திருக்கோவ லூரிற்சென்று, மெய்ப்பொருளுயனுருடைய திருமாளிகையடைநது, காவலோடுங்கூடிய பலவாயில்களையுங் கடந்து, நாயனா சயனக் கிரகத்தில மஞ்சத்தின்மீது நித்திரைசெய்ய, அவருடைய மனைவியார் பக்கத்திலிருக்கக் கணடும, சமீபத்திலேசென்ருன்.

அப்போது, மனைவியார் சீக்கிரமெழுந்து மெய்பபொருளுயனுரையெழுப்ப, அவா விழி த்தெழுநது அவ்வஞ்சகனை யெதிாகொண்டு வணங்கி "சுவாமீ! தேவரீர் இங்கெழுநதருளு தற்குக் காரணம்யாது?" என்றுவினுவ, முத் திநாதன் "உங்கள் கடவுளாகிய சிவபெருமா ன் ஆதிகாலத்தில அருளிச்செய்த சைவாக மங்களுள் எவ்விடத்திலுங் காணபபடாத ஓ ராகமத்தை உமக்குப்போதிக்கும்படி கொண் டுவநதேன்" என்ருன். மெய்ப்பொருளுய ஞர் அதைக்கேட்டு மிக்க மகிழ்கூர்ந்து "இதி

னிலுமுயர்ந்தபேறு எனக்கென்னிருக்கின்றது? அந்தச்சைவாகமத்தை யிப்போதே வாசித்துப்பொருளருளிச்செய்தல்வேண்டு" மென்று பிரார்த்திக்க, முத்திநாதன் "உம்முடையபட்டத்தரசி இல்லாமல் நீருமநானும வேறிடத்திருக்கவேண்டு" மென்றுசொல்ல, உடனேநாயனார தமமனைவியாரை அந்தப்புரதது க்குபபோமபடி செய்து, பொய்வேடங்கொண்ட முத்திநாதனை விதிப்படி ஆசனத்தின்மேலிருத்தி, தாம்கீழேயிருநதுக்கொண்டு, இனி அருளிச்செய்யுமென்ன, முத்திநாதன் தன்கையிலிருந்த வஞ்சக்கவளிகையை மடியின்மேலவைத்து புத்தகம அவிழ்ப்பவன்போலெடுத்து, நாயனார வணங்குமபோது அக்கவளிகையில்மறைத்து வைத்துள்ள உடைவாளையெடுத்து அவரைக்குத்த, அவர்சிவவேடமே மெய்ப்பொருளெனறுகருதி அவனைவணங்கினார். உடனே வாயிற்காவலாளனாகிய தத்தனென்பவன் உள்ளேபுகுந்து தன்கைவாளால்பகைவனை வெட்ட முயலுமபோது, நாயனார் "தத்தனே! இவர்சிவனடியாராதலால் இவர்க்கிடையூறொன்றுஞ் செய்யாமல், ஒருவருமிவரைநெருங்கித் துன்பஞ்செய்யாவண்ணம அழைத்துக்கொண்டுபோய் நகர்ப்புறத்தே விடக்கடவாய்" என்று கட்டளையிட, அக்கட்டளையைச்சிரமேற்றாங்கி நாயனாரைவணங்கி

க்கொண்டு முத்திநாதனை யழைத்துப்போம் பொழுது தடுத்தவர்கட்கெல்லாம் வேந்தனுடைய ஆஞ்ஞையைத்தெரிவித்து, நகரத்தைக்கடந்துசென்று அவனுக்குரிய காட்டுவழியிலேயவனைவிட்டுத் திருமபிவந்து, முத்திநாதன் இடையூறின்றி தனனகரம்போய்ச்சேர்ந்த சங்கதியைக்கேட்கும் பொருட்டாக முன்னமே நீங்கிவிடக்கூடிய உயிரைத்தாங்கிக்கொண்டிருக்கும் மெய்ப்பொருணயனருக்கு முன்சென்று வணங்கிநின்று "அரசே! சிவபத்தரை இடையூறின்றிக்கொண்டுபோய் விட்டேன்" என்று சொலல, உள்ளங்களிகூர்ந்து தமக்குப்பின் அரசாளுதற்குரிய குமாரரானையும மநதிரிமுதலானவர்களையும் நோக்கி, சைவாகமவிதிப்படி விபூதிமேல வைத்த அன்பைப்பாதுகாக்கும்படி போதித்து. கனகசபையிலே அநவரதமும ஆனநததாண்டவம் புரியும் சபாநாதரைத் தியானமபண்ணினர். அப்பொழுது சபாநாதா நாயனருக்குத்தோன்றி அவரைத்தமமுடைய திருவடியிலே சேர்த்தருளினா.

திருச்சிற்றம்பலம்.

# விறன்மிண்டநாயனார்புராணம்.

மலைநாட்டிலே, செங்குன்றூரில், வேளாளர்குலத்தில் அவதரித்து, சிவபெருமானுடைய ஸ்ரீபாதங்களைமனத்தின்கணே இருத்தி, உட்பற்று புறப்பற்றுக் களையறுத்தவரும், அடியார் பத்தியிலே உயர்வொப்பில்லாதவருமாகிய விறன்மிண்டநாயனாரென்பவர் ஒருவரிருந்தார் அவர், சிவஸ்தலங்களுக்குப் போனபொழுதெல்லாம், முன்னர் அடியார் திருக்கூட்டங்களுக்கெதிரே சென்று அவர்களை வணங்கிக்கொண்டே, பின்னர் சிவபெருமானைவணங்குகின்றவர். அவர் தாம் வசிக்கின்ற மலைநாட்டைநீங்கி பலதலங்களினுஞ் சஞ்சரித்து, சிவனடியார்கள் ஒழுக்கத்தையநுசரித்து, திருவாரூரை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டிருந்தார்.

ஒருநாள், சுந்தரமூர்த்திநாயனார் தேவாசிரியமண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவனடியார்களை அடைந்து வணங்காமல், ஒருபிரகாரம ஒதுங்கிச் சென்றதை அவ்விறன்மிண்டநாயனார்கண்டு, "அடியார்களை வணங்காமற்செல்கின்ற வன்றொண்டன் அவ்வடியார்களுக்குப்புறகு; அவனைவலிய ஆட்கொண்ட சிவபெருமானும் புறகு" என்றார். சுந்தரமூர்த்திநாயனார், அவ்விறன்மிண்டநாயனாரிடத்துள்ள சங்கமபக்தி வைராக்கியத்தைக்கண்டு,

அவ்வடியார்களை மேலே திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடினா. அதைக்கேட்ட விறன்மிண்டநாயனார் மிக மகிழ்ந்து, "இவ்வன்றொண்டருடையமனம் அடியாரிடத்திலேயேபதிந்திருக்கின்றது" என்றருளிச்செய்தார் இச்சங்கமபக்தி வலிமையைக்கண்ட சிவபெருமான் அவ்விறன்மிண்டநாயனாரைத் தம்மைச் சேவிக்கின்ற கணங்களுக்குத் தலைவராக்கியருளினா.

திருச்சிற்றம்பலம்.

---

## அமர்நீதிநாயனார்புராணம்.

சோழநாட்டிலேயுள்ள பழையாறை என்னும் ஊரில், வைசியாகுலத்தில், பெருஞ்செலவமுடையவரும், சிவனடியார்களுக்கு திருவமுது செய்வித்து, அவரவர் குறிப்பறிந்து கந்தைகள், சீலைகள், கோவணம் முதலியவை கொடுப்பவருமாகிய அமர்நீதிநாயனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் திருநல்லூர் எனனுஞ் சிவஸ்தலத்திலே மஹோற்சவதரிசனஞ்செய்யுஞ் சிவனடியார்கள் திருவமுதுசெய்யும்பொருட்டு ஒருதிருமடங் கட்டுவித்து, தம்முடைய சுற்றத்தார்களோடும் அவ்விடம் போய்ச் சேர்ந்து, உச்சவ தரிசனஞ்செய்து,

தமமுடையமடத்திலே சிவனடியார்களுக்கு திருவமுது செய்வித்துக்கொண்டு மனமகிழ்ச்சியோடுமே இருந்தார்.

இப்படியிருக்குநாளில், ஒருநாள், சிவபெருமான் பிராமணபிரமசாரிவடிவங் கொண்டு, இரண்டு கௌபீனங்களையும விபூதிபையையும் கட்டியிருக்கிற ஒருதண்டைக்கையிலேபிடித்துக்கொண்டு, அந்தத்திருமடத்துக்கு எழுந்தருளிவந்து, நாயனாரைநோக்கி, "நீர் அடியார்களுக்குத் திருவமுதுசெய்வித்து, அவர்களுக்கு வஸ்திரங்களும், கந்தைகளும், கீள் கௌபீனங்களும் தருகின்றீரென்று கேள்வியுற்று, உம்மைக்காணுதற்கு விரும்பிவந்தோம" என்ன, நாயனார், "சுவாமீ! தேவரீரும் இங்கே திருவமுதுகொண்டருளல வேண்டு" மென்று பிரார்த்திக்க, பிரமசாரியானவர் அதற்குடன்பட்டு, "நாமகாவேரியிலே ஸ்நானமபண்ணிக்கொண்டு வருவோம். ஒருபோதுமழைவரினும் தரித்துக்கொள்ளுமபொருட்டு, நீர் இந்த உலாந்த கௌபீனத்தை வைத்திருந்து தாரும" என்று சொல்லி, தண்டிலேகட்டப்பட்டிருக்கின்ற இரண்டு கௌபீனங்களிலொன்றை யவிழ்த்து, "இந்தக்கௌபீனத்தின் மகிமையை உமக்குநான்சொலல வேண்டியதில்லை! நான் ஸ்நானம் பண்ணிக்கொண்டு வருமளவும இதைவைத்திருந்துதா

ரும்" என்று அவர் கையிலே கொடுத்துவிட்டு காவிரியிலே ஸ்நானம் பண்ணுதற்குப்போக, அமர்நீதிநாயனார் அந்தக்கௌபீனத்தை ஒருத்தருக்குந் தெரியாத இடத்திலே சேமித்துவைத்தார். ஸ்நானத்துக்குப்போன பிரமசாரியானவர், நாயனார் சேமித்துவைத்த கௌபீனத்தை மறைத்து, ஸ்நானஞ் செய்துகொண்டு மழைபொழிய நனைந்து, திருமடத்தையடைந்து நாயனாரைநோக்கி, "தண்டிலேகட்டப்பட்டிருக்கின்றகௌபீனமநனைந்துவிட்டது. உமமிடத்திலேதந்த உலர்ந்த கௌபீனத்தைக் கொண்டுவாரும்," என்றுசொல்ல, நாயனார் சீக்கிரம் உள்ளேபுகுந்துபார்த்து, கௌபீனத்தைக்காணாதவராகி திகைத்து, பிறவிடங்களிலுந் தேடிக்காணாமையால துக்கங்கொண்டு, வேறொருகோவணத்தை யெடுத்துக்கொண்டுபிரமசாரியார் முன்வந்து, "சுவாமீ! தேவரீர்தந்த கௌபீனத்தை எங்குந்தேடிக்கண்டிலேன். வேறொருநல்ல நெய்தகௌபீனங்கொண்டுவந்தேன். தேவரீர் நனைந்தகோவணத்தைக்களைந்து, இதைச்சாத்தி, அடியேன்செய்த குற்றத்தைக்ஷமித்தருளலவேண்டு" மென்றுபிரார்த்திக்கக்கேட்டபிரமசாரியானவர் மிகக்கோபித்து, "நன்று! நன்று! சிவனடியார்களுக்குநல்லகௌபீனங் கொடுப்பேனென்று நீர்ஊரெங்கும் பிரசித்தப்படுத்தியது, என்னுடைய கோவணத்தைக்கவர்

வதற்கோ! நீ செய்கின்ற இவ்வாணிகம் மிக அழகியதாயிருக்கின்றது" என்றுசொல்ல அமர்நீதிநாயனார் மிகவும்பயந்து நடுநடுங்கி, "சுவாமீ! அடியேன் இக்குற்றமறிந்து செய்தேனல்லேன். இக்கோவணமன்றி வெகுபொன் மணிகளையும், பட்டாடைகளையுந் தருகிறேன் ஏற்றருளும்" என்ன, அதற்குப்பிரமசாரியார் கோபந்தணிந்தவர்போலக்காட்டி, "அவைகள் எனக்கு ஏன்? இக்கௌபீனத்துக்கு ஒத்த நிறையுள்ள கோவணந்தந்தாற் போதும்" என்று தண்டிலேகட்டப்பட்டிருந்த கௌபீனத்தை யவிழ்த்துக்கொடுக்க, அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து, ஒருதராசைக் கொண்டுவந்து நாட்டி, பிரமசாரியார்தந்த கௌபீனத்தை யொருதட்டிலும், தம்கையிலுள்ள நெய்யற் கோவணத்தை யொருதட்டிலுமவைக்க, தமமுடைய கோவணத்தட்டு மேலெழும்பக்கண்டு, அடியார்களுக்குக் கொடுக்கும்படி தாம வைத்திருந்த கோவணங்களெல்லாவற்றையும் கொண்டுவந்திடவும், நிறையொவ்வாமல் மேலுமேலுந்தமமுடைய தட்டு எழ, மிக்கவியப்பெய்தி, பலவஸ்திரங்களையும் பட்டாடைகளையும், நூற்கட்டுகளையும், சுமைசுமையாக எடுத்துவந்து இடுந்தோறும், தட்டு எழுந்தபடியேமேல நின்றது. அமர்நீதிநாயனார் அதைக்கண்டு, பிரமசாரியை வணங்கி, "சுவாமீ!

என்னுடைய திரவியங்களில் சேஷித்துள்ள து இனியொன்றுமில்லை. நானும் என்மனைவி யும் புத்திரனுமாத்திரம நிற்கின்றோம். தேவ ரீருக்குத் திருவுளமானால், அடியேங்களும இநதத்தட்டில் ஏறுவதற்கு அனுமதிதந்தரு ளு” மென்ன, பிரமசாரியாரும் அதற்குநோ ந்தார். அதுகண்டு, அமாநீதிநாயனார் மனம கிழ்ந்து, பிரமசாரியாரை வணங்கி, தம்முடை ய மனைவியாரோடும் புத்திரரோடும தராசை வலஞ்செய்து, “சிவனடியார்களுக்குச் செய் யுந்திருத்தொண்டிலே அடியேங்கள் தவறும ல் இருந்தோமாகில், யாங்கள் ஏறினமாத்திர த்தில்,இந்தத்தட்டு ஒத்துநிற்கக்கடவது” என் றுசொல்லி, திருநல்லூரில் வீற்றிருக்கின்ற சி வபெருமானை வணங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு மகிழ்ச்சியோடு தட்டிலேறினா ர்; ஏறினமாத்திரத்தில், துலாக்கோலின் இர ண்டுதட்டுகளும் ஒத்துநின்றன.

அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லோ ரும், அமர்நீதிநாயனாரை வணங்கி ஸ்தோத்தி ரஞ்செய்தார்கள். தேவர்கள் புஷ்பமாரிபொ ழிந்தார்கள்!! ஸ்ரீ கைலாசபதியானவர் தாம் கொண்டுவந்த பிரமசாரிவடிவத்தையொழித் து, ஆகாயத்தில் பார்வதிதேவியாரோடு இட பாரூடராய்க் காட்சிதந்து, தம்மைத்தரிசித் துத் தராசுதட்டிலே தானேநின்றுக்கொண்டு

ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனார், மனைவியார், புத்திரர் ஆகிய மூவாமேலும் திருவருணோக்கஞ்செய்து, "நீங்கள் மூவிரும்நம்முடைய அருளைப்பெற்று, நமமுடைய சந்நிதானத்திலே வணங்கிக்கொண்டிருங்கள்" என்றுதிருவாய்மலர்ந்தருளி அந்தாத்தானமாயினா. அமர்நீதிநாயனாரும், அவர்மனைவியாரும, புத்திரரும, சிவபெருமானுடைய திருவருளினல் அந்தத்தராசுதானே தேவவிமானமாகி மேலேசெல்ல, சிவலோகத்தையடைந்து வாழ்ந்திருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

தில்லைவாழந்தணாசருக்கம்

முற்றுப்பெற்றது.

---

## இரண்டாவது

## இலைமலிந்தசருக்கம்.

# எறிபத்தநாயனார்புராணம்:

கொங்குதேசத்திலே, இராஜதானியாகிய திருக்கருவூர் ஆனிலை யென்னும ஆலயத்தில எழுநதருளியிருக்கும பரமசிவனிடத்தில மிக்க அன்புள்ளவராய்த் தொழுது துதிப்பதுமன்றி, சிவனடியாாகளுக்கேதேனும் இடர்நேரிடுமானால அவ்வாபத்தை நீக்கும அன்புள்ளவராயும இருநத எறிபத்தநாயனார் என்பவர் வாழுமநாளில்,சிவகாமியாண்டார் என்னும் ஒருதொண்டர், திருக்கருவூர்ச்சிவபெருமானுக்குத் திருமாலை கட்டிச்சாத்தும்பொருட்டு, புட்பக்குடலை நிறைய மலரெடுத்துக்கொண்டு போமபொழுது, மஹாநவமி முன்னாள், காவிரியில முழுகுவித்துக்கொண்டு வருகிற அவ்வூர் அரசராகிய புகழ்ச்சோழநாயனாருடைய பட்டத்து யானையானது, அப்பூக்குடலையைத் துதிக்கையால் பறித்துக் கீழேசிநதிவிட்ட மாத்திரத்தில், சிவகாமியாண்டாா மிகவும் சிந்தைவருந்திச் சுவாமியைநோக்கி முறையிடுமபோது, எறிபத்தநாயனார் அமமுறையைக்கேட்டோடிவந்து, தமமுடைய கையி

விருந்த மழுவாயுதத்தினால் அக்கரியின் துதிக்கையை அறவெட்டி, மேலிருந்த பாகரையும குத்துக்கோற்காரரையும் வெட்டிக்கொன்றனர.

இச்செய்தியைப் புகழ்ச்சோழநாயனார் கேள்வியுற்று, அவ்விடத்தெய்தி நோக்கி, இவர் சிவனடியாராகையால், பிழைகண்டல்லது இவ்வண்ணம் புரியாரென்றுணர்ந்து, எறிபத்தநாயனார்க்கருகேவந்து,இஃது அடியேனுடைய குற்றமாகையால், என்னைச் சேதிக்கவேண்டுமென்று தன்வாளாயுதத்தை யுருவிக்கொடுக்க, எறிபத்தநாயனா, அரசனுடைய அன்பின் மிகுதியைக்கண்டு பயந்து, தம்மையே சேதித்துக்கொள்ளுமபடி அவ்வாளாயுதத்தைத் தம்முடைய கழுத்தில் வைத்தரியத்தொடங்குகையில, அஞ்சலியுடனிரங்கிக்கொண்டிருநத அரசனறிந்து, அதிக விரைவில் அவர்கையைப் பற்றிக்கொண்டபோது, பரமசிவனுடைய அநுக்கிரகத்தினால், "நாமேயுங்கள் அன்பினை உலகத்தார் அறிந்துய்யும்பொருட் டிவ்வாறு விளைவித்தன"மென்று அசரீரிவாக்குண்டாக, யானையும், பாகர்களும் பிழைத்தெழுந்தார்கள்.

புகழ்ச்சோழநாயனாரும், எறிபத்தநாயனாரும் ஒருவரையொருவா வணங்கி யெழுந்து, அசரீரிவாக்கைத்துதித்தார்கள். பரமசிவனு

டைய திருவருளால் திருப்பூங்கூடையிலே முன்போல பூக்கள் நிறைவுபெற்றிருக்கச் சிவகாமியாண்டார் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். பின்னர், சிவகாமியாண்டார் திருப்பூங்கூடையை எடுத்துக்கொண்டு சுவாமிக்குத் திருமாலை கட்டிச்சாத்தும்படி போனார். இப்படியே, எறிபத்தநாயனார் அடியார்களுக்கு இடையூறுகள் வந்தகாலத்திலே முற்பட்டு வந்து அவைகளை நீக்கி, பக்திவலிமையிற் சிறந்தவராயிருந்து, பின்பு திருக்கைலாயத்திலுள்ள சிவகணங்களுக்குத் தலைவரானார்.

திருச்சிற்றம்பலம்.

---

## ஏனாதிநாதநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, எயினனூரில், சான்றார்குலத்தில் விபூதியில் மகாபக்தியுடையவராகிய ஏனாதிநாதர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அரசர்களுக்கு வாள்வித்தைபயிற்றி, அதனால்வரும்பொருளையெல்லாம் சிவனடியார்களுக்குபயோகப்படுத்தி வாழுநாளில், அவ்வாட்படைகற்பிக்குந் தொழிலுடையோனாகிய அதிசூரன் என்பவனொருவன் தனக்கு எதிரில்லாமையால், நாயனாரோடு மாறுகொண்டு, "போர்செய்யக்கருதி, வீரர்கூட்டத்தோடும்போய், அவர்வீட்டுத்தலைக்கடை

யில்நின்று, "நாமிருவருமபோர்புரிநது, வெற்றி யடைபவா எவரோ அவரேவாள்விதசைதபயிற்றும் உரிமையைப்பெறல்வேண்டும" என்று பராக்கிரமங் கூறியழைக்க, அதற்கு நாயனுருடன்பட்டுப் போாபுரியாநின்றகாலேயில, அதிசூரன்தோல்வியுற்றுப புறங்காட்டியோடிப் போனதால், அவன், அன்றிரவுமுழுதும நித்திரையின்றித் துக்கித்துக்கொணடிருநது, நாயனுரை வஞ்சகத்தால் ஜயிக்கும்படி துணிந்து, மறுநாளுதயத்தில, நாமிருவரும் படைஞரின்றி வேறேரிடத்திலே தனிதது யுத்தஞ்செய்வோமென் றெருருவனிடஞ் சொல்லியனுப்ப, நாயனுரதற்குடனபட்டு, ஒருவருமறியாதபடி வாளேயும, பரிசையுமெடுத்துக்கொணடு தனியேபுறப்பட்டு அவ்வதிசூரன்குறித்த போர்க்களத்திலே சென்று அவனுடையவரவை எதிர்பாாத்துநின்றுர். முன்னெருபோதும் விபூதி தரியாத அதிசூரன், ஏனுதிநாதநாயனுர்க்குள்ளவிபூதிபக்தியை அறிந்து நெற்றியிலே விபூதியைபபூசி, வாளேயும, பரிசையும எடுத்துக்கொண்டு, குறித்தவிடத்திற்சென்று, ஏனுதிநாதநாயனுரைக்கணடு, அவரைச்சமீபிக்கும் வரைக்கும நெற்றியைபபரிசையினுல் மறைத்துக்கொண்டு, அவருக்குமுன்னே முடுகிநடந்தான. நாயனுர், அவனேக்கொல்லுதற்குச் சமயந்தெரிந்துகொண்டு அடிபெயர்த்தார். அப்

பொழுது அதிசூரன் தன்முகத்தை மறைத்துக்கொண்டிருந்த பரிசையைப்புறத்திலேயெடுக்க, நாயனார் அவனுடையநெற்றியிலே தரிக்கப்பட்ட விபூதியைக்கண்டு பயந்து நடுநடுங்கி, "ஆ கெட்டேன்! முனனொருபோதுங் காணுதவிபூதியை இன்றைக்கிவர் நெற்றியிலேகணடேனுகையால, இவர் சிவபெருமானுக்கடியரென்பதிற்சிறிதும ஐயமிலலை இனி இவருடைய உள்ளக்குறிப்பின் வழிநிற்பேன் என்று திருவுள்ளத்திற்கொண்டு, வாளேயும, பரிசையும கைவிடக்கருதி, பின்பு "நிராயுதரைக்கொன்றதோஷம இவரை யடையாதிருக்க வேணடும" என்றெண்ணி, அவைகளேவிடாமல எதிர்ப்பவர்போல் நேர்நிற்க, பாதகனுகிய அதிசூரன் அவரைக்கொன்றான்.

அப்பொழுது, சிவபெருமான் அவருக்குத்தோன்றி, அவரைத்தமமுடைய திருவடியிலே சேர்த்தருளினுர்.

திருச்சிற்றம்பலம்.

---

## கண்ணப்பநாயனார்புராணம்.

தொண்டைமண்டலத்திலே, போத்தபிநாட்டைச்சேர்ந்த உடுப்பூரில்வாழும் வேடர் குலராஜனுகிய நாகனும அவன் மனைவி தத்தை

யுஞ்செய்த தவத்தினால்,புதல்வராகத் திருவவ தாரஞ்செய்து, திண்ணனாரென்னும் பிள்ளைத் திருநாமம்பூண்டு,விலவித்தை கற்றுணர்ந்து, த மபிதாவினால தங்கள் குலத்தலைமை தரப்பெற் றுக்கொண்டுவேடர்களுடன் கானகஞ்சென்று மிருகவேட்டையாடும்போது, ஒருபன்றியான து, வேடர்களையும்,வலைகளையுந் தப்பியோடுவ தைக்கண்டு,துரத்திக்கொண்டு போய் அதனை ச்சுரிகையாற் குத்திக்கொன்றபோது,தமமுட ன்தொடர்ந்துவந்தநாணன், காடன் என்னுமி ரண்டு வேடருமதிசயித்து, "அரசனே! இந்த ப்பன்றி யிறைச்சியைத்தேவர் சிறிதுண்டு, எ ங்களுக்குங் கொடுத்தால நாங்களுமுண்டு பசி யாறுவோம்" என்றுசொல்லி, நீரிருக்குமிடங் காட்ட, அவர்களோடுசென்று பொன்முகலி யாற்றையடைந்து, அந்நதிக்கரையில் பன்றி யையிட்டபோது நாணன், திண்ணனாரைநோ க்கி, "இம்மலையின்மீதுகுடுமித்தேவா இருக்கி ன்றார் அங்குபோனால்கும்பிடலாமென்றான்." திண்ணனார் "அங்ஙனமாயின், செல்லுவோ" மென்று மலையிலேறும்போதே சத்திநிபாதம் பதிந்ததுபோல் அன்புவளரச் சுவாமியைக் கட்டிக்கொண்டு, ஆனந்தக்கண்ணீர்பெருகிப் புளகம்போர்ப்பப் பரவசமடைந்து, சுவாமி யைநோக்கி, "தேவர்வேடுவர்போலத்தனியே யிருக்கின்றீர். இறைச்சிகொண்டுவந்து கொ

டுப்பாருமில்லையாதலால், நான்கொண்டுவரு
வே”னென்றுசென்று, நதிக்கரையிலிட்டபன்
றியின்தசையை அம்பினுற்கொத்தி யெடுத்து
க்காடன்மூட்டிவைத்த தீயிற்காய்ச்சி, வாயி
லிட்டுப் பக்குவம்பார்த்து, தேக்கிலையைத்
தொன்னையாகத் தைத்து, அதில்வைத்துத்
தேனும்விட்டு, பொன்முகலியாற்றுநீர் வாயி
னிடத்தும், திருப்பள்ளித்தாமம சிரசினிடத்
தும், வைத்துக்கொண்டுவந்து சுவாமி திரு
முடியில் சிவகோசரியார் அருச்சனைசெய்த
பத்திரபுட்பங்களைத் தமது காலில் தொடுத்தி
ருக்கும பாதரக்ஷையால் மாற்றி, வாய்நீரால்
மஞ்சனஞ்செய்து, முடியிலிருந்த பத்திரபுட்
பங்களைச்சாத்தித் தையலிலைத் தொன்னையை
எதிரில்வைத்து, “சுவாமீ! இதுபக்குவமுள்ள
இறைச்சி,நானும் மென்று சுவைபார்த்தேன்,
தேனுங்கலந்திருக்கின்றது, அமுதுசெய்தரு
ளும” என்றுசொல்லி அமுதுசெய்வித்தவுட
ன் அந்திப்பொழுதாக, அன்றிரவு முழுதும்
நித்திரையின்றிக் காவலிருந்து, மறுநாள்சென்
று வேட்டையாடி, இறைச்சிகளைப் பக்குவஞ்
செய்து, முன்னுட்போல திருமஞ்சனமுதலா
னதும் ஐந்துநாள்வரையில்குறைவறச்செய்து
வருகையில், இச்செய்தி அருச்சகராகியசிவ
கோசரியாருக்கு அநுசிதமா யிருப்பதனால்,*
“சுவாமீ! இதுதேவரீர்திருவுளத்துக்குட்பாங்கு

தானே" வென்று அவர்வருந்தினமையால், அவருக்குத்தம்முடைய தொண்டனார் அன்பி னுறுதிபபாட்டைத் தெரிவிக்குமபொருட்டு, ஆறுநாள் வலக்கண்ணில் உதிரமொழுகும்படி யிருக்க, அதனை ஊனமுதுகொணடுவருகிற நாயனார்கணடு,மிகவுமவருநதி பச்சிலைமூலிகை களைப்பிசைந்துவிட்டும நிற்காமையால "ஊ னுக்கு ஊனிடல்வேண்டும" என்னும் பழ மொழிப்படி தம்முடைய வலக்கணணைப்பெய ர்த்து அப்பினார்.

உடனே உதிரம் நிற்கக்கண்டுமகிழும்போ து, சிவபெருமான்நாயனாருடைய பேரன்பை ப்பின்னுஞ் சிவகோசரியாருக்குக் காட்டத் திருவுளங்கொண்டு, இடக்கணணிலும உதி ரம பெருகுமபடிபபண்ண, அதை நோக்கி நாயனா "இதற்கு நானஞ்சேன் என்னிட த்தில் கைகணடமருந்திருக்கின்றது" என் று உதிரமபெருகுங்கணணில் அடையாள த்துக்காகத் தமதுசெருப்புக்காலைத் தூக்கி அ க்கணணிடத்தில வைத்துக்கொண்டு, தமமு டைய மற்றொரு கண்ணினைப்பாணத்தினற் குத்திப் பெயர்ககத்தொடங்கினபோது, தயா நிதியாகிய காளததிநாதர் அதைச்சகிக்கலாற் றாதவராகி, அன்பாகையைத தமது திருக்க ரத்தாற்பற்றிக்கொணடு "கண்ணப்பநிற்க" எ ன்று அருமைத்திருவாய்மலாநதருளி எப்போ

னும் நீ நம்முடைய வலப்புறத்திலிருக்கக் கடவையென்று திருவருள் புரிந்தருளினார்.

அதைக்கண்ட தேவர்கள் பூமாரிபெய்தார்கள். அன்பிற்சிறந்த சிவகோசரியாரும் இவ்வற்புதத்தைக்கண்டு ஆச்சரியமடைந்து, சுவாமியைத் துதித்து வணங்கினார்.

திருச்சிற்றம்பலம்.

## குங்கிலியக்கலயநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருக்கடவூரில் பிராமணகுலத்தில கலயா என்பவர் திருவவதாரஞ்செய்து, அப்பதியிலே திருவீரட்டானமென்னுந் திருக்கோயிலில் வீற்றிருக்கின்ற சிவபெருமானிடத்தில் மிகுந்த அனபுள்ளவராய்க் குங்கிலியத் தூபப்பணிசெய்துகொண்டு வாழுநாளில, அவரன்பினுறுதிப்பாட்டினை யுலகத்தாரறிந்துய்யும்பொருட்டு, சிவபெருமானுடைய திருவருளினால் செல்வங்குறைந்து வறுமை மேலிட்டும, அந்தத்திருப்பணியில் வழுவாமலிருநதார்.

இப்படியிருக்க, மக்களும் சுற்றத்தவர்களும் இரண்டுநாள் உணவின்றி வருந்துகின்றதை அவருடைய மனைவியார்நோக்கி,தம்முடைய திருமங்கிலியத்தைப்பர்த்தாவினிடத்தில்கொ

டுத்து நெல்வாங்கிக் கொண்டுவரச்சொல்ல, நாயனூர் அதனைவாங்கிக்கொண்டு கடைவீதி யிற்போமபோது, ஒருவர்த்தகன் குங்கிலிய ப்பொதிகொண்டு எதிரேவரக்கண்டு, அவன் கையில் திருமங்கிலியத்தைக்கொடுத்துப்பொ தியைவாங்கிக்கொண்டு, கோயிலுக்கு விரைந் துசென்று அங்குள்ள பண்டாரத்தில் அக்கு ங்கிலியத்தைவைத்துவிட்டு, சுவாமியைத்து தித்துக்கொண்டு அவ்விடத்திருக்கையில், சி வபெருமான், நாயனூருடைய இல்லத்தில் செல்வம்நிறைத்து அவருக்குத்தோன்றி "நீமி கப்பசிகொண்டிருக்கின்றாய். வீட்டுக்குப்போ ய், பாலும் அன்னமும் உண்டு துன்பமொழி க" என்றுதிருவாய்மலர்ந்தருளக்கேட்டு, கை கூபபிவணங்கி கடவுள் ஆஞ்ஞையை மறுத் திருத்தற்கஞ்சி, உடனே தமதுமாளிகைக்கு ச்சென்று, அவ்வீடெங்கும் நிறைந்துள்ள நி திக்குவைகளைக்கண்டு, கருணாநிதியாகிய பர மசிவனுடைய திருவருட்பாங்கை வியந்து, த மதுமனைவியார் அறுசுவையோடுஞ் சமைத் த திருவமுதைச் சிவனடியார்களுட னுண்டு திருப்பணிதவறாமல் நடாத்திவந்தார்.

இப்படி நடக்குங்காலத்திலே, திருப்பன ந்தாளில் திருமேனி சாய்ந்திருந்த சிவலிங்கப் பெருமானை நோக்கி, நிமிரப்பண்ணிக்கும்பிட விருமபி, சோழமகாராஜன் யானைகளைக்கட்

டியிழுப்பித்தும் ஙிமிராமையால், தீராதகவலை யுற்று வருந்துவதை அறிந்து, நாயனார் அங் கெய்தி சிவலிங்கத்திலே கட்டப்பட்ட கயிற் றைத் தமமுடைய கழுத்திலே கட்டிக்கொ ண்டு, தமமுள்ளத்திலுண்டான அன்பின்வ லிமையால வலித்துச் சிவலிங்கப்பெருமான் நேரே நின்றருளத்தரிசித்து, மீட்டுங திருக்க டவூர்வந்து, தமபணியைக் குறைவறச்செய் துகொணடு வருநாளில், அந்த ஸ்தலத்திற் கு எழுநதருளிவாநத திருஞானசமபந்தமூர்த் திநாயனார், திருநாவுக்கரசு நாயனார் இவர்களை எதிர்கொண்டு வணங்கித் தமதுவீட்டுக்கழை த்துக்கொண்டுபோய் திருவமுதுசெய்வித்து, அவர்களுடைய திருவருளையும், சிவபெருமா னுடைய திருவருளையும பெற்றார். பின்னுஞ் சிலகாலம அன்பு மேன்மேலும்பெருகப பல திருப்பணிகளையுஞ் செய்துகொணடிருந்து சி வபதமடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## மானக்கஞ்சாறநாயனார்புராணம்.

கஞ்சாறூரிலே, வேளாளர் குலத்தில் மா னக்கஞ்சாறநாயனார் என்பவர் திருவவதாரஞ் செய்து, அரசர்களிடத்தில் சேனாதிபதி உத்

தியோகத்தில இருக்கின்ற குடியிலே இருந்து, மிகுந்தசிவநேசங்கொண்டு திருத்தொண்டர்களுக்கு ஏவலசெய்து, அவர்கள் வேண்டும பொருள்கள் இல்லையெனறு கொடுக்கும நியமமபூண்டு, பரமசிவனுடைய அநுக்கிரகத்தினால ஒருபெண் குழந்தையைப பெற்றுச் சீராட்டி வளர்க்க, அக்குழந்தை வளர்ந்து, மணபபருவம் வாய்ந்திருக்க, அவர் குலத்துக்குத்தக்க ஏயர்கோனகலிககாமநாயனா எனபவருக்கு விவாகம செய்துகொடுக்க நிசசயித்துக் கலியாணபபந்தல அலங்கரித்து, மாப்பிள்ளையும மணக்கோலமாக வந்துகொணடிருக்கும தருணத்தில, சிவபெருமான் தமமுடைய தொணடனா அன்பினை யாவருமறிந்து, பக்திசெய்து கடைத்தேறுவது காரணமாக, ஒரு மாவிரதியாபோல் அந்தமணப்பந்தலில வந்தபோது, மானக்கஞ்சாறநாயனார் கணடுவந்து, அலங்காரஞ் செய்திருக்கும தமமுடைய குமாரத்தியை சேவித்துக்கொள்ளச் சொலல, அப்பெண் வணங்கினபோது, அப்பெண்ணின் கூந்தலைப்பார்த்து, இது நமமுடைய மார்பில அகலமாகத்தரிக்கும பூணூலுக்காகுமென்ன, உடனே நாயனார் சுரிகையினால அரிந்து, சுவாமி கையிற்கொடுக்க நீட்டும்போது, மாவிரதிய கோலங்கொணடுவந்த சிவபெருமான் மறைந்து, இடபவாகனத்தின்

மேலபாரவதிசமேதராய்த்தரிசனந்தந்தருளி, அன்பின் மிகுந்த தொண்டருக்கு முத்தியளித்தனர்.

பின்னர்வந்த ஏயர்கோன் கலிக்காமநாயனார், அங்கு நிகழ்ந்த சமாசாரத்தைக்கேள்வியுற்று மனமகிழ்ந்து திருவருளைத் துதித்து "முண்டிதஸ்திரீயை விவாகம பண்ணுதலசாஸ்திர விரோதமன்றோ" என்று மனந்தளர்ந்திருக்க, சிவபெருமான "கலிக்காமா,நீ மனந்தளரவேண்டாம. இந்தபபெண்ணுக்குக் கூந்தலை மீளக்கொடுத்தருள்கின்றோம" என்று அசரீரியாயருளிச்செய்த திருவாக்கைக் கேட்டு மனத்தளர்ச்சி நீங்கி, முன்போலக் கூந்தலைப்பெற்ற அபபெண்ணை விவாகஞ்செய்து கொண்டு, தமமுடைய ஊருக்குபபோய் வாழ்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

## அரிவாட்டாயநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே,கணமங்கலம என்கின்ற ஊரில, வேளாளர் குலத்தில சிவபத்தியிற் சிறந்தவரும, இலலறததை கிரமப்படி நடத்துகின்றவரும, மிகுந்த செலவமுள்ளவருமாகிய தாயனார என்பவர ஒருவர இரு

ந்தார். அவர் பரமசிவனுக்குச் செந்நெலரிசியும், செங்கீரையும், மாவடுவும் தினந்தோறுங் கொணடுபோய் திருவமுது செய்வித்து வருவார.

இப்படி நிகழும் காலத்திலே, கடவுளுடைய திருவருளினுல அவருக்கு வறுமை உண்டாயிற்று. உணடாகியும, அவர் கூலிக்கு நெல் அறுபபவராகி, தாம கூலியாகப்பெற்ற செந்நெலலெல்லாம சுவாமிகருத் திருவமுது செய்வித்து, கார்நெலலைக்கொணடு தாஞ்சீவனஞ் செய்துவந்தார. இவ்வண்ணம செய்துவருநாளிலே பரமசிவன் அவ்வூரிலிருக்கின்ற வயல்களிலுள்ள நெலலெலலாம செநநெலலாகும்படி அருள்செய்ய, தாயனார் மனமகிழ்ந்து, தினந்தோறும வயலகளுககுப்போய் நெல்லறுத்து, கூலிவாங்கி "இபபடி கிடைத்தது அடியேன செய்த புண்ணியத்தால்" என்று சுவாமிக்கு மிகத்திருவமுது செய்விப்பாராயினர். இபபடி நடக்கின்றபடியால் நாடோறும் உணவிலலாமையைபபற்றி, மனைவியார வீட்டின் பின்புறததிலுள்ள தோட்டத்திற்குப் போய், இலைககறிகொய்து சமைத்துவைக்க; நாயனார் அதையுண்டு முன்போலத் தாம்செய்யும திருப்பணியைச்செய்துவநதார். செய்யுநாளிலே, தோட்டத்திலுள்ள இலைக்கறியெல்லாம்அற்றுப்போக; மனைவியார் தண்ணீர் வா

ர்க்க அநனைப்பானம்பண்ணி, பழையபடி திருப்பணியைச் செய்துவந்தார்.

இப்படிச் செய்துவருநாளிலே, ஒருநாள்முன்போலச் சுவாமிக்குத் திருவமுது செய்விக்கும்பொருட்டுச் செந்நெலரிசியும் செங்கீரையும் மாவடுவும் கூடையிலவைத்துச் சுமந்துகொண்டுபோக, மனைவியார் பஞ்சகவ்வியங்கொண்டு அவருக்குப் பின்னாக நடந்தார். முன்செல்கின்ற நாயனார் பசியினாலே கால்தள்ளாடித் தவறிவிழ, மனைவியார் பஞ்சகவ்விய கலயத்தை மூடியிருந்த தங்கையினால் அவரை அணைத்தும் எல்லாம் கமரிலே சிந்திப்போகக்கண்டு, நாயனார் "இனித்திருக்கோயிலுக்குப் போவதினாலபயன் யாது" என்று துக்கித்து, "இங்கே சிந்திய செந்நெலரிசியையும் செங்கீரையையும் மாவடுவையும் கடவுள் திருவமுது செய்தருளும்பேற்றைப் பெற்றேனில்லையே" என்று, அரிவாளினாலே தமதுடைய ஊட்டியை அரியத்தொடங்கினார்.

அப்பொழுது, அவ்வடியார் தம்முடைய கழுத்தை அரிகின்ற கையைத் தடுக்கும் பொருட்டு எங்கும் வியாபித்திருக்கின்ற பரமசிவன் உயர நீட்டிய திருக்கரமும், மாவடுவைக் கடித்தலால் உண்டாகின்ற விடேல் விடேல் என்னும் ஓசையும், கமரினின்றும் ஒக்க

எழுந்தன. தாயனார் பரமசிவனுடைய திருக்கரம் வெளியில்வந்து அரிவாள் பிடித்த தமமுடைய கையைப்பிடித்த பொழுது, பயங்கொண்டு முந்திய துன்பமநீங்கி, மனமிகமகிழ்ந்து, அவர் தமக்குச்செய்த திருவருளை வியந்து, அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பணணிக்கொண்டு நின்றார் சிவபெருமான் இடபாரூடராய்த் தோன்றி, நீ நம்மேலவைத்த அனபினாலே செய்த செய்கை நன்றாயிருக்கின்றது. நீ உன் மனைவியோடுவந்து நமது சிவலோகத்தில வாழ்ந்திரு என்று சொலலி, அவர்களுடனசெலலப்போயருளினார்.

அந்தத்தாயனாரெனபவர் "இங்கேசிந்திய வைகளைப பரமசிவன் திருவமுதுசெய்யப்பெற்றே னிலலையே" என்று துக்கித்து, அரிவாளினாலே தமது கழுத்தை அரிதலுற்றபடியால, அவருடையபெயர் அரிவாட்டாயநாயனார் என்றாயிற்று.

திருச்சிற்றம்பலம்

---

## ஆனாயநாயனார்புராணம்.

மழநாட்டிலே, மங்கலவூரில், ஆயர்குலத்தில, சிவபத்தியிற்சிறந்த ஆனாயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தமமுடைய ஏவ

லாளராகிய மற்றயிடையர்களோடும் பசுநி ரைகளைக் காட்டுக்குக் கொண்டுபோய் மேய் த்துக்கொண்டும், காந்தருவவேதத்திலே சொ ல்லியபடி செய்யப்பட்ட வேய்ங்குழலினாலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் சத்தசுரம்பொருந்த வா சித்து ஆன்மாக்களுக்குத் தமமுடைய இசை யமுதத்தைச் செவித்துவாரத்தினாலே புகட் டிக்கொண்டும் வருவார்.

கார்காலத்திலே ஒருநாள், பசுநிரைகள் சூழ்ந்துகொண்டு செல்ல, அவ்வானாயநாயனார் கையிலேகோலும் வேய்ங்குழலும்கொண்டு நி ரைகாக்கும்படி காட்டுக்குச்சென்றபொழுது, அவ்விடத்திலே மாலையைப்போல நீண்டபூங் கொத்துகளைத் தாங்கிக்கொண்டு புறத்திலே தாழ்கின்ற சடையினையுடைய பரமசிவனைப் போல நிற்கின்ற ஒருகொன்றை மரத்துக்குச் சமீபத்திலேதான்போய், அதைப்பார்த்துக் கொண்டு நின்று, அன்பினாலே உருகி இளகிய மனதையுடையவராகி, வேய்ங்குழலினாலே இசைநூலிலே விதித்தபடி ஸ்ரீபஞ்சாக்ஷரத் தை வாசித்தார். அவர் பஞ்சாக்ஷரத்தை அ மைத்து வாசிக்கின்ற அதிமதுரமாகிய இசை யினால், நல்ல பசும்புற்களை மேய்ந்திருந்த பசுக்கூட்டங்கள் அசைவிடாமல் அவரை அ டைந்து, உருக்கத்தினாலே மெய்ம்மறந்து நி ன்றன; பாலகுடித்துக்கொண்டிருந்த கன்று

களெல்லாம் குடித்தலைமறந்துவிட்டு, இசை கேட்டுக்கொண்டிருந்தன; எருதுகளும் மயிர் சிலிர்த்துக்கொண்டு அவர் சமீபத்திலவந்தன; ஆடுகின்றமயிற்கூட்டங்கள் ஆடுதலொழிந்து அவர்பக்கத்தை அடைந்தன; மற்றைப்பலவ கைப்பட்சிகளும் அவரருகிலேவந்து உருகுகி ன்றன; மாடுமேய்த்துக்கொண்டுநின்ற இடை யாகளெல்லாரும் தங்கள்தொழிலை மறந்துகா னத்தைக் கேட்டுக்கொண்டு நின்றார்கள்; வி ஞ்சையாகளும் சாரணாகளும் கின்னரர்களும் தேவாகளும் மெய்மமறந்து விமானங்களிலே நிக்கொண்டு வந்தாாகள்; பலவிருக்ஷங்களும் அசைவற்றிருந்தன.

அப்போது, பரமசிவன் பார்வதிதேவியா ரோடு இடபாரூடராய் ஆகாயமார்க்கத்தில் எ ழுந்தருளிவந்து "மெய்யன்பனே, நமமுடை ய அடியாாகள் உன்னுடைய வேய்ங்குழலி சையைக்கேட்குமபொருட்டு, நம்மிடத்துக்கு வருவாய்" என்று திருவாய் மலர்ந்தருளி, அவ்வானாய நாயனார் வேய்ங்குழல் வாசித்து க்கொண்டு பக்கத்திலேசெல்லத் திருக்கைலா யத்தை அடைந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

---

இலைமலிந்தசருக்க முற்றுப்பெற்றது.

மூன்றாவது

## மும்மையாலுலகாண்ட சருக்கம்.

# மூர்த்திநாயனார் புராணம்.

பாண்டிநாட்டிலே, மதுராபுரியிலே, வைசியர்குலத்தில், சிவபக்தியே ஒருவடிவெடுத்தாற்போலும் மூர்த்திநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தஸ்தலத்திலே எழுந்தருளியிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளுக்குத் தரிக்கும்பொருட்டுத் தினந்தோறும் சந்தனக்காப்புகொடுத்து வருங்காலத்திலே, சருணாடதேசத்து அரசன் சதுரங்கசேனைகளோடும் அம்மதுரைக்குவந்து, பாண்டியனோடு யுத்தஞ்செய்து வெற்றியடைந்து, அந்நகருக்கு அரசனாயினான். அவன் புறச்சமயிகளாகிய சமணர்களுடைய துர்ப்போதனைசத்தியினாலே ஆருகதமதத்திற் பிரவேசித்து, சிவனடியார்களுக்கு இடுக்கண்செய்வானாயினான். ஆயினும், மூர்த்திநாயனார் தாம்செய்யும் திருப்பணியைத் தவறாதுசெய்துவந்தார்.

அதுகண்டு, அரசன் அவரை ஆருகதமதத்திற் பிரவேசிப்பித்தற்கு உத்தேசித்து, அவருக்குப் பலகொடுஞ்செய்கைகளைச் செய்துவந்தும், அவர் தம்முடையதிருப்பணியினின்று

ம் சிறிதும்வழுவாதவராயினர். அதுபற்றிஅவ் வரசன் மூர்த்திநாயனார் சந்தனக்கட்டைவாங் குமிடங்களிலெல்லாம் அவருக்குக் கொடுக்க வொட்டாமற்றடுத்தான். அதனால், அவர்மன நொந்து"சற்சமயமாகிய சைவசமயத்தை வள ர்க்கின்றஅரசரைச்சாருங்காலம் எக்காலம்" என்று நினைந்துதுக்கித்து,பகற்காலமுழுதும் சந் தனக்கட்டை தேடித்திரிந்து, எங்குமபெறா மையால்,ஆலயத்துக்குவந்து,சுவாமிக்குத்தரி ப்பதற்கு தேய்த்துக்கொடுக்கும் பொருட்டு ச் சந்தனக்கட்டைக்கு இன்றைக்குமுட்டுவ ந்தாலும், அக்கட்டையைப்போலத் தேய்க் கத்தக்க கைக்கு ஒருமுட்டுமே இல்லை" என்று ஒருசந்தனக்கலலிலே தமமுடைய முழங்கை யைவைத்து, தோலும்நரம்பும் எலும்புமதே ய்ந்து குறையும்படி தேய்த்தார். தேய்த்தலு ம், உதிரம் ஒழுகி நாற்புறத்திலும் பெருகி, எ லும்பினுள்ளே இருக்கும் துவாரந்திறந்து மூ ளைவெளியிலேவந்தது. அப்பொழுது "அன் பனே! நீ பக்தியினது உறுதிப்பாட்டினால் இப் படிப்பட்ட செய்கையைச் செய்யாதே. உன க்கு இடுக்கணசெய்த கொடுங்கோலரசன்பெ ற்ற இந்தநாடுமுழுதையும நீயேகைக்கொண் டு, இவ்விடத்திலே அவனாலே உண்டான கொடுமைகள் அனைத்தையும நீக்கிப் பரிபால னஞ்செய்து, உன்னுடைய பணியை நடப்

பித்து,பின்பு நம்முடைய சிவலோகத்தை அடைதி" என்று ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. மூர்த்திநாயனார் அதைக்கேட்டு அஞ்சி, கையைத்தேய்த்தலை ஒழிந்து எழுந்தார். உடனே அவர் கையானது, தேய்ந்ததனாலுண்டாகிய ஊறு நீங்கி முன்போலாயிற்று.

அவ்விரவிலே அந்தக்கருநாடராஜன் இறந்து, மறுநாள் பிராதக்காலத்திலே மந்திரிமார்கள்கூடி, தகனசமஸ்காரஞ்செய்து, பின்னர், தங்கள் அரசனுக்குப் புத்திரரில்லாமையால், வேறொருவரை அரசராக நியமிப்பதற்கு, பட்டத்துயானையை விதிப்படி அருச்சித்து, அதை வஸ்திரங்கொண்டு கண்ணைக்கட்டிவிட்டார்கள். அவ்வியானை, அந்தப்பட்டணத்து வீதிகளிலே திரிந்துசென்று, சொக்கநாதசுவாமியுடைய ஆலயத்தின் கோபுரத்துக்கு முன்னே போயிற்று. மூர்த்திநாயனார் இரவிலே தமக்குச் செவிப்புலப்பட்ட அசரீரிவாக்கினால மனத்துயர் நீங்கி, "நமதுகடவுளாகியபரமசிவனுக்குத் திருவுளமாகில அடியேன் இந்த நாட்டை ஆளுதற்குடன்படுவேன்" என்று நினைத்துக்கொண்டு, திருக்கோயிற் புறத்திலே நின்றார். யானையானது, அவர் திருமுன்னே சென்று தாழ்ந்து, அவரை எடுத்து முதுகின்மேல் வைத்துக்கொண்டது. அதுகண்ட மந்திரிமார்கள் அவரை நமஸ்கரித்து, யானை

யின்முதுகினின்றும் இறக்கி, சிங்காதனத்தின் மேல இருத்தி, முடிசூட்டுவதற்கு வேண்டும் மங்களகிருத்தியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். அப்பொழுது, மூர்த்திநாயனார் அவர்களைநோக்கி, "ஆருகதமதம நீங்கிச் சைவசமயம விருத்தியாயின நான் இந்நாட்டை ஆளுதற்கு உடன்படுவேன்" என்றார். அதைக் கேட்ட மந்திரிமார்களும், சாஸ்திரபரிசயமுள்ளபிறரும் அவரைவணங்கி நின்று, சுவாமி! தேவரீருடைய ஆஞ்ஞையின்படியே யன்றி அதற்குமாறாக யாவர்செய்வார்கள்? என்று சொன்னார்கள். பின்பு மூர்த்திநாயனார், நான் அரசாள்வேனாகில், எனக்கு விபூதியே அபிஷேகத்திரவியமும், உருத்திராக்ஷமே ஆபரணமும், சடாமுடியே கிரீடமும் ஆகுக என்றார். அவர்களதற்கு, தேவரீர் அருளிச்செய்தபடியே ஆகுக என்றுசொல்லி, மகுடாபிஷேகத்திற்கு வேண்டும் செய்கைகளைச்செய்து நிறைவேற்றினார்கள்.

மூர்த்திநாயனார், தாம் சொல்லியபடியே சடைமுடிதரித்து, ஆலயத்திற்சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கிக்கொண்டு, யானையின்மேல் ஏறி இராஜமாளிகையைச் சேர்ந்தார். அங்கே அத்தாணிமண்டபத்திலே இரத்தின சிங்காசனத்தின்மேலே தவளச்சத்திர நிழலிலேவீற்றிருந்துகொண்டு, பொய்ச்சமயமாகிய

ஆருகதம் நீங்கவும், மெய்ச்சமயமாகிய சைவசமயமே எங்கும் விளங்கவும், பெண்ணாசையென்பது சிறிதுமின்றி, நெடுங்காலம விபூதி உருத்திராக்ஷம், சடைமுடியென்கிற மூன்றினாலும அரசாண்டு, பின்புசிவபெருமானுடைய திருவடி நிழலே அடைநதார்

திருச்சிற்றம்பலம.

## முருகநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருப்புகலூரில், பிராமணகுலத்தில, சிவபத்தியிற்சிறநதவராகிய முருகநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தினந்தோறும சூரியோதயத்துக்குமுன் எழுநது ஸ்நானம்பணணிச் சநதியாவநதனம் முடித்துக்கொண்டுபோய், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, என்கிற நால்வகைப்பூக்களில உரியபூக்களைக்கொய்து திருப்பூங்கூடைகளிலே இட்டுக்கொண்டுவநது, தனியிடத்திலிருந்து, பலவகைப்பட்ட திருமாலைகள் செய்து, அந்தஸ்தலத்திலுள்ள வர்த்தமானீச்சரம் என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குச்சாத்தி அருச்சனைசெய்தும், திவ்வியமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்தும் வருவார்.

இப்படிச்செய்து வருங்காலத்திலே, திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குச் சிநே கராகிய பெருமையையும் பெற்றார். பெற்ற அம்முருகநாயனார் அந்தத்திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருமணத்திலே தம முடைய சிவபூசாபலத்தினாலேபோய் பரமசி வனுடைய திருவடிகிழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## உருத்திரபசுபதிநாயனார்புராணம்.

சோழநாட்டிலே, திருத்தலையூரில், பிரா மணகுலத்தில, பரமசிவனுடைய திருவடிக ளிலே பதிந்த அன்பே தமக்குச்செல்வமென க்கொண்ட பசுபதியென்பவர் ஒருவர் இருந் தார். அவர் தாமரைத்தடாகத்தில் அகோ ராத்திரம் கழுத்தளவினதாகிய தண்ணீரிலே நின்றுகொண்டு, இரண்டுகைகளையும சிரசின் மேலேறக்குவித்து, பரமசிவனுடைய திருவ டிகளைமறவாதசிந்தனையோடு வேதபுருஷனு க்குக் கண்ணாகிய ஸ்ரீருத்திரத்தை ஓதி, சில நாட்சென்றபின் சிவபதத்தை யடைந்தார், அதனால் அவர்பெயர்உருத்திரபசுபதிநாயனார் என்றாயிற்று.

திருச்சிற்றம்பலம்.

# திருநாளைப்போவார்நாயனார்

## புராணம்.

சோழமணடலததிலே, கொள்ளடநதியின் பக்கத்துள்ள மேற்காநாட்டிலே, ஆதனூரில, புலையர்குலத்தில, நந்தனார் என்பவா ஒருவர் இருந்தார. அவா பரமசிவனுடைய திருவடிகளையேயன்றி மற்றொன்றையும மறநதும நினையாதவா, அவ்வூரில, தமக்குவெட்டிமைக்காக விடபபட்டிருககின்ற மானியமாகிய நிலத்தினவிளைவினாலே சீவனஞ்செய்துகொணடு, தாஞ்செய்யவேண்டும தொழிலை நடததுகின்றவா; சிவாலயங்கடோறும, பேரிகைமுதலாகிய ஒருமுகக் கருவிகளுக்கும், மத்தளமுதலாகிய இருமுகக் கருவிகளுக்கும், தோலும வாரும், வீணைக்கும யாழுக்கும் நாமபும், அருச்சனைக்குக் கோரோசனையும கொடுக்கின்றவா; ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொணடு, அன்பின்மேலீட்டினால் கூததாடிப்பாடுகின்றவா. அவர் ஒருநாள், திருப்புன்கூரிலே போய், சுவாமி தரிசனம்பணணித் திருப்பணிசெய்வதற்கு விரும்பி, அங்கேசென்று திருக்கோயில வாயிலிலேநின்றுகொணடு, சுவாமியை நேரேதரிசித்துக் கும்பிடவேண்டும என்றுநினைத்தார். சுவாமி அவருடைய விருபபத்தின்படியே தமக்கு முன்னிருக்கின்ற இடபதேவரை விலகும்படிச

செய்து, அவருக்குக் காட்சிகொடுத்தருளி ஞா. அநதஸ்தலத்திலே, ஒருபள்ளத்தைக்க ண்டு, பெரியகுளமாகவெட்டி தமமுடைய ஊ ருக்குத்திருமபிஞர் அவா இப்படியே பலஸ் தலங்களுக்குமபோய் வணங்கித் திருபபணி செய்துவநதாா.

ஒருநாள், சிதமபரஸ்தலத்திற்குப போக வேணடுமெ என்று ஆசைகொணடு, அவ்வாசை மிகுதியிஞலே நான் "நாளைக்குபபோவேன்" என்ருர். இப்படியே, "நாளைக்குபபோவேன் நாளைக்குப்போவேன்" என்று அநேகநாட் கள் கழிததார். அதஞல் அவருக்குத்திருநா ளைப்போவாா என்னுமபெயா உண்டாயிற்று. ஒருநாள், அவர் சிதம்பரதரிசனம் பண்ணவே ணடும் என்னும் ஆசைபிடித்துந்துதலால், தம் முடைய ஊரினினறும் பிரஸதானமாகி, சித மபரத்தின் எலலேயை அடைநதாா. அத்திரு ப்பதியைச்சுற்றிய திருமதிலவாயிலிலே புகு ந்து, அங்குள்ளபிராமணாவீடுகளிலே ஓமஞ் செய்யப்படுதலேக்கண்டு, உள்ளே போதற்கு அஞ்சி அங்கேநமஸ்கரித்து, அத்திருவெல் லேயை வலஞ்செய்துக்கொண்டு போவார். இப்படி இராப்பகல் வலஞ்செய்து, உள்ளே போகக்கூடாமையை நினைந்து வருந்துகின்ற திருநாளைப்போவார் "சபாநாயகரை எப்படி தரிசிக்கலாம? இந்த இழிந்தபிறப்பு அதற்குந்

தடைசெய்கின்றதே" என்று துக்கத்தோடும் நித்திரைசெய்தார். சபாநாதர் அவருடைய வருத்தத்தைநீக்கி அவருக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு, அவருக்குச்சொர்ப்பனத் திலே தோன்றி "நீ இந்தப் பிறப்புநீங்கும்படி நெருப்பிலேமூழ்கி எழுந்து, பிராமணர்களோ டும் நம்முடையசந்நிதானத்தில வருவாய்" என்று அருளிச்செய்து, தில்லைவாழந்தணர் களுக்கும் சொர்ப்பனத்திலேதோன்றி, அந்தத் திருநாளைப்போவார் பொருட்டு, நெருப்பை வளர்க்கும்படி ஆஞ்ஞாபித்து மறைந்தருளி னார். தில்லைவாழந்தணர்கள் எல்லாரும விழி த்தெழுந்து, திருக்கோயில்வாயிலிலேவந்து கூடி, "சபாநாயகர் ஆஞ்ஞாபித்தபடி செய் வோம்" என்றுசொல்லி, திருநாளைப்போவா ரிடத்திலேசென்று, "சபாநாயகருடைய ஆஞ் ஞையினாலே இப்பொழுது உமபொருட்டுநெ ருப்பு வளர்க்கும்படிவந்தோம்" என்றார்கள். அதைக்கேட்ட திருநாளைப்போவார் "அடி யேன் உய்ந்தேன்" என்று சொல்லி வணங்கி னார். பிராமணர்கள் தென்மதிற் புறத்திலே கோபுர வாயிலுக்குமுன்னே ஒருகுழியில் நெருப்புவளர்த்து, அதைத்திருநாளைப்போவா ர்க்குப் போய்த்தெரிவித்தார்கள். திருநாளை ப்போவார் அந்நெருப்புக்குழியை அடைந்து, சபாநாயகருடைய திருவடிகளை மனதிலே

தியானம்பண்ணி, அதனை வலஞ்செய்து கும்பிட்டுக்கொண்டு, அதனுள்ளேபுகுந்தார். புகுந்த நாயனார் அந்தத்தேகத்தை ஒழித்து, புண்ணியமாகிய பிராமணமுனி வடிவங்கொண்டு, உபவீதத்தோடும் சடைமுடியோடும் எழுந்தார். அதுகண்டு, தில்லைவாழந்தணர்களும் மற்றைச்சிவபக்தர்களும் அஞ்சலிசெய்து களிப்படைந்தார்கள். திருநாளைப்போவார் அவர்கள் உடன்செல்லச்சென்று, கோபுரத்தை அணுகி, அதனை நமஸ்கரித்து எழுந்து, உள்ளேபோய், கனகசபையை அடைந்தார், பின் அவரை அங்குநின்ற பிராமணர் முதலியோர் யாவரும் காணாமையால், ஆச்சரியங்கொண்டு ஸ்தோத்திரஞ்செய்தார்கள். சபாநாயகர் திருநாளைப்போவாருக்குத் தம்முடைய ஸ்ரீபாதங்களைக் கொடுத்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

---

# திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

தொண்டைமண்டலத்திலே, காஞ்சீபுரத்தில், ஏகாலியர்குலத்தில், சிவனடியார்களுடைய திருக்குறிப்பையறிந்து அவர்களுக்குத் தொண்டுசெய்கின்றமையால் திருக்குறிப்புத்

தொண்டர் என்னும் பெயர்பெற்ற ஒருபெரியவர் இருந்தார். அவர்மிகுந்தவிருப்பத்தோடு சிவபத்தர்களுக்கு வஸ்திரம் ஒலித்துக்கொடுத்து வருங்காலத்தில், ஏகாம்பரநாதசுவாமி குளிர்காலத்திலே ஒருசிவபத்தர் வேடங்கொண்டு, அழுக்கடைந்தகந்தையுடன் அவரிடத்திற்சென்றார்; திருக்குறிப்புத்தொண்டர் அவரைக்கண்டு எதிர்கொண்டுவணங்கி, அவருடையகுறிப்பையறிந்து, "உமகந்தையைத் தந்தருளும்; ஒலித்துத்தருகின்றேன்" என்றார். சிவபத்தர் வேடங்கொண்ட கடவுள், "இந்தக்கந்தையை, குளிர்மிகுதியினால் வருத்தமுறுகின்றபடியால, நான்கைவிடுதல கூடாது. அஸ்தமானத்திற்கு முன்தருவீராயில கொண்டுபோய்ச் சீக்கிரம ஒலித்துக்கொண்டு வாரும்" என்றார். திருக்குறிப்புத்தொண்டர், "அடியேன்தாழ்க்காமல ஒலித்துவந்து தருகின்றேன், தந்தருளும்" என்றுசொல்ல; சுவாமி அக்கந்தையை அவர்கையிற் கொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டர் அதைவாங்கிக்கொண்டு ஒருகுளத்திற்சென்று, முன்சிறிதழுக்குப்போக்கி வெள்ளாவியில்வைத்து, பின ஒலிக்கப்புகுந்தார்.

அப்பொழுது, பரமசிவனுடைய திருவருளினாலே நற்பகலொழிந்து, பிற்பகலபோலத் தோன்றும்படி மேகங்கள் இருண்டு ஆகாய

வெளியெல்லாம் மறைத்து மழைபெய்தது அதுகண்டு, திருக்குறிப்புத்தொண்டர் சிவப த்தருக்குத்தாம் வாக்குசெய்ததை நினைந்து, "இனிநான்யாதுசெய்வேன்" என்று கவலையுற்று, விரைவிலே மழைவிடவும் கூடுமென்று அங்கேநின்றார். அதுவிடவில்லை. பின், இராக் காலம் வரத்திருக்குறிப்புத்தொண்டர், "குளிரினாலே திருமேனி நடுங்குகின்ற சிவபத்தரு க்கு, நான்செய்யவிரும்பிய பணிவிடை, ஐயையோ! தவறிப்போயிற்றே" என்று கீழே விழுந்தார். "மழைவிடாது, சிவபத்தர் சுட்டிய காலமோ நீங்கிற்று. முன்னேயே ஒலித்துவீட்டிலே காற்றினால உலரும்படி கட்டிவிட்டேனுமில்லை. சிவபத்தரது திருமேனிகுளிரினால வருந்தும்படி தீங்குசெய்த சிறியேனுக்கு இனியிதுவேசெயல" என்று எழுந்து, வஸ்திரங்களைப்புடைக்கின்ற கற்பாறையிலே தமதுசிரசைமோத; சருவவியாபகராகிய பரமசிவனுடைய திருக்கரம் அந்தக்கற்பாறையின்பக்கத்திலே தோன்றி, அவரைபபிடித்துக் கொண்டது. ஆகாயத்தினின்று சொரிந்த நீர் மழைநீங்கிப் பூமழைபொழிந்தது. பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய்க் காட்சிதந்தருளினர் திருக்குறிப்புத்தொண்ட நாயனார்மிகுந்த அன்பினோடுவிழுந்து நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலிசெய்துகொண்டு நின்றார்.

பரமசிவன் அவரை நோக்கி, "உனது பக்திவலிமையை மூவுலகத்தார்களுக்குந் தெரிவித்தோம். இனி நீ நமமுடைய உலகத்தையடைந்து பேரின்பமபெற்றுவாழ்ந்திரு" என்றுதிருவருள்புரிந்துசென்றருளினர்.

திருச்சிற்றம்பலம்.

## சண்டேசுர நாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருச்சேய்ஞலூரில், பிராமணகுலத்தில், காசிபகோத்திரத்தில், எச்சதத்தன் எனபவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அவன மனைவியாகிய பவித்திரை வயிற்றில, விசாரசருமர் என்பவர் திருவவதாரஞ்செய்தார். அவருக்கு, ஐந்து வயதிலே வேதங்களையும் பூர்வசன்மத்து அறிவுத்தொடர்ச்சியினலே கற்பிப்பாரின்றித் தாமே அறியுமறிவு உண்டாயிற்று. தந்தை தாயர்கள் அவருக்கு ஏழுவயதிலே உபநயனச்சடங்குசெய்து, தகுந்த ஆசாரியர்களைக்கொண்டு வேதாத்தியனஞ்செய்விப்பிக்கத் தொடங்கினர்கள். அவ்வாசாரியர்கள் வேதங்களையும் பிறகலைகளையும் ஓதுவித்தற்கு முன்னமே, அவ்விசாரசருமருக்குத் தாமே அறிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்ற புத்தியின்றிற

த்தைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். பாலி யதசையிலே சான்றோர்க்குரிய குணத்தை அடைந்திருக்கின்ற அவ்விசாரசருமா, இம மானுடப்பிறவி பெறுதற்கரியது என்பதும், அப்படியாகில, இப்பிறவியிற்றானே சிவபக்தி செய்யவேண்டும் என்பதும,இன்னும் சிலநாட் சென்றபின் செய்குவமெனின், இப்பிறவி நீங் குமவதி அறிதற்கரியது என்பதும், சந்தேக விபரீதமறத் துணிந்துகொணடார். அந்த ய தாரத்தமாகிய துணிவு தோன்றவே, அவருக் குச் சிவபெருமானிடத்தே மெய்யன்பு கலை தோறும் வளர்வதாயிற்று.

ஒருநாள், அவர்தமமோடு அத்தியயனஞ் செய்கின்ற பிள்ளைகளோடு, அவ்வூரவர்களு டைய பசுநிரைகளுடன் கூடிச்சென்றபொ ழுது, ஒரிற்றுப்பசு மேய்ப்பானுகிய இடைய னைக் குத்தபபோயிற்று. அவ்விடையன் சிறி தும பாவத்துக்கு அஞ்சாமல் அப்பசுவைக் கோலினுல் அடித்தான். மெய்யறிவுடைய அவ்விசாரசருமர் அதுகண்டு அவனைத்தடுத் துநின்று, பசுக்கள் சிவலோகத்தினின்றும் பூமி யில்வந்த வரலாற்றையும், அவைகளின் உறு ப்புகளிலே தேவாகளும் முனிவர்களும் தீர் த்தங்களும இருத்தலையும், அவைதரும பஞ் சகவ்வியங்கள் சிவபிரானுக்கு அபிஷேகத் திரவியமாதலையும், சிவசின்னமாகிய விபூதி

க்குமூலம அவற்றின் சாணமாதலையும் சிந்தி த்து, அப்பசுக்களைத்தாமே மேய்க்கும படி விரும்பி, அவ்விடையனைநோக்கி, இபபசு நிரையை நீமேய்க்கவேண்டியதில்லை, நானே மேய்ப்பனென்று விசாரசருமா அன்றுமுதல பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராமணர்களி ன் சம்மதிபெற்று, தினநதோறும் மண்ணியா ற்றங்கரையில் இருக்கின்ற காடுகளிலும், வய லோரங்களிலும, புல்லுநிறைநதிருக்கும இட த்திற்கொண்டுபோய், வேணடுமட்டும மேய விட்டும, தண்ணீரூட்டியும, வெய்யிலெரிக் குமபோது நிழலிருக்குமிடங்களிலே செலுத் தியும, நனறாகக்காபபாற்றி; சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு, அஸ்தமனத்துக்கு முன் அவ்வப்பசுக்களை அவரவர்வீட்டுக்கு ஒட்டி க்கொண்டுபோய் விட்டு, தமமுடைய வீட் டுக்குப்போவார்.

இப்படிச்செய்யுங் காலத்திலே, பசுநிரைக ளெல்லாம் அழகோடு மிகப்பெருகி, போசன பானங்களிலே குறைவில்லாமையால், மகிழ் ச்சியடைந்து இராப்பகலாகமடிசுரந்து பாலை ப்பொழிந்தன. பிராமணர்கள் நித்திய ஓமா குதியின் பொருட்டு விட்டிருக்கின்ற தங்கள் பசுக்கள், விசாரசருமர் மேய்க்கத் தொடங்கி யபின், முன்னிலும் அதிகமாகக்கறக்கக்காண் கையால், மிகுந்தசந்தோஷத்தை அடைந்தா

ரகள் பசுக்கள் எல்லாவகையுமுபசரிப்பினும் அளவிறந்தகளிப்பை அடைந்து, வீட்டில் கட்டப்பட்டிருக்கின்ற தங்கள் கன்றுகள்பிரிந்தாலும் சிறிதும் வருத்தமுறாதவைகளாகி, மிகுந்த அன்போடுதங்களைமேய்க்கின்ற விசாரசருமாசற்றாயினும் பிரிவாராகில், அப்பிரிவாற்றாமல் தாய்போல உருகி, அவர்சமீபத்திலேசென்று கனைத்து, மடிசுரந்து ஒருவராகறக்காமல்தாமே பாலபொழியும். அதுகண்ட விசாரசருமர், அப்பால் பரமசிவனுக்குத் திருமஞ்சனமாந்தகுதியுடைமையை நினைத்தார். நினையவே, அவருக்குச் சிவார்ச்சனையிடத்தே பேராசைதலைப்பட்டது

உடனே, அவர், மண்ணியாற்றின் கரையிலிருக்கின்ற ஒருமணற்றிட்டையில் திருவாத்திமரத்தின் கீழே மணலினால் ஒரு சிவலிங்கங் குவித்து, திருக்கோயிலும், கோபுரமும், மதிலும் வகுத்து, திருவாத்திப்பூ முதலிய புஷ்பங்களும், பத்திரங்களும் பறித்துத்திருப் பூங்கூடையிலிட்டுக்கொண்டுவந்து வைத்துவிட்டு, புதியகுடங்களைவாங்கிக்கொண்டுவந்து, கறவைப்பசுக்கள் ஒவ்வொன்றிடத்திலும் சென்று, முலையைத்தீண்டினார். அவைகள் கனைத்துப்பாலைப் பொழிந்தன. பாலினாலே நிறைவுற்ற அக்குடங்களைக் கொண்டுபோய் தாம் முன்பமைத்த ஆலயத்திலே வைத்துப் பத்

திர புஷ்பங்களால் சுவாமியை அருச்சித்து, பாலினுல் அபிஷேகமசெய்தார். பரமசிவன் அவ்விலிங்கத்தி னின்று, அவ்விசாரசருமர் அன்போடுசெய்யும அருச்சனையைக்கொணடருளினுர். விசாரசருமா, சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞ்சனம முதலிய பொருள்களுள் கிடையாதவைகளை மானசமாகக் கிடைத்தனவாகக் கொண்டு நிறைவுசெய்து, விதிப்படி அருச்சித்து வணங்கிவந்தார். பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டு, அவ்விசாரசருமர் கொண்டுவரும குடஙகள் நிறையப பாலைச்சொரிந்தும, பிராமணர்க்கும் முன்போலக் குறைவுதீரப் பாலைக்கொடுத்துவந்தன.

இப்படி, நெடுநாளாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுப்போலத் தோன்றுகின்ற சிவார்ச்சனையைச் செய்துவருமபொழுது, அதைக் கணட ஒருவன், அதின் உண்மையை அறியாதவனுகி, அதை அவ்வூர்ப் பிராமணர்களுக்குத்தெரிவித்தான். அவர்கள் அதைச் சபையாருக்குத் தெரிவிக்க, சபையார் எச்சதத்தனை அழைத்து, பிராமணர்கள் ஓமாகுதியின் பொருட்டுப் பால்கறக்கும் பசுக்களையெல்லாம் உமமுடைய புத்திரனுகிய விசாரசருமன் அன்புடனே மேய்ப்பவன்போலக் கொண்டுபோய்ப் பாலைக்கறந்து விருதாவாக மணலின்மேல சொரிந்து விளையாடுகிறுன் என்றுர்

கள். எச்சதத்தன அதைக்கேட்டு, அகுற்றத்தை நீங்கள் பொறுத்துகொள்ளலவேண்டு" மென்றுகுறையிரந்து வணங்கி, அச்சபையாரிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு, வீட்டுக்குப்போய்விட்டான்.

மறுநாட்காலேயில், அந்தச்சமாசாரத்தைச்சோதித்தறிய விரும்பி விசாரசருமர் அறியாதபடி, அவர்பின்னேசென்றான். விசாரசருமா பசுக்களை ஒட்டி மண்ணியாற்றின் மணற்றிட்டையிலே கொண்டுபோனதைக்கண்டு, எச்சதத்தன் அருகில இருந்த ஒரு குராமரத்தில் ஏறி ஒளித்திருநதான. விசாரசருமர் ஸ்நானம்பண்ணி, முன்போல மணலினுலே திருக்கோயிலுஞ் சிவலிங்கமுஞ்செய்து, பத்திர புஷ்பங்கள் பறித்துக்கொண்டுவந்து, பின்பு பாற்குடங்களைக் கொண்டுவந்து தாபிதது, மிக்க அன்பினேடு பூசைக்கு ஆரமபித்து, சிவலிங்கத்துக்குப் பத்திர புஷ்பங்களைச்சாத்தி, பாற்குடங்களை எடுத்து அபிஷேகம் பண்ணினர். குராமரத்தில் ஏறியிருந்த எச்சதத்தன் அதைக்கண்டு, மிகுந்த கோபங்கொண்டு, இறங்கிப்போய்த் தன்கையிலிருந்த தண்டினல் அவ்விசாரசருமருடைய திருமுதுகிலே அடித்துக் கொடுஞ்சொற்களைச் சொல்ல, அவருடைய மனம் பூசையிலேயே முழுதும் பதிந்து கிடந்தபடியால், அது அவரு

க்குப் புலப்படவில்லை. பின்னும எச்சதத்தன் கோபங்கொண்டு பல முறையடிக்க, விசாரசருமர் அவ்வடியாலாகிய வருத்தந்தோன்றப் பெருதவராகி, அபிஷேகத் திருத்தொண்டினாறுந் தவருதிருந்தார். அவருடைய உள்ளன்பை அறியாத, எச்சதத்தன் மிகக்கோபித்துத் திருமஞ்சனப பாற்குடத்தைக்காலினல் இடறிச்சிந்தினன். உடனே விசாரசருமர் அதைக்கண்டு, அதுசெய்தவன் பிதாவும் பிராமணனும குருவுமாகிய எச்சதத்தனென்பதை அறிந்தும, அவன் செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால், அவன் காலைத்துணிக்கக் கருதித் தமக்குமுன் கிடந்த ஒரு கோலையெடுக்க அது மழுவாயிற்று. அதினலே, அவன் காலகளைவெட்டினர். சிவபூசைக்குவந்த அவ்விடரை நீக்கினவராகிய விசாரசருமர் முன்போல அருச்சனைசெய்ய, சிவபெருமான் உமாதேவியாரோடும இடபாரூடராய்த் தோன்றியருளினர்.

விசாரசருமர், அதுகண்டு மனங்களித்து விழுந்து நமஸ்கரித்தார். பரமசிவன் அவரைத்தமமுடைய திருக்கரங்களினல் எடுத்து "நீ நம்பொருட்டு உன்னைப்பெற்ற பிதாவை வெட்டினய்; இனி உனக்கு நாமே பிதா" என்று அருளிச்செய்து, அவரை அணைத்து, அவருடைய திருமேனியைத்தடவி உச்சிமோந்தரு

ளினார். சிவபிரானுடைய திருக்கரத்தினாலே தீண்டப்பட்ட அவ்விசாரசருமருடைய திருமேனி சிவமயமாகித் திவ்வியபிரகாசத்தோடு விளங்கிற்று. பரமசிவன் அவரை நோக்கி, "நாமநம்முடைய தொண்டர்களுக்கெல்லாம உன்னைத் தலைவனாக்கி, நாம ஏற்றுக்கொண்ட அமுதப்பரிவட்டமும புஷ்பமும உனக்கேகிடைக்கும்படி சண்டேசுரபதத்தைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்து, தமமுடைய சடையிலே தரித்திருக்கின்ற கொன்றைமாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினார். அவ்விசாரசருமர், சமஸ்தரும ஆரவாரிக்கவும், எவ்விடத்தும புஷ்பமழைபொழியவும, வேதங்கள் கோஷிக்கவும, நாலுவித வாத்தியங்கள் முழங்கவும், சைவசமயம் நிலைபெறும்படி பரமசிவனைக் கும்பிட்டு, அவராலே தரப்பட்ட சண்டேசுரபதத்தை அடைந்தார்.

எச்சதத்தன் சிவத்துரோகஞ்செய்தும், சண்டேசுரநாயனாராலே தண்டிக்கப்பட்டமையால், அக்குற்றம நீங்கிச்சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

மும்மையாலுலகாண்டசருக்கம்
முற்றுப்பெற்றது.

---

நான்காவது

## திருநின்றசருக்கம்.

# திருநாவுக்கரசுநாயனார்புராணம்.

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரில்வாழும வேளாளாகுலத்தில், குறுக்கையாகுடிவிளங்கச் செலவப்பெருக்குடன வாழ்கின்றபுகழனா செய்த தபோவிசேடத்தால, அவர் பத்தினியாராகிய மாதினியார் வயிற்றினிடமாகத் திலகவதியார் பிறந்தபின் திருவவதாரஞ்செய்து, மருணீக்கியாரென்னும பிள்ளைத்திருநாமமபெற்று, கலைகள்பயின்று வளருநாளில, திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதுசெல்ல, வேளாணகுலத்தில் புகழனா மரபுக்கேற்ற மரபும, சிவநேச முள்ளவரும, சோழராஜனிடத்தில் சேனாதி பத்தியத்தொழிலுடையாருமாகிய கலிப்பகை நாயனாரென்பவருக்குத் திலகவதியாரை மணஞ்செய்வித்தற்குச் சில முதியோர்வந்துபேசப புகழனார் சமமதித்தனா. அச்செய்தியைவந்த முதியோர்கலிபபகையாருக்குத் தெரிவிக்க, அவர் மிக்க உள்ளக்களிப்போடு விவாகஞ்செய்துகொள்ள எத்தனமாயிருக்குமபோது, வடதேசத்துப் பகைமன்னவருடன் போர்புரியும்படி வேந்தனேவ, கலிப்பகையார் சேனையுடன்போய்,

அந்தமாற்றரசருடன் நெடுநாள் போர்செய்துக்கொண்டிருந்தனர். அவரங்ஙனமிருப்ப, புகழனாரானவர் தொன்றுதொட்டு வருகின்ற நிலையாமை வினைவயத்தால், இவ்வுலகை நீத்துச்சுவர்க்கலோகஞ் சேர்ந்தனர். அவர்பத்தினியாராகிய மாதினியாரும், சுற்றத்தாரையு மக்களையுந் துகள்போலமதித்து, கற்புநெறிவழுவாமல தங்கணவருடன் பிரிவற்று வாழக்கருதி சுவர்க்கலோகம அடைந்தார். இவ்வாறு தாய்தந்தையர் சுவர்க்கஞ்சேரவே திலகவதியாரும், மருணீக்கியாரும், உறவினரும் புலம்பித்துயரக்கடலிலாழ்ந்து, பின்னர், சுற்றத்தார் தேற்ற ஒருவாறு துயர்நீங்கி, மாதாபிதாக்களுக்குச்செய்யவேண்டிய கடனை மருணீக்கியார்செய்து நிறைவேற்றினர்.

இவ்வாறிருக்க, போர்விளைத்துக்கொண்டிருந்த கலிப்பகையார், மாற்றாரைவென்று புகழ்கொண்டு வீரசுவர்க்கஞ் சேர்ந்தனர். அச்செய்தியை ஊரார் பேசிக்கொள்ளத் திலகவதியாரறிந்து, என் தாய்தந்தையர், அவருக்கென்னைமணஞ்செய்விக்கும்படி வாக்களித்திருந்த முறைமையால், என்னுயிரை போர்வென்று வீரசுவர்க்கமடைந்தவருடன் சேர்ப்பேனென்று மனந்துணிய, மருணீக்கியாரஃதறிந்து, தமைக்கையார் பாதத்தில்வீழ்ந்து, மிகவும்புலம்பித் தாய்தந்தையரை வணங்கிக்

கொண்டிருந்ததுபோல், அவர்களுடைய தே கவியோகத்துக்குப்பின், உம்மை வணங்கிக் கொண்டிருக்கலாமென்கிற எண்ணத்தாலிது காறும உயிர்தாங்கி நின்றேன். இப்போது உம்முடைய எண்ணம இவ்வாறாயின்,உமக்கு முன் நான் உண்மையாய் சுவர்க்கம் புகுவேன் என்று புலம்பினர். அதைக்கண்ட திலகவ தியார் தமமுடைய தமபியாரிடத்திலுள்ள அன்புமேலீட்டால், தாமநினைத்தவாறு செய் யாமல், உயிர்தாங்கித் தவமுள்ளவரா யிருந் தனர்.

இங்ஙனமிருக்க, மருணீக்கியார் இவ்வுலக வாழ்க்கை அநித்தியமுள்ளதென் றுணர்ந்து, தருமவிஷயங்களில் மனஞ்செலுத்திக்கொண் டிருந்து, பின்னுமுத்திநெறியறிய வேண்டுமெ ன்று கருத்துண்டாகச் சமயசாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்யத் தொடங்கும்போது, சை வசமயத்தினுண்மையை உணரும்படி சிவன ருளோராமையால்,சமண்சமயத்தைச்சார்ந்து அச்சமயசாஸ்திரங்களை யாராய்ந்து, அவர்க ளில் மேம்பாடெய்தித் தருமசேனரென்னும் பெயரும்பெற்றிருந்தனர். இவர் இங்நிலைமை யுடையவராகிவிடவே, திலகவதியார் கெடில நதிக்குவடகரையிலுள்ள, திருவதிகை வீரட் டானம் என்னும் திருப்பதியிற் சேர்ந்து, சிவ பெருமானைவணங்கி, சிவசின்னந்தாங்கி, ஆல

யத்தில், திருவலகு, திருமெழுக்கிட்டு,திருமாலைதொடுத்து திருத்தொண்டு செய்திருக்கையில, தமமுடைய தமபியார பரசமயமபுகுநதை நினைத்துவருந்தி, வீரட்டானேசுவரரைநோக்கி,ஐயனே! என்னுடன்பிறந்தானைப் பரசமயப்படு குழியினின்று மெடுத்து, ஆட்கொண்டருளலவேண்டுமென்று பலமுறையும் விண்ணப்பஞ்செய்து கொணடிருக்க, ஒருநாள்வீரட்டானேசுவரர், திலதவதியார் சொாபபனத்திலெழுநதருளி, உனனுடன்பிறந்தான் முன்னம வாகீசனென்னும பெயருள்ள முனிவன, அப்போதே நமமைசசேரும்படிதவங்கிடநது ஒருகாரணத்தாலிங்கு உற்பவமாயினன், ஆதலால, இப்போதவனுக்குச் சூலைநோயுண்டாக்கியது காரணமாக நாம ஆட்கொள்கின்றோம நீதுயரங்கொள்ள வேண்டியதில்லை யென்று அருள்செய்து, அவ்வண்ணமே தருமசேனா வயிற்றில சூலைநோய்பொருந்தும்படி அருள் செய்தவளவில், அந்நோயானது, அவா வயிற்றினகண் மிகவுங்கொடுமையுடனடைந்து, குடலைமுறுக்கி வருத்தவே தாளாமல் நடுங்கிப பாழியறையில்வநது வீழ்ந்து, தாம சமணசமயத்தில் கற்றுள்ள மந்திரங்களாற்றடுத்திடவும, அதுசிறிதுங்குறையாமல்மேன்மேலுமதிகரிக்க,இனியென்செய்வோமென வருந்தினர். அதைக்கேட்ட சமணர்களும், தங்கள்கையிலு

ள்ள கமண்டலநீரை மந்திரித்துக் குடிப்பித் தும், தணியாமையைக்கண்டு, தங்கள்கையி லிருக்கு மயிலிறகின் குஞ்சத்தினால் உடன்மு ழுதும தடவவும, அந்நோய் முன்னிலுமதிகரி த்தமையால், தருமசேனா தொலையாவருத்த முற்று, திலதவதியாருக்குச் சொல்லுமபடி தமமுடைய ஏவலாளிகளிலொருவனை யனு பப, அவன்போய்த் தெரிவித்ததற்குத் தில வதியார் யானங்கேவரேனென்று சொலல, அதுகேட்ட தருமசேனர், அன்றிரவிற்புறபப ட்டு ஒருவருமறியாமல் திருவதிகை சோந்து திலதவதியாரைக்கணடுவணங்கி, அன்னையே! இச்சூலைநோய் தீரும்படியநுக்கிரகஞ் செய் தல்வேண்டுமென்று புலம்புவதைக்கண ணு ற்று மனஞ்சகியாராய், வீரட்டானேசுவரர் திருவருளை நினைந்து தொழுது, தம்பியாரை நோக்கி யெழுந்திருமென்றார்.

அவர் எழுந்து நடுங்கிநிற்கும்போது, இது வீரட்டானேசுவரர் திருவருளால் வந்துநேரி ட்டது; ஆகலின், அவரைத் தொழுதுபணி செய்வீரென்று கட்டளையிட்டுச் சுவாமிசந்நி தானத்துக் கழைத்துக்கொண்டு போமபொ ருட்டுப் பஞ்சாக்ஷரம் ஓதி, விபூதிபிரசாதங் கொடுத்துத் தரித்துக்கொள்ளச்சொல்லித் தி ருப்பள்ளியெழுச்சிக்காலத்தில, தமபியாரை யழைத்துக்கொண்டுபோக, மருணீக்கியார

ஆலயத்தைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கிச் சுவாமியினது திருவருளால் திருப்பதிகம் ஓதும்படி உணாச்சியுண்டாக, "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என்னுந்திருப்பதிகம் ஓதினார். அவ்வாறோதின மாத்திரத்தில், அந்நோய் முற்றுந்தீரவே, வீரட்டானேசுவரருடைய பெருங்கருணையை நினைந்து ஆனந்த பரவசமுற்றிருக்கும்போது, சுவாமியானவர், அவரைநோக்கி, நீ திருப்பதிகமோதினமையால், நாவுக்கரசென்றுனக்குப பெயருண்டாகக் கடவதென்று அசரீரிவாக்கருள்செய்ய,அதைக்கேட்டுப்பின்னுமதிக மகிழ்ச்சியடைந்து சுவாமியைத்தொழுது, அன்றுமுதல், சிவசின்னந்தாங்கி, மனவாக்குக்காயங்களினற்றொண்டுசெய்யவேண்டுமென்னும் ஆசைமிகுதலால், துதிருபமாகிய வாசகமும், உழைவாரப் பணிவிடையும் உடையராயினர்.

திலதவதியார், தம்முடைய வேண்டுகோளின்படி, சிவபெருமான் தம்முடைய தமபியாரை ஆட்கொண்டபெருங்கருணைத் திறத்தை நினைந்து மகிழ்ந்து வணங்கினர்.

இந்தச் சமாசாரத்தைப் பாடலிபுரத்தில் இருக்கிற சமணர்களறிந்து, இனி நம்முடைய சமயம் போய்விட்டது, அரசனறிந்தால் அவனுஞ்சைவ சமயத்தவனாகிவிடுவன், ஆகலின், அவனறிதற்கு முன்னரே நாம்போய் வேறு

வகையாகத் தெரிவிக்கவேண்டுமென்று, தம்மில ஆலோசனைசெய்து, அரசனைக்கண்டு, தருமசேனரென்பவர் தமக்கைசடையான் சமயத்திலிருப்பதால், தாமுமங்குபோய்ச் சோவேண்டுமென்னுங் கருத்தால், தமக்குச் சூலைநோயுற்றதாகவும், அது நஞ்சமயமந்திரமுதலியவற்றால தீரவில்லையென்றும, வீண்போக்குக்காட்டித்தமக்கையிடம்போய்ச்சேர்ந்தனரென்று சொன்னார்கள். அதுகேள்வியுற்ற வேந்தன் கோபாவேசனாய்த் தருமசேனரை அழைத்து வாருங்களென்று மந்திரிமாாகளுக்கு ஆக்யாபித்தான்.

அவ்வாறே, அவர்கள் போயழைக்க, திருநாவுக்கரசுநாயனார் "நாமார்க்குங்குடியல்லோம்" என்னுந் திருத்தாண்டகமபாட, அதைக் கேட்ட மந்திரிமார்கள் அவரைவணங்கிப்பிரார்த்திக்க, நாயனார் சிவபெருமானை முன்னிட்டுக்கொண்டு அவர்களுடன் சென்றார். அவரை, அரசன் கண்டமாத்திரத்தில, அதிககோபங்கொண்டு சமணரை நோக்கி, இத்தகையகாரியஞ்செய்தானை யாது செய்தல்வேண்டுமென்ன, நீற்றறையில் இடல் வேண்டுமென்று சொல்லி அவ்வாறே செய்ய, திருநாவுக்கரசுநாயனார் "மாசில்வீணையுமாலைமதியமும்" என்னுந்திருப்பதிகமோதிப் பரமசிவனைத் தியானம்பண்ணிக்கொண்டிருந்தமையால், வெப்ப

மென்பது சிறிதேனுமிலலாதிருந்தது. அங்ங னமிருப்பச் சமண்கையாகள், ஏழாநாள் நீற்ற ரையைத்திறந்து பாாக்கும்போது, திருநாவுக் கரசுநாயனார் சிறிதுஞ்சங்கடமினறிச சுகமே யிருக்கக்கணடு, அதிசயித்து, மீணடும் பாலு டன் விடங்கலந்துகொடுக்க, அதையுமுணடு துன்பமின்றியிருநதனர். அதன்பினனா, மிதி த்துக்கொல்லும்படியானையைத்தூண்ட, அது வருங்கால், "சுண்ணவெணசந்தனச்சாந்து" என்னுந் திருப்பதிகமோத, அமமதயானை நா யனாரை வணங்கி, மேலிருநத பாகர்களையும், சூழ்ந்திருநத சமணர்களையுங் கொன்றுவிட் டது.

அப்பால, கொலைஞரைக்கொணடு கற்றூ ணிற்பிணித்து நடுக்கடலில வீழ்ததினார்கள். அப்போது, திருநாவுக்கரசுநாயனா பரமசிவ னைத் தியானஞ்செய்து, "சொற்றுணை வேதி யன்" என்னும் பஞ்சாக்ஷரப்பதிகமோத, கட்டு களெல்லாம்நீங்கி, அக்கற்றூணே தெப்பமாக, அதன்மேலிருந்துகோண்டு பதிகமுற்று மோ திச்சாத்தித் திருப்பாதிரிப்புலியூரைச்சேர்ந்த திருக்கெடிலநதி முகத்துவாரக்கரைசேர்ந்து, அப்பதிக்கெழுந்தருளிச்சிவபெருமானைத் தரி சித்துப் பதிகமோதித்துதித்து, சிலநாளங்கிருந் துபிரஸ்தானமாகி,திருமாணிகுழியையும்,திரு த்தினைநகரையும் வணங்கிக்கொண்டு, தம்மை

வலிந்தாண்டருளிய திருவதிகைவீரட்டானத் திறைவரை வணங்கிப பல பதிகமோதி, அங்கு கைத்தொண்டு முதலிய திருத்தொண்டு புரிந்து வந்தனா.

இங்ஙனமிருக்குநாளில, சமண்சமயப படுகுழியிலவீழ்ந்திருந்த பலலவராஜன,திருநாவுக்கரசுநாயனாது உணமையை அறிந்து,சைவசமயத்தனாகிச் சமணாமடம ஆலயமிவைகளை இடிபபித்து, குணதரவீச்சரம என்னும ஒரு சிவாலயபபிரதிஷ்டை செய்வித்தனன். பினனா, திருநாவுக்கரசுநாயனா, திருவதிகைவீரட்டானததினின்றும புறபபட்டு, அருகிலிருக்கும திருவெணணைநல்லூா, திருவாமாத்தூா, திருக்கோவலூா முதலிய ஸ்தலங்களையெலலாந்தரிசித்துப் பதிகமோதித் துதித்துக்கொண்டு, பெணணாடகத்திற்சென்று, திருத்தூங்கானை மாடததுக்கெழுந்தருளிப பரமசிவனைத்தொழுது துதித்து, ஐயனே! சமண்சமயச் சார்படைந்திருந்த இவ்வுடலைத்தாங்கிக்கொண்டிருக்க அருவருக்கின்றேனாகலின், தேவரீருடைய முத்திரையை அடியேற்குத்தரித்தருளல்வேண்டுமென்று பதிகமோத, அவ்வணணமே பரமசிவத்தின் திருவருளால ஒருவருமறியாமல், ஒரு சிவபூதமவந்து சூலத்துடன விடையிலச்சினையைத் தம்முடைய தோட்களில் தரிக்க மகிழ்ந்து, அங்கிருந்தெழுந்தரு

ளி திருவறத்துறைக்கும், திருமுதுகுன்றுக்
கும்போய் சுவாமியைத் தரிசித்துக்கொண்டு
அளவிலடங்காத அன்புமேலூரச் சிதம்பரத்
துக்கெழுந்தருளி, நடேசமூர்த்தியைத் தரிசித்
துப் பதிகமோதித் துதித்து, உழவாரப்பணி
செய்துகொண்டு சிலநாளங்கிருந்து விடைபெ
ற்றுக்கொண்டு, திருநாரையூரைப்பணிந்து பதி
கம்பாடி, சீகாழிக்குப்போய் திருஞானசம
பந்தமூர்த்தி நாயனாரைத் தரிசிக்கவேண்டு
மென்னும் விருப்பத்தால் எழுந்தருளிவர,
திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது திரு
க்கூட்டத்துடன் எதிர்வரக்கண்டு வணங்க,
நாயனார் அப்பரே! எழுந்திருமென்று தம்மிர
ண்டு திருக்கரங்களாலும் எடுக்க, திருநாவுக்
கரசுநாயனார் "அடியேன்" என்று எழுந்து,
சீர்காழியிற்சென்று, சிவபெருமானைத் தரிசித்
துப் பதிகமோதித் துதித்து, திருஞானசம்பந்
தமூர்த்திநாயனார் திருமாளிகையி லமர்ந்து,
சோழநாட்டின்கண்ணுள்ள மற்றத்தலங்களை
யுந் தரிசிக்கவேண்டுமென்று திருஞானசம்பந்
தமூர்த்திநாயனாருடன் எழுந்தருளித் திருக்
கோலக்காவிற்சென்று பணிந்து பதிகமோதி,
அங்குநின்று தனித்தெழுந்தருளி மற்றுமுள்
ள தலங்களைத் தரிசித்து திருப்பதிகங்கள்பா
டிக்கொண்டு, திருச்சத்தி முற்றத்தில் சென்றி
றைஞ்சி சிவபெருமானைப்பணிந்து, கூற்றுக்

ன்வருமுன் அடியேன் முடியில் சுவாமிகள் திருவடிசூடடலவேணடுமெ என்று பதிகமோ தினார்.

கபிலாயபதியானவா, திருநல்லூருக்குவா வென்றருள, அஙஙனமே, திருநலலூரடை ந்து, ஆலயத்திற்சாஷ்டாஙகமாகப் பணியும் போது, சுவாமி திருவடிசூட்டத் திருத்தாண் டகமோதித்தொழுது, அங்குநின்று மற்றைய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு எழுந்தரு ளித் திஙகளூரென்னுந தலத்தைச்சார்ந்து, அப்பூதியடிகளுயனார் தமமிடத்தில் வைத்தி ருக்கும பேரனபுக்குள்ளமகிழ்ந்து, அவரது தி ருமாளிகையிற்சென்று கண்டு, அவரது வேண் டுகோளால், அங்கமுதுகொள்ளச் சம்மதித்த மையால, நாயனாரது மனைவியார், அமுதுப டைக்க மூத்ததிருநாவுக்கரசென்னும் புத்திர னை வாழையிலை கொண்டுவருமபடியனுபப, அ வன் போனவிடத்தில் சர்ப்பந்தீணட, அபபி ள்ளை யிலையைக்கொண்டுவந்து தாயிடந்தந்து யாதொன்றுஞ் சொலலாமல் உயிர்நீங்கினன. அவர்கள் கணடு, விஷந்தீண்டிற்றென்று குறிப பாலறிந்துகொண்டு, அவ்வுருவத்தை மறைத் துவைத்து, திருநாவுக்கரசுநாயனாருக்குத் திரு வமுதுபடைக்க முயற்சிசெய்யுமபோது, அவ ர்களுக்குள்ளுணடாயிருக்கும புத்திரசோபத தை நாயனாறிநதுகொணடு, பதிகமோதி அப்

பிள்ளையைப பிழைக்கச்செய்து, பின்பு, அப்பூ திபடிகளுடனமுதுகொணடு, அஙகிருநது புற பபடடு, மற்றததலங்களையுந தரிசிததது பதிக மோதித திருவாரூரிலெழுநதருளிப புறதிட ங்கொண்டாரைத்தொழுது திருப்பதிகமோதி த்துதித்துத் திருப்புகலூருக்கெழுநதருளி வ ருகையில, அங்குவநது வீற்றிருக்கும திரு ஞானசமபநதமூர்த்திநாயனா கேள்விபபட்டு, எதிர்கொணடுவரக்கணடு மகிழ்நது வணங்கி, திருபபுகலூரில வநது சேர்நது, சுவாமியைத் தரிசித்துப் பதிகமோதிச்சாததி, முருகநாய னா திருமடத்தில தஙகியிருநது, திருஞான சம்பநதமூர்த்திநாயனார் திருவாரூருக்கெழுந தருளிவிட, அபபமூர்த்திகள், அங்கிருக்குந் தலங்களைத் தரிசிததுவநது, மறுபடியும் திரு பபுகலூரில முருகநாயனா திருமடததில வீற் றிருக்கத திருஞானசமபநதமூர்த்திநாயனாரும அங்கெழுநதருளினர்.

அப்பால், அவ்விரணடுநாயன்மார்களும், திருவீழிமிழலையிற் சேர்நதருளிப் பரமசிவ னைததரிசித்துப பதிகமோதித் துதித்துக்கொ ணடிருக்குமபோது, காலமழைவருஷியாமல் பஞ்சகாலமதிகரிக்கவே, பரமசிவன் அவ்வடி யாாகள் பொருட்டுபபடிக்காசு தநதருள, அ தைக்கொணடு, வருகின்ற சிவனடியார்கள் யாவாக்கும அமுதுபடைத்துக் கொண்டிரு

ந்து, பின்பு, திருமறைக்காடென்னுந் தலத்திற் சென்று, வேதங்கள்பூசித்துச் சாத்திவிட்டுப் போனவண்ணமேயிருக்குந் திருக்கதவந் திறக்கும்படிக்குத் திருப்பதிகமோதி, வடதளியென்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சிவலிங்கப்பெருமானைச்சமணர்கள்மறைத்திருத்தலை, அரசனைக்கொண்டு நிவர்த்திசெய்து, அப்பால், அப்பமூர்த்தி தரிசித்துப் பதிகம்பாடி அவ்விடத்தினின்றும், திருவானைக்காமுதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு பதிகம்பாடி, திருப்பைஞ்ஞீலியைநோக்கிச் செல்லுமமார்க்கத்திலே, திருநாவுக்கரசுநாயனார் பசியினால் வருந்திவருவதை அறிந்து, சிவபெருமான் ஒரு சோலையும் குளத்தையும் உண்டாக்கி, ஒருபிராமணவடிவங்கொண்டு பொதிசோறுவைத்துக்கொண்டிருந்து, நாயனார் சமீபித்தவுடனே ஐயா, நீர்வழிநடந்து மிக இளைத்துப்போனீர், இப்பொதிசோற்றைப் புசித்து இந்தக்குளத்திலே சலபானம்பண்ணி இளைப்புநீக்கிக்கொண்டுபோம் என்றுசொல்லி பொதிசோற்றைக் கொடுத்தார்.

அப்பமூர்த்தி, அதைவாங்கிப் புசித்துச் சலபானம்பண்ணி இளைப்புநீங்கியபின், சுவாமியும் அவருடன்கூடிச்சென்று திருப்பைஞ்ஞீலியைச் சமீபித்தவுடனே மறைந்தருளினார். அப்பமூர்த்தி அதுகண்டு, திருவருளைவிய

நது, ஆலயத்திற்சென்று சுவாமியைவணங்கித் திருப்பதிகமபாடி கைத்தொணடுசெய்து கொண்டிருநது, அதன்பின்னா, சோழநாட்டைக்கடநது, நடுநாட்டிலுள்ள திருவணணுமலைமுதலிய ஸ்தலங்களையெலலாந தரிசித்துப பதிகமோதிச்சாததி, தொண்டைநாட்டுக்கெழுநதருளி, ஆங்குள்ள காஞ்சிபுரமுதலாய ஸ்தலஙகளையுந தரிசிததுத் திருக்காளத்திக்கெழுநதருளிச் சுவாமியைத் தரிசிக்கும போது, அங்குத்தோன்றின குறிபபினுல், ஸ்ரீகயிலாயபதியைத் தரிசிக்கவேணடுமெனவுள்ளங்கொணடு, அஙகிருநதுபுறப்படடு, காடு, மலை, நாடுமுதலியவற்றைக்கடநது சென்று, ஸ்ரீமல்லிகாாசசுனமெனனுந்தலததிற்சோநது சுவாமியைத் தரிசித்துத் திருபபதிகமோதிச்சாத்தி விடைபெற்றுக்கொணடு, அப்புறமவடக்கிலெழுநதருளி, தெலுங்குதேசம், கன்னடதேசமுதலாகிய தேசங்களையுங்கடந்து சென்று, கங்காதீரமடைநது, காசிவிசுவநாதரைத் தரிசித்துத் துதிசெய்து, அவ்விடத்தில, தமது பரிசனங்களையெல்லாம நிறுத்திவிட்டு, அப்பால், தனியே கநத மூலபலங்களுண்பதையுந தவிர்ந்து, இரவும்பகலுமாக நடநது, மலைவழி, காட்டுவழியெலலாங்கடந்து, பாலைவனத்திற் போமபோது, அநதிலவெபபத்தால் கால்பாட்டளவுந்தேய, அப்பால், நடக்கமாட்டாமல,

கைகளையூனறிக்கொண்டு தாவித்தாவிச் செலல, அவைகள் மணிக்கட்டளவுநதேயவே, அதற்குமேல, மாாபிலை உநதிச்சென றும, அது வுநதேயவே, புரணடுபுரணடுச் சென்றும, அதற்குஞ் சகதியிலலாமல, ஓய்நது பிரக்ஞை தபபியிருந்தனா.

பரமசிவன் திருவுளமிரங்கி, ஒரு பிராமணமுனிவா வேடமாகவநது சமீபதெய்தி, நீரிவ்வாறு வருநதி வநததெனன, அபபோது, பரமசிவததின தரிசனவிசேஷத்தால, அப்பமூாத்திகளுக்குக கொஞசம ஞாபகசக்தி வநது, ஸ்ரீ கயிலாயமலேககுச்சென்று சிவபெருமானை தரிசனஞ்செய்ய வேணடுமென்கிற விருபபத்தால, இவ்வாறுவந்தேனெனன, சுவாமியானவா, ஸ்ரீகயிலாயமலே மனிதாகள் சென்று தரிசிக்கக்கூடுவதோ வென்ன, எவ்வாற்றாலேனுங கயிலாயதரிசனஞ் செய்தாலல்லது மீளேனென்று சொலலினா.

அவ்வுறுதியையறிநத பரமசிவன், முனிவா வடிவமறைநது, ஆகாயததிலெழுந்தருளி, அசரீரிவாக்கினால நாவுக்கரசே' எழுநதிருவென்று திருவாய்மலாநதருளினமாத்திரத்தில, அபபமூாததிகள் திருமேனி முன்போல பழுதின்றி விளங்க, உணாச்சிபெற்று ஆண்டவனே! அடியேனுக்கு ஸ்ரீகயிலாயதரிசனங் கடாட்சித்தல வேணடுமெனறு துதிசெய்தனா. சுவாமி

தாமெழுந்தருளுமபோதே யுண்டாக்கிய தடாகத்தைக்காட்டி, இதிலழுழ்கித திருவையாற்றிலவந்து கயிலாயதரிசனங காணக்கடவையென்று மீட்டும அசரீரிவாக்கால கட்டளையிட்டருள, அவ்வாறே அந்தத்தீர்த்தத்தில மூழ்கித்திருவையாற்றுத தீர்த்தக்கரையிலேறிச சுவாமிசந்நிதிக்குச்சென்று, நந்திதேவா முதலாகிய சிவகணங்களுமு, முனிவாகளும, இந்திராதிதேவாகளும், வந்துநெருங்கியிருக்கவும, தேவதுந்துபிமுழங்கவும, வேதங்கள் கோஷிககவும, பாாவதிசமேதராய்க் கயிலாயபதிவீற்றிருந்த திருவோலக்கத்தைத் தரிசித்துபபேரானந்தமடைந்து, திருப்பதிகங்களோதிச்சாத்தினா.

அதற்குமேல, பரமசிவன் திருவருளால் கயிலாயத்தோற்றமறைந்து, பழையபடி ஆலயமாயிருக்கக்கண்டு, மனவருத்தங்கொண்டு, பின் ஒருவாறுதெளிந்து, திருப்பதிகங்கள்பாடி, மற்றுமுள்ள தலங்களைத் தரிசிக்கவேண்டுமெனகிற அன்பினலை விடைபெற்றுக்கொண்டு, அவ்விடமவிட்டு நீங்கிச்சென்று, திருப்பூந்துருத்தியென்னுந் தலத்துக்கெழுந்தருளிய பரமசிவனைத்தரிசித்துப் பதிகமோதித்தொழுது, கைத்தொண்டுசெய்து, அங்கொருதிருமடம ஏற்படுத்தி, அதிலவீற்றிருந்து காலங்கடோறுஞ் சுவாமியையத தரிசனஞ்செய்துகொ

ணடிருக்கையில், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மதுரைக்கெழுந்தருளிச் சமணரை வாதில்வென்று, மறுபடி சோழநாட்டில் வரும்போது, அப்பமூர்த்தியைக்காணும் விருப்பத்தினால் திருப்பூந்துருத்திக் கெழுந்தருள, அதனை அப்பமூர்த்திகளறிந்து, எதிர்சென்று ஒருவருமறியாவண்ணம் திருக்கூட்டத்துட்புகுந்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எழுந்தருளிவருகிற முத்துச்சிவிகையைத் தமது தோள்கொடுத்துத் தாங்கிக்கொண்டு வந்தார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பூந்துருத்திக்கு மிகச்சமீபித்தவுடனே, "அப்பர் எங்குற்றார்" என்றுவினவ; அதைக்கேட்ட அப்பமூர்த்தி "அடியேன் தேவரீரைத்தாங்கி வரும்பெருவாழ்வைப்பெற்று இங்குற்றேன்" என்றார். அவ்வார்த்தையைக் கேட்குமுன், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முத்துச்சிவிகையைவிட்டு மிக்கவிரைவாக இழிந்து, அப்பமூர்த்திகளைப்பணிய, அதற்குமுன்னமே அப்பமூர்த்திகள் பணிந்ததுகண்ட அடியார்களெல்லாரும், அவ்விரண்டு நாயன்மார்களையும் வணங்கி, மகிழ்ச்சியினால் ஆரவாரித்தார்கள். அதன்பின்னர், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், அப்பமூர்த்திகளும், ஆலயத்திற்கெழுந்தருளிப் பரமசிவனைத் தரிசித்துத் திருமடத்தில் வந்து இருவரும் எழுந்தருளி

யிருக்கையில, திருஞானசமபந்தமூாத்தி நாய னா, தாமமதுரையிற்சென்று சமணாகளைவா திலவென்றதையும், பாணடியனுடைய கூனை நிமிர்த்ததையும, அநநாடெங்கும விபூதியை வளாததையும, பாண்டிமாதேவி யாகிய ம ங்கையாக்கரசியாா, மநதிரியாராகிய குலச்சி றைநாயனா எனகிற இருவருடைய பெரு மையையும, வாகீசருக்குச்சொலலி யருளி னா. வாகீசா தாமதொண்டைநாட்டுக்குசசெ னறு, அங்குள்ள சிவஸ்தலங்களை வணங்கிய தைத் திருஞானசமபந்தமூாததி நாயனாருக் குச்சொலலி யருளினார்.

அபபால், அப்பமூர்த்திகள் தாமும் மது ரைக்கெழுநதருளிச் சொக்கநாதசுவாமியை யும மீனாகூஷிபமமையையுந தரிசித்துப் பதிக மோதிச்சாத்தி, பாண்டிமாதேவியும, குலச்சி றையாரும, நினற சீாநெடுமாறனென்னும பா ண்டியராசனும வநதுவணங்க, மகிழ்நது அவ ாகருக்குக்கினியவாாததைகள் சொல்லி, அங் கிருநதும புறப்பட்டு, இராமேச்சரத்துக்கெழு நதருளி, இராமநாதரைத் தரிசித்துப பதிக மோதிச்சாத்திச் சிலநாளங்கிருநது புறபபட்டு, திருநெல்வேலி முதலாகிய பாண்டிநாட்டுள்ள ஸ்தலங்களையெல்லாந தரிசித்து, மறுபடியுஞ் சோழநாட்டில்வந்து, திருப்புகலூரிற்சோநது, சுவாமியைத்தரிசித்து உழவாரபபணிசெய்து

கொண்டிருக்கும் நாளில், சிவபெருமான் இவருடைய தன்மையை உலகத்தாருக்குத் தெரிவிக்கும்பொருட்டு, உழவாரப்படையாலே, செதுக்குமிடந்தோறும், பொன்னும், நவரத்தினங்களு முண்டாகும்படி செய்தருள, அவைகளை ஓடுகள்போல மதித்துப்பொய்கையில் எறிந்துவிட, மேலும் இவரை மயக்கும்படி, பரமசிவன் அரம்பாஸ்திரீகளையனுப்ப, அவர்கள்வந்து தங்களாலானமட்டும் மோசமூட்டும்படி லாலனஞ்செய்ய, அதுகண்டு அப்பமூர்த்திகள் "உம்மாலிங்கென்ன குறையுடையேன்" என்னுந்திருத்தாண்டகமோத, அம்மாதர்களிவரை மயக்க நம்மாலாகாதென்றுபோய் விட்டார்கள். அதற்குமேல், திருநாவுக்கரசு நாயனார் பரமசிவனுடைய திருவருள் கூடுகிறவரைக்கும் அத்தலத்தில் சிவபெருமானைத் தரிசித்துப் பதிகமோதிச் சாத்திக்கொண்டிருந்து, பின்பு, ஒருநாள் "எண்ணுகேனென் சொல்லி யெண்ணுகேனே" என்னுந்திருத்தாண்டகம்பாடி சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

# குலச்சிறைநாயனார்புராணம்.

பாண்டிநாட்டிலே, மணமேற்குடியிலே, குலச்சிறை நாயனாரென்பவரொருவரிருந்தார். அவர், விபூதி உருத்திராக்ஷந் தரிக்கின்றவர்களும், ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதுகின்றவர்களுமாகிய சிவனடியார்களை, உயர்குலம் இழிகுலங்களும், நற்குணம் தீக்குணங்களும் பாராமல் வணங்கித் துதிக்கின்றவர். அவ்வடியார்பலர் கூடிவரினும், ஒருவர் வரினும், அன்பினோடு எதிர்கொண்டு அழைத்துத் திருவமுது செய்விக்கின்றவர். பரமசிவனுடைய திருவடிகளை அனுதினமுஞ் சிந்தித்துத் துதித்து வணங்குகின்றவர். நெடுமாறர் என்னும் பெயரையுடைய பாண்டியருக்கு முதன்மந்திரியானவர். அந்தப் பாண்டியருடைய மாதேவியாராகிய மங்கையர்க்கரசியார் செய்கின்ற திருத்தொண்டுக்குத் துணைசெய்கின்றவர். கீழ்மக்களாகிய சமணர்களுடைய பொய்ச்சமயத்தைக் கெடுத்து, பாண்டிநாடெங்கும் திருநீற்றைவளர்க்கும் பொருட்டு, பரசமய கோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய திருவடிகளை வணங்கிய சிறப்பினையுடையவர். வாதிலே, அந்நாயனாருக்குத் தோற்ற சமணர்களைக் கழுவிலே ஏற்றுவித்தவர். சுந்தரமூர்த்திநாயனாராலே திருத்தொண்டத் தொகையில் "பெருநம்பி" என்றுவியந்துரைக்கப்பட்டவர்.

திருச்சிற்றம்பலம்.

# பெருமிழலைக்குறும்பநாயனார் புராணம்.

மிழலைநாட்டிலே, பெருமிழலையென்னும் ஊரிலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த பெருமிழலைக்குறும்பநாயனார் என்பவரொருவரிருந்தார். அவர் சிவனடியார்களைக் காணுந்தோறும், விரைந்தெதிர் கொண்டு வணங்கி, அவர்கள் குறிப்பறிந்து தொண்டுசெய்பவர். அவர்களை நாடோறுந் திருவமுது செய்வித்து, அவர்களுக்கு வேண்டுந் திரவியங்களைக்கொடுப்பவர். அவர் சுந்தரமூர்த்திநாயனாருடைய பெருமையை அறிந்து, அவருடைய திருவடிகளை மனம் வாக்குக் காயங்களினாலே சிந்தித்துத் துதித்து வணங்குதலே பரமசிவனுடைய திருவடிகளை அடைதற்குரிய நெறியென்று அப்படிச்செய்துவந்தார். அதனால், அவர், அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டமாசித்திகளையும் அடைந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபித்துவந்தார்.

இப்படி நிகழுங்காலத்திலே, திருவஞ்சைக்களத்திற்சென்று திருப்பதிகம்பாடும் சுந்தரமூர்த்திநாயனாருக்குப் பரமசிவனுடைய திருவருளினாலே உத்தரகைலாயத்தை அடையும் வாழ்வு கிடைப்பதைத் தம்முடையவூரிலிருந்துகொண்டே யோகப் பிரத்தியக்ஷத்தால்

அறிந்து, "சுந்தரமூர்த்திநாயனார் உத்தரகைலாயத்தை நாளைக்கு அடைய நானபிரிந்து இங்கேவாழமாட்டேன்" என்று நினைந்து "இனைறக்குயோகத்தினாலே சிவபிரானுடைய திருவடியை அடைவேன்" என்று துணிந்து, யோகமுயறசியினாலே பிரமரந்திரந்திறபப, உடலினினறும பிரிந்து திருக்கைலாயததிலவீற்றிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார.

திருச்சிற்றம்பலம்.

---

## காரைக்காலம்மையார்புராணம்.

சோழமண்டலத்திலே, காரைக்காலில, வைசியர்குலத்தில, தனதத்தன் என்பவன ஒருவன் இருந்தான். அவனுக்குபபுனிதவதியார என்கினற ஒருபுத்திரியார்பிறந்தார். அத தனதத்தன் அப்புனிதவதியாரை நாகப்பட்டணத்தில இருக்கின்ற நிதிபதி என்பவனுடைய புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ்செய்துகொடுத்து, தனக்குவேறுபிள்ளையின்மையால், அவரைத்தன்னிடத்திலேவைத்துக்கொண்டான். புனிதவதியார, தமமுமுடைய வீட்டுக்குச் சிவனடியாரகள் வரின், அவர்களைத்திருவமுது செய்வித்து, அவரவா

வேண்டிய பொன், இரத்தினம், வஸ்திரம் முதலாயின உதவுவார்

இப்படி நிகழுங்காலத்திலே, ஒருநாள், பரமதத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்கள் சிலர், அவனுக்கு இரண்டுமாம்பழம் கொடுக்க, அவன் அவைகளை வாங்கி, மனைவியாரிடத்திற் கனுப்பிவிட்டான். மனைவியார் அக்கனிகளை வாங்கிவைத்தபின்பு, சிவனடியார் ஒருவர் பசியினலவருந்தி அவர் வீட்டிற்சென்ருர். புனிதவதியார், அவ்வடியாருடைய நிலையைக் கண்டு, கலத்தைவைத்துச் சோறுபடைத்து, அப்பொழுது கறியமுது பாகம்பண்ணப்படாமையால், தமமுடைய கணவனனுப்பிய மாம்பழங்களிரண்டினுள் ஒன்றைக்கொண்டுவந்துபடைக்க, அவ்வடியார் திருவமுதுசெய்து போயினர். பின், பரமதத்தன் வீட்டுக்குவந்து போசனம்பண்ணும்போது, மனைவியார் மற்ற மாங்கனியொன்றைக் கொண்டுவந்து வைத்தார். பரமதத்தன் மற்றெரு "கனியையுங்கொண்டுவந்துவை என்றுன. மனைவியார் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானிக்க உடனே, அதிமதுரமாகிய ஒருமாங்கனி அவர் கையிலவந்திருந்தது அவர், அக்கனியை கணவனுடைய கலத்திலேபடைக்க, அவன், அதனை, உண்டு, அதன்சுவை தேவாமிர்தத்தைப் பார்க்கிலுஞ் சிறந்தமையால "இதுமுன்நான்

தந்த மாங்கனியன்று, இதனை நீ எங்கேபெற்றாய்" என்றான். மனைவியார் அதைக்கேட்டு, நீர் தந்தகனிகளில் ஒன்றை, ஓரடியாருக்குக் கொடுத்து விட்டமையால், அதற்குநான் யாதுசெய்வேன் என்று பயந்து, பரமசிவனைத் தியானிக்க; அவருடைய திருவருளினாலே, இந்தக்கனி எனகையில் வந்திருந்தது எனறார். பரமதத்தன் அதை நம்பாதவனாகி, மனைவியாரைநோக்கி, "இந்தக்கனி சிவபிரானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும ஒருகனி அழைத்துத்தா" என்றான். புனிதவதியார், பரமசிவனைத் துதித்து இன்னும் ஒருகனிதநதருளல வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவ்வண்ணமே ஒருமாங்கனி அவாகையில வந்திருநதது. அவரதைக்கணவன் கையிற்கொடுகக, ஆச்சரியமடைநதுவாங்கினான் வாங்கியபழத்தைப்பின் காணாதவனாகி, மிகுந்த பயங்கொண்டு, அபபுனிதவதியாரைத் தெய்வமென நினைநது, அவரைப்பிரிநது வாழவேண்டுமென்று துணிந்து, தன் கருத்தைப பிறருக்கு வெளிப்படுத்தாமல, மனைவியாரோடு தொடர்பின்றி ஒழுகினான்.

ஒழுகுநாளிலே, ஒருமரக்கலஞ் செய்வித்து அதிலேறி தேசாந்தரமசென்று வாணிபஞ்செய்து, மீண்டும் பாண்டிநாட்டிலுள்ள ஓர் நகரத்தையடைந்து, அங்குள்ள ஒருவைசியனு

டைய மகளை விவாகஞ்செய்துகொண்டு, பெருஞ்செல்வத்தோடும் வாழ்ந்திருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே ஒருபெண்குழந்தை பிறந்தது. அவன தான் கூடிவாழ்தற்கஞ்சி நீக்கிய மனைவியாரைத் தான்வணங்கும தெய்வமாகக்கொண்டு, அவருடைய புனிதவதியார் என்னும் பெயரையே அந்தப்பெண்ணிற்கு இட்டான்.

பரமதத்தன் இப்படி இங்கே இருக்க, சுற்றத்தார்களிதை உணர்ந்து, புனிதவதியாரைத் தாமே அவனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோக, அவன், அதனை அறிந்து அச்சங்கொண்டு, தன்னுடைய இரண்டாம்மனைவியோடும மகளோடும் புனிதவதியாரிடத்திற்குவந்து அவருடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். உடனே புனிதவதியார தம்முடைய சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கிநிற்க, அவர்கள் வெள்கி, பரமதத்தனைநோக்கி, நீ உன்னுடைய மனைவியை வணங்குவதென்னை என்றார்கள். அதற்குப் பரமதத்தன், நான் இவரிடத்திலே ஒருபெரிய அற்புதத்தைக் கண்டபடியால், இவர் மானுடப்பெண்ணல்லர் என்று துணிந்து, இவரைப்பிரிந்தேன், இவரைநான் தொழுந்தெய்வமென்று கொண்டமையால், நான்பெற்ற இக்குழந்தைக்கு இவர்பெயரைத்

தரித்தேன். அதுபற்றியே இவருடைய திரு வடியையும் வணங்கினேன என்றான். சுற்ற த்தாாகள், இது என்ன ஆச்சரியம என்று, திகைத்து நின்றார்கள்

புனிதவதியார், கணவன்சொல்லிய வார்த் தையைக்கேட்டு, பரமசிவனுடைய திருவ டிகளைசசிநதிதது, "சுவாமீ, இவனுடைய கொள்கை இதுவாயின், இனி, இவன்பொ ருட்டுத்தாங்கிய அழகுதங்கிய தசைப்பொ தியைநீக்கி, தேவரீரைச்சூழ்நது நினறு து திக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத்த ந்தருளல வேண்டும்" எனறு பிராாத்திததாா. அநதக்கணத்தே, பரமசிவனுடைய திருவரு ளினாலே, மாமிசமமுழுதையும உதறி, என புடமபாக, மண்ணுலகும் விண்ணுலகும் வ ணங்கும் பேய்வடிவமாயினா். அப்பொழுது, தேவாகள் பூமாரிபொழிநதாாகள். தேவதுந துபிகள் ஒலித்தன. அதுகண்ட சுற்றத்தாாக ளெலலாரும அஞ்சி, அவரை நமஸ்கரித்துக் கொணடு போய்விட்டாாகள்.

புனிதவதியாா, தமக்குச் சிவபெருமானு டைய திருவருளினாலே கிடைத்த ஞானத் தைக்கொணடு, அற்புதத் திருவந்தாதியும, திருவிரட்டைமணிமாலையும்பாடி, திருக்கை லாயகிரிக்குப் போகவிருமபி அங்கேகாலினால நடத்தல தகுதியன்றென்று ஒழிந்து, தலையி

ஞ்சேல நடந்துபோய், மலையில் ஏறும்பொழுது உமாதேவியார்கண்டு, பரமசிவனை வணங்கி நின்று, சுவாமீ, இங்கேதலையினாலே நடந்துவருகின்ற என்புடம்பை யுடையவராது அன்பின் மகிமை இருந்தபடி என்னை என்று விண்ணப்பஞ்செய்ய, இங்கேவருகின்றவள் நம்மைத் துதிக்கின்ற அம்மை என்றறி. இந்தப்பெருமைபொருந்திய வடிவத்தையும் வேண்டிப் பெற்றாள் என்றார். பின்பு, புனிதவதியார் சமீபத்தில் வந்தவுடனே, உலகமெல்லாம் உய்யும்பொருட்டு, அவரைநோக்கி, "அம்மையே" என்றழைத்தார். அதுகேட்டு புனிதவதியார் "அப்பா" என்றுசொல்லிக்கொண்டு, அவருடையதிருவடிகளிலேவிழுந்துநமஸ்கரித்து எழுந்தார். சுவாமி அவரைநோக்கி, உனக்குவேண்டும் வரம் யாது என்றுவினவ; புனிதவதியார் வணங்கிநின்று, சுவாமி, அடியேனுக்கு இறவாதபேரின்பமயமாகிய அன்புவேண்டும், இனிப்பிறவாமைவேண்டும்; பிறக்கினும் தேவரீரை ஒருகாலமும் மறவாமை வேண்டும்; இன்னும் தேவரீர் திருநிருத்தஞ்செய்யும்பொழுது, தேவரீருடைய திருவடியின்கீழே சிவானந்தத்தை உடையேனாகி, தேவரீரைப்பாடிக்கொண்டிருத்தல்வேண்டும் என்று, விண்ணப்பஞ்செய்தார். சுவாமி அவரைநோக்கி, நீ தென்றிசையிலுள்ள, ஆலங்காட்டிலே நம்மு

டைய நடனத்தைத் தரிசித்து பேரானந்தத்தோடு நம்மைப்பாடிக்கொண்டு இரு என்று அருளிச்செய்தார். அம்மையார், சுவாமியை நமஸ்கரித்து அநுமதிபெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டிற்குத் தலையினால நடந்துசென்று, சுவாமியினுடைய திருநடனத்தைத் தரிசித்து, "கொங்கை திரங்கி" என்னும் மூத்ததிருப்பதிகத்தையும், "எட்டி யிலவமீகை" என்னுந் திருப்பதிகத்தையும் பாடினார். அவர் சுவாமியினுடைய தூக்கியதிருவடியின்கீழே சிவானந்தத்தை அனுபவித்துக்கொண்டு எக்காலமும் இருக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்.

## அப்பூதியடிகளாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திங்களூரில், பிராமணகுலத்தில், சிவபக்தி அடியார்பக்திகளிற் சிறந்தவராகிய அப்பூதியடிகளாயனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர், சிவானுபூதிமானாகிய திருநாவுக்கரசு நாயனாருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவர்மேலேமிகவும் அன்புகூர்ந்து, தமமுடைய வீட்டிலுள்ள அளவைகள், தாராசுகள், பிள்ளைகள், பசுக்கள்முதலிய எல்லாவற்றிற்கும் அந்நாயனாருடைய பெயரை

பேசொலலிவருவார். இன்னும், அவாமேலா சையினாலே, திருமடங்கள், தண்ணீர்ப்பந்தா, குளங்கள், திருநந்தனவனங்கள் முதலியவற் றையும அந்நாயனா பெயரினாற்செய்துகொ ணடிருந்தார.

இருக்குநாளிலே, அத்திருநாவுக்கரசுநாய னா, திருபபழனமெனனும ஸ்தலத்தை வண ங்கிக்கொண்டு,பிற ஸ்தலங்களையும வணங்கும் பொருட்டு, அந்தத்திங்களூருக்குச்சமீபமாகி ய வழியே செலலுமபொழுது, ஒருதண்ணீ ர்ப்பந்தரை அடைந்து, திருநாவுக்கரசுநாய னார் என்னுமபெயர் எழுதப்பட்டிருத்தலைக்க ணடு, அங்குநின்றவாகளை சிலரைநோக்கி, இத் தண்ணீரபபந்தரை இப்பெயரிட்டுச் செய்தவ ர யாவர் என்றுவினவ, "அவர்கள் இப்பந்தரை மாத்திரமன்று; இவ்விடத்தெங்குமுள்ள அற ச்சாலைகள், குளஙகள், திருநந்தனவனங்களெ ல்லாவற்றையும் அப்பூதியடிகளாயனாரென்ப வா, இத்திருநாவுக்கரசுநாயனார் என்னும் பெ யராலேயே செய்தனார்" என்றார்கள். அதை த்திருநாவுக்கரசு நாயனார்கேட்டு, அப்பூதியடி களாயனார்வீட்டிற்குச்செலல, உள்ளிருந்த அ ப்பூதிநாயனார் கேள்வியுற்று, விரைந்துசென்று வணங்கி, "சுவாமீ, தேவரீர் இவ்விடத்திற்கு எதுபற்றி எழுந்தருளினீர்" என்று வினவ, திருநாவுக்கரசுநாயனா "நாமதிருபபழனத்தை

வணங்கிக்கொணடுவருமபொழுது, வழியிலே நீரவைதத தணணீாபபந்தரைக் கணடும, அபபடியே நீ செய்திருக்கின்ற பிறதருமங்களைக்கேட்டும, உமமைககாணவிருமபி இங்கேவந்தோம" என று சொலலி, பினபு, "சிவனடியார்கள்பொருட்டு, நீரவைத்த தணணீாப்பந்தரிலே உம்முடைய பெயரை எழுதாது வேறெருபெயரை எழுதியதற்குக் காரணமயாது" என்று வினவ, "நீா நலலவாாதகதை அருளிச்செய்தீரிலலை பாதகாகளாகிய சமணாகளோடுகூடிப் பலலவராயன்செய்த விககினங்களைச் சிவபததிவலிமையிஞலே ஜெயிதத பெருந தொணடாது திருபபெயரோ வேறெருபெயரென்று கோபிததது, நீா இநதக் கொடுஞ் சொலலை நான கேடகுமபடி சொன்னீா. கற்றுணியைக்கொணடு கடல கடநத அநத நாயஞருடைய மகிமையை இவ்வுலகததிலே அறியாதவர் யாருளா' நீா சிவவேடத்தோடுநின்று இவ்வாாத்தை பேசினீா. நீா எங்கே இருக்கின்றவர் சொலலும்" என்ருா.

திருநாவுக்கரசுநாயஞர், அவ்வப்பூதியடிகளுடைய அனபை அறிநது, "ஆருகதசமயப படுகுழியினின்றும எறுமபொருட்டுப் பாமசிவன் சூலைநோயை வருவித்து ஆட்கொள்ளப்பெற்ற உணாவிலலாத சிறுமையேன் யான் என்று அருளிச்செய்தாா. உடனே, அப

பூதிநாயனா, இரண்டு கைகளும சிரசின்மே லே குவிய, கண்ணீர் சொரிய, உரைதடுமா ற, உரோமஞ்சிலிர்ப்ப, பூமியிலே விழுந்து; திருநாவுக்கரசு நாயனுருடைய ஸ்ரீபாதாரவிந் தங்களைப் பூண்டு சந்தோஷமேலிட்டதனுல வீட்டினுள்ளே சென்று, மனைவியாருக்கும பிள்ளைகளுக்கும பிற சுற்றததாாகளுக்கும் தெரிவித்து, அவாகளோடும், அநநாயனுரை வ ணங்குமபடி செய்து, "சுவாமி, தேவரீா இங் கே திருவமுதுசெயதருளல வேணடும" என் று பிராாததிக்க, அவரும அதற்கு உடன்பட் டருளினா.

பின்பு, அப்பூதிநாயனா திருவமுது சமைப் பித்து, தங்கள் புத்திராாகிய மூதத திருநாவுக் கரசை வாழைக்குருத்து அரிநதுகொண்டு வ ருமபொருட்டு அனுபப, அவர்விரைநது தோ ட்டத்திற் சென்று, வாழைக்குருத்து அரியும் பொழுது, ஒரு பாமபு அவருடைய கையிலே தீண்ட, கொய்த குருத்தை வேகத்தோடு கொண்டோடி வநது, தாயாா கையிலே நீட்டி, கீழே விழுந்து இறநதார். அதுகண்டு, தந்தை யாரும் தாயாரும தூக்கித்து, சவத்தை வீட் டுப்புறத்து முற்றத்தின ஓா பக்கத்திலே பாயி னுல மறைத்துவைத்துவிட்டு, திருநாவுக்கரசு நாயனுரிடத்திற் சென்று, "சுவாமீ, எழுந்த ருளித் திருவமுது செய்யவேண்டும" என்று

பிராாத்திக்க, நாயனா எழுந்து, கைகால சுத்திசெய்துகொண்டு, வேமீறாசனத்திலிருந்து, விபூதி தரித்து, அப்பூதி நாயனாருக்கும, அவா மனைவியாருக்கும விபூதி கொடுதது, புதல்வர்களுக்கும கொடுக்குமபோது, அப்பூதிநாயனாரை நோக்கி, "நாம இவாகளுக்கு முன்னே விபூதி சாத்தும்படி உமமுடைய ஜேஷ்ட புத்திரரை வருவியும்" எனறா. அப்பூதி நாயனா இபபோது, அவன் இஙகு உதவான் என்றா. திருநாவுக்கரசுநாயனா அதைக்கேட்டவுடனே, சிவபிரானுடைய திருவருளினாலே தமமுடைய திருவுள்ளத்திலே ஒரு தடுமாற்றநதோனற, அபபூதிநாயனாரை நோககி, அவன என செய்தான் உணமைசொல்லும என்றா. அபபூதிநாயனார் அஞ்சி நடுக்குற்று, வணஙகி நினறு, நிகழ்நத சமாசாரத்தை விண்ணபபஞ் செய்தாா. திருநாவுக்கரசுநாயனார், அதைக்கேட்டு சிவாலயத்துக்கு முன்சென்று, சவத்தை அங்கே கொணர்வித்து, விஷத்தை நீக்கியருளுமபொருட்டு, சிவபெருமான் மேலே திருபபதிகம் பாடினா. உடனே, அப்புத்திரர் உயிர் பெற்றெழுந்து, திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளிலே விழுந்துநமஸ்கரிக்க, விபூதி கொடுத்தருளினார். அப்பூதி நாயனாரும மனைவியாரும் தங்கள் புத்திரர் பிழைத்தமையைக் கணடும் அதைக்

குறித்துச் சந்தோஷியாமல், நாயனார் திருவமுதுசெய்யாதிருந்தமையைக் குறித்து சிந்தைநொந்தார்கள். திருநாவுக்கரசு நாயனார் அதனை அறிந்து, அவர்களோடுமே வீட்டிற் சென்று, அப்பூதி நாயனாரோடுமே அவர் புத்திரர்களோடுமே ஒருங்கிருந்து திருவமுது செய்தருளினார். அப்படியே சிலநாள் அங்கிருந்து, பின், திருப்பழனத்திற்குப் போயினார். அப்பூதியடிகணாயனார் சைவசமயாசாரியராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளைத் துதித்தலே தமக்குப் பெருஞ்செல்வமெனக் கொண்டு வாழ்ந்திருந்து சிலகாலஞ் சென்றபின்பு, பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## திருநீலநக்கநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, சாத்தமங்கையிலே, பிராமணர்குலத்தில், திருநீலநக்கநாயனாரென்பவர், ஒருவர் இருந்தார். அவர்வேதத்தின் உள்ளுறையாவது, பரமசிவனையும் அவருடைய அடியார்களையும் அன்பினோடு அருச்சித்து வணங்குதலே என்று துணிந்து, தினந்தோறும், சைவாகம விதிப்படி சிவார்ச்சனை பண்ணி, சிவபத்தர்களுக்குத் திருவமுதுசெய்வித்

தல் முதலாகிய பலவகைப்பட்ட பணிகளை யும செய்வார. அபபடி செய்யுநாளிலே, ஒரு திருவாதிரை நக்ஷத்திரத்தில், சிவபூசையை முடித்துக்கொணடு, அந்தஸ்தலத்திலுள்ள அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியை அருச்சிக்கவிருமபி, தமமுடைய மனைவியார் பூசைக்குவேண்டும உபகரணங் களைக் குறைவறக்கொண்டுவர, அவ்வாலயத் திற்சென்று, பூசைபண்ணிப பிரதக்ஷணம் செய்து, சந்நிதானத்திலே நமஸ்கரித்து இருந்துகொணடு, வேதாகமாதி சமஸ்தசாஸ்திரங் களின் உணமைபபொருளாகிய, ஸ்ரீபஞ்சாக்ஷ ரத்தைதச்சபித்தார். சபிக்கும்போது, ஒரு சில மபிமேலே நின்று வழுவி சிவலிங்கத்தின்மே ல்விழுநதது. அதைச்சமீபத்திலே நின்ற மனை வியாா கண்டு,அச்சமடைந்து விரைந்து குழை நதைமேல விழும சிலம்பி நீங்கும்படி ஊதித் துமிபவாபோல்,அன்பு மிகுதியினாலே அநதச் சிலம்பி நீங்கும்படி ஊதித்துமிக்தார். திருநீல நக்கநாயனா அதைக்கண்டு, தமமுடைய கண் ணைப் புதைத்து "அறிவில்லாதவளே, சிவலி ங்கத்தின்மேலே விழுந்த சிலம்பியை வேறொ ருபரிசினாலே நீக்காமல், முற்பட்டு வந்து ஊ தித்துமிந்தாய்; அநுசிதத்தைச்செய்த உன் னை நான் இனித்துறந்தேன்; நீங்கிவிடு" என் றார். அப்பொழுது, சூரியஸ்தமனமாயிற்று.

மனைவியார், நாயகருடைய ஏவலினாலே ஒரு வழி நீங்க, நாயனார் பூசையைமுடித்துக்கொண்டு வீட்டிற்குத் திருமபிவிட்டார். மனைவியார் அஞ்சுகின்ற உள்ளத்தோடும் அவருடன் செலலமாட்டாதவராகி ஆலயத்தில இருநதார்.

அன்றிரவில், நாயனார் நித்திரைசெய்யும் பொழுது, பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, தமமுடைய திருமேனியைக்காட்டி, உன்மனைவிமனம்வைத்து ஊதித் துமிந்த இடமொழிய, இப்புறம சிலமபியின் கொப்புளம் என்று சொல்லியருளினார். நாயனார், அச்சத்துடனே அஞ்சலிசெய்துகொண்டு விழித்து எழுந்து கூத்தாடினா, பாடினார், சிவபிரானுடைய திருவருளை வியநது நின்று அழுதார். விடிந்தபின், ஆலயத்துக்குப்போய், சுவாமியை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து, மனைவியாரையும் அழைத்துக்கொண்டுவீட்டுக்குத்திரும்பினார். அதற்குப்பின், முன்னிலும் மிகுநத மகிழ்ச்சியோடு சிவார்ச்சனையும், மகேசுரபூசையையும் செய்துகொண்டு இருந்தார்.

அப்படியிருக்கு நாளிலே, பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய மகிமையைக்கேள்வியுற்று அவருடைய ஸ்ரீபாதாரவிந்தங்களைத் தரிசிக்கவேண்டு

மென்னும் அத்தியந்த ஆசையை உடையவ ராயினர். அப்படியிருக்கும்பொழுது, திருஞா னசம்பந்த மூர்த்திநாயனார், அயவந்திநாதரை வணங்கும் பொருட்டுத் திருக்கூட்டத்தோ டும் சாத்தமங்கைக்கு எழுந்தருளிவர, திருநீ லநக்கநாயனார் கேள்வியுற்று, தம்முடைய சு ற்றத்தார்கள் சமஸ்தரோடும் அவரை எதிர் கொண்டு நமஸ்கரித்து தமமுடைய வீட்டிற் கு அழைத்துக்கொண்டுபோய், திருவமுது செய்வித்தார். திருஞானசமபந்தமூர்த்திநா யனார் அன்றிரவிலும் அங்கேதானே திருவ முதுசெய்து, விடிந்தபின், அயவந்தியிற்செ ன்று சுவாமிமேலே திருநீலநக்கநாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகமபாடி, சிலநாளங்கி ருந்து பின், திருநீலநககநாயனாருக்கு விடை கொடுத்து, அந்தத்திருப்பதியினின்றும் நீஙகி அருளினார். திருநீலநக்கநாயனார், திருஞான சமபந்தமூர்த்திநாயனார் செல்லும் ஸ்தலங்க ளிலே இடைநாட்களிற் சென்று அவரோடிரு ந்து பின் திருமபிவிடுவார். இப்படி நெடுநாட் சென்றபின், திருஞானசம்பந்தமூர்த்திநாயனா ருடைய திருமணத்தைத்தரிசித்து சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றமபலம்.

# நமிநந்தியடிகணாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, ஏமப்பேறூரில், பிராமணர்குலத்தில, பரமசிவனுடைய திருவடிகளைமிகுந்த அன்போடுவணங்குதலே இன்பமெனக்கொண்ட நமிநந்தியடிகள் என்பவர், ஒருவரிருந்தார். அவர்பலநாளும் திருவாரூருக்குப்போய் வன்மீகநாதரைவணங்குவார். ஒருநாள், வணங்கிக்கொண்டு புறப்பட்டுத் திருமுன்றிலையடைந்து, பக்கத்திருக்கின்ற அரநெறியென்னும் ஆலயத்துட்புகுந்து சுவாமியைநமஸ்கரித்து, இரவிலே அங்கே எண்ணில்லாததீபமேற்றுதற்கு விரும்பி மாலைக்காலமாதலைக்கண்டு, சமீபத்திலே ஓர்வீட்டில் அதுசமணர்வீடென்றுஅறியாமையினாலே புகுந்து, சிவாலயத்தில்விளக்கேற்றுதற்கு நெய்தாருங்கள் என்று கேட்டார். அதற்கு, அவர்கள்கையிலே சுவாலிக்கின்ற அக்கினியையுடைய பரமசிவனுக்கு விளக்குமிகையன்றோ? இங்கேநெய்யில்லை, விளக்கெரிப்பீராகில "நீரைமுகந்து எரியும்" என்றார்கள். நாயனார் அந்தச்சொல்லைப் பொறாதவராகி, சுவாமிசந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்தார்.

அப்பொழுது, ஆகாயத்திலே நமிநந்தியே நீ உன்னுடைய கவலையைநீக்கு, இதற்குச்சமீபத்திலிருக்கின்ற குளத்தில நீரைமுகந்துகொண்டுவந்து விளக்கேற்று என்று, ஒரு அச

நீரிவாக்குத்தோன்றிற்று. நமிநந்தியடிகள் அதைக்கேட்டு, குளத்தில இறங்கிசிவநாமத்தை உச்சரித்து நீரைமுகந்துகொண்டு, திருக்கோயிலிலவந்து அகலிலே அந்நீரைவார்த்து விளக்கேற்றினார். அதுசுடர்விட்டெழுநதது. அது கண்டு, அவ்வாலயமுழுதிலும் சமணர்களெதிரே மிகுந்தகளிப்புடனே நாடறிய நீரினாலே திருவிளக்கெரித்தாா. இதேபிரகாரம் பகல்முழுதினும் திருத்தொண்டுகள்செய்து, இரவிலே எங்கும விளக்கேற்றுவாா.

இப்படிநிகழுங்காலத்திலே, தண்டியடிகளாலே சமணாகள் நாசமடையத் திருவாரூர் பெருமை அடைந்துவிளங்கியது. சோழமகாராஜா நமிநந்தியடிகணாயனாரே அத்தியக்ஷராக வன்மீகநாதருக்கு வேண்டும் நிபந்தங்கள் பலவற்றையும் வேதாகமவிதிவிளங்க அமைத்தார். நமிநந்தியடிகள் வீதிவிடங்கப்பெருமானுக்குப் பங்குனிமாதத்திலே மகோற்சவம் நடத்துவித்தார். நடத்துவிக்கும்பொழுது, சுவாமி, ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருள, சகலசாதியாரும ஒருங்கே சேவித்துப்போனார்கள் நமிநந்தியடிகளும் சேவித்துப்போய், சுவாமி திரும்பித்திருக்கோயிலிலேபுக, நமிநந்தியடிகள் வணங்கிக்கொண்டு, தம்முடைய ஊரையடைந்து வீட்டினுள்ளேபுகாமல் புறக்கடையிலேபடுக்க, மனைவியார்வந்து உள்

ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும், அக்கினிகாரியத்தையும முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளுமெ என்றார். நமிநந்தியடிகள், இன்றைக்குச் சுவாமி திருமணலிக்கு எழுந்தளிய போது, நானும்சேவித்துப்போனேன். சகல சாதியுமகலந்து வந்தபடியால் தீட்டுண்டாயிற்று. ஆதலால், ஸ்நானமபண்ணிப்பிராயசித்தஞ் செய்துகொண்டே உள்ளேபுகுந்து சிவார்ச்சனையைத் தொடங்கல்வேணடும். அதற்கு நீ ஜலமுதலாயின கொண்டுவா என்று சொல்ல, மனைவியாரும் கொண்டுவருமபொருட்டு விரைந்துசென்றார். அப்பொழுது, நமிநந்தியடிகணாயனார் சிறிதுறக்கமவர, நித்திரைசெய்தார். வீதிவிடங்கப்பெருமான, அவருக்குச் சொர்ப்பனத்திலே தோன்றி, திருவாரூரிலே பிறந்தவர்களெல்லாரும் நமமுடைய கணங்கள், அதை நீகாண்பாய் என்றுசொல்லிமறைந்தருளினர். நமிநந்தியடிகள் விழித்தெழுந்து, எழுந்தபடியே சிவார்ச்சனையைமுடித்து, மனைவியாருக்கு நிகழ்ந்ததைச்சொலலி விடிந்தபின், திருவாரூருக்குப்போய், அந்தத்திருப்பதியிலே பிறந்தவர்களெல்லாரும் சிவசாரூப்பியமுள்ளவர்களாய்ப் பிரகாசிக்கக்கண்டு, பூமியிலேவிழுந்து நமஸ்கரித்து, அவர்கள், அவ்வுருவம் நீங்கி முன்போலாயினமையுங்கண்டு, அடியேன் செய்த குற்றத்தைப்பொறுத்தருளும் என்று

சுவாமியைப் பிரார்த்தித்தார். பின்பு, திருவாரூரிலேதானே குடிபுகுந்து, நெடுங்காலம் சிவனடியார்களுக்கு வேண்டுவன எல்லாவற்றையும் செய்துகொண்டிருந்தமையால், தொண்டர்களுக்கு "ஆணிப்பொன்" என்று திருநாவுக்கரசுநாயனாராலே தேவாரப்பதிகத்திலே சிறப்பித்துப்பாடப்பட்டார். இவர், இந்தப்பிரகாரம் சமஸ்தலோகங்களும் தொழும்படி திருப்பணிகளைச்செய்துகொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

திருநின்றசருக்கம் முற்றுப்பெற்றது.

---

முந்தாவது

வம்பறவரிவண்டுச்சருக்கம்.

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே. மிகுந்த வளப்பத்துடன் வீறிவிளங்குப, சீகாழிபபதியில வாழும பிராமணகுலோத்துங்கராய்க் கௌணிய கோத்திர வுற்பவராகிய சிவபாதவிரதயரும், அவாமனைவி பகவதியாருஞ் செய்ததபோபலத்தினால, உலகமுய்யுமபடி தோணியபபா அருள்செய்யத்திருவாதிரைநக்ஷத்திரத்தில் திருவவதாரஞ்செய்து, ஆளுடைய பிள்ளையாரெனனுந் திருநாமமபெற்றுவளாந்து, மூன்றும்வயதில், சிவபாதவிரதயர் ஸ்நானஞ்செய்யச் செல்லுமபோது, அவருடன் எழுநதருளி, அவா தீாத்தக்கரையி லிருக்குமபடி வைத்துத தீர்த்தத்துக்குள் மூழ்கி அகமருஷண மந்திரஞ் செபித்து எழுவதற்குமுன், பிள்ளையாருக்குப் பண்டையுணாச்சி உணடாய்ச் சுவாமியினுடைய திருவடியைப்பிரிந்திருக்கு மனவருத்தத்தை யுட்கொண்டு, பிதாவைக் காணுமையால், குழநதை அழுங்குறிப்புபபோலத் தோணியபபாா வீற்றிருக்கும், ஆலயத்தின் சிகர

ந்தைநோக்கி "அம்மேயப்பா" வென்று கண்ணீர் பெருக விட்டுக்கொண்டிருக்கக் கண்டு, தோணியப்பார் திருவுளமிரங்கிக் கிருபைகூர்ந்து ரிஷபவாகனத்தின்மேல், பாாவதிசமேதரா யாரோகணித்துக்கொண்டு வந்து, திருமுலைப்பால கொடுக்கும்படி பாாவதிதேவியாருக்குக் கட்டளையிட, அமமையாா சமீபத்தில வந்து, பொற்கிணணத்தில், திருமுலைபபாலுடன் ஞானமாகிய அமுதமுங்கலநது தந்தருளவுணடு, அழுகைதீர்நதிருக்கையில, பிதா வநது பார்த்து, இப்பால் கொடுத்தவர்கள் யாவரென்று பயமுறுத்திக் கேட்கையில், இவர் கொடுத்தாரென்று கைவிரலாற்சுட்டித் "தோடுடைய" செவியனென்னுந் திருத்தேவாரப் பதிகமோதிச் சுவாமியைக்காட்ட, அவர் ஆனனந்தமடைநதனர்.

அன்றுமுதல், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் என்னுந் திருநாமங்கொண்டு, ஆலயத்திற்சென்று தரிசித்துப்பிதாவானவர், தம்தோளிலேந்திக்கொண்டுவரத் திருமாளிகையிலெழுந்தருளியிருந்து, பின்பு, திருக்கோலக்கா என்னுந தலத்துக்கெழுந்தருளித் திருக்கரங்களையொத்தித் திருப்பதிகமோதுகையில், சுவாமி கிருபைகூர்ந்து பொற்றாளங் கொடுத்தருளப் பெற்றுக்கொண்டு, வணங்கித்திருப்பதிகமோதித் துதிசெய்து முன்போலத் திருமா

ளிகையில்வந்திருந்து, காலந்தோறுந் தோணியப்பார் சந்நிதிக்கெழுந்தருளித் தேவாரமோதித்துதிசெய்துகொண்டு வீற்றிருக்கும்போது, நாயனாருடைய தாயார் ஜனனக்ஷேத்திரமாகிய திருநனிபள்ளியிலிருக்கும் பிராமணர்கள்வந்து நாயனாருடைய திருவடிகளை வணங்கித் தங்கள் பதிக்கெழுந்தருளிவந்து, பரமசிவனைத்தொழல வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் திருவுள்ளமிசைந்தருளித் தோணியப்பாரைத் தரிசித்துத் தேவாரமோதித் துதித்து விடைபெற்றுக்கொண்டு, திருநனிபள்ளியேயன்றி, மற்றக்ஷேத்திரங்களிலுஞ்சென்று, பரமசிவனைத்தரிசிக்கவுள்ளங்கொண்டு, திருநனிபள்ளியிற்சேர்ந்து, பரமசிவனைத்தரிசித்துத் திருப்பதிகமோதியங்கு வீற்றிருக்குமநாளில், திருத்தலைச்சங்காடு என்னும பதியிலிருக்கும் பிராமணர்கள் யாவரும் வந்துசேர்ந்து, நாயனாரைக்கண்டு தரிசித்துப் புகழ்ந்து தங்கள் திருப்பதிக்கெழுந்தருள வேண்டுமென்ன, அவர்களுடன் சென்றருளி ஆலயத்தையடைந்து, சிவபெருமானைத்தரிசித்துத் தேவாரமோதித்துதித்து, அங்கிருந்து திருவலம்புரம்,திருச்சாய்க்காடு, திருவெண்காடு, தென்திருமுல்லைவாயிலென்னுந் தலங்களிற்சென்று தரிசித்துத்திருப்பதிகமோதி,மீண்டும் சீர்காழிக்கெழுந்தருளி, அங்கு நின்றும் புறப்பட்டுச்

சென்று, திருமயேந்திரப்பள்ளி, திருக்குருகா வூருள்ளிட்ட ஸ்தலங்களிலும், இன்னும் சமீபத்திலிருக்குந் தலங்களிலுஞ்சேர்ந்து, சுவாமியைத்தரிசித்துத் திருப்பதிகமோதிச்சாத்தி, சீகாழியிலவந்து தோணியப்பரைத் துதிசெய்துகொண்டிருந்தனர்.

இப்படியிருக்குநாளிலே, திருநீலகண்டயாழ்ப்பாணர்,பத்தினியாருடன் வந்ததைக்கேள்விப்பட்டுப் போயழைத்துக் கொண்டுவந்து, தோணியப்பர் ஆலயத்தின் கோபுரவாயிலுக்குச்சமீபத்திற்போய்த்தரிசனஞ் செய்வித்துவந்து, வேறேயிடங்கொடுத்து விருந்துசெய்வித்து உபசரிக்க, திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார், ஆளுடையபிள்ளையாரருளிச்செய்த திருப்பதிகங்களை அடியேன் யாழிலமைத்து வாசிக்கும்படி கட்டளையிட்டருளலவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நாயனார் மகிழ்ச்சியுடன் சம்மதித்ததனால், அன்றுமுதல திருநீலகண்டயாழ்ப்பாணர், திருப்பதிகங்களை யாழிலமைத்து வாசித்துக்கொண்டு நாயனாரைவிட்டுப் பிரியாமலிருக்கையில், நடராஜ மூர்த்தியைத்தரிசிக்கவேண்டுமென்னு மன்புமேலிடச்சிதம்பரத்துக்கெழுந்தருளி, ஏழ்நிலைகோபுரங்களைக்கண்டவுடன் விழுந்துபணிந்து, உள்ளெழுந்தருளிப் பிரதக்ஷணஞ்செய்து, நடராஜமூர்த்தியைத் தரிசித்துத்திருப்பதிகமோதியான

ந்தபாஷ்பம் பெருகப்பரவசமடைந்து விடை
பெற்றுக்கொண்டு, புறம்போந்து, அங்குவசிப
பதற்கஞ்சித் திருவேட்களத்திற்சென்று பரம
சிவனைத்தரிசித்துப் பதிகமோதித் துதிசெய்
து விடைபெற்றுக்கொண்டு வந்து,வசிக்குமிட
மந்தத்தலமாக உட்கொண்டு,அங்கிருந்து நட
ராஜமூர்த்தியைத் தரிசனஞ்செய்துகொண்டி
ருக்குநாளில, தில்லைவாழந்தணாகள் நடரா
ஜமூாத்தியை அருச்சிக்குமபடியான பேறுபெ
ற்றாகளே. என்னுங்கருத்துடன், ஒருநாள்
சிதமபரத்துக்கெழுந்தருளுகையில, தில்லைவா
ழந்தணர்கள் சிவகணங்களா யிருக்கக்கண்டு,
தரிசித்து யாழ்ப்பாணருக்குங் காண்பித்து,
சிற்சபைக்கெழுந்தருளி நடராஜமூர்த்தியைத்
தரிசித்துத் திருப்பதிகமோதித் துதிசெய்து
விடைபெற்றுக்கொண்டு, புறமபோந்து, திருநீ
லகண்டயாழ்ப்பாணர் வேண்டுதலினால், அவ
ருடைய ஜனனபூமியாகிய, திரு எருக்கத்தம்
புலியூர் முதலாகிய சிவஸ்தலங்களிற் சென்று
சேர்ந்து, முறைப்படி சுவாமியைத்தரிசித்துப்
பதிகமோதித்துதிசெய்து, பின்பு, திருமுது
குன்ற மென்னும் விருத்தாசலத்தைச் சேர்ந்
தருளி, இறைவரைவணங்கித் திருப்பதிகமோ
திச்சாத்தி, சிலநாளங்குவீற்றிருந்து புறப்பட்
டு, திருப்பெண்ணாகடமென்னுந் தலத்திற்செ
ன்று, அங்குதிருத்தூங்கானை மாடம் என்னும்

ஆலயத்தில வீற்றிருக்கின்ற சுவாமியைத்தொ
ழுது, திருப்பதிகமோதித்துதித்து, அங்கிருந
்தெழுந்தருளித் திருநெலவாயி லரத்துறைக்
குப்போக விரும்பி, திருவடிவருந்தப் பையப்
பையச்சென்று, அன்றிரவு பிள்ளையார அடி
யாரகளோடும அப்பதியிலேயே தங்கினார்.

திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற கட
வுள், தமமுடைய திருக்குமாரராகிய திருஞா
னசம்பந்தமூர்த்தி நாயனாருடைய வழிவருத்
தத்தைத் திருவுளத்தடைத்து, அவர ஏறுத
ற்கு முத்துச்சிவிகையும, நிழலுக்கு முத்துக்
குடையும, ஊதுதற்கு முத்துச்சின்னங்களு
ம கொடுத்தருளத் திருவுளங்கொண்டு, அந்த
ஸ்தலத்தில இருக்கின்ற பிராமணாகளுக்கெல்
லாம தனித்தனியே சொப்பனத்திலே தோ
ன்றி, நம்மிடத்துக்கு வரும "ஞானசம்பந்த
னுக்கு இவைகளைக்கொண்டுபோய்க் கொடுங்
கள்" என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார்.
உடனே, பிராமணாகள் விழித்தெழுந்து,மகிழ்
ந்து, ஆலயத்திலேவந்து திருக்காப்பைநீக்கி,
முத்துச்சிவிகை முதலியனவற்றையுங்கண்டு
வியந்து, வாத்தியங்கள்முழங்க, சிவனடியார்க
ள் ஹர ஹர என்னும ஓசையொலிக்க ஆளு
டையபிள்ளையாரிடம் சென்று, வணங்கி நின்
று, இவைதிருவரத்துறையில் வீற்றிருக்கின்ற
கடவுள் தந்த பொருள்கள், ஏற்றருளும என்

ரார்கள். பிள்ளையார் தாம்கண்ட சொப்பனத்தின்படி அதைக்கேட்டுத் திருவருளை வியந்து "எந்தையீசனெம்பெருமான்" என்னுந்திருப்பதிகம்பாடி, திருவருள் வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ்செய்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, உலகமெல்லாம் உய்யும்படி அதில் ஏறியருளினார்.

அதன்பின்னர், முத்துச்சிவிகையில் எழுந்தருளித் திருவரத்துறையிற்சென்று சிவிகை விட்டிழிந்து, சிவசந்நிதியிற்போய் முறைப்படி வணங்கிப் பதிகமோதித்துதிசெய்து, சிலநாளங்கிருந்து, மறுபடியும் சீர்காழிக்கெழுந்தருளும்போது, திருப்பழுவூர், திருவிஜயமங்கை, திருவைகாவூர், திருப்புறம்பயம், திருச்சேய்ஞலூர், திருப்பனந்தாள், திருப்பந்தணைநல்லூர், திருவோமாம்புலியூர், திருவாளொளிபுற்றூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் என்னுந்தலங்களில் சுவாமியை தரிசித்துத்திருப்பதிகமோதித் துதிசெய்து, சீர்காழியிற்போய்ச்சேர்ந்து, தோணியப்பரைத் தரிசித்துத்திருப்பதிகம்பாடிக்கொண்டங்கிருந்தனர்.

இருக்குநாளிலே, உபநயனப்பருவம்வர, பிராமணர்கள் உபநயனஞ்செய்துவைக்க இசைந்து, வேதமுதலிய கலைகளையெல்லாம் ஓதாதுணர்ந்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்திருப்பதிகம்

அருளிச்செய்து துதித்து, அங்கிருக்குநாளில், திருநாவுக்கரசுநாயனார், அங்குவருவது கேள்விப்பட்டு, பிள்ளையார் எதிர்கொண்டுவரக்கண்ட நாயனார் வணங்க, அப்பரே, எழுந்தருளுமென்று தமது இரண்டுகையினாலுமெடுத்து உபசாரத்துடன் அழைத்துக்கொண்டு வந்து தோணியப்பரை இருவருந்தரிசித்து, அப்பமூர்த்தி சிலநாளிருந்து சென்றருளினபின்பு, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அங்கமர்ந்து, காலங்கள்தோறும் தோணியப்பரைத் தரிசித்துக்கொண்டிருக்கும் நாளில், திருமொழிமாற்று, திருமாலைமாற்று, திருவழிமொழி, திருவேகபாதம், திருவெழுகூற்றிருக்கை முதலிய சித்திரக்கவிப்பதிகங்களோதித் துதிசெய்து, பின்பு, மற்றத்தலங்களிலும்போய் தரிசிக்கத் திருவுளங்கொண்டு, பிதாவுக்குத் தெரிவிக்க, அவர் நானுங்கூடவருகிறேன் யாகஞ்செய்யப் பொருளும் வேண்டுமென்னச் சம்மதித்துப் புறப்பட்டுத் திருக்கண்ணார்கோயில், திருப்புள்ளிருக்குவேளூர், திருநின்றியூர், திருப்புன்கூர், திருமண்ணிப்படிக்கரை, திருக்குறுக்கை, திருவன்னியூர், திருப்பந்தணைநல்லூர், திருமணஞ்சேரி, திருவெதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருக்கோடிகா, கஞ்சனூர், திருமங்கலக்குடி, திருவியலூர், திருத்தேவன்குடி, திருவின்னம்பர், திருக்குரங்காடுதுறை,

திருப்பழனம், திருவையாறு, திருப்பெரும்புலி யூர, திருநெய்த்தானம, திருமழபாடி, திருக் கானூர, திருவன்பிலாலந்துறை, திருமாந் துறை என்னுந்தலங்களிலுமற்றுஞ் சிவ ஸ்த லங்களிலும் சென்றருளிச் சிவபெருமானைத் தரிசித்துத் திருப்பதிகங்களோதித்துதித்து, திருப்பாச்சிலாச்சிராமத்துக் கெழுந்தருளும போது, அங்குக்கொல்லிமழவ னென்னுமொ ரு அரசன்மகளுக்குச் சம்பவித்திருக்கும் முய லகனென்னுங் குமரகண்டவலி அப்போது கண்டு எவ்விதத்திலுந தீராமையால், மனவ ருத்தமுற்று அவன் சிவநேசமுள்ள சந்ததி யானகையால், அக்கன்னிகையைச் சிவாலய த்திற்கொண்டுவந்து போட்டுவைத்தான்.

அத்தருணத்தில், திருஞான சம்பந்தமூர் த்திநாயனார், எழுந்தருளுவதைத் திருச்சின்ன வோசையால் அறிந்து, நகரத்தையலங்காரஞ் செய்யும்படி உத்தரவுசெய்து, எதிர்கொண்டு போய்வணங்கினன். நாயனார், நகரத்துக்கு ளெழுந்தருளிக் கோபுரவாயிலின்புறம்பு மூத் துச்சிவிகையை விட்டிழிந்து பணிந்து, ஆலய த்துள்சென்று பிரதக்ஷணஞ்செய்து சுவாமி சந்நிதானத்துக்கு எழுந்தருளும்போது, அக் கன்னிகை சவம்போலிருப்பதைநோக்கி, இது என்னென்று வினவ, அவ்வரசன்தொழுது, இ வ்வென்புதல்விக்கு முயலகநோய்கண்டு எவ்

விதத்திலுந் தீராமையால், இங்குகொண்டுவந்
தேனென்றான். அவ்வார்த்தைகேட்டவளவி
ல, கிருபைகூர்ந்து "துணிவளர்திங்கள்" என்
னுந் திருப்பதிகமோதித் துதிசெய்தபோது,
அக்கன்னிகை வியாதி நீங்கியெழுந்து தன்பி
தாவருகிற்போய் நின்றாள். அரசன்கண்டு ஆ
னந்தமடைந்து தன்மகளுடன்வந்து திருஞா
னசம்பந்தமூர்த்தி நாயனார் திருவடிகளைவண
ங்கக்கண்டு கிருபைசெய்து, பின்பு, சிவசந்நிதி
க்குள்போய்ப்பணிந்து திருப்பதிகமோதித்து
திசெய்துவிடைபெற்றுக்கொண்டுவந்து, அத்த
லத்தில சிலநாளமாந்திருந்து புறப்பட்டுத் தி
ருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை, திருக்கொ
டிமாடச்செங்குன்றூர், திருநணா இத்தலங்க
ளிற்சென்றருளிப பதிகமோதித் துதிசெய்தும
றுபடியும், திருக்கொடிமாடச்செங்குன்றூரில
வந்து வீற்றிருக்கும்போது, குளிர்காலமணை
ய, அக்காலத்தில், அங்கிருப்பவர்களுக்கு வரு
ஷந்தோறுங் காண்கிறநளிர்சுரம் தம்முடன்
வந்திருக்குந் திருக்கூட்டத்தாருக்குங் கண்ட
தறிந்து "அவ்வினைக்கிவ்வினை" என்னுந் திரு
நீலகண்டப்பதிகமோதித்துதிசெய்ய, அப்பி
ணியானது, திருக்கூட்டத்தாரைவிட்டு நீங்கி
னதுமன்றி, அந்நாட்டிலிருப்பவர்களையும் வி
ட்டொழிந்தது.

பின்னர், சிலநாளங்குவீற்றிருந்து சுவாமி யிளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புறப்ப ட்டுத்திருப்பாணடிக்கொடுமுடி,திருக்கருவூர, திருபபராய்த்துறை, திருமூக்கீச்சரம,திருச்சி ராபபள்ளி, திருவானைக்கா, திருமயேநதிரப்ப ள்ளி, திருவாரூர், திருப்பாற்றுறை, திருநெடு ங்களம, மேலைத்திருககாட்டுபபள்ளி, திருவா லம்பொழில், திருபபூநதுருததி, திருக்கணடி யூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, தி ருவெணணி, திருச்சககரப்பள்ளி, திருபபுள் ளமங்கை, திருவாலநதுறை, திருநல்லூர், தி ருக்குருகாவூர், திரு அவளிவணலலூர, திருப் பருதிநியமம, திருஆலூப்பசுபதீச்சரம, என் னுநதலங்களிற்சென று பரமசிவனைத்துதிசெ ய்து பதிகமோதி விடைபெற்றுக்கொணடு, தி ருவலஞ்சுழிக்கெழுநதருளிச் சுவாமியைத்த ரிசித்துப் பதிகமோதித் துதிசெய்து அங்குவீ ற்றிருக்கும நாளில், முதுவேனில காலம்வந் தது. அப்படியிருக்க, நாயனுர் திருச்சத்திமு ற்றத்திறைவனைத்தரிசிக்க வேண்டுமென்னும் விருப்பத்தால், புறப்பட்டுச்சென்று பரமசிவ னைத்தொழுது பதிகமோதி விடைபெற்றுக் கொணடு, திருப்பட்டீச்சரத்துக் கெழுநதரு ளும்போது, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனு ருக்குத் தெரியாவண்ணம் சிவபூதங்கள் முத் துப்பந்தரைக் கொண்டுவந்து, வெயில்வெபப

ந்தணிப்பதற்குப் பரமசிவன் கட்டளையிட்ட னுப்பியதென்றுசொல்லுமொலியும பாதருமா காயத்திற் றோன்றநோக்கி, இதுவும் நம்மிறை வர் கட்டளையாகில், ஏற்றுக்கொள்ள வேண டுமென்றிசைந்து, சிவிகைவிட்டிழிந்து பணிந் தபோது, அந்தமுத்துபபாதர்களைப் பரி சனத்தார்கைக்கொள்ள, அங்கிருந்து மெழுந் தருளித் திருப்பட்டீச்சரத்திற்சேர்ந்து, ஆல யத்துட்போய்ச் சுவாமியைத்தரிசித்துப் பதி கமோதித்துதிசெய்து விடைபெற்றுக்கொண் டு, புறத்திலவந்து சிலநாளங்கமர்ந்து புறபபட் டுத் திருவாறைவடதளி, திருவிரும்பூளை, திரு வரதைப்பெரும்பாழி, திருச்சேறை, திருநல் லூர்மயானம்,திருக்குடவாயில், திருநறையூர், திருப்புத்தூர்,திருச்சிவபுரம்,திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந் தைக்காரோணம், திருநாகேச்சரம, திருவிடை மருதூர்,திருக்குரங்காடுதுறை, இத்தலங்களி லெல்லாம் பரமசிவனைத்தரிசித்துப் பதிகங்க ளோதித் துதிசெய்து, திருவாவடுதுறைக்கெழு ந்தருளி சிவபெருமானைத் தரிசித்துப் பதிக மோதி அங்குவீற்றிருந்தனர்.

அந்நாளில், சிவபாதவிரதயர் வேள்வி செ ய்யுங்கால மிதுவாகையால், தமக்குப் பொரு ள்வேண்டுமென்றுசொல்லத் திருஞானசம்பந் தமூர்த்திநாயனார் ஆலயத்துக்கெழுந்தருளித்

திருப்பதிகமோதித் துதிசெய்தவளவில், பரமசிவன் கட்டளையால, ஆயிரம்பொனனுள்ள வொருமுடிச்சை ஒருபூதங்கொண்டுவந்து பலிபீடத்தின்மேல்வைத்துத் திருஞானசமபந்தமூர்த்திநாயனாருக்கெதிரில் நின்று, இந்தப் பொன்முடி யெடுக்க வெடுக்கக் குறையாத உலாவாக்கிழி, இதனைப் பரமசிவன் கட்டளையின்படி, உமக்குக் கொண்டுவந்தேனென்று சொலல, நாயனார் பணிந்தெடுத்துத் தமது திருமுடிமேல வைத்துக்கொண்டு, பிதாவின் கையிற்கொடுத்து, நீர யாகஞ்செய்வதற்குமாத்திரமேயன்றிச் சீகாழியிலிருக்கும் பிராமணாகள் யாவருமேசெய்ய வுதவுமென்றுசொல்லி உத்தரவுகொடுத்து அனுப்பிவிட்டு, அங்குசிலநாள் வீற்றிருந்து புறப்பட்டுத் திருக்கோழம்பம், திருவைகன்மாடக்கோயில், முதலியசிவஸ்தலங்களுக்குப்போய்த்தரிசித்துப்பதிகமோதித்துதித்து, திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய தாயின் ஜனனக்ஷேத்திரமாகிய திருத்தருமபுரத்துக் கெழுந்தருளின விடத்தில், அவருடைய சுற்றத்தார்வந்து வணங்க, அவாகளைநோக்கி, நாயனாருளிச்செய்யும் பதிகங்களை யாழிலமைத்து வாசிக்குமபேறு பெற்றிருக்கின்றேனென்றுசொல்ல, அவர்கள்கேட்டு, நீர்யாழிலடைத்து வாசிப்பதனாலே அந்தப்பதிகம் தேசமெங்கும் விளக்க முற்றிருக்கின்றன

வென்று சொலல, யாழ்பபாணர் அஞ்சி, உட
னே நாயனாரிடம விண்ணபபமபண்ணி, யாழி
லமையாவண்ணம் ஒருபதிகம கட்டளையிட்
டருளலவேண்டுமென்ன, அவ்வாறே யாழ்மு
ரியாகிய "மாதாமடபபிடி" என்னுந் திருபப
திகம அருளிச்செய்யப பாணனா யாழிலமை
த்துவாசித்து, இசைவுபடாமையால பயந்து,
இந்தயாழினையெடுத்ததினால அல்லவோ வாசி
ப்போமென்னு மெண்ணங்கொள்ள விசைந்த
தென்று அதனை யெடுத்துடைக்க மேலே
யோங்கினபோது, நாயனா தடுத்துப் பதிகம
சிவகிருபையால் வருவதாதலினால், ஒருவாறு
இயன்றமட்டும வாசிக்கவேண்டுமென்று சொ
ல்லிக்கொடுத்தருள, அதை, வணங்கி வாங்
கிக்கொண்டு துதிசெய்தனா.

பிள்ளையாா, அதற்குபபின்புறப்பட்டுச்சிவ
ஸ்தலங்களிற்போய்த் தரிசித்துப் பதிகமோதி
த்திருச்சாத்த மங்கைக்கு எழுந்தருளினவிட
த்தில், பிராமணகுல சிரேஷ்டராய்ச் சிவநேச
முள்ள திருநீலநக்கநாயனார் எதிர்கொண்டுவந்
து வணங்கி, அழைத்துக்கொணடுபோகச் செ
ன்று, பரமசிவனைத்தரிசித்துப் பதிகமோதித்
துதிசெய்து, நாயனா திருமாளிகையிற் றிரு
வமுதுகொண்டு, அங்குநின்றிருந்து புறப்பட்
டுக் கடவூருக்கைக்காரோணமுதலியஸ்தலங்களை
த்தரிசித்துக்கொண்டு எழுந்தருளும்போது,

சிறுத்தொண்டநாயனார் திருச்செங்காட்டங்குடியிலிருந்து எதிர்கொண்டுவந்து வணங்கி, அழைத்துக்கொண்டுபோகச்சென்று, சுவாமியைத்தரிசித்து, அந்நாயனாரைச் சிறப்பித்துப் பதிகமோதித் துதிசெய்து, சிறுத்தொண்டநாயனார் திருமாளிகையில் திருவமுதுகொண்டு மகிழ்வுடன் வீற்றிருந்து, திருமருகலுக்கெழுந்தருளிச் சுவாமியைத்தரிசித்துத்திருப்பதிகமோதித் துதிசெய்து வீற்றிருந்தனர்.

அங்குஒருநாள்தரிசனத்துக்கெழுந்தருளும்போது, ஒருவணிகன், ஒருகன்னிகையை அழைத்துக்கொண்டு மதுரைக்குப்போவதற்காக வருகின்றவன், அந்தத்திருமருகலில்வந்து அன்றிராத்திரி ஒருமடத்தில் தங்கியிருக்கையில, சாப்பந்தீண்டியிறந்துவிடவே, அந்தக்கன்னிகை புலம்பிக்கொண்டிருக்கக்கண்டு, தரிசனத்துக்கெழுந்தருளும் பிள்ளையார் திருவுளமிரங்கி அம்மடத்துள்செல்ல, அவள்கண்டு பின்னுமதிகமாகத் துயருறும்போது, நீ அஞ்சவேண்டாமென்று சொல்லி, நீங்கள் யாவர்கள், எங்கிருந்து வந்தீர்கள்; என்றுவினவலும், வைப்பூர் என்னும் பதியில்வாழுந்தாமன் என்னும் என் பிதாவுக்கு என்னுடன் ஏழுபெண்களுண்டு, அவர்களில் மூத்தபெண்ணைத் தன்னுடன்பிறந்தாள் பிள்ளையாகிய இவனுக்கு விவாகஞ் செய்துகொடுக்கிறதாக நிச்சயித்திருந்தவ

ன், பொருள் அபேக்ஷயால மற்றொருவனுக்குக் கொடுத்து விட்டதுமன்றி, மற்று மைந்து பெண்களையும் ஒவ்வொருவருக்குக் கொடுத்துவிட்டு, இவனுக்கென்னைக் கொடுப்பதாகநிச்சயித்தவன், முன்போலவே மற்றொருவனுக்குக்கொடுக்க யெத்தனித்ததை இவனறிந்து விசனப்படுவதை நான்பார்த்து, முற்றிலுமோசஞ்செய்வது தாமமல்லவேயென்று இவனை அழைத்துக்கொண்டு இங்கேவந்தவிடத்தில, சர்ப்பந் தீண்டி யிறந்துவிட்டான். தேவரீர் ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணபபஞ்செய்ய க்கிருபைகூர்ந்து "சடையாயெனுமால" என்னுந் திருப்பதிகமருளி அவனைப்பிழைப்பித்து, அவர்களுக்கு மணமுஞ்செய்வித்து, அனுபபிவிட்டு, அங்குவீற்றிருக்கு நாளில, சிறுத்தொண்டநாயனார்வந்து மீட்டுந் திருச்செங்காட்டங்குடிக் கழைத்துக்கொண்டு போகச்சென்றருளிச் சுவாமி சந்நிதியிற்போய்ப் பதிகமோதித்துதித்து, சிலநாளங்கமர்ந்து, பின்பு, சிறுத்தொண்டநாயனருக்குவிடைகொடுத்து, சிவஸ்தலங்கள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு, திருப்புகலூர் தொழச்செல்லும்போது, முருகநாயனர் எதிர்கொண்டுவந்து அழைக்கப்போய்ச் சுவாமியைத் தரிசித்துக்கொண்டு, அவரது திருமடத்தில் எழுந்தருளியிருக்கு நாளிலே, வர்த்தமானீச்சரத்தை வணங்கி,

முருகநாயனாருடைய திருத்தொண்டைச் சிற
ப்பித்துப் பதிகம்பாடி அங்குவீற்றிருந்தனர்.

அங்கிருக்குநாளில், திருநாவுக்கரசுநாயனா
ர், திருவாரூரை வணங்கிக்கொண்டு, திருப்புக
லூரைவணங்குதற்கு அடியார்களோடும் எழு
ந்தருளும் செய்தியைக்கேட்டுப் பேராசையோ
டும்பிள்ளையார் எதிர்கொண்டுபோய்மகிழ்ந்து,
இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி, நலவர
வுகூறிய பிள்ளையார், அப்பமூர்த்தியை நோ
க்கி, நீர் எங்கிருந்தெழுந்தருளுகின்றதென்ன
த்திருவாரூரிலிருந்து வருகிறேனென்றுசொல்
ல, இப்போதங்கு நிகழுஞ் சிறப்புயாதோவெ
ன்றுவினவ, திருநாவுக்கரசுநாயனார் பதிகத்தா
ற்சிறப்பித்துச் சொல்ல, அதுகேட்டு "நான்
திருவாரூருக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ்செ
ய்துகொண்டு மீண்டும், இவ்விடத்திற்குவந்து
உம்முடன் இருப்பேன்" என்று சொல்லித்
திருவாரூருக்கெழுந்தருளிப் புற்றிடங்கொண்
டாரைத்தரிசித்துப் பதிகமோதித்துதிசெய்து,
அறநெறியென்னும் ஆலயத்தையும் வணங்கி,
அங்கு வீற்றிருக்கும் நாளில், திருவலிவலம்,
திருக்கோளிலி முதலாகிய ஸ்தலங்களிற்செ
ன்று, சுவாமியைத்தரிசித்துப் பதிகமோதித்
துதிசெய்து, மறுபடியுந் திருவாரூருக்குவந்து
சிலநாளங்கிருந்து, திருப்புகலூர்க்கெழுந்தரு
ளத் திருநாவுக்கரசுநாயனாரும், முருகநாயனா

ரும் எதிர்கொண்டுவர, பிள்ளையார் அவர்களு
டன் சென்று, சோநது சுவாமியைத்தரிசித்து
அங்கிருக்கையில், திருநீலநக்க நாயனாரும், சி
றுத்தொண்டநாயனாரும்வர, அவர்களுடனுங்
சென்றுசுவாமியைத்துதித்துக்கொண்டிருந்து,
திருநாவுக்கரசுநாயனாருடன் புறப்பட்டுத் திரு
வம்பர், திருக்கடவூர், முதலாகிய ஸ்தலங்க
ளிற்சென்று சுவாமியைத்தரிசித்துத் திருவீழி
மிழலையிற்சென்று தரிசித்துப்பதிகமோதி அங்
குவீற்றிருக்கும் நாளில், மழையின்மையால்,
பஞ்சகாலமநேரிட்டு உயிர்களெல்லாம்வருந
துகையில், பரமசிவன், கருணைகூர்ந்து,இவ்வி
ருவர் சொர்ப்பனத்திலுந்தோன்றி, இப்பஞ்ச
காலத்தால உங்களுக்கு வருத்தமில்லாவிடி
னும், அடியார்கள் பொருட்டு, இரண்டுபொற்
காசு கிழக்குபபீடத்தும், மேற்குப்பீடத்தும
வைக்கின்றோம், அதை நீங்களிருவருமெடுத்
துக்கொணடு வேண்டியபொருள்கள்வாங்கி அ
டியார்கட்கமுதுபடையுங்க ளென்றருள, அவ்
வாறே கிழக்குப்பீடத்துக்காசு திருஞானசம்
பந்தமூர்த்திநாயனாரும், மேற்குப்பீடத்துக்கா
சு அப்பமூர்த்தியு மெடுத்து அடியார்களுக்கு
அமுதுபடைத்துக்கொண்டிருந்து,பின்பு பஞ்
சந்தெளிந்தவுடன் புறப்பட்டு, மத்தியிலிருக்
குந் திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, தி
ருப்பெருவேளூர், திருக்கரவீரம், திருவிளமர்,

திருவாரூா, திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம, திருத்தெங்கூா, திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூா, திருவெண்டுறை, திருத்தண்டலைநீணெறி, திருக்களாமுதலாகிய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு.திருமறைக்காட்டிற்சேர்ந்து வேதம் பூசித்து மூடிப்போனகதவை, அப்பமூர்த்திகளால திறபபித்துப் பின்பு, அதுதிறக்கவு மூடவுமாயிருக்கும்படியாகத் திருஞானசமபந்தமூர்த்திநாயனா திருபபதிகமோதித் துதிசெய்து அங்கிருந்தனா.

அந்நாளில்,மதுரையில் சமணசமய பேலிட்டு, அப்போதிருந்த கூன்பாண்டிய ராஜனும் அதற்குட்பட,பாண்டிநாடெங்கும் சைவசமய மடங்கிப்போகவே, சைவப்பற்று விடாமலிருந்த குலச்சிறை நாயனாராகிய மந்திரியாரும, மங்கையர்க்கரசி யென்னும அவ்வரசன் பத்தினியாரும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருமறைக்காட்டி லெழுந்தருளியிருப்பதைக் கேட்டு, பாண்டிநாட்டில் சமண்பேலிட்டிருப்பதைச் சிலருடன் சொலலியனுப்ப, அவர்கள்வந்து நாயனாரைக்கண்டு தரிசித்துத் தாங்கள்வந்தகாரியத்தைச் சொல்லக்கேட்டு, மதுரைக்கெழுந்தருளி, சொக்கலிங்கப்பெருமானை வணங்கித் திருப்பதிகமோதித் துதிசெய்து அங்கொருமடத்திலிருக்கையில், அன்றிராத்திரி

சமணர்கள் அமைத்ததில் தீயிட்டுக்கொண்டு, இந்தவெப்பம் பாண்டியனைச்சேரக்கடவதென்று பதிகமோதியருளலும், அவ்வெப்பம் பாண்டியனுடலில் சுரவியாதியாய்ச் சேரிட்டுவருந்துகையில், சமணர்களுடைய மணிமந்திர ஒளஷதங்களால் தீராமைகண்டு, மங்கையர்க்கரசியாரும், குலச்சிறைநாயனாராகிய மந்திரியாரும் வேண்டுதலினால், பிள்ளையார் தாமெழுந்தருளி "மந்திரமாவதுநீறு" என்னுந் திருநீற்றுப்பதிகமோதி, அந்த விபூதியைப்பாண்டியன் மேனியிற்பூசியவளவில, அப்பிணி நீங்கிவிட, அரசன் எழுந்து சமணர்களைநோக்கி, நீங்கள் தோற்றீர்களல்லவாவென்ன, அவர்களிந்த ஒருகாரியத்தில் தோற்பு வெற்றி சொல்லக்கூடாது, அவர்களுண்மைப்பொருளையும், எங்களுண்மைப்பொருளையுந் தனித்தனியேட்டிலெழுதி அவ்வேடுகளைத் தீயிலிட்டு, வேகாமலிருப்பது எதுவோ அது உண்மைப்பொருளென்று சொல்லித் தங்களுண்மைப்பொருளை ஒரு ஏட்டிலெழுதித் தீயிலிட்டார்கள்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதியிருக்கும் ஏட்டினையெடுத்து அத்தீயிலிட்டனர். அவ்வாறிட்ட ஏடுகளில பிள்ளையாரிட்ட ஏடு வேகாமல வைத்த

படியேயிருக்க எடுத்துச் சபையோர் காண வைத்தனர்.

சமணர்கள், தாங்களிட்ட ஏட்டினை யெடுக்கும்போது சாம்பராய்விட்டது. அதன்பின்பு, பாண்டியன் அவர்களைநோக்கி யிப்போதும் தோற்றீர்களேயென்ன, அது நிஜமே, தோற்றவர்கள் முற்றிலுமே தோற்றவர்கள் ஆதலால், முன்போல எங்களிருவர் சமயக்கோட்பாட்டின் உண்மையையெழுதி அவ்வேடுகளை வைகையாற்றில்விட்டு, எதிரேற்று ஓடுமானால் அதுவே உண்மையென்று சொல்லியவளவில், மந்திரியார் இப்போதும் தோற்றீர்களானால் என்னசெய்வதென்னக் கழுவிலேறுகிறோமென்று வாய்தவறிச் சொல்லிவிட்டார்கள். அதற்குமேல், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் "வாழ்கவந்தணர்" என்னும் பாசுரமுதல் பத்துத்திருப்பாசுரமுந் திருக்கடைக்காப்பும் எழுதி, அவ்வேட்டினை வைகைநதியில்விட, அவர்கள், தாங்களுண்மையாகக் கொண்டிருக்கும் பொருளை எழுதிய ஏட்டினையும் வைகைநதியில்விட்டார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரிட்ட ஏடு வெள்ளத்துக்கெதிரிட்டுச் சென்றது. சமணர்களிட்ட ஏடு வெள்ளத்தின்வழியேசென்று அவர்கள் கைக்ககப்படாமற்போய்விட்டது. எதிரேற்றுச்செல்லும் ஏடு அதிவிரைவிற் செல்லுகின்றமையால், மந்திரியார்

கிய குலச்சிறைநாயனார் குதிரைமேலேறிக் கொண்டுபோய்த் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரருளிச்செய்த தேவாரத்திலை திரு ஏடகமென்னுந் தலத்துக்கருகேகிறக்கக்கண்டு, எடுத்துவரச் சமணர்கள்கண்டு தங்கள் வாக் காலசொலலிய வண்ணமே கழுமரத்திலேறி விட்டார்கள். "வேந்தனுமோங்குக" என்னுந் திருவாக்கினுண்மையால், பாண்டியராஜன கூனுநிமிர்ந்தது இந்தச் செய்கைகளைக்கண்டு திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை யாவரும துதிசெய்து அற்புதமடைந்து விபூதிதரித்துக் கொண்டு சைவசமயத்தரானார்கள்.

அதன்பின்னா, பிள்ளையார பாண்டியரா ஜன் முதலானவாகளுடன் சொக்கநாதசுவா மியைத் தரிசித்துத் தேவாரமோதிப் பாண் டியநாட்டிலிருக்கும் திருப்பரங்குன்றம், திரு வாப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திரு க்கானப்பேர், திருச்சுழியல, திருக்குற்றாலம, திருக்குறும்பலா, திருநெல்வேலி, இராமேச் சரம் முதலிய ஸ்தலங்களைத்தரிசித்து வணங் கிக்கொண்டு, அங்கிருந்தே ஈழமண்டலத்திலு ள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என் னுந் தலங்களை வணங்கித் திருப்பதிகம்பாடி, பின் திருவாடானை, திருப்புனவாயில் என்னு ந்தலங்களைவணங்கி, குலச்சிறைநாயனாருடை ய ஊராகிய மணமேற்குடியை அடைந்து, அ

தற்குச்சமீபத்திலுள்ள மற்றஸ்தலங்களுக்கு மெழுந்தருளித் தரிசித்துப்பதிகமோதித் துதி செய்து, அவ்விடம்விட்டுச் சோழநாட்டிலிரு க்கும் தலங்களைத் தரிசித்துக்கொண்டு முள் ளிவாய்க்கரையை அணைந்தார். அங்கே ஆறு மிகப்பெருகுதலால், திருக்கொள்ளம்பூதூர் எதிரேதோன்ற, அங்கேசென்று சுவாமியைத் தரிசிக்கவிரும்பி, அங்கிருந்த ஓடத்தின்கட் டை அவிழ்த்து, சிவனடியார்களை அதிலே ஏ ற்றிப் பிள்ளையார் "கொட்டமேகமழும்" என் னுந்திருப்பதிகம்பாடி, அக்கரைசேர்ந்து, ஆல யத்திற்சென்று சுவாமியையிணங்கித் துதித் துக்கொண்டு, திருத்தெளிச்சேரி யென்னுந்த லத்துக்கருகில் வரும்போது, பரசமயகோள ரியெழுந்தருளும் திருச்சின்ன வோசையை, அங்கிருக்கும் பௌத்தரில் புத்தநந்தியென் பவன் கேட்டு மனம்பொறுமல்வந்து தடுத்த னன். அந்தச்சேதியை அடியவர்கூட்டத்தி லுள்ள, சம்பந்தசரணாலயரென்பவர் கேள்வி யுற்றுவந்து "புத்தர்சமண்கழுக்கையர்" என் றுமுன்னர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கட்டளையிட்டிருக்கின்ற தேவாரமோதினவ ளவில், அவன் தலையில் இடிவிழவே இறந்து போனன்.

இதுகண்டு, அங்கிருந்த பௌத்தரெல்லா ரும் ஓடிப்போய், மறுபடிச் சாரிபுத்தனுடன்

கூடிவந்து இவ்வாறுசெய்யாமல, வாதினால
வெலலுவதனால இருக்கின்றோமெனனத் தி
ருஞானசமபந்தமூர்த்தி நாயனார் திருக்கூட்ட
த்துடன் அஙகொருமணடபத்திற் சேர்ந்திருக்
கச்சமபந்தசரணாலயர் சுவாமிகளுத்தரவுபெ
ற்றுக்கொணடு, பௌத்தசமயக் கோட்டபாட்
டைக்குறிதது வாதுசெய்கையில, அவர்கள்
தோற்படையக்கணடு, அவர்கள் எலலாருக்
கும விபூதிகொடுத்து தரித்துக்கொளளச்சொ
லலி சைவர்களாக்கிவிடடு, அங்கிருநதுபுறபப
டடு, மற்றஸ்தலங்களிற்சென்று சுவாமியைத்
தரிசித்துத் தொண்டைநாட்டிலவந்து, அஙகி
ருக்குந திருவோததூரிற்சென்று, அஙகு ஆ
ணபனைகளைப பெணபனைகளாக்கியருளிய பி
ன்பு,காஞ்சிபுரமுதலாகிய ஸ்தலங்களிறசென்
று தரிசிததுக் காளத்திக்கெழுந்தருளிப பதி
கமோதித்துதிசெய்து, அங்கிருநத வணணமா
கவே, ஸ்ரீகயிலாயம, திருக்கேதாரம, திருபப
ருபபதம, திருவிந்திரநீலபபருபபதம, திருக்
கோகரணம முதலிய ஸ்தலஙகளுக்குப் பதி
கமோதித்துதிசெய்து, அங்கிருந்து, திருவொ
ற்றியூருக்கெழுநதருளிவநது சுவாமியைத்த
ரிசிததுப பதிகமோதித் துதிசெய்து அஙகு
வீற்றிருக்கையில, திருமயிலையிலவாழும் வை
சியகுலோத்தமராகிய, சிவநேச செட்டியாரு
க்கு சிவகிருபையினால, பூம்பாவை என்னும

ஒருபுத்திரியுண்டாகி வளருநாளில், ஒருநாள் தோழிகளுடன் நந்தனவனத்திற்சென்று மலர் கொய்யும்போது, சர்ப்பந்தீண்டி மணிமந்திர ஔஷதங்களினாலுந் தீராமலிறந்துவிடவே தகனஞ்செய்வித்து, முன்னமே இக்கன்னிகையைத் தனசெல்வத்துடன் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கென்று நியமித்திருந்தமையால், அவரிடத்தில் ஒப்பிவித்துவிடவேண்டுமென்று, தகனஞ்செய்த சாம்பரை அஸ்தியுடன் குடத்தில் வைத்து, அக்குடத்தைக் கொண்டுவந்து கன்னிமாடத்தில் மஞ்சத்தின்மேல் வைத்து முன்போல்தோழிகளுபசாரஞ் செய்துகொண்டிருக்கும்படி செய்தனர்.

இப்படியிருக்குநாளில், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவொற்றியூருக்குவந்திருப்பதைக்கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்து, அங்குபோய் நாயனாரைக்கண்டு சாஷ்டாங்கமாகச்சேவித்துச் சகலாடம்பரத்துடனுந் திருமயிலைக் கெழுந்தருளும்படி பிரார்த்திக்க, பிள்ளையார்வந்து சிவபெருமானைத் தரிசித்துப் பதிகமோதித் துதித்து, செட்டியாரைநோக்கி, அந்தக்குடத்தைக் கொண்டுவரச்சொல்லி "மட்டிட்டபுன்னையங் கானன்மடமயிலை" என்னும் பதிகமோதி, அவ்வெலும்பு பெண்ணாகும்படிச்செய்தருளி, திருவான்மியூர் முதலான மற்றஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு, சீகா

ழிக்கெழுந்தருளியிருக்கையில, பிராமணகிர்த்தியத்தின் பொருட்டு, விவாகஞ்செய்துகொள்ள வேணுமென்று சிவபாதவிருதயா திருநீலநக்கநாயனா முதலான திருத்தொண்டாகள் பிராாத்தித்தமையால், ஒருவாறு சமமதித்து, நல்லூர்பபெருமணத்திலிருக்கும பிராமணகுல சிரேஷ்டராகிய நம்பியாணடாா குமாரதநியை விதிபபடி. சிறப்புடன் திருமணங்கொணடு, ஓமாக்கினியை வலம்வருமபொருடடு எழுந்து, நாம்வலஞ்செய்யத்தக்க அக்கினி பரமசிவனே என்று, மனவியைக் கைபபற்றிக் கொண்டு ஆலயத்துக்குபபோய்க் "கல்லூாப் பெருமணம்" என்னுந திருபபதிகமோதியவளவில, பரமசிவன் கிருபைகூர்ந்து, உன்காதலியோடு நீ நம்மிடத்துக்கு வாவென்றருளினவுடன், அவ்வாலயமுழுதுஞ் சோதியாய் வாயிலைவகுத்துக்காட்ட, நமச்சிவாயத்திருபபதிகமோதி, அங்கு தமது திருமணத்துக்கு வந்திருப்பவர்களை எல்லாம் அதற்குள் போம்படி கட்டளையிட்டருளி, பின்பு, திருஞானசமபந்தப்பிள்ளையார் தமமுடையமனைவியார் கையைப்பற்றியபடியே அந்தச்சோதிக்குள் போய்க்கலநது சிவசாயுச்சியம் அடைந்தனர். அப்பால, சோதிமறைந்து பழையபடி ஆலயமாகவிருநதது.

திருச்சிற்றமபலம்.

# ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, திருப்பெருமங்கலத்திலே, வேளாளர்குலத்திலே, சோழராஜாக்களிடத்திலே பரம்பரையாகச் சேனாதிபதித்தொழிலே பூண்ட ஏயர்குடியிலே, கலிக்காமநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் குருலிங்கசங்கமபத்தியில் சிறந்தவர். திருப்புன்கூரிலுள்ள சிவாலயத்திலே அளவில்லாத திருப்பணிகள் செய்தவர். அவர் சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானைப் பரவையாரிடத்திற்குத் தூதாக அனுப்பிய சமாசாரத்தைக்கேள்வியுற்று, வெம்மபி மிகக்கோபித்து, "பெண்பொருட்டுக் கடவுளை இரவிலே தூதனுப்பிய பாதகனைக் காண்பேனாயின் யாதுசம்பவிக்குமோ" என்று சொல்லி மிகச்செற்றங்கொண்டிருந்தார். சுந்தரமூர்த்திநாயனார் அதனைக்கேள்வியுற்று, அடியார்க்கெளியராகிய பரமசிவனுக்கு விண்ணப்பஞ்செய்ய; பரமசிவன் இருவரையும் கூட்டுதற்குத் திருவுளங்கொண்டு, கலிக்காமநாயனாரிடத்திலே சூலைநோயை ஏவ; அதனால் அவர் மிகவருந்தி வீழ்ந்து, உயிர்த்துணையாகிய பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதிசெய்தார். அப்பொழுது, பரமசிவன் அவரிடத்தில் எழுந்தருளி, "சுந்தரனாலன்றி இந்நோய்தீராது" என்று அருளிச்செய்ய, அ

வர் "எம்பெருமானை அவனாலே தீர்க்கப்படுதலினுந்தீராமற்றாழிந்து என்னை வருத்துதலே நன்று, தேவரீர் செய்யும் பெருமையை அறிந்தவர் யாவர்? வன்றொண்டனுக்கு ஆகும் உறுதியைச் செய்யும்" என்றார். உடனே பரமசிவன் அவர் முன்னேயகன்று, சுந்தரமூர்த்திநாயனாரிடத்திற் சென்று, "நம்முடைய ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலையை நீ போய்த் தீர்ப்பாய்" என்றார். சுந்தரமூர்த்திநாயனார் அதைக் கேட்டுத் திருவுளமகிழ்ந்து, கலிக்காமநாயனாரிடத்திற்குப் போம்படிப் புறப்பட்டு, சூலைதீர்க்கும்பொருட்டு, தாம்வரும் சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்தற்கு முன்னே ஆள் அனுப்பினார். அந்த ஆளினாலே சுந்தரமூர்த்திநாயனாருடைய வரவை அறிந்த கலிக்காமநாயனார், அவன், இங்கேவந்து தீர்த்தற்குமுன்னே இச்சூலையை வயிற்றினோடுங் கிழிப்பேன், என்று உடைவாளினாலே தம்வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்துபோனார். அதுகண்ட அவர் மனைவியாரும் அநுமரணஞ்செய்யப் புகுந்தனர்.

அப்பொழுது, சுந்தரமூர்த்திநாயனார் சமீபத்தில் எழுந்தருளிவந்துவிட்டார் என்றுமுன்வந்தோர் சொல்ல, மனைவியார் "ஒருவரும் அழாதொழிக என்றுசொல்லி, பின்பு" தம்முடைய நாயகரது செய்கையைமறைத்து, சுந்

தரமூர்த்திநாயனாரை எதிர்கொள்ளும்பொருட்டுத் தங்கள் சுற்றத்தார்களை ஏவ; அவர்கள் போய் எதிர்கொண்டு வணங்கினார்கள். சுந்தரமூர்த்திநாயனார் அவர்களுக்கு அருள்செய்து வந்து, கலிக்காமநாயனார் வீட்டிற்புகுந்து, ஆசனத்திலெழுந்தருளியிருந்து, தமக்குச்செய்யப்பட்ட அருச்சனைகளை ஏற்றுக்கொண்டு, கலிக்காமநாயனாரை நான் காணவேண்டும் என்றார். அவர்கள் அதைக்கேட்டு, கலிக்காமநாயனாரைக்காட்ட, சுந்தரமூர்த்திநாயனார் இரத்தஞ்சோரக்குடர்சொரிந்து உயிர்பொன்றிக்கிடந்தவரைக்கண்டு "புகுந்தவாறுநன்று, நானும் இவர்போல இறந்துபோவேன்" என்று சொல்லி, உடைவாளை எடுத்தார். உடனே பரமசிவனது திருவருளினால் கலிக்காமநாயனார் உயிர்த்து எழுந்து, அவர்கையில் வாளைப் பிடித்துக்கொள்ள, அவர்விழுந்து நமஸ்கரித்தார். கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்திநாயனாரை நமஸ்கரித்தார்.

அதன்பின், இருவரும் அதிகநண்புள்ளவர்களாகித் திருப்புன்கூருக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, சிலநாள்சென்றபின்பு, திருவாரூரை அடைந்தார்கள். கலிக்காமநாயனார் சிலநாளங்கே சுவாமிதரிசனஞ்செய்துகொண்டிருந்து, பின்பு சுந்தரமூர்த்திநாயனாரிடத்திலே அனுமதிபெற்றுக்கொண்டு,

தமமுடைய ஊருக்குத் திருமபிவந்து திருத்தொண்டு செய்துகொணடிருநது, சிவபதம் அடைநதார்.

திருசசிற்றமபலம்.

## திருமூலநாயனார்புராணம்.

திருக்கைலாயத்திலே, சிவபெருமானது ஆலயத்துக்கு முதற்பெருநாயகராகிய திருநந்திதேவருடைய திருவருளைப்பெற்ற மாணாக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர், அகத்தியமகாமுனிவரிடத்தே பொருந்திய நண்பினால் அவருடன் சிலநாள் இருக்கவிரும்பி, அவர் எழுந்தருளியிருக்கும்பொதியமலையை அடைதற்பொருட்டு, திருக்கைலாயத்தை அகன்று வழிக்கொண்டு, திருக்கேதாரம, பசுபதிநேபாளம், காசி, ஸ்ரீசைலம, திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சீபுரம், திருவதிகை, சிதம்பரம் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாவடுதுறையை அடைந்து, அங்கே சுவாமி தரிசனஞ்செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள், அந்தத்தலத்தை அகன்றுசெல்லும்பொழுது, காவிரியாற்றங் கரையிலுள்ளவனத்திலே பசுக்கூட்டங்கள் அழுதலை எதிரே கண்டார். சாத்தனூரில் இருக்கின்ற இடையனாகிய மூலனென்பவன் ஒருவன் அவைகளை

மேய்க்கின்றவன். அவன் அத்தினத்திலே, அவ்விடத்தில இறநது கிடநதான். அப்பசுக் கூட்டங்கள் அவனுடைய சரீரத்தை வந்தணைந்து, மிகக்கதறிச் சுழனறு மோப்பனவாக, சிவயோகியாரகண்டு, பரமசிவனது திருவருளினாலே, இப்பசுக்களுடைய துயரத்தை நீக்கலவேணடுமெ என்று ஆலோசித்து, "இவ்விடையன் உயிர்பெற்றெழுநதாலனறிப் பசுக்கள்துயரநீங்கா" என்று திருவுளங்கொண்டு, தம்முடைய திருமேனிக்குக் காவல்செய்து,தாம் அவ்விடையனுடைய சரீரத்தினுள்ளே பிரவேசித்து திருமூலராய் எழுந்தார். எழுதலும் பசுக்களெல்லாம நாத்தழுமபநக்கிமோந்து, கனைத்து, மிகுந்தகளிப்பினாலே வாலெடுத்துத் துள்ளி, பின்புபோய் மேய்ந்தன.

திருமூலநாயனார், அதுகண்டு திருவுளமகிழ்ந்து, அவைகள் மேயுமிடத்திற்சென்று, அவைகளை நன்றாகமேய்த்தார், சூரியன் அஸ்தமனமாக, பசுக்கள் தத்தங் கன்றுகளை நினைத்து, தாமே முன்னையநடந்து, சாத்தனூரை அடைந்தன. சிவயோகியார் அப்பசுக்களுக்குப் பின்சென்று, அவைகளெல்லாம் வீடுகடோறும் போகத்தாம் வெளியிலே நின்றார். மூலனுடைய மனைவி "நாயகர் இன்றைக்குமிகத்தாழ்த்தார்" என்று பயங்கொண்டுசென்று சிவயோகியார நின்ற இடத்தை அடைநது,

"இவருக்கு ஈனம அடுத்தது போலும்" என்று அவருடைய திருமேனியைத் தீண்ட, அவர், அதறகு இசையாராயினா. அவா அச்சுற்று மயங்கி, என்செய்தீா எனறு தளா, திருமூலநாயனா உனக்கு என்னேடியாதொரு சமபநதமும இல்லை என்று மறுத்து, ஒருபொது மடத்தினுள்ளே புகுநது, சிவயோகத்தில் இருந்தார். மனைவி அவ்விரவு முழுதிலும் நித்திரைசெய்யாது கவலைகொணடிருந்து, மற்றநாள் அதனைவிவேகிகள் பலருக்குத் தெரிவிக்க, அவர்கள் வந்துபார்த்து, அவளைநோக்கி, இதுபைத்தியமன்று, வேறு சார்புள்ளதுமன்று. இவாகருத்துச் சிவயோகத்தி னிடத்தேயாம். இனி, இவர் உங்கள் சுற்றவியல்போடுகூடாா என்றார்கள். அவள் அதுகேட்டுத் துயரம எய்திமயங்க, அவர்கள் அவளை அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

சிவயோகத்தில் இருநத திருமூலநாயனார் எழுந்து, முதனாளிலே பசுக்கள்வந்தவழியே சென்று, தாம சேமித்த சரீரத்தைக்காணுது, மெய்ஞ்ஞானத்தையுடைய சிந்தையினுல ஆராய்ந்து, "சிவபெருமான் ஆதிகாலத்திலே தம்முடைய பஞ்சவத்திரத்தினின்றும தோற்றுவித்த காமிகமுதலிய சைவாகமங்களிலே பேசப்பட்ட மெய்ப்பொருளைத் தமிழ்நாட்டில உள்ளவாகளுக்கு உபயோகமாகும் பொ

ருட்டுத் தமியேனைக்கொணடு தமிழினாலே ஒரு நூலசெய்வித்தற்பொருட்டு, அச்சரீரத்தை மறைத்தருளினா" எனறு தெளிநது, திருவருளைத்துதித்து, திருவாவடுதுறையை அடைநது, அங்குள்ள சிவாலயத்திலே பிரவேசித்து, சிவபெருமானைவணங்கி, அதற்குமேற்பக்கத்தில் இருக்கின்ற அரசவிருக்ஷத்தின்கீழேபோய், சிவயோகததில இருநதாா. அவர் மூவாயிரம வருஷமளவும அங்ஙனமிருநது, ஒவ்வொருவருஷத்திற்கு, ஒவ்வொருதிருப்பாட்டாக மூவாயிரந் திருபபாட்டினாலை சைவாகமங்களில உணாத்தபபட்ட ஞானம, யோகம், கிரியை, சரியை என்னும் நான்குபாதங்களையும் பேசுகின்ற திருமநதிரமென்னுந தமிழ் நூலைப்பாடியருளி, பின் திருக்கைலாயத்தை அடைநதார்.

திருச்சிற்றம்பலம்.

---

## தண்டியடிகணாயனார்புராணம்.

சோழமணடலத்திலே, திருவாரூரில், தண்டியடிகணாயனாரென்பவர் ஒருவா இருந்தாா. அவா பிறவிக்குருடர். அவர் தம்முடைய அகக்கண்ணினால், சிவபெருமானைத் தரிசித்துத் தோத்திரம் பண்ணுகின்றவர். எப்பொழுதும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்போடு ஜபி

க்கின்றவர். அந்தத்திருப்பதியிலுள்ள பூங்கோ யிலைக் காலந்தோறும வலஞ்செய்து வணங்கு கின்றவர.

இபபடி யிருக்குநாளிலே, அவ்வாலயத்து க்கு மேற்றிசையிலிருக்கின்ற திருக்குளம்பக்க மெங்கும சமணர்களுடைய பாழிகளாகி, இட த்தினல் குறைவடைந்தமையால், தண்டியடி கள் அதனை அறிந்து, அத்திருக்குளத்தைத் தாம பெருகக்கல்லவேண்டுமெ என்று நினைநது, அவ்விடத்திற்சென்று, திருக்குளத்தினுள்ளே கல்லுமிடத்தில ஒரு தறிநட்டு, அதிலே கயி றுகட்டி, கரையிலும தறிநட்டு, அக்கயிற்றினு னியை அதனில் இசையக்கட்டி, மண்வெட் டியையுங் கூடையையும் எடுத்து, அக்கயிற் றைத் தடவிக்கொண்டுசென்று, மண்ணைக்கல் லிக்கூடையில எடுத்துக்கொண்டு, மீண்டும் அக்கயிற்றைத் தடவிப் போய்க் கரையிலே போடுவார். இப்படித் தினந்தோறும் மிகுந்த விருப்பத்துடன் திருக்குளம் கல்லும பொழு து, சமணாகள் பொறாமைகொண்டு அவரை அணைநது, மண்ணைக்கல்லிற்பிராணிகள் இற ந்துபோம; வருத்தல்வேண்டாமென்று சொ ல்ல; தண்டியடிகள் "அவிவேகிகளே, இது மெய்க்கடவுளாகிய பரமசிவனுக்குச்செய்யுங் குற்றமற்ற புண்ணியம். இதனருமை உங்களு க்கு விளங்குமா" என்றார். அதுகேட்டசமண

ர்கள் நாஞ்சொன்ன தருமமுறையைக் கேட்டாயிலலை. நீ கண்ணையன்றிக் காதினையும் இழந்தனையோ என்றுசொல்ல; தண்டியடிகள் "மந்தபுத்தியும் காணக்கண்ணும கேளாச்செவியும உங்களுக்கே உள்ளன" என்றுசொல்லி, திரிபுரதகனஞ்செய்த கடவுளுடைய திருவடிகளையே யன்றி, வேறொன்றையும நான்காணேன், அதனை யறிதற்கு நீங்கள் யார்! அக்கடவுளுடைய திருவருளினாலே உலகமெல்லாம் அறியும்படி என்கண்காணவும், உங்கள் கண் குருடாகவும் பெற்றால், நீங்கள் யாது செய்வீகள் என்றார். சமணர்கள் நீ உன் கடவுளது அருளினால் கண்பெற்றாயாகில, நாங்கள் இவ்வூரில் இரோம் என்று சொலலி, அவருடைய மண்வெட்டியைப் பறித்து, குறித்த றிகளைப் பிடுங்கி எறிந்தார்கள். தண்டியடிகள் மிகக்கோபங்கொண்டு, திருக்கோயில்வாயிலிலேசென்று நமஸ்கரித்து, "எமபெருமானே, தேவரீரைநிந்தனைசெய்யும அதிபாதகர்களாகிய சமணர்கள், சிவபுண்ணியத்தையும், அதனைச்செய்யப்பெற்ற அடியேனையும, அவமானம செய்தமையால், அடியேன் அதுபொறாது மிகவருநதுகின்றேன். சர்வசாமர்த்தியமுடைய தேவரீர் இவ்வருத்தத்தை நீக்கியருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து, நமஸ்காரஞ்செய்து, தம்முடைய திருமடத்திற் செ

ன்று, துயரங்கொண்டிருந்தார். அன்றிரவு அவர் நித்திரைசெய்யும்பொழுது, பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "தண்டியே, உன்கவலையை ஒழி, நாளைக்கு உன் கண்காணவும், அந்தச்சமணர்களுடைய கண்கள் மறையவும் அருள்செய்வோம் பயப்படாதொழி" என்று அருளிச்செய்து, சோழராஜாவுக்கும் சொர்ப்பனத்தில் தோன்றி, தண்டியென்பவனிடத்திலேசென்று, அவன் கருத்தை முடிப்பாயென்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். சோழராஜாவிழித்து எழுந்து, பரமசிவனைத் தோத்திரஞ்செய்து, சூரியன் உதித்தபின் தண்டியடிகளை அடைந்து, தான்கண்ட சொப்பனத்தைச்சொல்ல; தண்டியடிகள் மகாராஜாவே, சிவபெருமானது திருவருளினால், என்கண்காணவும், சமணர்கள் கண்கள் மறையவும் பெற்றால், இந்த ஊரில் இரோம் என்று ஒட்டினார்கள். இனி நிகழ்வதைக்கண்டு, நீர் இந்தவழக்கை முடித்தல்வேண்டுமென்றார். அப்பொழுது, அரசன் சமணர்களை அங்கே அழைத்துக்கேட்க; அவர்கள், அதற்கு உடன்பட்டார்கள். அதுகண்டு தண்டியடிகள் முன்னும்; அரசன்பின்னுமாகச் செல்ல, தண்டியடிகள் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு, திருக்குளத்திலே முழுகிக்கண்பெற்றார். சமணர்களோ கண்ணிழந்து

தமொழிஞாகள். இதுகண்ட அரசன் தனது ஏவலாளரைநோக்கி, "தண்டியடிகளுடனே ஒட்டிக்கெட்ட சமணாகளைத் திருவாரூரினின்றும அகன்றுபோம்படி துரத்துங்கள்" என்று ஆஞ்ஞாபிக்க, அவாகள் அவ்வாறே அவர்களை ஓடததுரத்தியபின்னர், சோழராஜா, சமணாகளுடைய பாழிகளையும் பள்ளிகளையும் பறிதது, திருக்குளத்துக்குக் கரைகட்டி, மனமகிழ்நது, தணடியடிகளை வணங்கிக்கொண்டுபோயினர். அப்பால், தணடியடிகள் நெடுநாள் பரமசிவனைத் தியானித்து, ஸ்ரீபஞ்சாக்ஷாத்தைஜபித்து, திருத்தொண்டுசெய்துகொண்டிருந்து சிவபதம அடைந்தாா.

திருச்சிற்றம்பலம்.

## மூர்க்கநாயனார்புராணம்.

தொண்டைமண்டலத்திலே, திருவேற்காட்டில்வேளாளர்குலத்தில், தலைமைபெற்ற ஒருவர் தினந்தோறும் சிவனடியாாகளைச் சிவனென வணங்கித்துதித்துத் திருவமுது செய்வித்துப்பின்பு, தாம் உண்பவரும, அவர்கள்விரும்பும் பொருள்களையும் கொடுப்பவருமாய் இருநதார். இப்படியிருக்குநாளிலே, அடியார்கள் அனேகர் எழுந்தருளிவருகின்றமையால், அவர் தம்மிடத்துள்ள திரவியங்களெல்லாம்

செலவாகிவிட; அடிமைநிலம் முதலியவற்றை விற்று, மாகேசுவரபூசையை வழுவாது மனம கிழ்ச்சியோடு செயதுவந்தார். அதன்பின், மா கேசுவரபூசைச்செலவுக்குப்பொருள் இன்மை யால கவலைகொண்டு, தாம முன்னேபயின்ற சூதினலேபொருள் சமபாதிக்கநினைந்து, அவ் வூரிலேசூதாடுவோர் இலலாமைபற்றி, அவ்வூ ரை அகன்று, சிவஸ்தலங்கடோறுஞ் சென்று சுவாமிதரிசனம் செய்து, சூதாடலால் வரும் பொருளினலேதம்முடைய நியதியை முடித் து, சிலநாளிலே கும்பகோணத்தை அடைந் தார். அங்கே சூதாடிப்பொருள்தேடி மகே சுவரபூசைசெய்தார். சூதிலே முதலாட்டத் தில் தாந்தோற்று, பின்னுட்டங்களிலே பல முறையுமவென்று, அதனலேபொருள் ஆக்கி, சூதிலே மறுத்தவாகளை உடைவாளை உருவி க்குத்தி, நற்சூதர், மூர்க்கர் என்னும் பெயர்க ளைப்பெற்ருர். சூதினலே வரும்பொருளைத் திருவமுது ஆக்குவோர்கள் கொள்ள, தாநதீ ண்டார். அடியார்கள் திருவமுது செய்த பின் தாங் கடைப்பந்தியிலே அமுது செய்வாராயி னர். இவர்இப்படிச்சிலகாலம் மாகேசுவரபூசை செய்து கொண்டிருந்து, அந்தமகத்தாகிய சிவ புண்ணியத்தினலே சிவபதம் அடைநதார்.

திருச்சிற்றம்பலம்.

## சோமாசிமாறநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருவம்பரில், பிராமணர்குலத்தில், சோமாசிமாறநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு ஜபித்தலை நித்திய நியமமெனக் கொண்டவர். எந்தக்குலத்தினராயினும், எந்தக்குணத்தினராயினும், பரமசிவன்மேல் அன்புடையர்களாயின், அவர்களே நம்மை ஆள்பவர் என்னும் மெய்யறிவினையுடையவர். அவ்வன்பர்கள் தம்முடையவீட்டுக்கு எழுந்தருளி வந்தால், அவர்களை எதிர்கொண்டு வணங்கித் திருவமுதுசெய்விப்பவர். பரமசிவனுக்குப் பிரீதியாகிய யாகங்களை, புகழ் பயன்முதலியன கருதாது நிஷ்காமியமாக வேதவிதிப்படிசெய்பவர். அவர் திருவாரூரிற்சென்று, சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்திநாயனாரை அடைந்து, அவருடைய திருவடிகளிலே பக்திபண்ணி, அதனால் சிவபதத்தைப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

---

வம்பறுவரிவண்டுச்சருக்கம் முற்றுப்பெற்றது.

---

ஆறாவது

## வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்.

# சாக்கியநாயனார்புராணம்.

திருச்சங்கமங்கையிலே, வேளாளர்குலத்தில் உதித்த சாக்கியநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்நாளிலே, காஞ்சிபுரத்தை அடைந்து, பௌத்தசமயத்திலே பிரவேசித்து, அச்சமயம் சற்சமயமன்றென்பது தோன்றி, அதுபோல மற்றசமயங்களிலும் பிரவேசித்து, அவைகளும் மெய்யல்லவெனத்தெளிந்து, சிவபெருமானது திருவருள் கூடுதலால், தினந்தோறும் சிவலிங்கதரிசனஞ்செய்துகொண்டே போசனம்பண்ணல்வேண்டும் என்று விரும்பி, தாம் எடுத்தபௌத்தவேஷத்தைத் துறவாமல், பரமசிவனை மிகுந்த அன்பினோடு இடைவிடாது தியானஞ் செய்வாராயினார். அவர்சமீபத்தில் ஓர் வெள்ளிடையிலிருக்கின்ற சிவலிங்கத்தைத் தரிசித்து, பேரானந்தம் உள்ளவராகி, தாஞ்செய்யுஞ் செயல் இதுவென அறியாது, அருகிலேகிடந்ததொரு செங்கல்லைக்கண்டு, அதைப்பதைப்பினுடனே எடுத்து, அச்சிவலிங்கத்தின்மேல் எறிந்தார்.

சிறுபிள்ளைகள் செய்யும் இகழ்வாகியசெய்கைகளும் தந்தையர்களுக்குப் பிரீதியாமாறுபோல, அந்தச்சாக்கிய நாயனாருடைய செய்கையும் பரமசிவனுக்குப் பிரீதியாயிற்று. அந்நாயனார், அன்றுபோய் மற்றைநாள், அந்நியமத்தை முடித்தற்கு அணைந்தபொழுது, முதனாளிலே தாம் சிவலிங்கத்தின்மேற் கல்லெறிந்த குறிப்பை நின்று ஆலோசித்து "நேற்று எனக்கு இவ்வெண்ணம் வந்தது பரமசிவனது திருவருளே" என்று துணிந்து, அதனையே திருத்தொண்டாக நினைந்து, எப்பொழுதும் அப்படியே செய்யக்கருதினார். எல்லாச்செயல்களுஞ் சிவன்செயல் என்றே தெளிந்தமையால், அந்நியதியை தினந்தோறும் வழுமாமல் அன்பினுடன்செய்ய; அது ஆன்மாக்கடோறும் வியாபித்திருந்து, எல்லாவற்றையும் உணருஞ் சிவபெருமானுக்கு மிகச்சிறந்ததிருத்தொண்டாகி முடிந்தது.

அந்நாயனார், ஒருநாள் திருவருளினாலே மறந்து போஜனம் செய்யப்புகும் பொழுது, "இன்றைக்கு எம்பெருமானை எறியாமல் மறந்துவிட்டேன்" என்று எழுந்து, அத்தியந்த ஆசையுடன் மிகவிரைந்து புறப்பட்டு, சிவலிங்கத்தை அணைந்து, ஒருகல்லை எடுத்து அதன்மேல் எறிய; பத்திவலையிற் படுவாராகிய பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூட

பாய ஆகாயத்திலேதோன்றி, அவரைத்தமது திருவடியிலே சேர்த்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

## சிறப்புலிநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருவாக்கூரிலே, பிராமணர்குலத்திலே, சிறப்புலிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்கள் எழுந்தருளிவந்தபோது, அவர்களை நமஸ்கரித்து இன்சொற்களைச்சொல்லி, அவர்களைத் திருவமுதுசெய்வித்து, அவர்களுக்குவேண்டும் திரவியங்களெல்லாவற்றையும் கொடுப்பவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை அன்பினோடு ஜபிப்பவர் பரமசிவனைக்குறித்து யாகங்கள் செய்பவர் அவர், இன்னும் பலசிவபுண்ணியங்களைச் செய்துகொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## சிறுத்தொண்டநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருச்செங்காட்டங்குடியிலே, மாமாத்திர பிராமணர்குலத்தில், திருவவதாரஞ்செய்த பரஞ்சோதியாரென்ப

வா ஒருவர் இருந்தார். அவர் ஆயுள்வேதமுதலிய வேதசாஸ்திரங்களுந் தனுர்வேதமும் உணர்ந்து, சோழராஜனிடத்திலமந்திரித்தொழிலபூண்டு, சிவநேசமும் சிவனடியார்களுக்கு அன்புடன் திருவமுது படைக்கும் நியதியும் உள்ளவர் அவர், அரசனுக்காக வடதேசத்திற்சேனையுடனசென்று, பகைவரைவென்று அங்கிருக்கும் நிதிகளையெலலாங்கொணடுவா, அரசன்கண்ணுற்று மகிழ்வுகூர்ந்து, மந்திரிகளால இவர் சிவநேசமுள்ளவரெனறு உணர்ந்து, அவருக்கு மிக்கதிரவியமுதலானவையளித்து, தேவர் கருததினபடி தொணடுசெய்துகொணடிருக்கலாமென்று விடைகொடுக்க, அனறுதொட்டு முன்னிலும அதிகசிவநேசமுள்ளவராய், திருவெணகாட்டு நங்கையாரெனனும மனைவியாருடன இலலறமவழுவாமல நடததிச சிவனடியார்களுக்கு அமுதுபடைத்துப பின்பு தாம் உணபார். சிவனடியார்களை அனபினோடுவழிபட்டு, மிகச்சிறியராய் ஒழுகுகின்றமையால, அவர் சிறுத்தொணடரென னுங் காரணபபெயரோடு சீராளதேவரென்னுந் திருக்குமாரரைபபெற்று வாழ்ந்திருக்கும் நாளில, திருஞானசமபநதப்பிள்ளையார் திருசசெங்காட்டஙகுடியில, சுவாமியைத்தரிசிக்க வருவதை அறிந்த சிறுத்தொணடநாயனார் எதிர்கொணடு வணஙகித்துதிக்கப் பிள்

ளையார் திருப்பதிகத்திலே அவரைச் சிறப்பி த்துப்பாடியருளப்பட்டார்.

ஒருநாள், அமுதுபடைப்பதற்குச் சிவன டியார்கள் கிடையாமையால், நாயனார் வெளி யேதேடிச்செல்ல, கைலாயபதியானவர் இ வரன்பை உலகத்தார்க்கு வெளிப்படுத்தத் தி ருவுளங்கொண்டு, வைரவவேடந்தாங்கி, அ வர்திருமாளிகையில் வந்து "சிறுத்தொண்டர் வீட்டில இருக்கின்றாரோ" என்று வினவ; தா தியாராகிய சந்தனநங்கையார் முன்வந்து வ ணங்கி, "சுவாமி, அவர்சிவனடியார்களைத் தேடிச்சென்றார், தேவரீர் உள்ளே எழுந்தரு ளும்" என்றார் அதற்கு வைரவர் "பெண்க ள் இருக்கும் இடத்தில் நாம்தனியேபுகோம்" என்று அருளிச்செய்ய; திருவெண்காட்டு நங் கையார் அதைக்கேட்டு, "சுவாமி, அடியே னுடைய நாயகர் எப்போதும் சிவனடியாரை த்திருவமுதுசெய்விப்பவர். இன்றைக்கு ஒரு வரையுங்காணாமையால தேடிப் போயினார். இப்பொழுதே வந்து விடுவார். எழுந்தருளி யிரும்" என்றுவிண்ணப்பஞ்செய்தார், வைர வர், நாம் உத்தரதேசம். அவரைக்காணவந் தோம்"என்றுசொல்லிக்கொண்டு கணபதீச்சு ரமென்னும ஆலயத்திலிருக்கும் ஆத்திமரத் தின் கீழ்ப்போய் வீற்றிருந்தனர்.

சிறுத்தொண்டநாயனார் சிவனடியார்களை
த்தேடி எங்குங்காணாது, வீட்டுக்குத்திரும
பிவந்து, மனைவியாருக்குச் சொல்லித் துக்கி
த்தார். மனைவியார் "உத்தரதேசவாசியாகிய,
ஒரு வைரவர் இங்குவந்து, உம்மைப்பார்க்கவ
ந்ததாய்ச் சொல்லிக்கொண்டே கணபதீச்சர
த்தில் உள்ள திருவாத்தியின்கீழேபோய் இரு
க்கின்றனர்" என்றார். உடனே நாயனார் வி
ரைந்துசென்று, அவரைக்கண்டு வணங்கித்
தமதுவீட்டிற்குத் திருவமுதுசெய்யவரும்ப
டிவேண்டினர். வைரவ மூர்த்தியானவர், நம
க்கமுதூட்ட உம்மாலாகாது எனெனில், நா
ம ஆறுமாதத்துக்கொருமுறை பசுப்படுத்து
ண்போம். அவ்வாறு "நாம உண்பதும நரப்
பசு, இது யாதொரு அங்கப்பழுதுமின்றி ஐந்
து வயதாயிருக்கவேண்டும், அதனைத்தாய்பி
டிக்கத் தந்தை மகிழ்ச்சியுடன் அரிந்துச்சமை
த்தால் உண்பேம்" என்றார். நாயனார் அதற்
கிசைந்துவந்து மனைவியாராகிய திருவெண்
காட்டு நங்கையுடன்சொல்ல, அவ்வம்மையா
ர், எவ்வளவுபொருளீந்தாலும் இவ்வாறு புத்
திரனை யீந்து களிப்புடன் அரிவரோவென்று
வணங்கிச் சொல்லினர். நாயனார் மனைவியா
ரை நோக்கிப் புத்திரனைத்தருவாருளரேனும்
மனமகிழ்ந்தரியார்கள். ஆதலால், நாம் உய்
மபடி பெற்ற, நமதுபுதல்வனையே அழைப்

போமென்றார். மனைவியார் அதற்கு இணங்க, நாயனார்சென்று பள்ளிக்கூடத்திலிருந்த புத்திரனைத் தோளில் எடுத்துக்கொண்டுவர, மனைவியார் எதிர்கொண்டு வாங்கி, ஸ்நானஞ் செய்வித்துக் கணவனார் கையிற்கொடுத்துப் பாண்டங்களைச் சுத்திசெய்து மறைவிடத்திற் சென்று, வைரவமூர்த்தி சொன்னபடிசெய்து, சிரசு, கறியமுதுக்காகாதென்று சந்தன நங்கையார் கையிற்கொடுத்து மறைத்துவிடச்சொல்லி, மற்றைய உறுப்பிறைச்சிகளைச் சமைத்து, வேறுகறிகளும் அமைத்து, அன்னமுஞ் சமைத்துக் கணவனாருக்குச்சொல்ல, அவர் மகிழ்ந்துசென்று, வைரவமூர்த்தியை அழைத்துவந்து திருவடிகளைவிளக்கி, அந்நீரைத் தாங்களுட்கொண்டு ஆசனத்திருத்தி, ஆராதித்துப் பணிந்து, திருவமுது படைக்குமவகை யாதென்ன, அமுதுகளை யொருங்கே கொண்டுவந்து படைக்கவேண்டுமென்று வைரவமூர்த்தி கட்டளையிட, அவ்வாறே பரிகலந்திருத்தி திருவமுதுபடைக்கநோக்கி, நாம் சொல்லியவண்ணமே உறுப்புகளெல்லாம் சமைத்தீரோவென்றனர். தலைக்கறி திருவமுதுக்காகாதென்று விலக்கினேமென்ன, அஃதும் நாமுண்பதே என்று வைரவர்சொல்ல, நாயனார் மனம் வருந்தும்போது, தாதியார் அடியேன் சமைத்து வைத்தேனென்று கொ

லைமேவாது கொடுக்க, திருவெணகாட்டு நங்கையார சநதோஷித்து, அதையும படைததவுடன், வைரவமூர்த்தி தொணடரைநோக்கி, உடனிருநது உணணச சிவனடியாரை அழையுமெனறனர.

இதற்கென்செய்வோம் என்று மனமயங்கி, வெளியேசெனறு சிவனடியார எங்குங்காணாமையால மனமவருநதி வைரவரை நோக்கிச்சுவாமீ! அடியாரை எங்குங்காணேன் என்று பணிநதுநிற்க, வைரவர் உமமைபபோல விபூதி யணிநதாரொருவரு மிலராதலால, நீரிருநதுணணும எனறு சொலலி, திருவெணகாட்டுநஙகையைநோக்கி, வேறொருபாகலநதிருத்தி நமக்குப படைத்திருப்பதிலெடுத்துப படையுமெனன, அவ்வாறே அவர செய்தனர். நாயனார, நாம உணணுதிருநதால வைரவர உணணாரென்று, தாமுன்புணணத தொடங்குகையில, வைரவர் நாம ஆறுமாதததுக்கொருதரமுண்பது, நாள்தோறு முணணு நீர நாமுணணும வரையில தாழாமல, முனனுணபதென்னெனத்தடுதது, நீர் புத்திரனைப்பெற்றிருநதால் உடனுணண அவனையழையுமென்றனா நாயனாரஅவன் இப்போது உதவானெனனைம, வைரவமூர்த்தி, அவனை உடனவைத்துக்கொணடே யமுதுணபேனென்ன,இதற்கென்னசெய்வோமென்று துயரங்கொண்டு, வீதியி

ற்சென்று, வைரவர் கட்டளையின்படி நாய னார் மனைவியாரோடு விரைந்து வீட்டிற்குப்பு றத்திலேபோய், "சீராளா வா" என்று அ ழைக்கப் பரமசிவனுடைய திருவருளால் பள் ளியிலிருந்து ஓடிவருபவன்போல வந்த சீரா ளதேவனைத் தாயெடுத்துக்கொடுக்கத் தந்தை மிக்கசந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு ம னைக்குட்புகுந்து பார்க்கையில, வைரவமூர்த் தியைக்காணாதவர்களாகி, அளவிலலாத துயர ங்கொண்டு பரிகலத்திற் படைத்த கறியமுதி றைச்சியுங் காணாமையால், அச்சங்கொண்டு, வைரவமூர்த்தியெங்கு மறைந்தருளினாரென் று, புறத்தில்வந்து தியங்கும்போது, சிவபெரு மான் சுப்பிரமணியரோடுபார்வதிசமேதராய், இடபவாகனத்தி லெழுந்தருளி ஆகாயத்திலே தோன்றினார். அப்போது, சிறுத்தொண்டநாய னாரும் மனைவியாரும் புதலவரும் தாதியாரு மாகிய நால்வருங்கண்டு தரிசித்து, ஆனந்தப ரவசர்களாய் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று, தோத்திரம் பண்ணினார்கள். அவர்க ளைப்பரமசிவன் தமமை எப்போதுந் தரிசித் துக்கொண்டிருக்க உடன் கொண்டு திருக்கை லாயத்திற்கு எழுந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

# சேரமான்பெருமாணாயனார் புராணம்.

மலைநாட்டிலே, மகோதையென்னும பெயருடைய கொடுங்கோளூரில, அரசாட்சிசெய்யும சேரராஜாவின் திருமைந்தராயவதரித்து வளரும்போதே, பரமசிவனிடத்தில அன்புவளர, அரசாட்சியில் விருப்பின்றித் திருவஞ்சைக்கள மென்னுந்தலத்திற்போய்த் தொண்டு செய்து கொண்டிருந்து தமமுடையபிதா காட்டிற்றவஞ்செய்யபபோன பின்னா, அரசாட்சிக்கு வேறேயிறைவனில்லாமையால, மந்திரிகள்வந்து மகுடஞ்சூட்டிக்கொள்ளுமபடி பிரார்த்திக்க, இவ்வரசு, தொண்டுசெய்தற் கிடையூறுனதால், அவ்வாறின்றி, அரசுசெய்யும்படி பரமசிவத்தின் அருள் கிடைக்குமாகில் சம்மதிப்போமென்று' சிவசந்நிதியிற்போய் விண்ணப்பிக்கப் பரமேஸ்வரன் கிருபைகூர்ந்து, யாவர்களும் யாவையும வசனிப்பவற்றை அறியும் உணர்ச்சியும், பராக்கிரமமும், ஈகையும், அரசர்க்குரிய மற்றனவு மருளிச்செய்யப் பெற்றுத்தொழுது துதித்து, நகரில்வந்து மகுடஞ்சூட்டிக்கொண்டு ஆலயத்திற்சென்று சுவாமியைத்தரிசித்து, யானையின்மே லாரோகணித்துக்கொண்டு வீதிப்பிரதக்ஷணம் வரும்போது, ஒருவண்ணன் உழமண்மூட்டையைத் தலையிற்சுமந்து வருகையில், மழைபொழிந்து நனையச் சரீரத்திலொழுகிய அநநீருலர்ந்து, வெண்மை நிறமுள்ளவனைக் கண்டு, விபூதிதா

ரணஞ்செய்த அடியார்களி லொருவரெனக்க
ருதி, யானையைவிட்டு இழிந்து, எதிர்சென்று
வணங்க, அவ்வண்ணான் உடனே கீழேவிழு
ந்து பணிந்து,சுவாமீ, அடியேன் அடிவண்ணா
னென்று சொல்லக்கேட்டுச் சேரர்பெருமான
அவனைநோக்கி, அடிச்சேரனடியேன, சிவவே
டத்தை நினைப்பித்தீராதலால, வருந்தாதேகு
மென்றனுப்பிவிட்டு, யானையின்மீதேறிக்கொ
ண்டுவந்து, ஆசார வாசலிலிருந்து அரண்மனை
க்குட்சென்று, அன்றுமுதல், நீதியுடன் அர
சாட்சி செய்கின்றவர், நமக்கிவ்வரசினால வரு
ம்பயன் முதலிய வெல்லாம, நடராஜமூர்த்தி
யின் திருவடிகளேயெனததெளிந்த உணர்ச்சி
யினால, சிவார்ச்சனை அன்புடன் புரிந்துவரு
நாளில, பரமசிவன் கிருபைகூர்ந்து திருவடிச்
சிலம்போசை யருளிச்செய்ய ஆனந்த மடை
ந்தனர்.

இவ்வாறு நடக்கும் நாளில், மதுரைச்
சொக்கநாதசுவாமிகள் தமமுடைய அன்
பராகிய பாணபத்திரருக்குப் பெருநிதியங்
கொடுக்கும்படி, திருமுகபபாசுரங் கொடுத்த
ருளக் கொணடுவந்த பாணபத்திரரைக்கண்டு
வணங்கி, திருமுகப்பாசுரத்துக்கு ஆராதனை
செய்து பணிந்து ஏற்றுக்கொண்டு, பொக்கிச
த்திலிருந்த திரவியங்களையும், அரசு முதலிய
னவுங் கொடுக்கத் தமக்குவேண்டிய திரவிய

ங்களை யாத்திரம பெற்றுக்கொணடு, மற்றது களைச் சேராபெருமானுக்குக் கொடுதது விட்டு, யானைமீதேறிசசென்று, மதுரையிற்சோநதனா சேராபெருமான், நியதியாகசசெய்துவநத சிவபூஜாகாலத்தில, ஒருநாள், நடராஜமூாத்தியின திருச்சிலமபோசை யருளிசசெய்யாதிருக்க, மனமயக்கங்கொணடு, அடியேன் யாது குற்றஞ் செய்தேனென்று உடைவாளையுருவி மாாபிலநாட்டி அதன்மேலவிழத்துணியவே, பரமசிவன் திருவுளமிறங்கித திருச்சிலமபொலிகேட்பிக்க, சோராபெருமான ஆனநதமடைநது, ஐயனே !! திருசசிலமபோசைதாழ்ததென்னவென, நமமுடைய அன்பனுகியவன்றொணடன் சிற்சபையில் வநது பதிகமோத அதைக்கேட்கும விருப்பத்தால், தாழ்த்தோமென்று வன்றொண்டா ஞாபகம் சேராபிரானுக்குணடாகும பொருட்டுத் திருவாய்மலாநதருளினவுடன், கனகசபையையவணங்கி, நடராஜமூர்த்தியைத்தரிசித்துச் சுநதரமூர்த்திநாயனுரைக்காண விருப்போடுபுறபபட்டுச்சிதமபரத்தில்வந்து தரிசித்துப், "பொன்வண்ணத்தநதாதியோதித்துதித்து விடைபெற்றுக்கொணடு, திருவாரூரிற்சென்று, சுந்தரமூாத்திநாயனுரைக்கண்டு வணங்க, அவரும் வணங்கி, ஒருவருக்கொருவா அளவளாவிக்கலந்து புற்றிடங்கொண்டாரைப்பணிந்து, திருமும்மணிக்கோ

வைபாடித் துதித்துப் பரவையார் திருமாளி கையில, சுந்தரமூாததிராயனர் வேண்டுதலா ல் திருவமுதுண்டு, சிலகாலமங்கமாந்திருந்து பினபு, சுநதரமூாத்திாயனுருடன் வேதார ணியததை அடைநது, சுவாமிதரிசனஞ்செய் து, திருவநதாதிபாடினர், அங்கிருந்து மதுரை முதலிய ஸ்தலங்களிற்சென்று தரிசனஞ்செ ய்து துதித்து, மீண்டும் திருவாரூருக்கு வந் து, புற்றிடங்கொண்டாரைப்பணிநது துதித் துப் பரவையார் திருமாளிகையில் சுந்தரமூர் த்திராயனுருடன் அமர்ந்திருந்தனர்.

சேரமான்பெருமாணயனர் தம்முடைய நாட்டிற்குச் சுந்தரமூர்த்திராயனரை வரும்ப டி அழைத்துக்கொண்டுபோய், மலைநாட்டை ச்சார்நத தம்முடைய ராசதானியும், பரமசிவ ன் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்குந் தல முமாகிய, திருவஞ்சைக் களத்தைச்சோந்து, சுந்தரமூர்த்திராயனுருடன் ஆலயத்தைப் பி ரதக்ஷணஞ்செய்து, சாஷ்டாங்கமாகப்பணிந் து சந்நிதானத்திற்போய்ச் சுவாமியைத்தரிசி த்து துதிசெய்து, அரண்மனைக்குவந்து சுந்த ரமூர்த்திராயனருக்கு மிகுந்த வுபசாரத்துட ன் விருந்தளித்து, இராசசின்னத்துக்கேற்ற விநோதங்களுடன் சிலநாள் வைத்துக்கொண் டிருக்கையில், சுந்தரமூர்த்திராயனர் திருவா ரூர் வீதிவிடங்கப் பெருமானைத் தரிசிக்க

வேணடுமெனகிற விருபபஙகொணடு, பிரயா ணபபடச சேராபெருமான் தடுக்கககூடா மையால, அதுவரையில தமமுடைய பொக கஷத்தில சோநதிருநத திரவியஙகளை யெல லாமபொதிகட்டி, ஆட்கள்தலையிலேற்றியனு பபிச சுநதரமூாததிநாயனாிடத்தில விடை பெற்றுக்கொணடுவாநது, அரண்மனையிற் சோ நது பாமசிவனிடத்தில அன்பு வழுவாமல அரசாட்சி செய்துகொணடிருநதாா. சிலநாள் சென்று, சுநதரமூாத்திநாயனா தமமைக் கா ணவேணடுமெனகிற விருபபததினுல திருவா ரூரில நின்றும எழுநதருளிவர, அதையறிநத சேராபெருமான் எதிாகொணடு சென்றுபணி நது மிகுநதசிறபபுடன அழைத்துக்கொண்டு வாநது சிஙகாசனததில வீற்றிருககச்செய்து சோடசோபசாரத்துடன ஆராதிதது அமுது செய்வித்து, காலநதோறும ஆலயத்திற்செழு நதருளிச் சிவதரிசனமுஞ்செயதுகொண்டு இ ருக்கையில், ஸ்ரீகயிலாயத்திலிருநது பாமசிவ ன் வன்றொணடரைத்தமமிடத்துக்கு அழை த்துக்கொண்டுவருமபடி திருமாலமுதலியதே வர்களுக்குக் கட்டளையிட்டனுப்ப, அவாகள் வெள்ளையானையுடன் வந்து சுநதரமூாத்திநா யனா் திருவஞ்சைக் களததில் பாமசிவனைத் தரிசித்துப்பதிகமோதித் துதித்துக்கோபுரவா யிலின் புறத்தில் வரக்கணடு வணங்கித் தாங்

கள் வந்தகாரியத்தைச்சொலல, வன்ருெண்டா வணங்கி, அநதயானையினமேல ஆரோகணித்துக்கொணடு, சேரமான்பெருமாளுய ஞரிடத்தில ஞாபகத்தைவைத்து எழுநதருளுகையில, திருமஞ்சனங்கொணடிருநத சேரமான பெருமாளுக்குத்தெரிநது, உடனே குதிரையிலேறி, அதன செவியில் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யோதினவளவில், அநதக்குதிரை ஆகாயத்திற்செலலச் சுநதரமூாததிநாயஞருடன கலநதுகொணடு கைலாயததிற்சென்று, நநதிதேவரால சநநிதானத்தில தடைபபடடு நினறு, திருக்கைலாயஞானவுலாவை ஓதிப் பரமசிவன திருவருளால, சிவகணநாதராய் வீறறிருந்தாா. அவா அருளிச்செய்த திருவுலா மாசாத்தாவென்பவரால உலகில விளக்கமுற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

## கணநாதநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, சீகாழியில், பிராமணா குலத்தில, கணநாதநாயனுரென்பவா ஒருவர் இருநதாா. அவா திருத்தோணியப்பருக்கு மிகுந்த அன்பினேடு தினநதோறும் திருப்பணிகள்செய்பவா. தம்மை விருமபி வந்தடைபவர்களை, திருநந்தனவனம வைத்தல், பூக்கொய்தல, திருமாலைகட்டடல், திருமஞ்சன

பெடுத்தல, திருவலகிடுதல, திருமெழுக்கிடுதல, திருவிளக்கேற்றல, திருமுறையெழுதல, திருமுறைவாசித்தல முதலாகிய திருத்தொண்டுகளுள், அவரவாகசேற்ற திருத்தொண்டுகளிலே பயிலவித்து, அவாகளைச சிவனடியாாகளாக்குவாா. கிருகத தாச்சிரமத்திலே இருந்து சிவனடியாாகளை வழிபடுவாா. அவா சமயகுரவராகிய திருஞானசமபந்தமூாததிநாயனுரைததினந்தோறும பேராசையோடு முப்பொழுதினும விதிப்படி பூசைசெய்துகொணடு வந்தாா. அந்தபபூசாபலததினுல திருக்கைலாயமலையை அடைந்து, சிவகணங்களுக்கு நாதராயினா.

திருச்சிற்றம்பலம்.

## கூற்றுவநாயனார்புராணம்.

களந்தை யென்னும் பதியிலே, குறுநிலமன்னாகுலத்தில, கூற்றுவநாயனுரெனபவர் ஒருவா இருந்தார். அவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிபபடி உச்சரிப்பவர். சிவனடியாாகளுக்குத திருத்தொண்டு செய்பவா. அவர் திருவருள் வலியினுலே பெருஞ்செல்வ முடையராகி, கச ரத துரக பதாதியெனனுஞ் சதுரங்கங்கள் நிறைந்த வீரச்செருக்கில் மேலாயினுா. பலவரசர்களோடு யுத்தஞ்செய்து, அவர்களை

வென்று, அவர்களுடைய நாடுகளெல்லாவற்றையும் கவர்ந்து, அரசர் திருவில் முடி ஒன்று தவிர மற்றவைகளெல்லாவற்றையும் உடையராயினார். உலகத்தை ஆளுதற்குத் தமக்கு முடிசூட்டும்பொருட்டுத் தில்லைவாழந்தணர்களைவேண்ட, அவர்கள் நாங்கள் சோழகுலத்தாருக்கேயன்றி, மற்றவர்களுக்கு முடிசூட்டோம் என்று மறுத்து, தங்களுள் ஒருகுடியை முடியைக் காத்துக்கொள்ளும்படி இருத்தி, சேரமண்டலத்துக்குப் போயினார்கள்.

கூற்றுவநாயனார் ஐயுறவினாலே மனந்தளர்ந்து நித்திரைசெய்ய; அன்றையதினம் இரவிலே எம்பெருமானாகிய சபாநாயகர் அவருக்குச் சொப்பனத்தில் தோன்றி, தம்முடைய திருவடிகளை திருமுடியாகச் சூட்டியருளினார். கூற்றுவநாயனார் அவைகளையே முடியாகச் சூடி, பூமி முழுதையும் பொதுநீக்கி ஆண்டார். சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற முக்கிய சிவஸ்தலங்களெங்கும் சென்று வணங்கித் திருப்பணிகள்செய்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

வார்கொண்டவனமுலையாள் சருக்கம்
முற்றுப்பெற்றது.

---

ஏழாவது

## பொய்யடிமையில்லாத புலவர்சருக்கம்.

# பொய்யடிமையில்லாதபுலவர் புராணம்.

பாண்டிநாட்டிலே, சிறந்து விளங்குகின்ற துவாதசாந்தபுரமாகிய மதுராபுரியிலே, சோமசுந்தரக்கடவுளிடத்தே சதுரமாய் இரண்டுசாணளவினதாகி மெய்ப்புலவர்களுக் கெல்லாம் முழமவளர்ந்து இருந்தற்கு இடங்கொடுக்கின்ற சங்கப்பலகையைப்பெற்று, அதனில் இருந்துகொண்டு தமிழ்மொழியைவளர்த்த கடைச்சங்கப்புலவர்கள் கபிலர், பரணர், நக்கீரர்முதலாக நாற்பத்தொன்பதின்மர். அவர்கள் விபூதி ருத்திராக்ஷதாரர்களாய் ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபபரர்களாகி, அகத்தியம், தொல்காப்பியம், என்னும் இலக்கணநூல்களின்படி, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்னு நாற்கவிகளினுலும் மெய்யன்போடு பரமசிவனையேபாடி, பொய்யடிமையில்லாத புலவர்கள் எனப்பெயர்பெற்று, சிவபதம் அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

# புகழ்ச்சோழநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, உறையூரில், புகழ்ச்சோழநாயனா ரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் மற்றையரசர்கள் பணிகேட்க, உலகந் தழைக்க அரசியற்றினார். சிவாலயங்களெல்லாவற்றிலும் நித்திய நைமித்திகங்களை வழுவின்றி நடத்துவிப்பார். சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக்குறிப்பறிந்து கொடுப்பார். இப்படியிருக்குநாளிலே, கொங்கதேசத்தரசரும் குடகதேசத்தரசரும் தருந் திறையை வாங்கும்பொருட்டு, தங்கள் குலத்தார்களுக்குரிய கருவூர் என்னும் இராஜதானியிலே அரசுரிமைச்சுற்றத்தோடு வந்தணைந்தார். அங்குள்ள ஆனிலை என்னுந் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனை வணங்கி, மாளிகையிலேபுகுந்து, அத்தாணி மண்டபத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்துகொண்டு, அவ்விரண்டு அரசர்களுங்கொணர்ந்த திறைகளைக்கண்டு, அவர்களுக்கு அருள்புரிந்து மந்திரிமாரை நோக்கி, நம்முடைய ஆஞ்ஞாசக்கரத்துக்கு அமையாத அரசர்கள் இருக்கின்ற அரணங்கள் உளவாகில் தெரிந்துசொல்லுங்கள் என்றார். இப்படி நிகழுநாளிலே, சிவகாமியாண்டார் கொணர்கின்ற புஷ்பங்களைச் சிந்திய தம்முடையயானையையும் பாகர்களையுங்கொன்ற எறிபத்தநாயனாரை அணைந்து, என்னையுங்கொன்றருளும் என்று தமதுவாளைக்கொ

டுத்து, திருத்தொண்டிலே மிகச்சிறந்து விளங்கினார். மந்திரிமார்கள் புகழ்ச்சோழ நாயனாரை வணங்கி, திறைகொண்டாராத அரசன் ஒருவன் உள்ளான் அவன் அதிகன் என்பவன் அவனசமீபத்திலே மலையரணத்துள்ளே இருப்பவன என்றார்கள். அதுகேட்ட புகழ்ச்சோழநாயனார் நீங்கள் படைகொண்டுசென்று அவ்வரணத்தைத் தூளாகப் பற்றுத்து வாருங்கள் என்று ஆஞ்ஞாபிக்க, மந்திரிமார் சேனையோடு சென்று, அம்மலையரணைப் பொடிபடுத்தி அதிகனுடையசேனைகளை வதைத்தார்கள். அதிகன் அஞ்சி, ஓடிப்போய்ச் சுரங்கத்தில ஒளித்துவிட்டான. புகழ்ச்சோழநாயனாருடைய படைவீரர்களிற்பலர், அதிகனுடைய படைவீரர்களின் தலைகளையும், மற்றவர்கள் நிதிக்குவைகளையும், யானை குதிரைகளையுங் கொண்டு, மந்திரிமாரோடு கருவூரிலேவந்து சேர்ந்தார்கள்.

புகழ்ச்சோழநாயனார், தமக்குமுன்னே படைவீரர்கள் கொண்டுவந்துவைத்த தலைக்குவைகளுள் ஒருதலையின் நடுவிலே ஒருபுன்சடையைக்கண்டார். கண்டபொழுதே நடுங்கி, மனங்கலங்கி, கைதொழுது பெருமபயத்துடனே எதிர்சென்று, அத்தலையிற் சடையைத் தெரியப்பார்த்து, கண்ணீர்சொரிய அழுது, நான்சைவநெறியைப் பரிபாலித்து அரசியற்

ழியபடி மிக அழகிது சடைமுடியை யுடையவர் பரமசிவன் அருளிச்செய்த மெய்ந்நெறியைக்கண்டவர். அவருடைய சடைத்தலையைத்தாங்கிவரக் கண்டும், அதிபாதகனாகிய நான் பூமியைத்தாங்குதற்கு இருந்தேனே என்று சொல்லி, ஒன்றுசெய்யத்துணிந்து, மந்திரிமாரைநோக்கி, பூமியைக்காத்து அரசளித்து பரமசிவனுக்கு வழித்தொண்டுசெய்யும் பொருட்டு, என்னுடையகுமாரனுக்கு முடிசூட்டுங்கள் என்று விதித்து, அக்கினிவளர்ப்பித்து, விபூதியை உத்தூளனஞ்செய்து, சடைச்சிரத்தை ஒருபொற்கலத்தில் ஏந்தி, தம்முடைய திருமுடியிலேதாங்கி, அவ்வக்கினியை வலஞ்செய்து, உயிர்த்துணையாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, அதனுள்ளே புகுந்து பரமசிவனது திருவடிநீழலில் அமர்ந்திருந்தார்

திருச்சிற்றம்பலம்.

---

## நரசிங்கமுனையரையநாயனார் புராணம்.

திருமுனைப்பாடி நாட்டிலே, குறுநிலமன்னர்குலத்தில், நரசிங்க முனையரைய நாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தமக்குப் பெருஞ்செல்வமாவது விபூதியே என்னுஞ்

சிந்தையுடையவர் சிவனடியார்களது திருவ
டியை அடைதலே தமக்குப் பெறும்பேறெ
னத் துணிந்தவர். அநித்தியமும் துக்கமுமாகி
ய அரசியற்கையிலவைத்த விருப்பத்தாலன்
றி, சாவான மாக்களுஞ் சற்சமயமாகிய சை
வத்தைக் கைக்கொண்டு முத்தியின்பத்தை
அடைதல்வேண்டு மென்னும் பெருங்கருணை
யினாலே பலசத்துரு முனைகளைக் கடந்து,
சைவநெறி வாழும்படி திருவருளை முன்னிட்
டு நின்று அரசாள்வார் சிவாலயங்கடோறும்
நித்திய நைமித்திகங்களை ஒழுங்குபெற நடத்
துவிப்பார் திருவாதிரை நக்ஷத்திரந்தோறும்
விசேஷபூசை செய்வித்து, தமமிடத்தில் எழு
ந்தருளிவரும் சிவனடியார்களைத் திருவமுது
செய்வித்து, அவர்களுக்குத் தனித்தனியே
நூறுபொன் கொடுப்பார். ஒருதிருவாதிரை
நக்ஷத்திரத்தில் அப்படியே அடியார்களுக்
குப் பொன் கொடுக்கும்பொழுது, தூர்த்த
வேடமுள்ள ஒருவர்விபூதி அணிந்துகொண்டு
வந்தார். அவருடைய வடிவு இருந்தபடியைக்
கண்டு, பக்கத்தில் உள்ளவர்கள் இகழ்ந்து ஒ
துங்க, நரசிங்க முனையரையர் அதுகண்டு, எ
திரேசென்று அவரை அஞ்சலிசெய்து, அழை
த்துக்கொண்டுபோய், அவரை மிக உபசரித்
து, சீலமில்லாதவர்களாயினும் விபூதியை அ
ணிந்தவர்களை உலகத்தார் இகழ்ந்து நரகத்தி

ல விழாவணணம அவருக்கு இருநூறுபொ ன்கொடுதது அனுபபினுர. இநதபபிரகாரம அருமையாகிய திருத்தொணடுகள் பலவற் றைச் செய்து, சிவபதம அடைநதார.

திருச்சிற்றமபலம.

---

# அதிபத்தநாயனுர்புராணம்.

சோழமண்டலத்திலே, நாகபட்டணத் தில், சமுத்திரதீரத்தில உள்ள, நுளைபபா டியிலே, பாதவாகுலத்தில, அதிபத்தநாயனு ரென்பவர் ஒருவா இருநதார். அவாபாதவர் களுக்குத்தலைவராகி, அவாகள் வலைவீசிப்பி டித்து விற்கும மீன்குவைகளைப பெற்றுவாழ் வாா. அவா சிவபத்தியில் மிகச்சிறநதவராாத லால், அகபபடும மீன்களிலே ஒருதலைமீனை "இது பரமசிவனுக்கு" என்று மிகுநத அன் பிஞேடு எப்பொழுதும விட்டுவநதாா. ஒருநா ளிலே ஒருமீனேவரினும், அதனைப் பரமசிவ னுக்கு என்றுவிடுவார். இபபடி ஒழுகு நாட் களில, அடுத்தடுத்து அனேக நாட்களில் ஒவ்வொருமீனே அகப்பட, அதனைக்கடலிலே விட்டுவநதாா. மீன் வலையினுலே மிகுஞ்செ ல்வம மறுத்தமையால், தமமுடைய சுற்றத் தார்கள் உணவின்றி வருநதவும, தாம வருந் தாது பட்ட மீனைப் பரமசிவனுக்கு என்றே

விட்டு மகிழ்ந்தார். இப்படி நெடுநாள்வர, உணவினைமையால் திருமேனிதளரவும், தம்முடைய தொழிலிலே நிலைநிறைமையைப் பரமசிவன் அறிந்து, அவரது அன்பென்னும் அமுதை உண்பாராயினார். இப்படி நிகழுநாளிலே, வேறு ஒருநாள் பரதவர்கள் ஒவ்வொருமீனையும் அவ்வாறேவிட்டு, விலைமதிப்பில்லாத மகாதிவ்வியப் பிரகாசங்கொண்ட நவரத்தினங்களால் உறுப்பமைந்த அற்புதமாகிய ஒருபொன்மீனை வலைப்படுத்தி, கரையில் ஏறியபோது, அம்மீன் சூரியன் உதித்தாற்போல உலகமெல்லாம் வியக்கும்படி மிகப்பிரகாசிக்கக்கண்டு, அதனை எடுத்து ஒருமீன்பிடித்தோம் என்றார்கள். அதிபத்தநாயனார் அம்மீனைக்கண்டு, இது இரத்தினங்களால் உறுப்பமைந்த பொன்மீனுதலால், என்னை ஆட்கொண்டருளிய பரமசிவனுக்கு ஆகும் என்று கடலிலேவிட்டார். அப்பொழுது, பரமசிவன் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருள, அதிபத்தநாயனார் ஆனந்தவருவி சொரிய மனங்கசிந்துருகி நமஸ்கரித்து, சிரசின்மேலே அஞ்சலி செய்தார். சிவபெருமான் தமது உலகத்திலே அடியார்களோடு இருக்கும்படி அவருக்கு அருள்செய்தார்.

திருச்சிற்றம்பலம்.

# கலிக்கம்பநாயனுர்புராணம்.

நடுநாடடிலே, திருபபெணணுகடததில, வைசியாகுலததில, கலிக்கமப நாயனுரென பவர் ஒருவா இருநதாா. அவா அநததிருப பதியில உள்ள, திருததூஙகானை மாடமென னுந திருக்கோயிலில எழுநதருளியிருககும பரமசிவனுககுத திருத்தொணடு செயபவா சிவலிங்கததை வழிபடினும சிவனடியாாகளை வழிபடாதொழியின் அவ்வழிபாடு சிறிதும ப யனபடாதனவென்று சிவாகமஞ் செபபுதலா ல, தினந்தோறும சிவனடியாாகளைப பேரா சையோடு திருவமுது செய்விததது, அவாகளு க்கு வேணடுநதிரவியஙக ளெலலாவறறையுங கொடுப்பாா.

இபபடி யொழுகு நாளிலே, ஒரு நாள் தமது வீடடில, திருவமுது செய்யவநத சிவ னடியாாகளெலலாரையும பழையமுறைபபடி திருவமுது செய்யததொடஙகுவிததற்கு, அ வாகளை முன்பு அழைத்து, தமது மனைவியா ாகரகநீாவாாகக அவாகளுடைய திருவடிகளை விளக்கும பொழுது, முனபு தமக்குப பணி விடைக் காராாய் இருநது பணிவிடையை வெ றுத்துச்சென்ற ஒருவா சிவவேடநதாங்கிவர, அவருடைய திருவடிகளையும விளக்கப்புகுந தாா. மனைவியாா இவா நமமிடத்திலே பணி விடைக் காராாய் இருநது போனவாபோலும

என்று சிந்தித்தலால் கரகநீர்வார்க்கத்தாழ்க்க, கலிக்கம்பநாயனார் அதுகண்டு, இவள் இந்தச் சிவனடியாருடைய முந்தியநிலையைக் குறித்து வெள்கி நீர் வாராதொழிந்தாள் என்று துணிந்து, வாளை எடுத்து, மனைவியார் கையிற் கரகத்தை வாங்கிவைத்துவிட்டு, அக்கையைத்தறித்து, அக்கரகநீரை எடுத்து தாமே அவருடைய திருவடிகளைவிளக்கி, அத்தியந்த ஆசையோடு தாமே வேண்டுவனவெல்லாஞ்செய்து, அவ்வடியாரைத் திருவமுது செய்வித்தார் அந்நாயனார் பின்னுஞ் சில காலம் திருத்தொண்டின்வழி நின்று, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## கலியநாயனார்புராணம்.

தொண்டைமண்டலத்திலே, திருவொற்றியூரில் உள்ள சக்கரப்பாடியில், செக்கார்குலத்தில, கலியநாயனா ரென்பவர் ஒருவர் இருந்தார். அவர்பெருஞ்செல்வராகி, சிவபுண்ணியஞ் செய்தல்வேண்டுமெனத் தெளிந்து, அந்தத்திருப்பதியில் உள்ள சிவாலயத்தின் உள்ளும் புறமும் அல்லும் பகலும் எண்ணிறந்த திருவிளக்கேற்றுவாராயினார். பரமசிவன் நெடுங்காலம் இந்தத்திருத்தொண்டைச் செய்து

வரும் அவ்வடியாருடைய பத்திவலிமையைப் பிறர்க்குப் புலப்படுத்தும் பொருட்டு, அவரிடத்துள்ள செல்வமெல்லாங்குன்றும்படி அருள்செய்தார். அவர் தாம் வறுமையெய்தியும், தமது மரபில் உள்ளோர் தரும் எண்ணெயை வாங்கிக் கூலிக்கு விற்றுக்கொண்டு, கூலி பெற்று, தாம்செய்யும் திருத்தொண்டை வழுவாது செய்தார். சிலநாளாயினபின், அவர்கள் கொடாதொழிய, அவர் மனந்தளர்ந்து, எண்ணெயாட்டும் இடத்திற்சென்று, தொழில் செய்து கூலிவாங்கி, திருவிளக்கிட்டார். பின்பு அத்தொழில் செய்வோர்கள் பலராய்ப் பெருகினமையால், அத்தொழிலால்வரும்பேறுங்கிடையாது முட்ட, ஒருநாள் கவலைகொண்டு தம்முடையமனைவியாரை விற்பதற்கு நகரெங்குங்கூறி, வாங்குவார் இன்மையால் மனந்தளர்ந்து, ஆலயத்தை அடைந்து, திருவிளக்கேற்றுஞ் சமையத்திலே, "திருவிளக்குப்பணிமாறில் நான் இறந்துவிடுவேன்" என்று துணிவுகொண்டு, திரியிட்ட அகல்களைப்பரப்பி, எண்ணெய்க்குப் பிரதிபாகத்தமது இரத்தத்தை நிறைக்கும்பொருட்டு, ஆயுதத்தினாலே கழுத்தை அரிந்தார். அப்பொழுது, கிருபாசமுத்திரமாகிய பரமசிவன் நேர்வந்து, அவருடைய கையைப்பிடித்து, அவருக்குமுன்னே இடபாரூடராய்த்தோன்றியருள, அவர்தாம் உற்ற

ஊறு நீங்கி, சிரசின்மேல அஞ்சலிசெய்துகொ ண்டு நின்ருா. சிவபெருமான் அவரைத்தமது திருவடியில சேர்த்தருளினா.

திருச்சிற்றம்பலம.

## சத்திநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, வரிஞ்சியூரிலே, வேளாளகுலத்தில, சத்திநாயனுரெனபவா ஒருவா இருந்தாா அவா பரமசிவனுடைய திருவடித் தாமரைகளைச் சிறிதும மறவாது திருந்த தொண்டுசெய்பவா. அவா சிவனடியாாகளை இகழ்ந்து பேசும அதிபாதகர்களுடைய நாவைத் தணடாயுதத்தால் இடுக்கித் தமது கையிலுள்ள கத்தியினுல் அரிதலாகிய அரிய பெருந்தொண்டினை நெடுங்காலம அன்பினேடு செய்துகொணடிருந்து, பரமசிவனுடைய திருவடி நீழலை அடைந்தார்.

திருச்சிற்றமபலம்.

## ஐயடிகள்காடவர்கோனுயனுர் புராணம்.

தொண்டைமண்டலத்திலே, காஞ்சீபுரத்தில்,பல்லவர்குலத்திலே,திருவவதாரஞ்செய்து

சைவத்திருநெறி வாழும்படி அரசியற்றும் ஐயடிகள்காடவர்கோனாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் எவ்வுயிர்களும் இம்மை மறுமை இன்பங்களையும் முத்தியையும் அடைதல் வேண்டுமெனவிரும்பி, பிறதேசங்களையுந் தமக்கு ஆதீனப்படுத்திச்சைவந்தழைத்தோங்க, அரசர்களும் பணிசெய்ய அரசியற்றினார். சிலகாலஞ் சென்றபின்னர், அரசாட்சி துன்பமயமெனக்கருதி, அதனைவெறுத்து, அப்பாரத்தைத் தன்புத்திரன்மேல் ஏற்றி, பூமியின்கணுள்ள சிதம்பரமுதலிய சிவஸ்தலங்கடோறுஞ் சென்று, சுவாமிதரிசனம் பண்ணி, திருப்பணிசெய்து, ஒவ்வொருதிருவெண்பாப்பாடினார். இவ்வாறு நெடுங்காலந் திருத்தொண்டுசெய்துகொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

பொய்யடிமையில்லாதபுலவர்சருக்கம்
முற்றுப்பெற்றது.

---

எட்டாவது

கறைக்கண்டர்சருக்கம்.

## கணம்புல்லநாயனார்புராணம்.

வடவெள்ளாற்றுத் தென்கரையிலே உள்ள, இருக்குவேளூரிலே, சிவபத்தியிற் சிறந்தவரும், பெருஞ் செல்வருமாகிய அன்பர் ஒருவர் இருந்தார். அவர் செல்வம்பெற்றதினால் அடையும் பயன் இதுவே என்று, சிவாலயத்தினுள்ளே திருவிளக்கேற்றித் தோத்திரம் பண்ணுவாராயினர். நெடுங்காலஞ்சென்றபின், வறுமையெய்தி, சிதம்பரத்தையடைந்து, சபாநாயகரைத் தரிசனஞ்செய்துகொண்டு, தம்முடையவீட்டிலுள்ள பொருள்களைவிற்று, அங்குள்ளதிருப்புலீச்சரமென்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றிவந்தார். இப்படிப்பொழுது நாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்துவிட, கணம்புற்களை யரிந்துகொண்டுவந்து விற்று நெய்வாங்கித் திருவிளக்கெரித்தார். அக்காரணத்தால், அவருக்குக் கணம்புல்ல நாயனார் என்னுந் திருநாமம் உண்டாயிற்று. ஒருநாள் தாம் அரிந்துகொண்டுவந்த புல்லு விலைப்படாதொழியவும், தம்முடைய பணிதவறுமலே அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம் வரைக்கும் எரித்

தற்கு அப்புல் போதாமையால், அடுத்தவிள க்கிலே தமமுடைய திருமுடியை மடுத்து எ ரித்தார அபபோது, பரமசிவன் சகிக்காமல, திருவுளமிரங்கிய பெருங்கருணை செய்தருள, கணமபுலலநாயனார சிவலோகத்தை அடைந் தார.

திருச்சிற்றம்பலம்.

## காரிநாயனார்புராணம்.

திருக்கடவூரிலே, தமிழ்மொழியில மிக வலல காரிநாயனாரென்பவா ஒருவர்இருந்தார. அவா சொலவிளங்கிபபொருள் மறைநதுகிட க்குமவண்ணம தமபெயரினாலே தமிழ்க்கோ வைபாடி, தமிழ்நாட்டு மூவேந்தரிடத்துஞ் செ ன்று, அவாகள் மகிழுமாறு அதற்குப் பொரு ள்விளங்கக்கூறி, அவாகளிட்ததிற் பெற்ற திர வியங்களைக்கொணடு, பலசிவாலயங்கள் கட் டுவித்தும், சிவனடியாாகட்கு வேண்டுந்திரவி யங்களைக் கொடுததும், திருக்கைலாயமலையை மறவாத கருத்தினராகி, உலகமெங்குந் தம்மு டைய புகழை நிறுத்தி, பரமசிவனுடைய திருவருளைப் பெற்று, உள்ளம்போலுடலும் ஸ்ரீகைலைமலையை அடையப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

## நெடுமாறநாயனார்புராணம்.

பாண்டிநாட்டிலே, மதுராபுரியில், கூன்பாண்டியரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சமணர்களுடைய துர்ப்போதனையினால், பொய்ம்மார்க்கமாகிய ஆருகத மதத்திலே பிரவேசித்தும், சோழராஜனுடைய திருக்குமாரத்தியும், சைவசிகாமணியுமாகிய மங்கையர்க்கரசியாரை மனைவியாராகவும், குலச்சிறைநாயனாரை மந்திரியாராகவும் பெற்றிருந்த புண்ணியமேலீட்டால், சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருக்கரத்தினால் தீண்டி விபூதிசாத்தப்பட்டு, அவரருளிய மெய்யுபதேசத்தைப்பெற்று, பிறவிக்கூன் நிமிர்ந்து நெடுமாறநாயனாரெனப்பெயர்பெற்றார். தம்மோடு பொருதற்கு வந்த வடபுலத்தரசர்களோடு திருநெல்வேலிப் போர்க்களத்தில் யுத்தஞ்செய்துவென்று, சைவசமயம் அபிவிர்த்தியாகும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## வாயிலார்நாயனார்புராணம்.

தொண்டைமண்டலத்திலே, திருமயிலாப்பூரில், வேளாளர்குலத்தில், திருவவதாரஞ்செய்த வாயிலார் நாயனாரென்பவர் ஒருவர்

இருந்தார். அவர் பரமசிவனை மறவாத மனமாகிய திருக்கோயிலிலே எழுந்தருளுவித்து, ஞானமாகிய திருவிளக்கேற்றி, ஆனந்தமாகிய திருமஞ்சனமாட்டி, அன்பாகிய திருவமுதை நிவேதனஞ்செய்தலாகிய ஞானபூசையை நெடுங்காலஞ் செய்துகொண்டிருந்து, சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

## முனையடுவார்நாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, திருநீடூரிலே, வேளாளர் குலத்திலே, சிவனடியார்களிடத்தே மிகுந்த பத்தியுடைய ஒரு பெரியவர் இருந்தார்.

அவர் சத்துருக்களுடைய போர் முனையிலே தோற்றவர் யாவரேனும் தம்மிடத்தில் வந்து கூலிபேசினால், அவர் பொருட்டுப்போய் போர்செய்து வென்று, பொருள்சம்பாதித்து, சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துக் கொண்டிருந்தார் அக்காரணத்தால், அவர்க்கு முனையடுவார் நாயனாரென்னுந் திருநாமம் உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் இவ்வரிய திருத்தொண்டைச் செய்துகொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

கறைக்கண்டன்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஒன்பதாவது
கடல்சூழ்ந்தசருக்கம்.

## கழற்சிங்கநாயனார்புராணம்.

காடவாகுலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளையே யன்றி மற்றொன்றையும் அறியாத கழற்சிங்கநாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுடைய திருவருள் வலிமையால், வடபுலத்தரசர்களை யுத்தமுகத்தில் வென்று, அவர்கள் நாடுகளைக் கவர்ந்து, எங்குஞ் சைவசமயந் தழைத்தோங்கும்படி அரசாண்டார்.

இவ்வாறொழுகுநாளிலே, தன் தேவியோடு சிவஸ்தலங்கடோறுஞ்சென்று, சுவாமிதரிசனம் பண்ணித் திருத்தொண்டு செய்வாராகித் திருவாரூரை அடைந்து திருக்கோயிலிலே பிரவேசித்துச் சுவாமியை வணங்கினார். அப்போது, அவருடைய தேவிதிருக்கோயிலை வலஞ்செய்து, அங்குள்ள சிறப்புக்களெல்லா வற்றையும் தனித்தனியே பார்த்துக்கொண்டுவந்து, திருமாலைகட்டும் மண்டபத்தின் பக்கத்திலே வீழ்ந்துகிடந்த ஒருபுதுமலரையெடுத்து மோந்தனள். உடனே செருத்துணை நாயனார் இதனைப் புஷ்பமண்டபத்துள் எடுத்து மோந்

தனள் என்று நினைத்து, விரைந்தோடிவந்து, கூந்தலைப் பற்றி யிழுத்து வீழ்த்தி, அவள் மூக்கைக் கத்தியினால் அரிந்தார். அவள் சோர்ந்து புலம்பாநிற்கையில், சுவாமி தரிசனஞ்செய்துகொண்டிருந்த கழற்சிங்க நாயனார் சமீபத்திலவந்து பார்த்து மிகக்கோபித்து "இக்கொடுஞ்செய்கையைச் செய்தவர் யாவர்" என்று வினவ, செருத்துணைநாயனார் "இவள் சுவாமிக்குச்சாத்தற் பால தாகிய புஷ்பத்தை யெடுத்து மோந்தமையால நானே யிங்ஙனஞ்செய்தேன்" என்றார். அப்போது, கழற்சிங்கநாயனார் அவரைநோக்கி, "புஷ்பத்தை எடுத்த கரத்தையன்றோ முன்னே துணித்தலவேண்டும்" என்று தமமுடைவாளை யுருவிக்கையைத் துணித்தார். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். இவ்வரிய திருத்தொண்டுசெய்த கழற்சிங்க நாயனார் நெடுங்காலஞ் சைவநெறி தழைத்தோங்க அரசியற்றிக்கொண்டிருந்து, பரமசிவனுடைய திருவடி நீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## இடங்கழிநாயனார்புராணம்.

கோனாட்டிலே, கொடும்பாளூரில், குறுநிலமன்னவர் குலத்தில், கனகசபையின் மு

கடவைப பசும பொன்னால வேய்ந்த ஆதித்தன்குடியில் இடங்கழி நாயனாரென்பவா ஒருவா இருந்தாா. அவா சைவவைதிக மாாக்கங்கள் தழைக்கவும், நித்திய நைமித்திகங்கள் சிவாகம விதிபபடி நடக்கவும, அரசியற்றுங் காலத்தில, சிவனடியார்களைத் திருவமுது செய்விக்குமோ ரடியவா, ஒருநாள் அமுது செய்வித்தற்குப் பொருள் எங்கும அகபபடாமையா ல் மனந்தளர்ந்து, செயற்பால தின்னதென்பது தெரியாமல, அவ்விடங்கழிநாயனாருடைய பண்டாரத்தில, நெற்கூட்டு நிரைகள் நிறைந்தகொட்ட காரத்தில் அர்த்தராத்திரியில புகுந்து முகந்து எடுத்தார். காவலாளர்கள் அதைக்கண்டு, அவரைபபிடித்து இடங்கழிநாயனார் முன்கொண்டு வந்தாாகள்.

நாயனார் அவ்வடியவரைபபார்த்து "நீர் ஏன் நமமுடைய நெற்பண்டாரத்தைக் கவர்ந்தீர்" என்று வினவ, அவ்வடியவா "நான் சிவனடியார்களைத் திருவமுதுசெய்வித்தற்குப் பொரு ளின்மையால இங்ஙனஞ் செய்தேன்" என்றார். இடங்கழிநாயனார் அதுகேட்டு மிகவிரங்கி "எனக்கு இவரன்றோபண்டாரம" என்று சொல்லி, 'சிவனடியார்க ளெல்லாரும் நெற்பண்டாரத்தைமாத்திர மன்றி மற்றை நிதிப் பண்டாரங்களையும் எடுத்துக்கொள்க" என்று எங்கும் பறையறைவித்தார். பின்னும் நெடுங்

காலம் திருநீற்றுநெறி தழைக்குபடி தணணளியோடு அரசியற்றிக் கொணடிருநது, சிவபதத்தை அடைநதாா.

திருச்சிற்றம்பலம்.

---

## செருத்துணைநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, தஞ்சாவூரில, வேளாளாகுலத்தில, சைவசிகாமணியாகிய செருததுணைநாயனாரெனபவா ஒருவா இருநதாா. அவா திருவாரூரையடைநது, காலநதோறும் வனமீகநாதரை வணங்கித தொணடுசெயது கொணடிருநதாா இவவாறிருககுநாளில, அங்கே சுவாமி தரிசனஞ்செய்யவநத கழறசிங்கநாயனாருடையமாதேவி பூமாலைகட்டும மணடபததின பக்கததிலே வீழ்ந்துகிடநத ஒருபூவையெடுத்து மோநததைககணடு, மணடபத் [illegible] என்று சினநது, கத்தியினாலே அவளுடைய மூக்கையரிந்தாா. பின்னும நெடுங்காலம திருததொணடின் வழிநின்று,சிவபதத்தை அடைநதாா.

திருச்சிற்றம்பலம்.

---

## புகழ்த்துணைநாயனார்புராணம்.

செருவிலிபுத்தூரிலே, ஆதிசைவாகுலத்தில், புகழ்த்துணைநாயனாரென்பவா ஒருவர்

இருந்தார். அவர் சிவாகமவிதிப்படி பரமசிவனை அருச்சனைசெய்துவருங் காலத்தில், பஞ்சம் உண்டாயினமையால் பசிமிகப்பெற்றும், "அருச்சனையை விடுவேனல்லேன்" என்று, அல்லும்பகலும் அருச்சிப்பார். ஒருநாள் திருமஞ்சனமாட்டும்பொழுது, மிகுந்தபசிநோயினால் கைசோர்ந்து கலசந் திருமுடிமேல் விழ, தாம் திருவடியில் விழுந்து அயர்ந்து, திருவருளினாலே நித்திரை அடைந்தார். அப்பொழுது, பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "பஞ்சம் நீங்குமவரைக்கும் உனக்குத் தினந்தோறும் இங்கே ஒவ்வொருகாசு வைப்போம்" என்று அருளிச்செய்தார். புகழ்த்துணைநாயனார் விழித்து எழுந்து, பீடத்தின்கீழே ஒருகாசு இருக்கக்கண்டு, அதனைக் கைக்கொண்டு வாழ்ந்தார். அந்நாளைப்போல எந்நாளிலும் அப்படியே ஒவ்வொருகாசுபெற்று, பஞ்சம் நீங்கியபின்னும் நெடுங்காலம் மெய்யடிமைத் தொழில்செய்து, பரமசிவனது திருவடி நீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## கோட்புலிநாயனார்புராணம்.

சோழமண்டலத்திலே, நாட்டியத்தான்குடியில், வேளாளர் குலத்தில், சிவபத்தியிற்

சிறந்த கோட்புலிநாயனாரென்பவர் ஒருவர்
இருந்தார். அவர் அரசனிடத்திலே சேனா
பதித் தொழில் பூண்டு, அதனாலே தமக்குக்
கிடைக்கும் வேதனத்தைக்கொண்டு சிவால
யங்களுக்குத் திருவமுதின்பொருட்டு, நெல்
லுவாங்கிக் கட்டுதலாகிய திருப்பணியை நெ
டுங்காலஞ் செய்துவந்தார்.

இப்படியொழுகுநாளிலே, அரசனது பகை
வினால் போர்முனையிற் செல்லவேண்டி, சு
வாமிக்குத்திருவமுதின் பொருட்டுத் தாந்தி
ரும்பி வருமளவுக்கும் வேண்டும் நெல்லைக்
கட்டி, தம்முடைய சுற்றத்தார்களெல்லாருக்
குந் தனித்தனியே அதில் எடுத்துச்செல
வழியாதிருக்கும்படி ஆணையிட்டுக்கூறிப்
போருக்குப்போயினார். சிலநாளிலே பஞ்சம்
வந்தமையால், அந்தச் சுற்றத்தார்கள் "நாங்
கள் உணவின்றி இறப்பதினுஞ் சுவாமிக்குத்
திருவமுதின் பொருட்டுக் கட்டப்பட்டிருக்கு
ம் இந்நெல்லைக் கொண்டாயினும் பிழைத்து,
பின்பு கொடுத்துவிடுவோம்" என்று நெல்லை
க்கூடுகுலைத்து எடுத்துச் செலவழித்தார்கள்.

அப்போது, கோட்புலிநாயனார் அரசனு
டைய பகைஞரைவென்று, அரசனிடத்தில்
நிதிக்குவை பெற்றுக்கொண்டு, வந்து தம்மு
டைய சுற்றத்தார்கள் அதிபாதகஞ்செய்தமை
யைக்கண்டு, ஒன்று செய்யத்துணிந்து, தம்மு

டையவீட்டிலே புகுந்து அவர்களெல்லாரையும் அழைப்பித்து, தமது கோட்புலியென்னும் பெயரையுடைய காவலாளன் கடைகாக்க, சிவத்திரவியத்தை எடுத்துச் செலவழித்த அதிபாதகர்களாகிய தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி முதலிய சுற்றத்தாரெல்லாரையும், பணிவிடைக்காரரையும் வாளினாலே துணித்தார். அப்பொழுது, காவலாளன் அங்கே பிழைத்த ஒரு ஆண்பிள்ளையைப் பார்த்து, "இக்குழந்தை அவ்வன்னத்தை உண்டதன்று, இது அக்குடிக்கு ஒரு பிள்ளை; இதனைக் கொல்லாதருள்செய்யும்" என்றுவேண்ட; கோட்புலிநாயனார் "இது இந்நெல் உண்டவளுடைய முலைப்பாலுண்டது" என்று, அதை எடுத்து எறிந்து, வாளினாலே துணித்தார். உடனே சிவபெருமான் கோட்புலிநாயனாருக்குத் தோன்றி, "அன்பனே, உன்கை வாளினாலே தங்கள் பாவத்தினின்றும் நீங்கிய உன் சுற்றத்தார் சுவர்க்கத்தை அடைய, நீ இந்தப்படியே நம்முடன்வருவாய்" என்று கருணைசெய்து எழுந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

---

கடல்சூழ்ந்தசருக்கம் முற்றுப்பெற்றது.

---

பததாவது

## பத்தராய்ப்பணிவார்சருக்கம்.

## பத்தராய்ப்பணிவார்புராணம்.

சிவனடியாரகளைக கணடால, அவாகளுடைய ஜாதியை விசாரியாமல, அவாகளைசசிவபிரானெனபபாவிதது நமஸ்கரிதது, குதுகுலித்துக்கொண்டாடி மனமகிழ்நது ·அதநிபநத ஆசையுடன பசுவுக்குபபின கனறு அணைதலபோல அணைநது, அவாகளுடன் பேசுங காலத்து அவாகளைப பேசும பூச்சியவசனமு நதப்புமோ என்னுங் கூச்சத்துடனேபேசி, அவர்களுக்கு வேண்டுங் கருமமே தங்களுககு வேணடுங்கருமமாகச் செய்தலும, சிவபெருமானை மிகுந்த அன்பினோடு எவ்விடத்தும யாவாகளும விதிப்படி அருச்சித்தலைக்கணடால மனமகிழ்தலும், சிவபெருமானையும அவருடைய அடியாரகளையும் தெவிட்டாத விருபபததோடு சைவாகம விதிப்படி அருசசிததலும, தங்கள் உடமபினாலே செய்யும புண்ணியங்க ளெல்லாவற்றையும் சிவபெருமானது திருவடிக்கே கொடுத்தலும, சிவ சரித்திரங்களையே அன்பினோடு கேட்டலும, சிவபெருமானையே வணங்கி மன நெக்கு நெக்குருகிச் சரீர நடுக்குற்று உரோம புளகம் உண்டாக மத

கினிற்புறப்படுஞ் சலைபோல ஆனந்தபாஷ்ப
ம் பொழிய நாத்தழும்பப் பரவசமாதலும், நி
ன்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தா
லும் உண்டாலும் துயின்றாலும் விழித்தாலு
ம் சிவபெருமானை ஒருபோதும் மறவாதிருத்
தலும், சிவவேடந்தரித்துத் திருத்தொண்டர்
போல நடித்து அதனாற் சீவனஞ்செய்யாமை
யும் ஆகிய இவ்வெட்டினையும் உடையவர்க
ளே பத்தராய்ப் பணிவார் என்று சொல்லப்
படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

## பரமனையேபாடுவார்புராணம்.

சமஸ்கிருதம் தமிழ் என்னும் பாஷைகளை
க்கற்று வல்லவர்களாகி, சனனமரணப்பட்டு
உழலுகின்ற பசுக்களாகிய பிரமன் முதலியதே
வர்களையும் மனிதர்களையும் மதித்து, அவர்க
ளுக்குக் காமானுகுணமாகக் கிடைத்த அநித்
தியமுந் துக்கமுமாகிய வாழ்வை மெய்யென
க்கருதி, அவர்களைப்பாடி வாணாளை வீணாக
ப் போக்காது, பதியாகியசிவபெருமானது ம
கிமையை வேதசிவாகம புராணவழியால் உ
ள்ளபடி அறிந்து, அவருடையதிருவடிகளை அ
டைந்து, மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்ப
ஆனந்த வருவிசொரிய அவரையே மெய்யன்

போடு பாடி, "நாம சுவதந்திராகிய பரம சிவனுககே ஆளாயினேம பரதந்திரராகிய மற்றுள்ளோர்களில் ஒருவருக்கும குடியலலோம. அவர்களெலலாருக்கும மேலானேம" என்று இறுமாபபு அடைந்து திரிகின்றவர்களே பரமனையே பாடுவார் என்று சொலலபபடுவார்கள்

திருச்சிற்றம்பலம்.

---

# சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் புராணம்.

உச்சுவாசம் நிச்சுவாசம இரணடையும் அடக்கி, சுழுமுனைமார்க்கத்தில பிராணவாயுவைநிறுத்தி, விஷயங்களின வழி மனசைப போகவொட்டாமல திருப்பி ஒருகுறிப்பிலே நிறுத்தி, மூலாதாரம, சுவாதிட்டானம, மணிபூரகம, அநாகதம, விசுத்தி, ஆக்கினை யெனனும ஆறுதாரங்களின அந்தரமாதிருகாக்கிரமத்தை அறிந்து, அவ்வவ்வாதாரங்களின அதிதேவதைகளைத தியானித்து, அவ்வாறுதாரங்களினும அசபாசத்தி சிவானமிக்கையாய நிற்கும முறைமையைபபார்த்து, மூலாதாரந தொடங்கி விநாயகர் முதலாகிய தேவதைகளைப்பொருந்தி, அபிமுகம பணணிக்கொணடு ஆறுதாரத்துக்கும மேலாகிய பிரமரந்திரமள

வும் அசைப்புடனே சென்றணைந்து, அந்தப்பிரமரந்திரத்திலே அதோமுகமாய்ச் சகஸ்ரதளமாய் இருக்கிறதாமரை முகையைச் சோதிசோதிப்பிரகாசசாரணத்தால் உதிக்குஞ்சிவார்க்கனாலே அலரச்செய்து, அந்தத் தாமரைப்பூவின் கேசரத்திலுள்ள சந்திரமண்டலத்தை ஆகுஞ்சனஞ்செய்தலினாலே மூலாக்கினியை அங்கிசபீசாக்கர உச்சாரணத்தினாலே எழுப்பி, நாற்சக்கரத்தைப் பேதித்து, அவ்வக்கினியினாலே சந்திரமண்டலத்தை இளகப்பண்ணி, அந்த அமிர்தத்தைச் சர்வநாடி வழியாக நிரப்பி, அவ்விடத்தில் உண்டாகிய சுகோதயத்தினால், அந்த மயமான ஞானமிர்தாவத்தையை அடைந்து நின்று, சோமசூரியாக்கினிப் பிரகாசாதிகளாகிய பிரத்தியேகப்பிரகாசங்களெல்லாஞ் சூரியோதயத்திலே நக்ஷத்திரப்பிரகாசங்கள் அடங்கினாற்போலத் தன்னிடத்தடங்கச் சர்வதோமுகமாய் ஸ்வயம்பிரகாசகமாய் இருக்கின்ற பூரணப்பிரகாசத்தைப் பாவிக்கின்றவர்களே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் என்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர்ப்பிறந்தார்புராணம்.

பூர்வஜன்மத்திலே செய்த புண்ணியத்தினாலே, திருவாரூரெனனுஞ் சிவஸ்தலத்திலே சைவமரபினராய்ப் பிறந்தவர்கள் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நான்குவருணத்தாராயினும், சங்கரசாதியாராயினும், பரமசிவனுடைய திருவருளை அடைதலால், சிவகணநாதர்களாய் இருப்பார்கள். திருவாரூர்ப்பிறந்தாரெல்லாருஞ் சிவகணநாதர்கள் என்று சிவபெருமானே நமிநந்திஅடிகணாயனருக்கு அருளிச்செய்தனர் அந்நாயனாரும் அவர்களெல்லாருஞ் சிவகணநாதவடிவினராய்த் தோன்றக் கண்டனர்.

திருச்சிற்றம்பலம்.

## முப்பொழுதுந் திருமேனிதீண்டுவார்புராணம்.

சிருட்டிகாலத்திலே, அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் பஞ்சவத்திரத்தினின்றுந் தோன்றிய கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் பஞ்சருஷிகோத்திரத்தில் ஜனித்த சிவப்பிராமணர்கள் ஆதிசைவரென்று சொல்லப்படுவார்கள். அவர்களுள்ளே சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை,

ஆசாரியாபிஷேகங்களைப் பெற்றவர்களே சர்வாதிகாரிகளென்றும், உத்தமோத்தமசிவாசாரியரென்றும், சிவாகமங்கள் செப்பும். பராத்தப்பிரதிட்டை, பரார்த்த பூசைகள் செய்தற்கு அவர்களே உரியவர்கள். மற்றையர்கள் உரியர்களல்லர். அதனால் அவர்களே சிவாகமவிற்பன்னர்களாகிக் கிருதகிருத்தியர்களாய் முப்பொழுதினுஞ் சிவலிங்கத்தை அருச்சிப்பார்கள். ஆதலால், அவர்களே முப்பொழுந் திருமேனிதீண்டுவார் என்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

# முழுநீறுபூசியமுனிவர்புராணம்.

உற்பத்தியினாலே கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைப்படும் விபூதியையாயினும், நித்தியாக்கினியில் எடுத்த விபூதியையாயினும், சிவபெருமான்முன்னும், அக்கினிமுன்னும், குருமுன்னும், அசுத்தநிலத்தும், வழிநடக்கும்போதும் பூசாது, உத்தூளனம் திரிபுண்டரம் பிறைவடிவம் முக்கோணம் வட்டமாகச் சிவாகமவிதிப்படி அன்பொடு பூசுகின்றவர்களே முழுநீறுபூசிய முனிவர் என்று சொல்லப் படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

# அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்

சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தருக்கும் உரிய தமிழ்நாட்டுக்கு அப்புறத்திலே சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்களும், சுந்தரமூர்த்திநாயனாருடைய திருத்தொண்டத்தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய காலத்துக்கு முன்னும் பின்னும் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்களும், அப்பாலுமடிச்சார்ந்தார் என்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பத்தராய்ப்பணிவார்சருக்கம்
முற்றுப்பெற்றது

பன்னிரண்டாவது

மன்னியசீர்ச்சருக்கம்.

---

# பூசலார்நாயனார் புராணம்.

தொண்டைமண்டலத்திலே, திருநின்றவூரிலே, பிராமணகுலத்திலே, திருவவதாரஞ்செய்த பூசலார்நாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றை எப்படியுந் தேடிக்கொடுத்து, பரமசிவனிடத்திலே மிகுந்த அன்புள்ளவராய்ச் சிவாலயங்கட்ட எத்தனித்துப் பொருளில்லாமையினாலே, மனத்தினாலே ஆலயஞ் சமைப்பதே துணிவென்று அவ்வாலயஞ் சமைத்தற்குவேண்டிய கருவிகள் முதலியவைகளெல்லாம் மனத்தினாற் சேர்த்துக்கொண்டு, சிற்பகர்களையும் அவ்வாறே ஏற்படுத்தித் தாம் குறித்த பிரமாணத்துக்குக்கட்டி நிறைவேறுதற்கு எவ்வளவுநாள் செல்லுமோ அந்தப் பிரமாணப்படியே நினைவினால் அமைத்துத் தூபியும் நிறுத்தி, கிணறு, தடாகம், திருமதில் முதலியவைகளும் ஏற்படுத்திக் கும்பாபிஷேகத்துக்கு நாளும் நியமித்திருந்தனர்.

இப்படியிருக்கையில், காடவர்கோனென்னும் அரசன் கச்சியில் ஆலயஞ்சமைப்பித்து, ஸ்தாபனஞ் செய்யக் குறித்த நாளின் முன்

ளுள், பரமசிவன் அவ்வரசன் கனவில் எழுந்தருளி, "திருநின்றவூரில் பூசலென்னும் ஒரு தொண்டன் நெடுநாளெண்ணி ஆலயஞ்சமைத்திருக்கின்றான். அவ்விடத்துக்கு நாமெழுந்தருளுவோம். நீ நியமித்திருக்கும் நாளையொழிந்து மற்றொருநாளில் வைத்துக்கொள்" என்றுசொல்லித் திருநின்றவூருக்கெழுந்தருள, அரசன் நித்திரைநீங்கி அற்புதங்கொண்டு, அந்தத் தொண்டுசெய்கின்றவரை நாம்கண்டுதொழவேண்டுமென்று திருநின்றவூரிற்சென்று, பூசலார்நாயனாரைக் கண்டு தரிசித்து, ஆலயப்பணி நிறைவேற்றிய முறைமையினையும் தெரிந்து, அதிசயங்கொண்டு, அவரைவணங்கித் தன்பதியிற்சேர்ந்தான். அதன்பின், நாயனார் தாம் மனோபாவனையினாலே கட்டிய ஆலயத்தில் சிவப்பிரதிஷ்டைசெய்து, நித்திய நைமித்திய பூசைகளும் நடத்தி, நெடுநாள் பூசைசெய்துகொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## மங்கையர்க்கரசியார்புராணம்.

பாண்டிநாட்டிலே, மதுரையில் இருந்தநெடுமாறநாயனாருக்கு மனைவியார் சோழராஜாவுடைய புத்திரியாராகிய மங்கையர்க்கரசியார். அவர் சைவசமய குரவராகிய திருஞானசம்

பந்தமூர்த்திநாயனாரால் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பட்டவர். அந்தப் பரமாசாரியருடைய திருவருளினாலே, நெடுங்காலம் தம்முடைய நாயகருக்குச் சைவவழித்துணையாகி, பாண்டிநாடெங்கும் சைவத்திருநெறியைப் பரிபாலனஞ்செய்துகொண்டிருந்து, அந்நாயகரோடு சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## நேசநாயனார்புராணம்.

காம்பீலிநகரத்திலே, சாலியர்குலத்துக்குத் தலைவராகிய நேசநாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய மனத்தின் செய்கையைப் பரமசிவனுடைய திருவடிக்கு ஆக்கி, வாக்கின் செய்கையை ஸ்ரீபஞ்சாக்ஷரத்துக்கு ஆக்கி, கையின் செய்கையைச் சிவனடியார்களுக்கு ஆக்குவாராகி, வஸ்திரமும் கீளும் கோவணமும் நெய்து, தம்மிடத்தில் வருஞ் சிவனடியார்களுக்கு இடையறாது கொடுத்து, நாடோறும் அவர்களை வணங்கித் துதித்துக்கொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

# கோச்செங்கட்சோழநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, காவேரிநதிக்கு அருகிலிருக்குஞ் சந்திரபுஷ்கரணிக்கு அடுத்த ஒருவனத்திலே, வெண்ணாவல் மரத்தின்கீழ் சுயம்புமூர்த்தியாய் விளங்கிக்கொண்டிருக்குஞ் சிவலிங்கப்பெருமானை அந்தவனத்திலிருக்கும் ஒரு வெள்ளையானையானது பூர்வபுண்ணியவசத்தினாலே, நாள்தோறும் பூசைசெய்துகொண்டிருந்தது. அதனாலேயே அந்தவனத்துக்குத் திருவானைக்காவென்று பெயருண்டாயிற்று. அந்நாளிலே, முன்செய்த தவவலிமையினாலே, ஒரு சிலந்திப்பூச்சியானது, அந்தச் சிவலிங்கப்பெருமான் திருமேனியிலே சருகுதிராவண்ணம் தன்வாய் நூலினாலே மேல்விதானங்கட்டியது. மறுநாள் பூசைசெய்ய வந்த யானை அதனைக்கண்டு, இது அநுசிதமென்று சிதைத்துவிட்டது. சிலந்தியானது மறுபடியும் அவ்வாறே செய்ய, யானை மறுநாளும் அதைச் சிதைத்துவிட்டது. சிலந்திகோபித்து, அதன் துதிக்கையுள் நுழைந்து கடித்தவளவிலே, யானை தனது துதிக்கையை நிலத்திலேமோதி இறக்க, சிலந்தியும் இறந்தது. அப்போது, வெள்ளையானை சிவகணநாதராகித் திருக்கைலாயமலையை அடைந்தது. அச்சிலந்தியானது, சுபதேவனென்னும் சோழராஜனுடைய மனைவியாகிய கமலவதியின் வயிற்றில் சிசுவாகத்தங்

கிய பததுமாசமும் நிறைந்து புத்திரோற்பத்தி யாகுஞ சமையத்தில, இனனம ஒரு நாழிகை கழிநது இநதக்குழநதை பிறக்குமாகில, திரிலோகஙகளையும ஆளுமென்று சோதிடாசொலல, அபபடியானல, அநத ஒரு நாழிகைவரைக்கும என இரணடு காலையும மேலே தூக்கிக்கட்டிவையுங்களென்று கமலவதிசொலல, அவ்வாறே செய்து, மேற்சொலலிய காலம்வநதபோது, அக்கட்டை யவிழ்த்து விட்டார்கள கமலவதிகுழநதையைப பெற்றெடுத்து, "என்கோச்செங்கணனே" என்றுசொலலி உடனே உயிர நீங்கினள். பின்பு, சுபதேவனெனனும சோழராஜன் தன்புத்திரனாகிய அநதக்குழந்தையை வளர்த்து, சகலசாஸ்திரங்களையும கற்பித்து மகுடாபிஷேகமுஞ்செய்து, தான்தவமியற்றிச் சிவலோகஞ் சேர்ந்தான். பின்பு, கோச்செங்கட்சோழ நாயனார் பரமசிவனருளால், முன் பிறப்பை அறிநது, அரசாட்சிசெய்யும்போது, பரமசிவனுக்குப்பல ஆலயங்கள் சமைக்கவேண்டுமென்கிற யெண்ணங்கொண்டு, ஆதியில் திருவானைக்காவில்செய்த தொண்டின் செயலை யுணர்ந்து, அங்கிருக்கும வெணணாவல் மரத்தையுள்ளமைத்துச் சிவாலயங்கட்டுவித்து, சோழநாட்டில் பல சிவாலயங்களைக் கட்டும்படி மந்திரிகளுக்கு உத்திரவு செய்து, அந்த ஆலயங்களில் சிவபெருமானு

க்கு நடக்கும் நித்திய நைமித்திகபூசைகளுக்கு வேண்டும பொருள்களையெல்லாம ஏற்படுத்தி வைத்து, சிதம்பரத்துக்குப்போய் நடேசமூர்த்தியைத் தரிசித்து அங்கிருக்கும நாளில, தில்லைவாழந்தணாகளுக்குத் திருமாளிகைகள கட்டிக்கொடுத்து, இவ்வண்ணம சிவநேசமும, இராசநீதியும் வழுவாமல அரசு செலுத்தியிருந்து, சபாநாயகர் திருவடி நீழலை அடைந்தார.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணம்.

நடுநாட்டிலே, திருவெருக்கத்தம்புலியூரில் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனாரென்பவா ஒருவர் இருந்தார். அவர்பரமசிவனுடைய திருபபுகழை யாழில் இட்டுப் பாடுவாராகி, சோழநாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வணங்கிக் கொண்டுசென்று, பாண்டிநாட்டிற் சேர்ந்து, மதுரையில் இருக்கின்ற சொக்கநாதசுவாமியினுடைய திருக்கோயில்வாயிலை அடைந்து நின்று, பரமசிவன் மேலனவாகிய பாணிகளை யாழில் இட்டு வாசித்தார்.

சொக்கநாதசுவாமி அதனைத் திருவுள்ளத்துட்கொண்டு, அன்றிரவில், தம்முடைய அடியார்களெல்லாருக்கும் சொர்ப்பனத்திலே

தோன்றி ஆஞ்ஞாபிக்க, அவர்கள் மற்றைநா
ள் திருநீலகண்டப்பெரும்பாணரைச் சுவாமி
திருமுன்பே கொண்டுவந்தார்கள். திருநீல
கண்டப்பெருமபாணர் அது சுவாமியுடைய
ஆஞ்ஞை என்று தெளிந்து, திருமுன்பே இ
ருந்து யாழ்வாசித்தார். அபபொழுது "இந்த
பபாணா அன்பினேடு பாடுகின்ற யாழ் பூமியி
லே உள்ளசீதம தாக்கிலை வீக்கு அழியும்;
ஆதலால, இவருக்குப் பொற்பலகை இடுங்க
ள்" என்று ஆகாயத்தினின்றும ஓ ரசரீரிவாக்
கு எழுந்தது. அதைக்கேட்ட அடியாாகள்
பொறபலகையை யிட, திருநீலகண்டப் பெரு
மபாணா அதில ஏறி யாழ்வாசித்தாா.

பின்பு, பலஸ்தலங்களையும் வணங்கிக்கொ
ணடு, திருவாரூரிற்சேர்ந்து, திருக்கோயில்வா
யிலே அடைந்து, யாழ்வாசிக்க, பரமசிவன் வ
டதிசையிலே ஒரு திருவாயில் வகுக்க; திரு
நீலகண்டப பெருமபாணா அதன்வழியாகப்
புகுந்து, திருமூலட்டானப்பெருமானுகிய வ
ன்மீகநாதரை வணங்கிஞர். சிலநாளாயின
பின, அவ்விடத்தினின்றும் நீங்கி, சீர்காழி
யை அடைந்து, சமயகுரவராகிய திருஞான
சமபந்தமூர்த்தி நாயனருடைய திருவடிகளை
வழிபட்டு, அவரை ஒருபொழுதும் பிரியாது
அவர் பாடியருளுந் திருப்பதிகங்களை யாழில்
இட்டு வாசிக்கும் பெரும் பேற்றைப்பெற்று,

திருநாவலூரப் பெருமணத்தில, அவருடனே சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

## சடையநாயனார்புராணம்.

திருநாவலூரிலே, ஆதிசைவகுலத்திலே, சடையநாயனாரென்பவர் ஒருவர் இருந்தார் அவர் உலகமெல்லாம் மெய்ஞ்ஞானவொளியைப்பெற்று உய்யும்படி, சமயகுரவராகியசுந்தரமூர்த்திநாயனாரைப் புத்திரராகப்பெற்ற பெருமை பேற்றை உடையவர்

திருச்சிற்றம்பலம்.

---

## இசைஞானியார்புராணம்.

சடையநாயனாருடைய மனைவியார் இசைஞானியாரென்பவர். எமபிரான்றோழராகிய சுந்தரமூர்த்தி நாயனாரைப் பெற்றருளிய அவருடைய பெருமைகளைச் சிறியேனுடைய புன்மொழியினால் புகழ முடியுமோ! முடியாது.

திருச்சிற்றம்பலம்.

---

மன்னியசீர்ச்சருக்க முற்றுப்பெற்றது.

---

## விருத்தம்

தில்லைவாழந்தணரே முதலாகச்சீர்படைத்த, தொல்லையதாந்திருத்தொண்டத் தொகையடியார்பதம் போற்றி, யொல்லையவர்புராணகதை யுலகறியவிரித்துரைத்த, செல்வமலிகுன்றத்தூர்ச் சேக்கிழாரடி போற்றி.

---

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

---

திருத்தொண்டர்புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கடவுளர்-துதி

ஆனைமுகத் தனையாறு முகத்தனையைம் முகத்த னைப்பா லவனைப்பூதச், சேனைமுகத் தலைவனைச்ச ண்டேசுரனைக் கவுணியர்கோத் திரனங்கோவைச், சோனைமுகத் தருடிருத்தாண் டகம்புனைந்த வப்ப னைவன் றொண்டத்தேவை, வானைமுகத் தவாவழு த்தும் வாதவூ ரடிகளையாம் வணங்கி வாழ்வாம்.

# ஸ்ரீ-மாணிக்கவாசகசுவாமிகள்

## சரித்திரச்சுருக்கம்.

மாணிக்கவாசகரென்பவர் சைவசமயாசாரியராயுள்ள நாலவர்களில் ஒருவர். அவரைத் தேவாரமாகிய தமிழ்வேதஞ் செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், இம்மூவரோடுசேர்த்துத் துதிசெய்துவரப்படுகின்றது. அவராலே அருளிச்செய்யப்பட்ட திருவாசகமானது, அநேகருக்குப் பத்திவைராக்கிய ஞானங்களை உண்டாக்குகின்றது. அவருக்கு சிவ

ஸ்தலங்களிலெல்லாம் மாசகழிமாதத்திலே திருவிழா நடத்தப்படுகின்றது.

அம்மாணிக்கவாசகர், அரியர்த்தன பாண்டியராசன் காலத்திலே, பாண்டிநாட்டில் வைகை யாற்றங்கரையில், திருவாதவூரில், அமாத்திய என்கிற அந்தணர்குலத்தில், திருவவதாரஞ்செய்தருளினார். ஆதியிலே வாதவூரரென்பது, அவருக்குத் தந்தையாரால் கொடுக்கப்பட்ட பெயராயிருந்தது. அவர் இளமைப்பருவங் கடப்பதன் முன்னமே தமமரபுக்குரிய வேதாகமமுதலியவற்றையும், பிறநூல்களையுங்கற்று வல்லவராயினர்.—அவர் குணாதிசயங்களெல்லாம் மதுரை அரிமர்த்தனபாண்டியராசன் செவிக்குப்புலமாயின. அவ்வரசனுடைவெனில, உடனே வாதவூரரை வருவித்துக் குணங்களையெல்லாம் ஆராய்ச்சிசெய்து வியந்து மேலான சிறப்புகள்செய்து, தென்னவன் பிரமராயனென்னும் பெயருங்கொடுத்துத் தன்னிடத்தே முதன்மந்திரியாக்கினன்.

அவர் அரசனுக்கு இனியராகியும், சிவபத்தி அடியார்பத்திகளில் சிறந்தவராகியும், இப்படிப்பட்ட பெருஞ்செல்வத்தோடுகூடி வாழ்ந்திருக்கையில், இந்த மண்ணுலகவின்பமும், அந்தவிண்ணுலகவின்பமும் அநித்தியங்களென்கிற விவேகந்தோன்றலால், அவைவெறுக்கப்பட்டன. ஆகையால், பேரின்பவீட்டுக்கு

எதுவாகிய தத்துவஞானத்தைப் போதிக்க வல்ல ஞானசாரியரைக்காணுதற்கு வேட்கை கொண்டிருந்தார் அப்படியிருக்கையில், அரசன் கீழ்க்கடற்றுறையிலே சென்று குதிரைகள் வாங்கிவரும்படி அவரையேவினன். ஏவப்பட்ட அமழுதன்மந்திரியார் அளவிறந்த பொற்குவைகளைக் கைக்கொண்டு, நால்வகைச்சேனைகளாலுஞ் சூழப்பட்டுச்சென்று, வழிநடுவிலே திருப்பெருந்துறை யென்னும் பதிக்குச் சமீபித்தார். அப்போது, படைத்தல் - காத்தல் - அழித்தல் - மறைத்தல் - அருளல் என்கிற ஐந்தொழில் நடாத்தும் ஆதிபகவனாகிய பரமசிவனார் அவருடைய மலபரிபாகமும், சத்திநிபாதமும், இருவினையொப்புமநோக்கி, அவருக்கு அருள்செய்தற்பொருட்டுத் திருப்பெருந்துறையிலே குருந்தமரத்தடியில் தமது கணங்கள் மாணுக்கராய்ச் சூழ்ந்திருக்க, நடுவே தாம் ஒரு ஞானசாரியராய்த் திருவுருக்கொண்டு வீற்றிருந்தருளினார்.

அம்முதன்மந்திரியார் குருமூர்த்தியைக்கண்ட பொழுதோவெனின், வெங்கொடுஞ்சுரத்து வெயிலிடை வருந்தியோன், தண்மலர்த்தருவைத் தன்னெதிர்கண்டென, விரைந்து செலவேட்கை பொருந்தினராகி, அழலிடைப்பட்ட மெழுகெனவுருகி, அழுதகண்ணுந் தொழுதகையுமாய்ச் சென்று திருவடிகளிலே

வீழ்ந்து, தேவரீர் அடியேற்கு அருள்செயல வேண்டுமென்றார். அவரது அதிதீவிர பக்குவத்தைக்கண்ட தேசிகோத்தமரானவர் திருவருள்கூர்ந்து ஞானதீக்ஷைசெய்து, பதி பசு பாசம் எனகிற முப்பொருள்களி னியல்புகளும் ஐந்தெழுத்தடைவால உபதேசித்தருளினார். அவ்வுபதேசப்பொருளை ஐயந்திரிபின்றி அங்கையினெல்லிபோறபெற்ற மாணாக்கரான திருவாதவூரர், அன்புமேலிட்டு அற்புத சின்மய வாசகங்களாற் சொந்தப்பாடல்களைப் பாடத்தொடங்கினார். அப்பாடல்களைக்கேட்ட சிவபெருமானானவர் திருவுளங்களிகூர்ந்து, அவரது திருவாயமலரினின்றும் பிறந்த வாசகங்கள் மாணிக்கங்கள்போல விலையேறப்பெற்றவையாயிருக்கையால், அவருக்கு மாணிக்கவாசகரென்னுந் திருப்பெயரைக்கொடுத்து, அவரை அங்கே யிருக்கும்படி கட்டளையிட்டு மறைந்தருளினார். பின்பு மாணிக்கவாசகர், குதிரைகள் வாங்குதற்பொருட்டுக் கொணர்ந்த பொன்னையெல்லாம் அந்தப்பதியிலே சிவாலயத்திருப்பணியிலும், மற்றும் பலவகையறங்களிலுஞ் செலவுசெய்துவிட்டு, நிரதிசயானந்த நிட்டானுபூதியிலே சுகித்திருக்கையில, இதுவரையிலே குதிரைவாங்கிக்கொண்டு வாராமைக்குக் காரணம் என்னென்று அரசனிடத்திருந்து நிருபம் வந்தமையால, சுவாமி சந்நிதியிலே

போய்த்தொழுதுநின்று, ஆண்டவனே, அடியேன் இதற்குச் செயக்கடவது யாதென்றுவினவி, அதற்கு அசரீரிவாக்காகக்கிடைத்த கடவுளுத்தரப்படி மதுரைக்கு எழுந்தருளி, அரசனுக்கு மகிழ்ச்சியுணடாக இத்தனை நாளிலே உமக்கு குதிரைகள்வருமென்று காலவரையறைகூறினா. அரசன் அந்நாளளவும வரவுபாாத்திருந்து, குதிரைகள் வராமையால கோபங்கொண்டு, அவரைவருத்தி முனகொணடுபோன தன்பொருள்களையெலலாம வாங்குமபடி சேவகரைவிட்டான. அன்பா அவ்வருத்தம பொறுத்து சிவபெருமானை நோக்கி முறையிடடுப்புலம்பினார். அப்போது, சிவபிரானவா, காட்டிலேதிரிகின்ற சிறியநரித்திரள்களை, நாட்டிலே திரிகின்ற பெரிய பரித்திரள்களாக்கி, அரசனிடத்தில் தாமே செலுத்தி, அவனைக் கரைகாணாத களிபபுக்கடலுள் முழுகுவித்துத தந்தொண்டரைச் சிறைக்காவலில நின்றும விடுவித்தார். அன்றிரவிலேதானே, அப்பரித்திரள்களெல்லாம் பழையபடி நரித்திரள்களாய், முன்னுள்ள குதிரைகளுக்கும ஊறுசெய்து படடணமெங்கும பெரியதோா கூக்குரலுணடாகித் தமபழைய இடங்களைச்சேர்ந்தன. விடிந்தபின்பு, அரசன் அது செய்தியைக்கேட்டுப பெருங்கோபமுடையனாய்த் தனது மந்திரி தன்னை மாயவித்தையினால் வஞ்சித்தானென்று

சேவகரைவிடுத்து முன்னைநாளினும் அதிகமாக ஒறுக்குமபடி செய்தான். அவ்வேதனை பொறுக்கமாட்டாத அன்பருக்கு இரங்கிச் சோமசுந்தரக் கடவுளானவா, வையையாற்றை மதுரைப பட்டணத்தின்மீது பெருகிவரச்செய்து, தாமே மணசுமந்தும, பிரம்படி தாஙகியும அவ்வன்பரது மகிமையை அரசனுக்கறிவித்தார். அதன் பின்னர், மாணிக்கவாசகா தமது தொழின் முறைமையைக் கைவிட்டுத் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளிச் சில திருபபாடலகள்செய்து, மற்றுஞ்சில சிவஸ்தலஙகளிற்சென்று வணங்கி, பூலோககைலாயமாகிய சிதமபரமென்னும் தலத்துக்கு வந்து நடேசரைத்தொழுது பல திருப்பாடல்கள்செய்து, பின்பு வேதமார்க்கத்துக்கு மாறுபட்ட புத்தரை வாதில்வென்று, ஒரூமைப்பெண்ணைப பேசுமபடி செய்து, பினபு சிலநாள் அத்தலத்தில இருந்தருளினா. அப்போது, சிவபெருமானனவர், ஓரந்தணரா அவரிடத்திலே சென்று, அவர் அத்தலத்திலும் மற்றும்பலஸ்தலங்களிலுஞ்செய்த திருப்பாடல்களை யெல்லாம்தொகுத்துத் திருவாசகமாகக்கூறவுந் திருக்கோவையார் பாடவுங்கேட்டு, அவர் திருவாய் மலர்ந்தவண்ணம், தமது அருமைத்திருக்கரத்தினலே எழுதி, அப்புத்தகமுடிவில் திருச்சிற்

றம்பலமுடையாரெனக்கையொப்பமும் வைத்து மறைந்தருளினார்.

அத்திருமுறை சிற்சபையிலே வைக்கப்பட்டிருந்ததைக்கண்ட தில்லைவாழந்தணர் முதலியோர் அதனை எடுத்து, அதன் பொருளை உணர்த்தும்படி மாணிக்கவாசகசுவாமிகளை வேண்ட, அவர் திருவாசகம், திருக்கோவையார் என்னுமிரண்டினது உண்மைப்பொருள் ஸ்ரீநடராஜப்பெருமானே என்று சுட்டிக்காட்டிச் சிற்சபையிலேபோய் அருட்பெருஞ்சோதிமயமாக விளங்கிய சிதாகாசத்திலே கலந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

---

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம

முற்றிற்று.

---

விருத்தம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி, யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்த பிரானடிபோற்றி, வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி, ஊழிமலி திருவாதவூரர்திருத் தாள்போற்றி.

திருச்சிற்றம்பலம்.

உ

சற்குருதுணை.

# விக்டோரியா ஜுபிலி பிரஸ்

சென்னை தங்கசாலை வீதி.

## புத்தகவிளம்பரம்.

| | ரூ.அ.பை. |
|---|---|
| தேவாரம்ஸ்தலமுறை - திக்குடிதம் காலிகோ பயின்டு. | 5—0—0 |
| ஷை ஷை இன்கடிதம் காலிகோ பயின்டு. | 5—0—0 |
| திருக்குறள் கருத்துரையும், திருவருட்பயன் கருத்துரையும் சேர்த்த காலிகோ பயின்டு. | 1—0—0 |
| தோத்திரக்கோத்து (72) புத்தகம் அடங்கியது காலிகோ பயின்டு. | [illegible] |
| ஷை மாபில் பயின்டு. | [illegible] |
| பெரியபுராண வசனச்சுருக்கம் மார்பில் பயின்டு. | 0—10—0 |
| திருவிளையாடற்புராணவசனச்சுருக்கம் மார்பில் பயின்டு. | 0—10—0 |
| ஷை இரண்டு புத்தகங்களும் ஒன்றாகக்கட்டிய காலிகோ பயின்டு. | 1— 0—0 |
| சிற்றம்பலசேகரம் இது தங்கள் தங்கள் தசாப்லன்களை தாங்களே எளிதில் அறிந்துகொள்ளும்படியான சிறந்த சோதிட நூல். | 0—10—0 |

| | |
|---|---|
| **சைவதூஷணபரிகாரம்**-இது கிறிஸ்துமதகண்டனம், ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்செய்தது. | 0—4—0 |
| **ஆதிசைவப்பிரபாவம்** - சிவாலயங்களில் பூஜிக்கும் ஆதிசைவர்களுடைய சிறப்பைவிளக்கும். | 0—3—0 |
| **சிவபோகசாரம், சொக்கநாதவெண்பா**-இவ்விரண்டு நூலும், தருமபுர ஆதீனம் பிரதம குருமூர்த்திகளாகிய ஸ்ரீ-ஞானசம்பந்தசுவாமிகளால் அருளிச்செய்தது. | 0—2—0 |
| **பட்டணத்துப்பிள்ளையார்** சரித்திரமும், திருப்பாடற்றிரட்டு உடற்கூற்று வண்ணமும் சேர்ந்தது. | 0—2—0 |
| சிவபுண்ணியத்தெளிவு | 0—1—0 |
| திருத்தொண்டர்புராணசாரம் | 0—1— |
| பசுபதிபாசவிளக்கம். | 0—1—0 |
| எரெழுபது. | 0—1—0 |
| விவேகசிந்தாமணி. | 0—1—0 |
| பத்திரகிரியாரமெய்ஞ்ஞானப்புலம்பல். | 0—0—9 |
| சிவப்பிரகாசக்கட்டளை. | 0—0—9 |
| தத்துவக்கட்டளை. | 0—0—6 |

---

வேண்டியவர்கள், இன்னும் சுத்தப்பிரதிகளாயுள்ள பல தமிழ்ப்புத்தகங்களை ஷை அச்சுக்கூடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். வி - சு.